# தலையநாட்டு வரலாறு

## (வடகொங்கை ஆண்ட வேட்டுவ இராஜாக்கள் )

ஆசிரியர்

**அடசபாளையம் சந்திரசேகர்**

**(வரலாற்று ஆய்வாளர்)**

பதிப்பாசிரியர்

**மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன்**

**MD (General Medicine)**

**வேட்டுவர் டிவி பதிப்பகம்**

# நூல் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **தலைநாட்டு வரலாறு** (வடகொங்கை ஆண்ட வேட்டுவ இராஜாக்கள்) |
| ஆசிரியர் © | : | அடசபாளையம் சந்திரசேகர் |
| பதிப்பாசிரியர் | : | மருத்துவர் தே.வாழைபரமேஸ்வரன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2025 |
| பயன்படுத்திய தாள் | : | 70 ஜி.எஸ்.எம். என்.எஸ்.தாள் |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | 284 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 500 |
| விலை | : | **ரூபாய் 250/-** |
| அச்சகம் | : | ASX பிரிண்டர்ஸ், சென்னை |
| தட்டச்சு உதவி | : | வேட்டுவர் பூமி சுப்பரமணியன் |
| பொருண்மை | : | வடகரை நாட்டு வரலாறு |
| வெளியீடு | : | **வேட்டுவர் டிவி பதிப்பகம்** 65, கவிதா ஜுவல்லஸ், ஆனந்த் நகர், சின்ன எலசகிரி ரோடு, ஓசூர் - 635126. போன் : 7888988851 vettuvartv@gmail.com vettuvartv.com |

# வாழ்த்துரை

தமிழ் இனம் என்பது உலகத்தில் உள்ள அனைத்து நாகரிகத்திலும் சிறந்த நாகரிக இனம் என்று உலக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இனம் இவ்வாறு புகழ் மிக்கவர்களாக திகழ்வதற்கு தமிழர்களின் வீரம், கொடை, கல்வியறிவு, விவசாயம், நீர் மேலாண்மை, கட்டிடக் கலை, வான சாஸ்திரம் என உலகில் உள்ள 64 கலைகளிலும் சிறந்தவர் களாகவும் முதன் முதலில் உலகிற்கு இந்த 64 கலைகளையும் கொடுத்த பெருமையும் தமிழர்களையேசாரும். இந்த தமிழர்கள் இனக்குழுக்களாக வாழ்ந்த வேட்டுவர் தன் மக்களை காக்க தன் உயிர் கொடுத்து பாதுகாத்தான், மேலும் மக்களின் உணவு தேவை கலைப்பூர்த்தி செய்து, வனவிலங்குகளிடம் இருந்து அரண் செய்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அரசனாக உயர்ந்தான். இதனால் தொல்காப்பியர் அவர்களை

**"ஆயர் வேட்டுவர்ஆடுஉத்திணைப் பெயர்**
**ஆவயின்வருஉம்கிழவரும்உளரே"  - (தொல், அகம் 21)**

என்ற பாடல் மூலம் பெருமைப்படுத்தி உள்ள்ளார். தொல்காப்பியர் காலத்தில் குறிஞ்சி நில தலைவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கல் தோன்றி, மண்**
**தோன்றாக்காலத்தேவாளோடுமுன்தோன்றிய மூத்த குடி!**
**- (புறப்பொருள் வெண்பாமாலை.**
**சூத்திரவிளக்கப்பாடல் -35, கரந்தைப்படலம்)**

ஐயனாரிதனார் என்ற புலவர் வீரத்தோடு பிறந்த இனம் என்ற குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வீரமிக்க வேட்டுவர்கள் சங்க காலத்தில் ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் மூலம் இனக்குழுவில் அதிக நிரை செல்வங்களை சேர்த்து உணவிற்கு குறைவின்றி வளமான வாழ்வாதாரத்தை உருவாக்கினர். இந்த காலகட்டமேவிவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது ஆநிரைகள் கவர்தல் மற்றும் மீட்டல் இரண்டிலும் ஈடுபட்டவேட்டுவர் தலைவர் பெரும் செல்வந்தர் ஆனார். இவ ஊர் தலைவன் பின்பு குழுத்தலைவன் பின்பு அரசன் பின்பு வேந்தன் என்ற உயர் நிலையை அடைந்தான். இவ்வாறு வேள், வேளிர், வேட்டுவர், வேந்தர் என்ற உயர் நிலையை அடைந்த வேட்டுவர்கள் தங்கள் நற்பண்புகள் மூலம் மக்கள் மனதில் நீங்கா புகழ் பெற்றனர். அவ்வாறு வேட்டுவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆட்சி செய்து அதிகாரத்துடன் வாழ்ந்தார்கள் இதனைச் சங்க இலக்கியங்கள், தொல்லியல் ஆதாரங்கள், கல்வெட்டுக்கள். செப்பேடுகள், பாறை ஓவியங்கள் மற்றும் நடுகற்கள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக தமிழ் நாடு முழுவதும் வேட்டுவர் ஆட்சி மிக சிறப்பாக செய்து வந்துள்ளார்கள். அத்தகைய பெருமை மிக்க தமிழ் வேட்டுவஅரசர்களின் சிறப்பு மிக்க வரலாற்றை சேர மன்னர் பரம்பரையில் அந்தி வேட்டுவ அரசர் குடும்பத்தில் வந்துதித்த திரு. சந்திரசேகரன் அவர்கள் தனது களப்பிரர் போர் என்ற புத்தகத்தின் மூலம் தமிழர்களின் பெருமையை உலகம் முழுவதும் அறியச் செய்துள்ளார். இவரின் இரண்டாவது புத்தகமான கொங்கு வேட்டுவ அரசன் செம்பவேட்டுவரில் ஜெயங்கொண்ட சோழன் பவானி ஆற்றில் முதலில் அணைகட்டி அதன் மூலம் கொங்கு மண்டலத்தில் நீர் பாசன வசதியைப் பெருக்கி உழவர் குடி மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதும் மற்ற அரசர்களின்படையெடுப்பில் இருந்து கொங்கு மக்களைப் பாதுகாத்த சிறந்த அரசன் என்ற முறையிலும் செம்பவேட்டுவரை பற்றிய பல ஆய்வு செய்து எண்ணற்ற ஆதாரங்களை தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**மூன்றாவதாக தலையநாட்டு வரலாறு**
**(வடகொங்கை ஆண்டவேட்டுவ இராஜாக்கள்)**

என்ற இந்த வரலாற்று ஆய்வு நூல் கொங்கு மண்டலத்தின் தொன்மையையும் அமராவதி ஆற்றின் கரைகொங்கு நகரிக்கதின் பிரபிடாமகும் என்றும் இங்கு தான் அரசு உருவாகியுள்ளது என்றும் வேட்டுவர்கள் அரசர்களாக தோன்றினார்கள் என்றும் ஆய்வின் முலாம் உறுதி செயியபட்டுள்ளது.

> கொடுமனம் என்ற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது. அப்போது வேட்டுவர்கள் என்ற சிற்றரசர்கள் தோன்றினர். (தினமலர் 12.05.2012 கோவை பதிப்பு)
>
> கோவையில் நடந்த வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கில் கி.மு.500-களில் (கொடுமனம் காலம்) வேட்டுவர்கள் அரசமைப்பை உருவாக்கினார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்களே கூறியுள்ளனர்.

இரண்டு புறமும் வில் உருவம் பொறிக்கப்பட்ட நிறையக்காசுகள் கொங்கு நாட்டில் (கரூர், அமராவதி ஆற்றங்கரை) கிடைத்து இருக்கின்றன. இந்தக் காசுகள் கி.மு.500 அல்லது கி.மு.400 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

கொடுமனம் பகுதியில் கிடைத்த கணையாளிகளில் “வேடுவன்” என்று பெயர் பொறித்த கணையாளிகள் கிடைத்திருக்கின்றன. இந்தக் கணையாளிகள் கி.மு. 400-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். (கொங்கு வரலாற்று ஆய்வுகள் அன்றும்-இன்றும்) மேலும் கொடுமனம் பகுதியில் கிடைத்த பானையோடுகளில் அந்துவன், பன்னன், ஆதன் மற்றும் பல வேட்டுவக் கூட்டப்பெயர்கள் தமிழ், பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இதன் மூலம் உலோகங்களை கி.மு.300 முதல் வேட்டுவர்கள் பயன்படுத்தியதையும் எழுதரிவுமிக்கவாராகவும் உள்ளதையும் இந்த ஆய்வின் மூலம் அறியமுடிகிறது .

குண்ணிவேட்டுவர்அரசமரபினில்தலையூர் காளி மிகவும் புகழ் பெற்றவர் இவர் பொன்னர்சங்கரை வெற்றி பெற்று வேட்டுவர் பெருமையை உலகறிய செய்தவர் கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளி , 24 நாடுகளுக்கும் தலைமை வகித்தவர்... தலையூர் காளி மன்னன் வில்லாற்றலில் திறமை மிக்கவர். கடியநெடு வேட்டுவனின் வழித்தோன்றலே இந்த தலையூர் காளி மன்னன் என்ற வரலாற்று உண்மையை ஆதறதுடன் வெளிப்படுத்துகிறது. இத்தகைய வரலாறு ஆயிவின் மூலம் தமிழ் இனமே பெருமை அடையும் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஐயா சந்திரசேகரன் அவர்கள் ஒரு கல்வெட்டு ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல இவர் சேர மன்னர் கால்வழியினரான அந்துவ (அந்தி வேட்டுவராவார். இவர் வரலாற்று புகழ்மிக்க ஊரானஅந்தியூரில் கோட்டை கட்டி ஆட்சி செய்த இனத்தில் பிறந்தவர் என்பது இவர் செப்பு பட்டயம் மூலம் நாம் அறியலாம்.

மன்னர் காலத்தில் மக்கள் போற்றும் மன்னன் சேரன் என்பது உலகறிந்த ஒன்று அந்தக் குடியில் பிறந்த ஐயா சந்திரசேகரன் தமிழ் மக்களை உலகம் போற்றும் விதமாக தனது புத்தகத்தில் எழுதியுள்ளார் என்பது மக்களை ஆட்சி செய்ய அதிகாரம் தேவையில்லை நல்ல ஞானம் இருந்தாலே போதும் என்பதற்கு ஒரு உதாரணமானவர் ஐயா திரு சந்திரசேகரன் என்பது நம் அனைவருக்கும் பெருமை ஆகும். இந்த புத்தகத்தின் மூலம் வேட்டுவர்களின் புகழை உலகறியச் செய்த ஐயா சந்திரசேகரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்...

இப்படிக்கு,

**மருதுவர் வாழைபரமேஸ்வரன்.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1) | கொங்கு நாடு | 11 |
| 2) | தொல்காப்பியம் கூறும் பன்னிரு செந்தமிழ் நாடுகள் | 14 |
| 3) | தொல்குடி வேட்டுவர் | 16 |
| 4) | கி.மு. முதல் கி.பி. வரை வேட்டுவர் ஆவணம் | 19 |
| 5) | வல்வில் வேட்டுவர்கள் | 34 |
| 6) | வேட்டுவரும் பதினெண்குடிகளும் | 36 |
| 7) | வேட்டுவ வேளிர்களின் காணி ஆட்சிப்பாடல் (வேட்டுவர் திருமணப்பாடல்) | 36 |
| 8) | தொல்குடி வேட்டுவர் நடுக்கல் வழிபாடு | 38 |
| 9) | இறைவன் வடிவில் வேட்டுவர் | 40 |
| 10) | வடுகவேட்டுவர் | 53 |
| 11) | வேளிர் வேளான்-வேட்டுவன் | 54 |
| 12) | அந்துவ வேட்டுவர் காணிப்பாடல் | 68 |
| 13) | அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ வேட்டுவர் சுந்தராயப்பட்டயம் | 71 |
| 14) | சோழன் பூர்வ பட்டயம் T.1843 | 78 |
| 15) | கடையெழு வள்ளல்கள் வேட்டுவர் | 82 |
| 16) | வேட்டுவர் கட்டிய கோட்டைகள் | 85 |

| | | |
|---|---|---|
| 17) | புலியன்பட்டி வங்க நாயக்கன் நாயக்கன் என்பது பட்டம் | 87 |
| 18) | இருகொங்கையும் ஆண்ட வேட்டுவர்கள் | 112 |
| 19) | கொங்குநாட்டை ஆண்ட வேட்டுவர்கள் | 125 |
| 20) | திருவண்ணாமலை (சங்ககாலச் சேரவேந்தர்கள்) | 126 |
| 21) | தலையூர் நாடு | 136 |
| 22) | கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளி | 138 |
| 23) | தலையூர் கோயில் | 141 |
| 24) | தலையூர் காளியின் வீரவாள் திருவிழா | 145 |
| 25) | தலைய நாட்டுப் பட்டாக்காரர்கள் | 146 |
| 26) | ஐந்து அணைகட்டியவேட்டுவ அரசர்கள் | 150 |
| 27) | குன்னாடிவேட்டுவர் (குன்றகட்டி) | 153 |
| 28) | குன்னாடிவேட்டுவர் பற்றிய வரலாற்று ஆவணங்கள் | 156 |
| 29) | குன்னாடிவேட்டுவப் பாளையக்காரர்கள் கைப்பீது | 165 |
| 30) | குன்னாடி (குண்ணி) வேட்டுவர் கட்டிய சங்ககிரி கோட்டை | 169 |
| 31) | குன்னாடி வேட்டுவர் குலதெய்வம் | 174 |
| 32) | கீழ் மற்றும் மேல் தலையநாடு | 176 |
| 33) | வாரனவாசி வள்ளல் வீரமும் தீரமும் | 196 |
| 34) | அருவாளர்கள் எனும் தொண்டை மண்டல வேட்டுவர்கள் | 209 |
| 35) | குன்னமலை அப்பச்சிமார் கோயில் | 212 |

| | | |
|---|---|---|
| 36) | கருவூர் சௌந்தரநாயகி அம்மன் | 221 |
| 37) | வெங்கல நாட்டில் வேட்டுவர் | 224 |
| 38) | சிறப்பான சில அண்ணன்மார் கோயில்கள் | 235 |
| 39) | சௌவுந்தர பாண்டிய பாளையக்காரர் கைபீது | |
| 40) | கல்வெட்டுகளில் கண்ணப்பர் | 241 |
| 41) | தலையூர் வரலாறு | 250 |
| 42) | இருக்கூர்பட்டகாரர்செப்பேடு | 251 |
| 43) | வெஞ்சமன் வரலாறு | 252 |
| 44) | வேடன் - வேந்தன் | 272 |
| 45) | அகப்பாடல்களில் இனக்குழுச் சமூக எச்சங்கள் வேடர் இனக்குழு | 275 |
| 46) | சுதந்திர போரில் வேட்டுவர்கள் | 277 |

# கொங்கு நாடு

உலகின் தொன்மைமிக்க நாடுகளுள் தமிழகமும் ஒன்று. இத்தமிழகம் பண்டு ஐந்து மண்டலங்களாகப் பிரிந்திருந்தது. அவை முறையே சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் ஆகும். இம்மண்டலங்கள் நாடுகள் எனவும் அழைக்கப்பட்டன. இதனைத் "தமிழ் மண்டிலம் ஐந்து " என்று திருமந்திரமும், "வியன் தமிழ்நாடு ஐந்து" என்று தண்டியலங்காரமும் குறிப்பிடுகின்றன.

சேர, சோழ, பாண்டியர், பல்லவர் பற்றியும், அவர்கள் ஆண்டுவந்த நாடுகளைப் பற்றியும், அவர்களது போர்ச் செயல்கள், ஆட்சிமுறை ஆகியன பற்றியும் நாம் அனைவரும் அறிவோம். ஆனால் கொங்குநாடு பற்றியும், அதனை ஆண்டு வந்த மன்னர்களைப் பற்றியும், அவர்களது ஆட்சிமுறை, கோயிற்பணிகள் பற்றியும் பலருக்குத் தெரியாது. காரணம் சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போன்று இது முறையாக ஆய்வுகள் நடை பெறவில்லை. கொங்கு நாடு பற்றிய வரலாற்று நூல்கள் சில தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ள போதிலும் பொதுவாக வரலாற்று மாணவர்களும், தமிழக வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் கொங்கு நாட்டியலில் அதிக ஆர்வம் காட்டவில்லை. அண்மைக் காலத்தில்தான் பலரும் கொங்கு நாட்டு வரலாற்றில் ஈடுபாடு கொண்டு அதனைப் படித்தும், அதில் பலவிதமான ஆய்வுகள் மேற்கொண்டும் வருகின்றனர். கொங்குநாட்டுச் சமுதாய வரலாறு பற்றி இன்று பலர் பல கோணங்களில் ஆய்வுகள் நிகழ்த்தி வருகின்றனர்.

## கொங்கு பெயர்க்காரணம்

கொங்கர் (வேட்டுவர் ) வாழ்ந்தநாடு கொங்கர் நாடு எனப் பெயர் பெற்றுப் பின்னர் கொங்குநாடு எனத் திரிந்தது என்ற கருத்து மிகப் பொருத்தம் உடையதாகத் தோன்றுகிறது. கொங்கு நாட்டு வேட்டுவரே கொங்கர் எனக்குறிக்கப் பெறுகின்றனர். வேட்டுவர் கொங்கு நாட்டின் ஆதிகுடியினர்; பூர்வக் குடியினர். எனவே கொங்கர் (வேட்டுவர்) நாடு என்பதே கொங்குநாடு எனத் திரிந்தது எனலாம். ஒருசிலர் கொங்கு என்பது தேன், பூக்களின் மகரந்தத்துகள் எனும் பொருள்படும். கொங்கு நாடு மலைநாடு எனவே தேன் மிகுதியாகக் கிடைத்தது. தேன் கிடைத்தநாடு கொங்குநாடு எனப் பெயர் பெற்றது என ஒரு சாரார்கருதுவர். கொங்குநாட்டுச் சோலைகளில் மகரந்தத்துகள் மிகுதி. எனவே இப்பெயர் பெற்றதாகக் கூறுவாரும் உண்டு. சிலர் கொண்கானம் என்பதே கொங்காகத் திரிந்தது என்பர். வேறு சிலர் ஒருகங்கில் (ஓரத்தில்) தமிழகத்தின் ஓரத்தில் அமைந்திருந்ததால் கொங்கு எனும்பெயர் பெற்றதாகக் கருதுவர்.

## கொங்கு நாட்டின் தனித்தன்மை

தமிழ்நாட்டு வரலாற்றில் கொங்குநாடு தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது. புவியியல் அமைப்பிலும் பண்பாட்டிலும் இது சேர, சோழ, பாண்டிய நாட்டினின்றும் சற்று வேறுபட்டுள்ளது. கொங்குநாடு சங்க காலத்திலேயே தனி நாடாகக் கருதப்பட்டது. இது மலைகள் சூழ்ந்த நாடாதலின், அண்டை நாடுகளுடன் நெருங்கிய தொடர்புக் கொண்டிருக்க வில்லை. எனவே இந்நாட்டின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், கலை ஆகியன தனித்தன்மை வாய்ந்ததாகவே விளங்குகிறது.

## எல்லைகள்

கொங்குநாடு தமிழகத்தின் வடமேற்கு எல்லையில், கர்நாடகம், கேரளா ஆகிய இரு மாநிலங்களின் எல்லைகளை

ஒட்டியே அமைந்துள்ளது. “வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக் குடக்கு வெள்ளிப் பொருப்புக் குன்று குழித்தண் டலையளவும் கொங்கு” கிழக்கு

தனிப்பாடல் முல்லையும் குறிஞ்சியும் கொஞ்சி விளையாடும் கொங்கு நாட்டின் கிழக்கெல்லை திருச்சி மாவட்டத்திலுள்ள குளித்தலை, மேற்குத் தொடர்ச்சி மலையின் பகுதியான

வெள்ளியங்கிரி மேற்கெல்லை. இதன் வடக்கெல்லை தலைமலை; தெற்கு எல்லை வைகாவூர் எனும் பழனிமலை ஆகும். இந்த நான்கெல்லைக்குட்பட்ட பெரு நிலப்பரப்பு கொங்குநாடு ஆகும். சங்க காலத்தில் பெரிய நிலப்பரப்பாக இருந்த கொங்குநாடு பிற்காலத்தில் குறைந்து குறுகிவிட்டது..

இலக்கியங்களையும் கல்வெட்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், இக்காலத்திய கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தின் பழனி வட்டம், வேடசந்தூர் வட்டத்தின் பெரும்பகுதி, கரூர் மாவட்டத்தின் பெரும் பகுதி, நாமக்கல் மாவட்டம், சேலம் மாவட்டத்தின் சங்ககிரி வட்டம் ஆகியன அடங்கியதே பண்டைய கொங்கு நாடு என்பது புலனாகும்.

## கொங்கு நாட்டின் பிரிவுகள்

கொங்கு நாடு பண்டு நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிந்திருந்தது என்பதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம். அவை முறையே தென் கொங்கு, வடகொங்கு, மேல் கொங்கு, மழகொங்கம் என்பனவாகும். காவிரியாற்றின் கிழக்கில் உள்ள பகுதிகள் மழகொங்கம் எனக் குறிக்கப் பெறுகிறது. கொங்கு நாட்டின் ஒரு பகுதி வீரசோழமண்டலம் எனக் கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறது. நிருவாக வசதியை முன்னிட்டு இந்நாடு 24 சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது என்பதனைக் கொங்கு மண்டல சதகத்தாலும், சாசனங்களாலும் அறியலாம். இங்கே

நாம் பண்டைக் காலத்தில் நிலவிய 24 நாடுகள் யாவை என்பதனைக் காண்போம்;

| | |
|---|---|
| 1. ஆறைநாடு | 2. ஒடுவங்க நாடு |
| 3. வாரங்க நாடு | 4. பொங்கலூர் நாடு |
| 5. காங்கேய நாடு | 6. குறுப்பு நாடு |
| 7. காஞ்சிக்கோவில் நாடு | 8. வடகரை நாடு |
| 9. பூந்துறை நாடு | 10. அரைய நாடு |
| 11. தென்கரை நாடு | 12. மண நாடு |
| 13. வெங்கால நாடு | 14. தட்டைய நாடு |
| 15. கிழங்கு நாடு | 16. தலைய நாடு |
| 17. அண்ட நாடு | 18. வையாபுரி நாடு |
| 19. நல்லுருக்கா நாடு | 20. காவடிக்கா நாடு |
| 21. ஆனைமலை நாடு | 22. பூவாணிய நாடு |
| 23 வாழவந்தி நாடு | 24. இராசிபுர நாடு |

மேற்கூறப்பட்ட நாடுகள் ஒவ்வொன்றிலும் பல சிற்றூர்களும் பேரூர்களும் நகரங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த 24 நாடுகளிலும், பிற்காலத்தில் சில இணைநாடுகள், உள் நாடுகள் பிரிந்து 42 நாடுகளாயின. கொங்கு நாட்டு மக்கள் கொங்கர் என்று அழைக்கப்பட்டனர்.

## தொல்காப்பியம் கூறும் பன்னிரு செந்தமிழ் நாடுகள்

1. வேணாடு 2. புன்னாடு 3. தென் பாண்டி நாடு 4. குட்டநாடு 5. குடநாடு 6. கற்கா நாடு 7. பண்ணிநாடு 8. அருவா நாடு 9. அருவா வடதலை நாடு 10. சீத நாடு (காவேரிபாயும் நீர் நாடு) 11 பூழிநாடு 12 மலாடு (திருக்கோவிலூர்)

கற்கா நாடு திண்டுக்கல்லுக்கு மேற்கில் உள்ள நாடாகும். அருவா, அருவா வடதலை நாடு தொண்டை நாடாகும். பண்ணி நாடு பன்றி நாடாகும்.

வேணாடு, குட்டநாடு, குடநாடு, பூழி நாடு எனும் இந்நாடுகள் சேரநாடாம் இன்றைய கேரள நாட்டில உள்ளன. புன்னாடு வடகொங்கு நாட்டில் உள்ளது.

சங்க காலத்தில் சேர மரபினர் நன்னன் என்ற பெயரில் பல இடங்களில் பலர் ஆட்சி புரிந்தனர். போளூர், திருவண்ணாமலை, கரூர், பழனி, திருச்செங்கோடு, கொல்லம் சேரநாட்டை ச் சேர்ந்தவை. தமிழகத்தில் வடக்கில் போளூரிலிருந்து தெற்கே கொல்லம். வரை மேற்கு திசையிலுள்ள நிலப்பரப்பைச் சேரமன்னர்கள் ஆண்டார்கள். கிழக்கு திசையில் வேங்கடம் முதல் உறையூர் வரை சோழர் ஆண்டனர். அதற்குத் தெற்கில் குமரிவரை பாண்டியர் ஆண்டணர்.

சங்ககாலத்தில் திருவண்ணாமலை சேர நாட்டில் இருந்தது. இங்குள்ள கோயிலிலுள்ள கல்லெழுத்தில் "நல்லிசைக் கடாம் புனை நன்னன் வெற்பில்" என வரையப்பட்டிருக்கிறது. செங்கம் ஊரில் சிவன் கோயிலில் உள்ள கல்லெழுத்தில் "மலைக்கடாம் பாட்டுண்ட மால் வரை" என்று வரையப்பட்டிருக்கிறது.

> மலைபடு கடாம் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் செங்கம் ஊரிலிருந்து ஆட்சிபுரிந்தான. அவனுடைய பரந்த மலை நாட்டில் திருவண்ணாமலை இருந்தது. - ("சங்ககால வேந்தர்கள்", க. சண்முகசுந்தரம். பக்கம்: 196)

> திருக் கோவலூர் வட்டத்தில் கீழையூரில் உள்ள கோயிலில் கர்ப்ப கிரகம் வடபுறம் வச்சிரப்படையில் பலா மரத்துக்கு மேற்கே எழுதியிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு பல்லவ மன்னனான கோவிசய நிருபதுங்க விக்கிரமனுடைய இருபத்தோராம்

ஆண்டுக் கல்வெட்டு "வேட்டுவ அரையர்க்கு, அறாமுண்ணும் நன்னன் கொற்றன் என்பாள் திருவீரட்டானத்து மகா தேவர்க்கு, ஒரு நுந்தா விளக்கு எரிக்கப் பன்னிரண்டு கழஞ்சுபொன்"அளித்தி செய்தியை தெரிவிக்கிறது.

- எபி கிராபியர் இந்திக VII வால் யூம் பக்கம்: 139.

## தொல்குடி வேட்டுவர்

கொங்கு நாட்டுப் பூர்வ குடிகளான வேட்டுவர் தொடக்கத்தில் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டனர். பின்னர் போர் செய்து அரசர்களாக மாறினர். சிறந்த வில்லாளிகளாகவும் அஞ்சாமை, வீரம் மிக்கவர்களாகவும் திகழ்ந்தர்கள்.

செயல் திறன் மிக்க வேட்டுவர் குறுநில மன்னர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் காணியாளர்களாகவும், பாளையக்காரர்களாகவும், ஊராளிகளாகவும், பட்டக்காரர் களாகவும், படைத் தலைவர்களாகவும் கொங்கு நாட்டில் ஆட்சி அதிகாரத்துதான் வாழ்ந்து வந்தனர்.

### வேட்டுவரின் வேறு பெயர்கள்

போர் செய்வதை தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர் கவுண்டர், காடவராயர், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், காங்கயன், நாயகர், , காடுவெட்டி, ராயர், வள்ளல், கொங்குராயர், ஊர்க்கவுண்டர், கண்ணப்பர் குலத்தார், குருகுல வம்சத்தார், வாழரச மணவாளர், கங்கதிராயர், பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். வேட்டுவ

வேந்தர்கள் பல்லவராயர், பூவலராயர், சந்தனராயர், நரசிங்கராயர் - முதலான பெயர்களைப் பூண்டிருந்தனர் என்பதனைக் குறிப்பு நாட்டுச் செப்பேட்டால் அறியலாம்.

## பட்டப் காணியாளர்

கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் காணியாளர்களாகச் சிறப்புற்று விளங்கினர். இவர்களுள் புத்தூர், பள்ளக்குழி, கழனூர், முத்தப்பனூர், தும்பங்குறிச்சி, சௌதாபுரம், இளநகரி, பிரிது, காளிப்பட்டி, ஊசிப்பாளையம், பழமங்கலம், குலவிளக்கு முதலான ஊர்களின் காணியாளர்கள் குறிப்பிடத்தக்கவர். மற்றும் அஞ்ஞூற்றுமங்கலம், திருமழபாடி, குளக்குறிச்சி, படலோடி, குறிச்சி, தென்னிலை, இருப்பலி முதலான ஊர்களில் வேட்டுவர் காணியாட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். காணியாட்சியாளருள் வெங்கச்சி வேட்டுவர் சிலர் புகழ் பெற்று விளங்கினர். முன்னை வேட்டுவர், வடபரிசார நாட்டுக் கோசனத்திலும், சாந்தப்படை வேட்டுவர் கரைய வேட்டுவர் ஆகிய இருவரும் பூந்துறைநாட்டு அரச்சலூரிலும் காணியாளர் களாகத் திகழ்ந்தனர். வேங்கை வேட்டுவர் களிபட்டி அந்தியூரில் கண்ணியாளர்களாக விளங்கினார்.

## ஊராளிகள்

வேட்டுவர் பலர் கொங்கு நாட்டின் பல ஊர்களில் ஊராளிகளாகத் திகழ்ந்தனர். இவர்களுள் சிலரைப்பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவர்களுள் மேல்கரை அரையநாட்டு வடிவுள்ள மங்கலத்துக்காச்சியில் ஊராளி வேட்டுவன் அழகன்காளியும், பன்றிநாட்டு, குளப்பாடியில் ஊராளி நெனூர் அத்தானியும் (நெருப்பூர் நடுகல்) எழுகரை நாட்டு பெரிய விளங்கியில் ஊராளி சுரண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியானும், கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுப் பருத்திப்பள்ளியில் ஊராளி வேட்டுவன் அதியமான் நங்கனும் குறிப்பிடத்தக்கவராவர். சோழன் வேட்டுவர் கிராமத்

தலைவர்களாக (ஊராளி, மன்னாடி) பூர்வ பட்டயத்தில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நியமிக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

## பாளையக்காரர்கள்

சேர, சோழ, பாண்டியரது ஆட்சிக்குப் பின்னர், கொங்கு மண்டலம் வேட்டுவ இனத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களால் ஆளப்பட்டு வந்தது. இவ்வாறு ஆளப்பட்டு வந்த பகுதிகளுள் வெள்ளோடு, சங்ககிரி, சாமப்பள்ளி (தென்னிலை) காவேரிபுரம், ஆண்டியூர் முதலானவை குறிப்பிடத்தக்கவையாகும். இப்பகுதிகளில் வேட்டுவப் பாளையக்காரர்கள் கோட்டைகள் கட்டிக் கொண்டு சிறப்புடன் ஆண்டுவந்தனர். கக்குவாடி பாளையக்காரரும் பண்டு, புகழ்பெற்று விளங்கினார். இவர்களுள் நல்லண்ணக் கவுண்டர் குறிப்பிடத்தக்கவராவார். இவருக்குப் பாண்டிவேந்தன் எழுபது வகை விருதுகளை வழங்கினான் என்று மெக்கன்ஸி குறிப்பிடுவார்.

## பட்டக்காரர்கள்

வேட்டுவர் சிலர் கொங்கு நாட்டில் பட்டக்காரர்களாகவும் புகழ்பெற்று விளங்கினர். இவர்களுள் திங்களூர், புரவிபாளையம், தென்னிலை, தலையநாடு, கொடையூர் சீத்தப்பட்டி, நிமந்தப்பட்டி, நவமரத்துப்பட்டி, நல்லகுமரன் பட்டி, பிச்சம்பட்டி, இலுப்பக்கிணத்துப்பட்டி, இருக்கூர், பட்டுத்துறை, காராப்பாடி, வெட்டயம்பாளையம், கவுண்டம்பாளையம் பட்டக்காரர்கள் சனியாசிபட்டி, களிபட்டி அந்தியூர் - முதலானோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்களுள் இராஜவாய்க்காலை வெட்டிய இருக்கூர் பட்டக்காரர் அல்லாள இளையா நாயக்கரின் புகழ் நாடறிந்தது.

## சங்ககால அரசர்கள்

சங்ககால முதற்கொண்டே வேட்டுவ சிற்றரசர்கள் பலர் பாண்டியரின் ஆட்சியை வலுப்படுத்துவதில் பெரும்பங்கு

வகித்தனர். ம. இராச சேகர தங்கமணி. * வேட்டுவர்கள்" பாண்டியர் வரலாறு. முதல் பாகம் பாண்டியர்க்குத் துணை நின்ற வேட்டுவர் வேட்டுவர்குரல் பிப்ரவரி 1976 பக்கம் 178. பின்னர் சேரர், சோழர், பாண்டியர், நாயக்கர் ஒய்சாளர் முதலான அரச வமிசத்தினரின் வளர்ச்சிக்கு வேட்டுவ அரசர்கள் பெரும் உதவியாக இருந்தனர் .

### வல்வில் ஓரி

கடையெழு வள்ளல்களுள் ஒரியும் ஒருவன். வள்ளலான இவன் போர்க்கலையில் வல்லவன்; வில்லாற்றல் மிக்கவன்; கொல்லி மலைத்தலைவன். சங்க இலக்கியங்கள் ஓரியின் வில்லாற்றலைச் சிறக்கப் பேசும்.

### கடிய நெடு வேட்டுவன்

கோடை மலைத்தலைவனான கடிய நெடுவேட்டுவனின் வீரத்தை அகநானூறும், புறநானூறும் புகழ்ந்து பேசுகின்றன. பெருந்தலைச் சாத்தனார் புறம் 205 ஆம் பாடலில், " வெள்ளீ வேலிக்கோடைப் பொருந" என்று இவ்வேட்டுவ வீரனைப் பாராட்டுவார். அகம் 13ஆம் பாடலில் "திருவீழ் மார்பில் தென்னவன் மறவன் வாள்வாயம்பில் கோடைப் பொருநன்" எனக்குறிக்கப் பெறுகிறான். எனவே இவன் பாண்டியரின் உறவினன் எனத் தெரிகிறது. கொடைக்கானல் பகுதியை ஆண்ட இவன் புகழ்மிகு போர் மறவனாவான்.

## கி.மு. முதல் கி.பி. வரை வேட்டுவர் வரலாற்று ஆவணம்

கி.மு.3. நூற்றாண்டுகளில் உருவான நூல்

**"ஆயர், வேட்டுவர், ஆடுஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே."**
**(தொல்காப்பியம் - பொருள் - அகத்திணையியல்-23)**

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் ஆயர், வேட்டுவர் போன்ற பிரிவினர் வாழ்ந்து வந்தனர் என்பது இதன் வழியாக நமக்குக் கிடைக்கிறது. மற்றும் கோவையில் நடந்த வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கில் கி.மு.500-களில் (கொடுமனம் காலம்) வேட்டுவர்கள் அரசமைப்பை உருவாக்கினார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்களே கூறியுள்ளனர்.

இரண்டு புறமும் வில் உருவம் பொறிக்கப்பட்ட நிறையக் காசுகள் கொங்கு நாட்டில் (கரூர், அமராவதி ஆற்றங்கரை) கிடைத்து இருக்கின்றன. இந்தக் காசுகள் கி.மு.500 அல்லது கி.மு.400 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

கொடுமனம் பகுதியில் கிடைத்த கணையாளிகளில் “வேடுவன்” என்று பெயர் பொறித்த கணையாளிகள் கிடைத்திருக்கின்றன. இந்தக் கணையாளிகள் கி.மு. 400-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை யாகும். (கொங்கு வரலாற்று ஆய்வுகள் அன்றும்-இன்றும்) மேலும் கொடுமனம் பகுதியில் கிடைத்த பானையோடுகளில் அந்துவன், பன்னன், ஆதன் மற்றும் பல வேட்டுவக் கூட்டப்பெயர்கள் தமிழ், பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

வத்தலகுண்டு அருகே கிடைத்த தமிழ் பிராணி நடுகற்களில் அந்துவன் (அந்துவ வேட்டுவர்) கூட்டப் பெயர் இருக்கின்றது. இந்த நடுகல் கி.மு.300-ஆம் நூற்றாண்டைந் சேர்ந்ததாகும்

**கி.பி 1.நூற்றாண்டுகளில் உருவான நூல்**

> **“...... யாம்**
> **நாட்டிடன் நாட்டிடன் வருதும் ஈங்கோர் வேட்டுவர்**
> **இல்லை நின் ஒப்போர்.”** புறம்- 152.

என்று விறலியர் புகழ்வதாகக் கூறுகிறது. பல நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் நாங்கள். ஆனால் எங்கும் உனக்கு நிகரான வேட்டுவர் எவரும் இல்லை என்பது இதன் பொருள். ஆக

வல்வில் ஓரி வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவன் என்பது உறுதியாகிறது.

கண்டீரகக் கோப்பெரு நள்ளி, தோட்டிமலைத் தலைவன், இவன் வேட்டுவ குலத்தவன் என புறம்-150 கூறுகிறது.

**"செல்வத் தோன்றல், ஓர் வல்வில் வேட்டுவன்" - (புறம் -150)**

கடியநெடு வேட்டுவன், கோடைமலைத் தலைவன், பாண்டியனின் படைத்தலைவன் அவன் வேட்டுவ குலத்தவன் எனப் புறம்-205 கூறுகிறது.

**"நோன்சிலை, வேட்டுவ! நோய் இலையாகுக!" - (புறம் -205)**

சங்க காலங்களில் (கி.பி.1ம் நூற்றாண்டு) வேட்டுவர்கள் வில்லாற்றலில் சிறந்து விளங்கினார்கள்.

"கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிபிறந்த வில்தொழில்
வேடர் குலனே குலனும் " - (சிலப்பதிகாரம்
வேட்டுவ வரி)

வேட்டுவரின் குலதெய்வமாகிய கொற்றவை அணியாகக் கொண்டவற்றை எல்லாம் அணிந்து கொண்டு அக்கொற்றவையைப் போலவே ஈண்டு நிற்கின்ற இச்சாலினி தான் (வேட்டுவிச்சி) இப்பேறு பெறுவதற்கு அவள் முற்பிறப்பிலே செய்த நோன்பு தான் எத்தகைய சிறப்புடையதோ?

பொன் வளையல்களை உடைய இச்சாலினி பிறந்த குலம் வேட்டுவக்குடி என்றும், வேட்டுவ குடிகளில் பிறந்த தொழில் வில்தொழில் என்றும், வேட்டுவர் குலமே இவ்வுலகில் தலைசிறந்த குலம் என்றும் இளங்கோவடிகள் தனது சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார் என்பது இதன் விளக்கவுரை ஆகும்.

**"இட்டுதலை எண்ணும் எயினர் அல்லது**
**சுட்டுத்தலை போகாத் தொல்குடி"**
**- (சிலப்பதிகாரம், வேட்டுவ வரி 20-21)**

எயினர் - அம்பு எய்யும் பாலை நில வேட்டுவர்.

வேட்டுவர்கள் வீரம் மிக்கவர்கள், போர்க்களத்தில் பிறர் தலைகளைக் கொய்து எண்ணிப்பார்ப்பார்களே அன்றி பிறர் தங்கள் தலைகளைக் கொய்ய விடாத பழம் பெரும் குடிமக்கள் என்பது இதன் விளக்கவுரை ஆகும்.

குழந்தை இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் வாளால் கீறிப்புதைக்கும் வீர மரபைக் கொண்டது வேட்டுவர் இனம். இன்றும் வட கொங்கு நாட்டில் இப்பழக்கம் இருந்து வருகிறது.

சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகாரத்திற்கு குடிமக்கள் காப்பியம் என்கின்ற சீரிய சிறப்பும் உண்டு. சிலப்பதிகார வேட்டுவவரி வேட்டுவர்களின் வாழ்க்கை முறையையும், போர் நெறியையும், வீரமாண்பையும், வீரப்பண்பையும், அஞ்சாமையையும் வேட்டுவர்களின் போர்த் தெய்வமான கொற்றவையை வழிபடும் பாங்கையும் அற்புதமாக விவரிக்கிறது. கொற்றவை என்பவள் குறிஞ்சி நிலத்திற்குரிய பெண் தெய்வமாக தமிழ் நூல்களில் குறிக்கப்படுகிறது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டுகளில் உருவான நூல் சிலப்பதிகாரம்.

**"அரும்பெறல் மறவர் தாயத்தான்ற தொல்குடியில் வந்தாள்"**

வேட்டுவ குலத்தவரை உயர்ந்த பழங்குடிகள் என்று தேவாரப்பாடல் - 9 கூறுகிறது.

கி.பி. -6ஆம் நூற்றாண்டுகளில் உருவான நூல் பெரியபுராணம்

**"வெம்மறவர் குலத்து வந்த வேட்டுவ சாதியார் போல்"**
**- (பெரியபுராணம் -758)**

வேட்டுவர்களை மறவர் என்று பெரியபுராணம் கூறுகிறது.

"வேடர் விரும்பும் வெஞ்சமாங்கூடல்" என்று வேட்டுவர் களை சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறார்.
- (திருவெஞ்சமாங்கூடல் திருப்பதிகம்)

**கி.பி.7-ஆம் நூற்றாண்டு நடுகல்,**

**".... மலை கோட்**
**டு வேட்டுவரு இரு..."**

விழுப்புரம், எடுத்தவாய்நத்தம், ஆத்துக்காடு. மற்றும் வெஞ்சிலை வடுக வேடுவர் மோதி வேடுவர் கூடிவாழ் திருமுகன்பூண்டி" என்று வேட்டுவர் குலத்தவரைப் பற்றி தேவாரம், பதிகம் 7ஆம் திருமுறையில் சுந்தரர் கூறியுள்ளார்.

**கி.பி.8-ஆம் நூற்றாண்டு நடுகல்,**

**".... வீரசேனாதிபதியாரு**
**பருவான வேட்டுவ இளவரைசர்**
**சேனை எறிந்து பட்டார் கல்."**

மற்றும்

கி.பி.8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வேட்டுவர்களை வென்று சோழ மன்னன் கொங்குநாட்டைக் கைப்பற்றினான் என்று சோழன் பூர்வபட்டயம் கூறுகிறது. 32 ஊர்களில் கோட்டை ஊர் அதிகாரத்திற்கு வேட்டுவர்களை (வேட்டுவர், வில்வேடுவர், காவலர், பூலுவர், மாவலியர்) நியமித்த செய்திகளை சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது.

**கி.பி. 9-ஆம் நூற்றாண்டு நடுகல்,**

தருமபுரி, வேடியப்பன் கோயில்

**".... நான்காவது வாண கோரையர் வேட்டுவ தியரை"**
**- திருவண்ணாமலை, செங்கம்.**

**கி.பி. 10-ஆம் நூற்றாண்டு நடுகல்,**

"ஸ்வஸ்திஸ்ரீ பூர்வதேசமும் கங்கையும் சோழர்க்குச் செல்லா நின்ற யாண்டு ஊராளி வேட்டுவன் அழகன் காளி அவன் இதில் பட்டான்."

முதல் ராஜேந்திர சோழனின் வெற்றிக்காகப் போராடி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கும் நடுகல். இது கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. மற்றும்

கி.பி. 10ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த இரவிகோதைச் செப்பேடு வில்லி வேட்டுவ கூட்டத்தை பற்றிக் கூறுகிறது.

**கி.பி. 12-ஆம் நூற்றாண்டு நடுகல்,**

> “ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டியா தேவற்கு யாண்டு 6 வது வடகரை நாட்டு உரகடங்கச்சதி கண்ணையன் வேட்டுவரில் அந்தியூரன்” - சுந்தரபாண்டியனின் (கி.பி. 1252 - 1271)

வெற்றிக்காகப் போராடி வீரமரணம் அடைந்ததைக் குறிக்கும் நடுகல்.

> "வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச் சாய்த்தமருள் வென்ற சயம்பெருகச் சீர்த்தபுகழ் நிக்குவனம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச் சொக்கனேந்த லேவுலகிற் காண். இக்கற்பொறி ரகூஷிப்பான் பாதம் என் தலை மேலே"

தமிழ் மண்ணில் வெண்பா வடிவில் அமைந்த வேட்டுவ நடுகல் இது மட்டுமே. இது போன்று நிறைய வேட்டுவ நடுகற்கள் காணப்படுகிறது.

கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், வேட்டுவர் கலிவெண்பா கரைய குல வேட்டுவர்களைப் பற்றிக் கூறுகிறது. ஈரோடு அறச்சலூர் பகுதியில் அதிகளவு கரைய குல வேட்டுவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கொடிவேரி அணைக்கரையில் உள்ள கல்வெட்டுக் (கி. பி. 1125)

கால்வாய் வெட்டி கொடிவேரி அணை கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு கி.பி. 1125. வேட்டுவக் குறுநில மன்னனான செம்ப வேட்டுவரில் ஜெயங்கொண்ட சோழ கொங்காள்வான் கால்வாய்

வெட்டி, அணை கட்டிய செய்தி கொடிவேரி அணைக்கரையில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது.

"It is dated in the 55th year of the reign of the kongu king kulottunga and records the gift of a tank and excavation of a channel by semba - vettuvan tondaiyan pillai alias jayangonda sola kongalvan of kulavarrur in vadakarainadu".

**- Indian Archaeology 1989-90 A Review**

## கி.பி. 14, 15 மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில்

வேட்டுவப் பாளையக்காரர்கள் பலர் கொங்குநாட்டை ஆட்சி செய்தார்கள் என்று பாளையக்காரர்கள் வரலாறு கூறுகிறது.

கி.பி. 14, 15 மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் வேட்டுவக் குறுநில மன்னனான அல்லாள இளைய நாயக்கர் கொல்லிமலைப் பகுதியில் ஆட்சி செய்தார்கள் என்று கொங்குமண்டலச் சதகம், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை, செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுக்கள் கூறுகிறது.

## வேட்டுவக் குறுநில மன்னனான அல்லாள இளையான்

கி.பி.1623-ல் காவிரியை ஜேடர்பாளையத்தில் கல், மணல் மூட்டைகள் மற்றும் பெருங்கற்களைக் கொண்டு காவிரி ஆற்று நீரைத் தடுத்து வாய்க்கால் வெட்டினான். இது ராஜவாய்க்கால் என்று மக்களால் அழைக்கப்படுகிறது.

“திடமுறு கொங்கிலும் பாசனமாகச் செலப் பிரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான்.”

கொங்குமண்டலச் சதகம், கவிஞர் கார்மேகம் பக்-96, செய்யுள்-79)

**“ஆறை இளைய நாயக்கன்
தேவருக்கு திரும்பாத காவிரியை கொங்கேற்றித்.”**

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை செய்யுள் - 266)

## ஆற்றூர்

> காணியுடைய மூலவேட்டுவர் அல்லாளன் இளையான் நாயக்கரும். - (சேலம்-ஆத்தூர் கல்வெட்டு)

ஆங்கிலேயர்கள் தொகுத்த ஆவணங்களில் வேட்டுவர்கள் (வேட்டுவர், வேட்டுவகவுண்டர், பூலுவகவுண்டர், புன்னம் வேட்டுவ கவுண்டர்) சேலம், கோவை, மதுரை மற்றும் திருச்சி மண்டலங்களில் இருக்கிறார்கள் என்று கூறுகிறது.

தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்று வரை தொடர்ச்சியான வேட்டுவர்கள் (வேட்டுவர், வேட்டுவகவுண்டர், பூலுவகவுண்டர், புன்னம் வேட்டுவ கவுண்டர்) வரலாற்றை இலக்கியங்கள், நடுகற்கள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் செப்பேடுகள் மூலம் வேட்டுவர்களால் நிரூபிக்க முடியும்.

> "கொடுமனம் என்ற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது. அப்போது வேட்டுவர்கள் என்ற சிற்றரசர்கள் தோன்றினர்.
>
> - தினமலர் 12.05.2012 கோவை பதிப்பு

கோவையில் நடந்த வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கில் கி.மு.500-களில் (கொடுமனம் காலம்) வேட்டுவர்கள் அரசமைப்பை உருவாக்கினார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்களே கூறியுள்ளனர்.

இரண்டு புறமும் வில் உருவம் பொறிக்கப்பட்ட நிறையக் காசுகள் கொங்கு நாட்டில் (கரூர், அமராவதி ஆற்றங்கரை) கிடைத்து இருக்கின்றன. இந்தக் காசுகள் கி.மு.500 அல்லது கி.மு.400 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. கொடுமனம் பகுதியில் கிடைத்த கணையாளிகளில் "வேடுவன்" என்று பெயர் பொறித்த கணையாளிகள் கிடைத்திருக்கின்றன. இந்தக் கணையாளிகள் கி.மு.400-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை யாகும். (கொங்கு வரலாற்று ஆய்வுகள் அன்றும்-இன்றும்)

மேலும் கொடுமனம் பகுதியில் கிடைத்த பானையோடுகளில் அந்துவன், பன்னன், ஆதன் மற்றும் பல வேட்டுவக் கூட்டப் பெயர்கள் தமிழ், பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

வத்தலகுண்டு அருகே கிடைத்த தமிழ் பிராணி நடுகற்களில் அந்துவன் (அந்துவ வேட்டுவர்) கூட்டப் பெயர் இருக்கின்றது. இந்த நடுகல் கி.மு.300-ஆம் நூற்றாண்டைந் சேர்ந்ததாகும்.

வேட்டுவர்களை வில்லோர் என்றும், வில்வேட்டுவர் என்றும், சிலை வேட்டுவர் என்றும், வில்லவர் என்றும் சங்ககாலப் புலவர்களால் அழைக்கப்பட்டன. வேட்டுவத் தலைவர்களை வில்லோர் பெரும என்றும் அழைக்கப்பட்டனர்.

வேட்டுவ குடிகளில் பிறந்த தொழில் வில்தொழில் என்று கி.பி.5ம் நூற்றாண்டுகளில் தோன்றிய சிலப்பதிகார வேட்டுவ வரியில் சொல்லப்பட்டிருக்கிறது.

## வேடர்வாழ் திருமுருகன் பூண்டி

"வெஞ்சிலை வடுக வேடுவர் மோதி வேடுவர் கூடிவாழ் திருமுகன்பூண்டி" என்று வேட்டுவர் குலத்தவரைப் பற்றி தேவாரம், பதிகம் 7ஆம் திருமுறையில் சுந்தரர் கூறியுள்ளார்.

**"மூரிவார் சிலை மாவலி ...."**

வலிமையுள்ள நீண்ட வில்லை உடைய மாவலியர் (வேட்டுவர்) பற்றி மணிமேகலை கூறியுள்ளது.

வில் உருவம் பொறிக்கப்பட்ட பல வேட்டுவ நடுகற்கள் இருக்கின்றன. கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரவிகோதைச் செப்பேடு வில்லி வேட்டுவ கூட்டத்தை பற்றிக் கூறுகிறது. பட்டையக் காளிபாளையக் கல்வெட்டு வில்வேடுவரைப் பற்றிக் கூறுகிறது.

கொம்மடிமேல் சாந்தைக் குலம் தன்ம குலம் நரிய குலன் இம்மடி வில்லிகுலன் வல்ல குலம் – மும்முடிவேள் வேட்டுவர் கலிவெண்பா.

வேட்டுவர் கலிவெண்பா வில்லி வேட்டுவ கூட்டத்தைப் பற்றிக் கூறுகிறது. தென்னிந்தியக் குடிகளும் குலங்களும் தொகுதி-7 வில்லி வேட்டுவக் கூட்டத்தைப் பற்றிக் கூறுகிறது.

கி.மு. 500-ஆம் ஆண்டுகளில் வேட்டுவர்கள் (வேட்டுவர், வேட்டுவகவுண்டர், புன்னம் வேட்டுவகவுண்டர், பூலுவகவுண்டர்) கொடுமனம் பகுதியில் முதன் முதலில் அரசு அமைப்பை உருவாக்கி இரண்டு புறமும் வில் சின்னம் பொறித்த காசுகளை வெளியிட்டு ஆட்சி செய்தார்கள்.

## வேட்டுவர்களுக்கும், வேடர்களுக்கும் உள்ள வேறுபாடு

வேட்டையாடுதல், குடிகாவல் மற்றும் போர்த் தொழிலை பூர்வீகக் காலத்திலிருந்து தங்களது பரம்பரை உரிமையாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேட்டை தொழிலை மட்டும் தங்களது பரம்பரை உரிமையாகக் கொண்டவர்கள் வேடர்கள்.

வேட்டுவர்கள் தங்கள் குழுக்களுக்கு போர்ப்பயிற்சி அளித்து போர்த் தொழிலில் ஈடுபடச் செய்தனர் பயிற்சி பெற்று முதிர்ச்சி அடைந்த வேட்டுவர் பூந்தொடை விழவு என்னும் இனக்குழுவிற்கே உரித்தான அறிமுக விழாச் சடங்கு வாயிலாக 4 . (1981-Drama in Ancient Tamil Society, Chennai: N.C.H.B, Sivathamby.K) பெரியபுராணம் ).

## மழவர்

மலை சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களினத்தவர், ஆதலின் மலைவர் எனப்பட்டு இச்சொல்லே திரிந்து பின்னர் மழவர் ஆயிற்று எனவும், சிறந்த போர் மறவர்களாக இவ்வினத்தவர்கள் விளங்கினமையால் மறவர் எனப்பட்டு இச்சொல்லே பின்னர் மழவர் என மாறியது எனவும் இவர்கள் பற்றிப் பொதுவான கருத்துக்கள் கூறப்படுகின்றன. மலைப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் மலைவர், மழவர் என்றும் மறவர் என்ற சொல்லே மழவர் என்றும் மாறிற்று என்பது உண்மையானால் தமிழகத்தின் பிறமலைப் பகுதிகளில்

வாழ்ந்தவர்களும். மறவர்களாக விளங்கிய பிற போர் வீரர் மரபினரும் இவ்வாறே மழவர் என்று அழைக்கப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் குறிக்கப்படவில்லையாதலால் மேற்சொன்ன கருத்து பொருந்தாமை தெளிவு. மழவர்களின் தாயகம் கொல்லிமலைப் பகுதியாகும். மழவர்கள் கொல்லிமலைப் பகுதியை ஆதிக்கம் செலுத்தியதால் மழகொங்கு என அழைக்கப்பட்டது.

புலியூர்கேசிகன் (அகம்-269) பாடலில் மழவரை ஓர் இனத்தார் எனக் குறிப்பிடுகிறார்.

புலவர் திரு.பொ.வே.சோமசுந்தரனார் அகநானூறு-129 பாடலில் மழவரை எயின குடி எனக் குறிப்பிடுகிறார்.

**“வன்கண் மழவர் பூந்தொடை விழவின்”**

என்று அகநானூறு (187) பாடல் கூறுகிறது. தொடை - அம்பு, விழவு - விழா.

பயிற்சி பெற்று முதிர்ச்சி அடைந்த வேட்டுவர் பூந்தொடை விழவு என்னும் இனக்குழுவிற்கே உரித்தான அறிமுக விழாச் சடங்கு வாயிலாக 4 . (1981-Drama in Ancient Tamil Society, Chennai: N.C.H.B, Sivathamby.K)

- கார்த்திகேசு சிவத்தம்பி மழவரை வேட்டுவகுலத்தவர் என்று கூறியுள்ளார்.
- நற்றினை (52) பாடல் வல்வில் ஓரியை "மழவர் பெருமகன் மாவள் ஓரி" எனக் கூறுகிறது.
- புறநானூறு (88) பாடல் அதியமானை "நெடுவேல் மழவர் பெருமகன்" எனக் கூறுகிறது.
- அகநானூறு (61) மழகொங்கு (கொல்லிமலைப் பகுதிகள்) பகுதிகளை மழபுலம் எனக் கூறுகிறது.

புறம் (152) பாடல் வல்வில் ஓரி வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவன் எனக் கூறுகிறது. மேற்சொன்ன பாடல்கள் மூலம்

மழவர்கள் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதிபடுகிறது. மேலும் அதியமான் வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவன் என்பது உறுதிபடுகிறது. இதுபோல மழவர்களின் தாயகமும் மழகொங்கு பகுதி என்பது உறுதிபடுகிறது.

மழகொங்கு பற்றி பாண்டியர் செப்பேடுகள் கூறுகிறது. 'மழவர்கள் தனக்கொப்பானவர்கள்' என்று பாண்டியர் கூறிய செய்தி பாண்டியர் செப்பேட்டில் இருக்கிறது. எனவே கி.பி.8-ஆம் நூற்றாண்டுகளில் மழவர்கள் கொல்லிமலைப் பகுதியை ஆட்சி செய்தார்கள் என்பது பாண்டியர் செப்பேடுகளின் மூலம் உறுதிபடுகிறது.

கி.பி.8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆதித்த சோழன் இராஜவேடர்களை (வெட்டுவர், வில்வேடுவர், காவலன், பூலுவர், மாவலியர்) வென்று கொங்குநாட்டைக் கைப்பற்றினான் என்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது.

மழவர்கள் வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பாண்டியர் செப்பேடுகள் மற்றும் சோழன் பூர்வ பட்டயம் மூலமாக உறுதிபடுகிறது. கி.பி.9-ஆம் நூற்றாண்டுகளில் கொல்லி மழவன் கொல்லிமலைப் பகுதியை ஆட்சி செய்தான் என நாமக்கல் பட்டயம் கூறுகிறது. இந்தக் கொல்லி மழவனின் மகள் தான் செம்பியன்மாதேவி.

பட்டயங்கள் வெளியிடப்பட்டன. அவை 5 ஆம் ஆட்சி ஆண்டையும், 10 முதல் இராசராசசோழன் காலத்தில் (கி.பி.985-1014) இரண்டு ஆம் ஆட்சி ஆண்டையும் குறிக்கிறது. அதாவது கி.பி.990. கி.பி.995 ஆகிய இந்த பட்டயத்தில் திருச்செங்கோட்டிற்கு அண்டை நாடான வாழவந்தி நாட்டுத் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. துணைநாடான தூசியூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பட்டயச் செய்தி

முதல் பட்டயத்தில் கொல்லி மழவன் பிரதிகண்டன் சுந்தரசோழன் என்பவன் தூசியூரைச் சேர்ந்தவன், இவனுடைய

தந்தை ஈழத்துப் போரில் இறந்து விடுகின்றார். அவருடைய பெயரில் தூசியூர் இறைவன் பரமேசுவரருக்கு ஒரு தண்ணீர்ப் பந்தல் வைத்துக் கொடுக்கிறான்.'

(சுந்தரசோழன் இலங்கை மீது படையெடுத்தபோது அவனுடைய தந்தை கொல்லி மழவன் சோழனின் படைக்குத் தலைமை தாங்கியவன்.)

இரண்டாவது பட்டயத்தில் ஒள்ளியூரன் பிரதிகண்டன் தூசியூர் திருமூலட்டானமுடைய பரமேசுவரர்க்கு மேளங்கொட்டுகிற உவச்சர்களுக்கு நிலம் கொடுத்ததைக் குறிக்கின்றது. நிலத்தின் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விடத்திற்கு கணவதி நல்லூரான அமண்குடி என்று பெயர். இறைவன் பெயரில் நிலம் கொடுக்கப்பட்டது. இப்பட்டயங்கள் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 3 பகுதி 4ல் 212, 213-ஆம் எண்களாக வெளிவந்துள்ளன.

கொல்லிமலைப் பகுதியைச் சேர்ந்த சில வேட்டுவக் கூட்டங்கள் பழுவூருக்குச் சென்று ஆட்சி அமைப்பை உருவாக்கினார்கள். இவர்கள் பழுவேட்டரையர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

"குண்ணாடி கூகைக் குலன் கொல்லி குலன்
கொன்னை குலன் புன்னாடி காவலர் பூலுவ குலத்தோன்
- மண்ணாளும்" (வேட்டுவர் கலிவெண்பா)

கொல்லி வேட்டுவ கூட்டத்தைப் பற்றி வேட்டுவ கலிவெண்பா கூறுகிறது.

"கொல்லி கிரிக் குடையவர்கள், கூறிய னாடுதனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள் " (அல்லாள இளையான் செப்பேடு) கொல்லிமலைக்கு உரிமை படைத்தவர்கள் வேட்டுவர்கள் என்று அல்லாள இளையான் செப்பேடு கூறுகிறது.

அல்லாள இளையானின் முன்னோர்கள் காசு வெளியிட்டு கொல்லிமலைப் பகுதிகளை ஆட்சி செய்தார்கள் என்று நாமக்கல் கபிலர்மலை செப்பேடு கூறுகிறது.

கொல்லிமலைப் பகுதியை ஆட்சி செய்த கடைசி மழவர் (வேட்டுவர்) சிற்றரசர் அல்லாள இளையான்.

1) பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கனேன் (நாமக்கல் பருத்திப்பள்ளி கல்வெட்டு)

2) காவலன் குறும்பில்லரில் கூத்தன் கூத்தனான அதியமான்

3) அதியமான் மனைக்கிழத்தி (ஈரோடு கல்வெட்டுக்கள்)

4) விடுகாதன் வேட்டரையன் (நாமக்கல் மலைக் கல்வெட்டுக்கள்) (ஹசுநு-11/1906)

இந்தக் கல்வெட்டுக்கள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகள். இந்தக் கல்வெட்டுக்கள் அதியமானை வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிடுகிறது. காவியக் காலம் முதல் இலக்கியத்திலும், கல்வெட்டுக்களிலும் மிகுதியாகப் பேசப்படுகின்றனர்.

## தொல்குடி - வேளிர் - அரசியல்

சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் தங்களது படைத்தலைவர்களுக்கு மழவராயர் என்ற பட்டப்பெயரை வழங்கி வந்தனர்.

வேட்டுவர்களுக்கு பல்லவராயர் என்ற பட்டப் பெயர் இருப்பதைக் கல்வெட்டுக்கள் கூறுகிறது.

பூலுவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த கோப்பண்ண மன்றாடியார் நாயக்க அரசர்களை எதிர்த்துப் போர் செய்தார்கள் என்று காடையூர் செப்பேடு கூறுகிறது.

வேட்டுவ குலத்தைச் சேர்ந்த பாளையக்காரர்கள் நாயக்க அரசை எதிர்த்து போர் செய்தார்கள் என்று பாளையக்காரர்கள் வரலாறு கூறுகிறது. இதுபோல மாவலியர் பிரிவைச் சேர்ந்த வேட்டுவர்கள் நாயக்க அரசர்களை எதிர்த்துப் போர் செய்தார்கள் என்று நாயக்க பாளையக்காரர்கள் வரலாறு கூறுகிறது. வேட்டுவர்கள் மீது இருந்த பகை, வெறுப்பு உணர்வு காரணமாக நாயக்க நாடோடிப் பாடகர்கள் வேட்டுவர்களை இழிவு படுத்துவதற்காக உருவாக்கிய கற்பனை கலந்த கதைதான் பொன்னர் சங்கர் கதை.

நாயக்க அரசர்கள் தமிழ் மண்ணைப் பல பாளையங் களாகப் பிரித்தனர். பிரிக்கப்பட்ட பாளையங்களில் சில பாளையங்கள் வன்னியர்களுக்கும், சில பாளையங்கள் மறவர்களுக்கும், சில பாளையங்கள் கள்ளர்களுக்கும் நாயக்க மன்னர்கள் அளித்துள்ளனர். தமிழ் மண்ணில் மூத்தகுடி அரச குலத்தவரான வேட்டுவ மறவர்களுக்கு (வேட்டுவன், வேட்டுகவுண்டர், பூலுவகவுண்டர், புன்னம் வேட்டுவ கவுண்டர்) நாயக்க அரசர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்கள் வேட்டுவர்களே. இதனால் தான் வேட்டுவர்கள் மீது இருந்த பகை, வெறுப்பு உணர்வு காரணமாக நாயக்க நாடோடிப் பாடகர்கள் வேட்டுவர்களை இழிவு படுத்துவதற்காக உருவாக்கிய கற்பனை கலந்த கதைகள் உருவாகின

- தமிழ் மண்ணில் கி.மு.500களில் அரச அமைப்பை உருவாக்கி ஆண்ட வேட்டுவ குலத்தவர்கள் ஆட்சி அதிகாரத்தை இழந்தது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான்.
- பல்லவ அரசர்கள் வேட அரசனை வென்று நாட்டைக் கைப்பற்றினான் என்று உதயேந்திரம் செப்பேடுகளில் ஸ்லோகம் -58) என்று கூறுகிறது.

ஆதித்த சோழன் ராஜ வேடர்களை வென்று கொங்குநாட்டைக் கைப்பற்றினான் என்று சோழன் பூர்வ

பட்டயம் கூறுகின்றது. வேட்டுவ குலத்தவர்களை குருகுல வம்ச சத்திரியர்கள் என்றும், முத்துராஜாக்கள் சாதி என்றும், வேட்டுவப் பாளையக்காரர்கள் வரலாறு மற்றும் குருகுல வரலாறு கூறுகிறது.

சத்திரிய வேட்டுவ கூட்டத்தைப் பற்றி வேட்டுவக் கலிவெண்பா கூறுகிறது.

வேட்டுவ குலத்தவர்களே அரச குலத்தவர் என்றும், சத்திரிய சாதி என்றும் மூத்தகுடி அரசர்கள் (தமிழ் மண்ணில் முதன் முதலில் அரசு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், வேட்டுவப் பாளையக்காரர்கள் வரலாறு. அமைப்பை உருவாக்கி ஆண்ட அரசர்கள்) என்றும் செப்பேடுகள், வேட்டுவ கலி வெண்பா கூறுகிறது.

கி.மு.500-களில் கொடுமனம் பகுதியில் அரசு அமைப்பை உருவாக்கி ஆண்ட வேட்டுவ வில்லிகளுக்கும்,. அதியமான் மற்றும் வல்வில் ஓரி குலத்தவர் வேட்டுவரே ஆகும் .வல்வில் ஓரி மற்றும் அதியமான் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த மழவர்கள்.

## வல்வில் வேட்டுவர்கள்

சிவன் ஒரு மலை வேட்டுவன். கண்ணப்பர் ஒரு சிலை (வில்) வேட்டுவன். சேர வேட்டுவ வேந்தனின் கொடி வில் கொடியாகும்.

**புறம். 150: 7 வது வரி :**

**"செல்வத்தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன்"**
**- கண்டீரக் கோப்பெருநள்ளி பற்றி - வன் பரணர்.**

**புறம். 152: 23 - 24 வது வரிகள் :**

**“நாட்டிடன் நாட்டிடன் வருவதும் ஈங்கு ஓர்**
**வேட்டுவர் இல்லை நின் ஒப்போர் என”**
**- வல்வில் ஓரி பற்றி வன்பரணர்.**

**புறம். 205: 9**

**"நோன் சிலை வேட்டுவ நோயிலை ஆகுக"**
**- கடிய நெடு வேட்டுவன் பற்றி பெருந்தலைச் சாத்தனார்.**

நோன் சிலை என்றால் வல்வில் என்று அர்த்தம்.

## வல்வில் நோன் சிலை

வல்வில் வேட்டுவ நீ நோய் இன்றி வாழ்க! கொடைக்கானல் மலை (கோடை மலை) ஆண்ட கடியநெடு வேட்டுவனை பெருந்தலைச் சாத்தனார் பாடியது. அகத்தியர் நாடி ஜோதிடம், வசிஷ்ட நாடி சோதிடங்கள் எல்லாம் முதலில் வேட்டுவர்க்கு முதல் வணக்கம் சொல்லியே சோதிட பலன்களைச் சொல்லத் தொடங்குகின்றன. “சில வேந்தர் இடத்திலே சில வீரர் இடத்திலே சில வேட்டுவர் சார்பினிலே இறைவனை காண்போம்” என்கிறார் பாரதியார். வேட்டுவரில் கண்ணப்ப நாயனாரை திரு வேட்டுவர் என்று அழைக்கின்றார். வேட்டுவர் குடி உலகின் தொல்குடி ஆகும். மகாபாரதம், இராமாயணம் இரு பெரும் இதிகாசங்களும் வல்வில்லில் பிறந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் வில்லி வேட்டுவன் பெயரில் அமைந்ததே, திருமுருகன் பூண்டி மற்றும் புலியன்பட்டி கொமரபாளையத்தில் உள்ள சிவ லிங்கங்களில் வில் வரையப்பட்டுள்ளது. முருகன் கையில் உள்ள வேல் வேட்டுவரின் போர் ஆயுதமாகும்.

சங்ககாலத்தில் சேர வேட்டுவ வேந்தர் மேற்கு தொடர்ச்சி மலைகளை மட்டுமின்றி கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் ஆண் டனர். மலையாண்ட மலையமான்கள் (மான் எனறால் மகன் என்று அர்த்தம்) வான் முட்டும் மலைகளை ஆண்டதால் வானவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சேர இளவரசர்களும் ஆண்டனர் என்பதற்கு ஆட்டன் அத்தியும் ஒரு சான்றாகும்.

## வேட்டுவரும் பதினெண்குடிகளும்

தொண்டை மண்டல வரிசை மூவாறு குடிமக்கள் சுருதி. நாள் முதலாகவே துங்கமிகு நாவிதன், குயவன், வண்ணான், ஒலை சொன்னபடி எழுதும் ஒச்சன், கண்மாளர் வகை ஐவர், வாணியர் மூவர், கந்தமலர் மாலைக்காரர், கலை மீது சாரட்டோட்டும் பாணன், தலைக்கடைக் காவல் புரி பள்ளி, வலையன், பண்டு முதல் ஊரன் மறிக்கும் இடையன், விருது பலகூறு வீரமுடையான், பதினெண்குடி மக்கள் அனைவரும் வேட்டுவர் பணிசெய்து பல முறைமையும் கொண்டு பரிவட்டமும் கட்டியே வருவர் இக்குவலய மதிக்கவே தான் கூரறிய கச்சி வாழ் ஏகாம்பர் ஆலயக் குமுதத்தில் இட்டலிபியே.

களப்பிரர் மன்னர்கள் என்பவர்கள் கன்னட வேட்டுவர்கள், பல்லவர் மன்னர்கள் என்பவர்கள் ஆந்திர வேட்டுவர்கள் ஆவர், கன்னட மற்றும் ஆந்திர தெலுங்கு வேட்டுவர்களை வடுக வேட்டுவர்கள் என்பார்கள்.

## வேட்டுவ வேளிர்களின் காணி ஆட்சிப்பாடல்
## (வேட்டுவர் திருமணப் பாடல்)

**வடக்கே வளநாடு வாளகிரி பட்டிணம்**
**காஞ்சி காளத்தி உடுப்பூர் பட்டிணம்**
**திருக்கச்சிராசன், திருவேங்கடராசன், காவிலியராசன்,**
**மாவிலியராசன், பூழுவராசன் என ஐந்து ராஜாக்களும்**
**சேர்ந்து சேரன், சோழன், பாண்டியன் மூவரையும் பிடித்து**
**சிறைக்கூடத்தில் அடைத்த, உத்தண்ட, வீரபத்திரன், பரசுராமன்**
**எல்லை அழித்து எதிர்படை வென்றுவேட்டுவ ராசக்களுடைய**
**காணி பூமிஇவ்வளவு என்று கல்வெட்டு சாசனம்**
**வடக்கே வாளை ஆற்றுக்கும்கிழக்கே காஞ்சி காளகத்திற்கும்**
**தெற்கே மதிரை (மதுரை) கோட்டை தலைவாசலுக்கும்**
**மேற்கே வெள்ளியங்கிரி மலைக்கும் நான்குசமுஸ்தானமும்கூடி**

**ஆண்டிருக்கும் நாளையில் ஆணுக்கும்பெண்ணுக்கும்**
**கல்யாணம் செய்ய வேண்டுமென்று ஏழு பிராமணரை**
**அழைத்து வேத சாஸ்திரம் ஓதி16 பந்தக்கால நட்டி**
**பச்சைப் பந்தல் போட்டு பட்டாலை மேகட்டி**
**பாலைக்கால்தோரணம் இட்டு பேக்கரும்பு கொண்டு வந்து**
**பிரமனை சோடித்துவாளுக்கு மாலைசூட்டி**
**மணவாழைப் பந்தலிலேவெள்ளிக்குடையும்**
**தங்கத்தினால் பூனூலும் போட்ட பெரியோர்களான**
**போர்க்குவீமராசா பொறுமைக்கு தர்மராசா**
**சொல்லுக்கு அரிச்சந்திரன்ஆன கொடைக்கு கர்ணன்ஆன**
**வில்லுக்கு விசயன் ஆனசாத்திரத்திற்கு சகாதேவன் ஆன**
**எச்சில் இட்டு முக்தி பெற்றகண்ணப்ப கோத்திரம்**
**குருகுலம் வம்சமாகிய வேட்டுவர்**

வேட்டுவர்கள் திருமணத்தின் போது இப்பாடல் குலப்பாடலாக வேட்டுவ பெரியோர்களால் வாசிக்கப்பட்டு இன்ன குலத்தில் பிறந்த இந்த ஆண் மகனுக்கும், இன்ன குலத்தில் பிறந்த இந்த பெண் மகளுக்கும் இருவீட்டு பெரியோர்களின் சம்மதத்துடன் மணம் முடித்து வைக்கிறேன் என்று கூறி சிறப்புச் செய்வர்.

இக்குலப்பாடலில் கச்சிராசன் எனும் சொல் கச்சி என்னும் காஞ்சிபுரத்தை ஆண்ட வேட்டுவ மன்னர்களையும், வேங்கடராசன் என்னும் சொல் வேங்கடத்தை ஆண்ட வேட்டுவ மன்னர்களையும் குறிப்பிடுகின்றன. "வேட்டுவர் மலிந்த திருவேங்கடம் ............. மேயவிளக்கே" என்று திருமங்கை ஆழ்வார் பாடிய பாடலால் (அறியப்படுவது) திருவேங்கடத்தை வேட்டுவ வேளிர்களால் ஆளப்பட்டு வந்தது என்பது உறுதி செய்யப்படுகிறது.

## தென்னிந்திய கல்வெட்டுகள்

இக்கல்வெட்டினால் நன்னனின் சந்ததியார் சங்க காலத்திற்க்கு பிறகு பல நூற்றாண்டுகளாக சிற்றரசர்களாக இருந்து வந்தது தெறிகிறது இவர்கள் சேர வேட்டுவ மரபினர் ஆவர். 1. பாழியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நன்னன். 2. நன்னன் உதியன் இவன் சேரல வழியில் வந்தவன். இவன் சிற்றரசனாக இருந்ததால் வேணமான் என்றது (அகம், 97:12). அதிகமானும் சேர மரபினன் ஆவன், சிற்றரசனாக இருந்த்தால் வேளிரில் ஒருவனாக சொல்லப்பட்டான். 3.செங்கண் மாத்து வேள் நன்னனின் எனப்பலா் சேரா் வழிவந்த நன்னன் மரபினா ஆவர்.

## தொல்குடி வேட்டுவர் நடுக்கல் வழிபாடு

தமிழகத்தில் நூற்றுக்கணக்கான வேட்டுவா் நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழா் நாகரிகத் தொன்மைக்கு சான்று பகா்வன. புறநானூற்றின் பிற்பகுதியில் 350 ஆம் பாடலுக்குப் பிறகு, பலபாடல்கள் சாதாரணக் குடிமக்களைப் பாடியவையாகும். ஆனிரை கவா்ந்து, வெட்சி கரந்தைப் போா் நடத்தி வாழ்ந்த தொன்மை மிக்க மறவா்களை, மறக்குடியினரை இவை பாடுகின்றன. வேந்தா்களைப் பாடியவை முன்னா்க் கோா்க்கப்பட்டுள்ளன. இன்றைய ஆராய்ச்சியாளரும் இம்மக்கள் பற்றிய பாடல்களில் கருத்துச் செலுத்துவதில்லை (257, 258, 261, 262, 263, 335 முதலியன) 'கொள்புனல் சிறையின் விலங்கியோன் கல்லைத் தொழுதுபோமின்' (263); வீரனுக்கு 'அணி மயிற் பீலி சூட்டி, பெயா் பொறித்து, இனி நட்டனரே கல்லும்' (264): என இவ்வாறு வருவன பல தமிழா்களின் உருவ வழிபாட்டின் வோ் இவை. சிவனியம் மாலியம் கொற்றவை வழிபாடுகள் தமிழா் நாகரிக வளர்ச்சி பற்றியன என்பதை அறிகின்றோம். முன்னோா் வழிபாடே தெய்வவழிபாடு ஆனது.

தமிழ் நாகரிகம், தமிழா் நாகரிகம் வேட்டுவா்களால் குறிஞ்சி நிலத்தில் மட்டுமிருந்து பின்பு முறையே முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற திணை நிலங்களுக்குச் சென்றது.

**குறிஞ்சி** : மரமடர்ந்த மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது.

தெய்வம் : முருகன் மற்றும் சிவன்.

**முல்லை** : மரம் மடராத காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது.

தெய்வம் : திருமால்.

**பாலை** : கடுங்கோடைக் காலத்தில் குறிஞ்சியும் முல்லையும் வறண்ட நிலை பாலை எனப்பட்டது.

தெய்வம் : காளி. எனும் கொற்றவை (குமரி).

**மருதம்** : வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்பட்டது.

தெய்வம் : வேந்தன் (இந்திரன்).

**நெய்தல்** : கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்பட்டது.

தெய்வம் : வர்ணன் (கடலோன்)

'ஆ' வானது முதன்?முதலில் குறிஞ்சி நிலத்திற்கே உரிய விலங்காகும். குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்திலிருந்து ஆயர் ஆட்டையையும் மாட்டையும் பெருவாரியாக வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தனர். 'ஆ' வை மேய்ப்பவர் ஆயர் எனப்பட்டனர்.அரசு ஆட்சி செய்தவர் வேட்டுவர் எனப்பட்டார்கள்

ஆயர் குடியைச் சார்ந்த ஆணின் பெயரை ஆயர் என்றும், வேட்டுவர் குடியைச் சார்ந்த ஆணின் பெயரை வேட்டுவர் என்றும் அழைத்தனர். இதில் ஆட்சி உரிமை பெற்றவர்கள் வேட்டுவர் எனவும் ஆட்சி உரிமை பெறாதவர்கள் ஆயர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். (ஆடு உ - ஆண். கிழவர் - ஆட்சியர்).

குறிஞ்சியில் வேட்டுவர்களின் ஆ நிறைகளை புலையர் மேய்த்தனர். முல்லையில் வேட்டுவர்களின் ஆநிரைகளை ஆயர் (இடையர்) மேய்த்தனர்.

**"ஆயர் வேட்டுவர் ஆடு உத் திணைப் பெயர்**
**ஆவயின் வரு உம் கிழவரும் உளரே"**
**- (தொல்காப்பியம், அகம் 21)**

குறிஞ்சியில் வேட்டுவர்குடி சிறு குடி எனப்பட்டது. சிறுகுடி சிற்றரசு ஆகிப்பின் பேரரசு ஆனது.

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி 'வேட்டுவக்குடி' ஆகும்"**
**- (புறப்பொருள் வெண்பாமாலை)**

குறிஞ்சியின் தெய்வம் முருகன் மற்றும் சிவன் ஆகும். முருகன் மேஷ ராசி மேஷ ராசி ஆடு வாகனம். இதைத்தான் ஔவையார் ஆடு மேய்த்த சிறுவன் முருகனிடம் நாவல் பழம் பறித்து கொடுக்க கேட்டபொழுது "சுட்ட பழம் வேண்டுமா! சுடாத பழம் வேண்டுமா!!" என முருகன் கேட்டதாக வரலாறு. இன்று பழனி மலையில் முருகன் ஆடு வாகனத்தில் தான் வருகிறார்.

**"சில வேந்தரிடத்திலே சில வீரரிடத்திலே**
**சில வேட்டுவர் சார்பினிலே இறைவனை காண்போம்"**
**- பாட்டுக்கொரு புலவன் பாரதி.**

## இறைவன் வழிவில் வேட்டுவர்

### சிவன் ஒரு பாண்டிய வேட்டுவ மன்னன்:

ரிஷப ராசி, மாடு வாகனம் (சிவன் வேட்டுவர் கடவுள் இவருக்கு தங்கள் வணிகத்தையும் விவசயதையும் காக்க பெரும் உதவியாக இருக்கும் காளை மாட்டை வாகனமாக படைத்து வணங்கினார்கள் சிவன் ஒரு பாண்டிய வேட்டுவன் ஆவான்.

குரு தட்சணாமூர்த்தி சிவன் கோயிலில் தென்பக்கத்தில் உள்ளது. தட்சிணம் என்றால் தென்னிந்தியாவை குறிக்கும். வடுகநாதர் வேட்டை நாயுடன் பைரவர் கோலத்தில் வடுக மூளையில் உள்ளார். வடுக வேட்டுவர் = கன்னட வேட்டுவர் + ஆந்திர வேட்டுவர் ஆவார்கள். குரு தட்சணாமூர்த்தி சிவனின் மறு உருவம் எனவே குரு நாடு தென்னிந்தியாவில் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.

பாண்டிய நாட்டில் கௌரவர்கள் வழி வேந்தோர்கள் (கௌரிகள்) குறும்பு அமைத்து குறும்பு செய்ததை பாண்டியர் வரலாறு நினைவு கூறுகிறது. வட ஆரியர்கள் தமிழ் அரசர்களின் வரலாறுகளை வடக்கில் கொண்டு போய் திணிக்கிறார்கள் என்பது தான் உண்மை. பாண்டிய நாட்டில் குறும்பு செய்த கௌரிகளை வேங்கடத்து புல்லி மன்னனை வரவழைத்து பாண்டியர் அடக்கினர் என்கிறது புல்லியின் வரலாறு. "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி! போற்றி!!" என்று மாணிக்கவாசகர் கூறுவதால் தென்னாட்டில் இருந்துதான் அரசாட்சி தோன்றி வடநாட்டையும் அரசாண்டனர் என்று உய்த்துணரப்படுகிறது.

குமரிக்கண்டத்தில் குருநாடு கடலால் அழிந்தபின் குரு நாட்டின் கௌரவர்கள் கடலால் அழியாத எஞ்சிய பாண்டிய நாடுகளில் கௌரியர்கள் என்று வாழ்ந்தனர். பாண்டவர்கள் மேற்கு தொடர்ச்சி மலைப் பிரதேசங்களில் வாழ்ந்தனர் என்று வரலாற்று ஆய்வுகளில் அறியப்படுகிறது.

பவானி ஆறு (வானியாறு) மேட்டுப்பாளையம் வரும் வழியில் முன்பு வனத்தில் தான் பாய்ந்து வந்தாள். ஆற்றின் எதிர்கரையில் பழைய கோட்டை ஒன்று இருந்து அழிந்துள்ளது. அதை மக்கள் ஆரவல்லி சூரவல்லி கோட்டை என்று கூறுகிறார்கள். இவ்வனத்தில் பெரிய அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் அருகில் உள்ள ஊரிலிருந்து ஒவ்வொரு

நாளும் ஒருவரை தமக்கு உணவாக பலியாக்கி வந்தான். குந்தி தேவியின் மகன் பீமன் அவ்வரக்கனை அழித்து அவ்வூர் மக்களை காப்பாற்றினான் என்கிற கதையை இன்றும் இங்கு கூறுகின்றனர். மகாபாரத கதை நிகழ்வு தம் பகுதியில் நடந்ததாக கூறுவது நம் முன்னோர்களின் வழக்கமாகும். குறிப்பாக நீலமலையின் வனப்பகுதியில் பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்த னர் என்ற நம்பிக்கை இன்றும் பலரிடம் உள்ளது. எனவே தான் நீலமலைப் படுகர் இன மக்கள் தங்கள் பெயர்களை பீமன், அர்ஜுனன் என்று வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

(பவானி ஆறு போற்றதும், க. வி. வேதநாயகம் பக்கம் 35)

## முருகன்

வேட்டுவ முருகன் ஆவான். மௌரி என்றால் மயில் என்று அர்த்தம் மௌரியர்களை தமிழ்நாட்டில் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியதால் வேட்டுவ முருகனுக்கு மயில் வாகனம் ஆனது.

## வேட்டுவ முருகன்

தமிழ்வேள், தமிழ்க்கடவுள் முருகனுக்கு முதல் மரியாதை என பெருமைப்படும் குமரனை கொண்டிருக்கும் இடங்களில் எல்லாம் வழிபட்ட தமிழக தொல்குடியினரான வேட்டுவரின் வேல் ஆயுதமே வேலாயுதம் எனும் வேலாயுதன் ஆவான். தமிழகம் முழுவதும் வேட்டுவர்கள் தன் வேட்டை ஆயுதமான வேலை போர் ஆயுதமாக வைத்து வழிபட்டதால் வேலவன் முருகன் எனப்பட்டான்.

## தமிழகத்தின் வேட்டுவ முருகன் கோயில்கள்

1). தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கழுகுமலை வேட்டுவன் கோயிலில் உள்ள ஒரே கல்லில் ஆன வேட்டுவ

முருகனின் குடவரைக் கோயில் ஆகும். இக்கோயில் பாண்டிய வேட்டுவ மன்னனால் கட்டப்பட்ட உலகின் புரியாத புதிர் நிறைந்த முதல் அதிசய கோயில் ஆகும்.

2). கொல்லிமலை அருகில் உள்ள வேளுக்குறிச்சியில் கொல்லி வேட்டுவன் கட்டிய வேட்டுவ முருகன் கோவில் உள்ளது.

3). ஒடுவங்க நாட்டில் உள்ள ஓதிமலை அந்துவ (அந்தி) வேட்டுவ முருகன் கோவில் ஒன்று உள்ளது.

4). நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் கபிலர் மலையில் மூல வேட்டுவ முருகன் கோவில் உள்ளது.

5). திருப்பரங்குன்றத்தில் அந்துவ வேட்டுவனின் பாடல் பெற்ற சிறப்பு தலமாக முருகன் கோவில் உள்ளது.

6). புகளூர் ஆறு நாட்டார் மலை சாந்தப்படை வேட்டுவ முருகன் கோவில் உள்ளது. அங்கு சேர வேட்டுவ வேந்தர்கள் பிராமிக் கல்வெட்டுகளும் உள்ளன.

7). கோயம்புத்தூரில் அருகே உள்ள மருதமலை வேட்டுவ முருகன் கோவில் ஆகும் .

8). பட்டாலி வேட்டுவப் பாளையக்காரர்களின் காங்கேய நாட்டில் காங்கேயன் எனும் சிவன்மலை பட்டாலி வேட்டுவ முருகன் கோவில் உள்ளது.

9). வட கொங்கு நாட்டை ஆண்ட சோழ சக்கரவர்த்தி சென்னியின் கோனாட்டான் இருக்கு வேளிர் எனும் கொங்குச் சோழன் குடுமியான் மலை ஆண்ட குடிமி வேட்டுவனின் முருகன் கோவில் சென்னிமலையில் உள்ளது.

10). சேர வேட்டுவ வேந்தன் கட்டிய பழனிமலை முருகனும் ஒரு வேட்டுவ முருகன்தான், அங்குள்ள புலிப்பாணி சித்தரும் ஒரு வேட்டுவ சித்தர்தான்.

11). புளியம்பட்டி மாராயிபாளையம் குன்றில் உள்ள முருகன், ஈஸ்வரன், சரஸ்வதி (மு. ஈ. ச) கோயிலில் உள்ள முருகனும் ஒரு வேட்டுவன்தான்.

**வேலன் குமரன் முருகன் திருச்செந்தில்**
**வேட்டுவன் கந்தனுக்கு - இரு**
**கால்கள் நடக்கின்ற நடையினில் தானுயர்**
**கனிவு நிறைந்திருக்கு**
**காலம் வழி விடும் கச்சிதமாய் சென்று**
**கால்களிலே விழுவோம் - அவன்**
**கால்களிலே விழக் கால்கள் நடக்கட்டும்**
**காவிரி போல் வளர்வோம்!**

**- கவியரசு கண்ணதாசன்.**

## ஒடுவங்க நாட்டு வரலாறு

"வங்க நாட்டின்" வங்கபுலிக்கவுண்டன் வரலாறு (வங்கநாயக்கன் பாளையம்) நாய்க்கன் எனும் பட்டம் நாய்க்கர் காலங்களில் வேட்டுவ பாளையக்காரர்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டம் ஆகும். இந்த ஒடுவங்க நாட்டின் தலைநகர் இரும்பொறை ஆகும்.

## ஓதிமலை ஆண்டவர்

இரும் பொறை என்றால் இரும்பு போன்ற வலிவுடைய குன்று என்பது அர்த்தம். பொறை என்றால் குன்று என்று அறியப்படுகிறது.

அப்பனுக்கே பாடம் ஓதிய மலை சுப்பனுடைய ஓதிமலை ஆகும். பெரிய ஆண்டவர் எனும் சிவனுக்கு ஓம் எனும் மந்திரத்தை ஓதிய மலை ஓதிமலை எனப்பட்டது. (பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தது எனும் ஆணவத்தை போக்கி நான்முகனாக்கி ஆலயத்தின் வெளியே உள்ள வன்னி மரத்தடியில் அமரச் செய்தான் முருகன். பிரம்மனுக்கு ஆலயம் கிடையாது ஐந்து தலைகளில் ஒரு தலையை கொய்து பிரம்மனின் ஆணவத்தை அடக்கியவனுடைய மலை ஓதியமலை)

(பஞ்சபூதங்களை அடக்கி ஆண்டவன் மலை ஆதலால் 'ஓதிமலை ஆண்டவர்' என்று அம்மலையில் உள்ள ஆண்டவனை அழைக்கின்றனர்) ஐந்து தமிழகத்தையும் ஆண்டு எட்டு திசைகளிலும் புகழ் அடைந்த தமிழ் வேள் நமது முருகவேல். ஐந்து தலைகளும் எட்டு கைகளும் உடையவன் ஓதிமலை ஆண்டவன்.

ஏர் உழவு அந்தியூர், கார் உழவு முடுதுறை என்கிறது அந்துவ வேட்டுவர் காணிப்பாடல். இன்று அந்துவன் அந்தி எனும் அந்துவ வேட்டுவப் பாளையக்காரர் ஆளுமையில் உள்ள கோயில் ஓதிமலை ஆண்டவர் கோயில். இன்று ஆண்டவருக்கு இரும்பறையில் தேர் ஓட்டி திருவிழா செய்பவர்கள் அந்தி வேட்டுவரே ஆவர். ஓடுவங்க நாட்டின் தலைநகரில் இருந்து ஐந்து முகங்களையும் எட்டு கைகளையும் உடைய ஒரு அரிய முருகனின் அருள் வேண்டிய மலைதான் ஓதிமலை.

பஞ்சபூதங்களை (நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம்) அடக்கி ஆளத் தெரிந்த பின் மனித சக்தியே மாபெரும் சக்தி என்பதை உணர்ந்தனர். வேட்டுவ இனக்குழு மக்கள் மரம் மற்றும் விலங்குகளின் சக்தியே மனித சக்தியை விட பெரியதாக தெரிந்த காலத்தில் மரம், செடி, கொடி, விலங்கு, பறவையின் பெயரில் வேட்டுவ இனக்குழுக்கள் ஆதியில் தோன்றின. பின் மனித சக்தியே மாபெரும் சக்தி என்று உணர்ந்து நாகரிகம் பெற்ற காலத்தில் இனக்குழுக்கள் தலைவன் பெயரில் தோன்றின. அந்துவன் பெயரில் தோன்றியதே அந்தி எனும் அந்துவ வேட்டுவ இனம், பின் உலகில் முதன் முதலில் அரசு ஏற்பட்டது அது வேட்டுவ அரசு எனப்பட்டது.

இயற்கையையும் இயற்கை சக்தியையும் வழிபட்ட வேட்டுவ இனம் மனித உருவ வழிபாட்டை தன் இனக்குழு தலைவனான சிவன், பெருமாள், குமரன் இவர்களை வழிபட ஆரம்பித்தனர். குறிஞ்சியில் தோன்றிய நாகரீகத்தை முல்லை, மருதம், நெய்தல் எனும் நிலங்களில் பரப்பினர்.

இதை உணர்த்துவதே ஓதிமலை சின்ன ஆண்டவனின் ஐந்து தலைகளும் எட்டு கரங்களும் இது வேட்டுவ தலைவர்களின் தொன்மை வரலாறு கூறும் உண்மை எனப்படும்.

இந்த வேட்டுவ அரசு ஐந்து தமிழகத்தையும் ஆண்டது எட்டுதிக்கிலும் அதன் புகழ் பரவியது. தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! போற்றி!! எனும் வரலாறு வரிகளை இங்கு மணிவாசகர் நினைவு கூறுகிறார். நாவலத்தீவை ஆண்டவன் தென்னாட்டை ஆண்ட தட்சிணாமூர்த்தி (தட்சணம் என்றால் தென்தசையை குறிக்கும்) சிவன் ஒரு பாண்டிய வேட்டுவன், பெருமாள் ஒரு சேர வேட்டுவன், சோழன் இவர்கள் இருவருக்கும் மாமன் மச்சான் முறையாகும் முருகவேல் (தமிழ் வேள்) சங்க காலத்தில் வேட்டுவத் தலைவன் முருகனுக்கு ஒரே மனைவி வள்ளி தான் வேட்டுவ மன்னன் நம்பிராசனுக்கு ஒரே மகள் வள்ளி, நம்பிராசனுக்கு வள்ளி மலையில் உள்ள தினைப்புலம் சொந்தமானது. தேனும் தினை மாவும்தான் வேட்டுவனின் முதல் உணவு. ஆதிகாலங்களில் தினையை விதைக்க வில் அம்பால் கீறினான். உலகின் முதல் உழவு வில் உழவுதான். இன்றும் பழனி மலையில் இரவு நடை சாத்தும் பொழுது அந்த வேட்டுவ தலைவனுக்கு தேனும் திணைமாவும் படைக்கின்றனர். இன்றும் இலங்கையில் திணைக்களம் என்று தான் கூறுகிறார்கள், ஆனால் தமிழகத்தில் வேளாண்மை கழகம் என்று கூறுகிறார்கள். இந்த வேட்டுவ நாகரீகம் முல்லை, மருதம் என பரவிய போது மருத நிலத்தின் கடவுள் இந்திரன் எனவே இந்திரனின் மகளான தேவானையை (தெய்வானை) முருகன் மணந்ததாக புராண வரலாறு கூறுகிறது. புராணம் வரலாறு அல்ல ஆனால் பழைய புராணங்களில் வரலாற்று கீற்றுகள் இருக்கும். இது மருதத்தில் பரவிய வேட்டுவர் நாகரீகத்தை குறிக்கிறது.

வேட்டுவத் தலைவன் முதல் தலைவன் பெரிய ஆண்டவன் சிவன் பஞ்சபூதங்களை அடக்கி ஆண்டதை

நினைவு கூறும் பொருட்டு நமச்சிவாய என்னும் ஐந்து எழுத்து மந்திரத்துடன் பஞ்சபூத ஸ்தலங்களில் சிவன் குடி இருக்கிறார். வாயு தளம் காளகஸ்தி, நெருப்பு தளம் திருவண்ணாமலை, நீர் தளம் திருவானைக்காவல், நிலம் காஞ்சிபுரம், ஆகாயத்தலம் தில்லை ஆகும். ஐந்து தமிழகத்தையும் ஆண்ட பஞ்சவர்ண இராசாக்கள் வேட்டுவர்கள்.

## திருமால்

பெருமாள் ஒரு சேரவேட்டுவன் ஆவான். புலிக்கொடி உடைய புலிக்குத்தி வேட்டுவன் ஒரு சோழ வேட்டுவன் ஆவான்.

## கொற்றவை (காளி)

வேட்டுவரின் தாய் என்பவள் போர் தெய்வமான வெற்றித்தாய் எனும் கொற்றவை (காளி) ஆகும். குமரி என்னும் கன்னித்தாய் காளி ஆவாள்.வேட்டுவரின் வெற்றித்தாய் கொற்றவை எனும் காளியின் அருள் பெற்று மகிஷ (எருமை) நாட்டை வென்றதால் காளிக்கு மகிஷா சூரவர்த்தினி என்ற பெயர் உண்டானது.

வேட்டுவ இன குழுக்களுக்கு போர் தெய்வம் கொற்றவை (காளி). கொற்றவை எட்டு கரங்களுடன் வேட்டுவ இன குழுக்களுக்கு எட்டு திசையிலும் வெற்றி தரும் கன்னித்தாயாக உள்ளாள். வேட்டுவர்கள் ஆதியில் வாழ்ந்த இடத்தை குறிஞ்சி என்பர். ஆதலால் தான் வேட்டுவர்களின் கோயில்களில் தெய்வத்திற்கு முன் குறிஞ்சி அமைக்கின்றனர். குறிஞ்சியில் தெய்வத்தை தாலாட்டுகிறார்கள் ஊஞ்சலில், இது வேட்டுவரின் தொன்மை பற்றியது ஆகும்

கொற்றம் என்றால் வெற்றி என்று பொருள். ஔவை என்றால் தாய் என்று பொருள்படும். வேட்டுவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும் கன்னித்தாய் அவள் வேட்டுவர்கள்

சிங்க கூட்டத்தினரை அடக்கியதால் சிங்கம் கொற்றவைக்கு வாகனம் ஆனது, மகிடம் அல்லது மகிஷம் என்றால் எருமை என்று பொருள்படும். எருமை நாடு என்பது இன்றைய மைசூர் ஆகும். மைசூர் வேட்டுவர் எருமை கூட்டத்தை அடக்கி ஆண்டதால் மகிஷாசுரவர்த்தினி என்று கொற்றவை அழைக்கப்படுகிறாள், கொற்றவையின் காலடியில் எருமையின் தலை கிடக்கும்.

## எருமையூர் (எருமைநாடு)

"எருமையூரையும் அதனை அரசாண்ட எருமையூரனையும் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. வடகொங்கு நாட்டின் வட எல்லையில் இது இருந்தது. " நாரரி நறவின் எருமையூரன்" என்று (அகம் 36.17) கூறுகிறது.

> **"நேரா வன்றேன் வடுகர் பெருமகன்**
> **பேரிசை எருமை நன்னாடு" - (அகம் 253: 18 - 19)**

என்று அகம் கூறுகிறது.

எருமையூர் என்னும் பெயர் பிற்காலத்திலே மைசூர் என்று வழங்கப்பட்டது. எருமை என்பதறகு சமஸ்கிருதச் சொல் மகிஷம் என்பது ஆகும். எருமை ஊர் மகிஷ ஊர் என்றாகி பிறகு மைசூர் என்றாயிற்று. மைசூர் (எருமையூர்) என்னும் இவ்வூரின் பெயர் மிக மிகப் பிற்காலத்தில் கன்னட தேசம் முழுவதுக்கும் பெயராக மைசூர் என்று அமைந்து விட்டது. (பக்கம் : 35-36. "கொங்கு நாட்டு வரலாறு" - மயிலை. சீனி வேங்கடசாமி.)

இந்நாடு மொழிபெயர் தேயத்தில் இருந்ததால் வடுகர் பெருமகன் பேரிசை எருமை நன்னாடு என்று புலவர்களால் எருமையூரன் கூறப்பட்டான்.

> **"நுண்பூண் எருமை குட நாடு" - (அகம் 115: 5)**

என்பதால் குட கொங்கு நாட்டில் எருமை நாடு இருந்தது என்பது புலப்படுகிறது.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல் வேற் கட்டி நன்னாட்டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழி படல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே" - (குறுந் - 11: 5-8)

"பனிபடுசோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்தராயினும் நல்குவர்" - (அகம் 211: 7-8)

"தமிழ் கெழுமூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலையிறந்தே" - (அகம். 31: 14-15)

## பெரிய நெசலூர் கொற்றவை

கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் பெரிய நெசலூர் என்ற கிராமத்தில் கண்டறிந்த மலையமான் கால கொற்றவை.

## 1100 ஆண்டுகளுக்கு முற்பட்ட மலையமான் கால கொற்றவை

சேலம் வரலாற்று ஆய்வுமையத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் விழுப்புரம் வீரராகவன், ஆறகளூர் பொன். வெங்கடேசன் ஆகியோர் அடங்கிய குழு கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் பெரிய நெசலூர் என்ற கிராமத்தில் ஆய்வுகள் மேற்கொண்டனர். அப்போது 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட மலையமான் கால கொற்றவையும் சில கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

சங்ககாலத்தில் இருந்தே கொற்றவை வழிபாடு இருந்து வந்துள்ளது அக்காலங்களில் தாய் வழி சமூக அமைப்பு செயல்பட்டதை கொற்றவை வழிபாட்டின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. சங்க இலக்கியங்களும், தொல்காப்பியமும் கொற்றவை பற்றி சில குறிப்புகளை தருகின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரிகளில் கொற்றவையின் உருவ அமைப்பு, ஆயுதங்கள், உடை, அணிகலன்கள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை விரிவாக எடுத்துரைக்கிறது. கொற்றவை பாலை நில கடவுளாக அறியப்படுகிறார் காடுகளில்

வசித்த வேட்டுவர்கள் தங்களது வேட்டையில் வெற்றி கிடைக்க கொற்றவையை வழிபட்டுள்ளனர்.

கொற்றவையானவள், பழையோள், பாய்கலைப்பாவை, ஐயை, பைந்தொடிப்பாவை, ஆய்க லை ப் பாவை, சூலி, நீலி, காடுகிழாள் என பல்வேறு பெயர்களில் அறியப்படுகிறாா். சிலப்பதிகாரத்தில் கொற்றவையின் கோயில் ஐயை கோட்டம் என அழைக்கப்பட்டுள்ளது. பல்லவர்கள் காலத்தில் கொற்றவை வழிபாடு மிகச் சிறப்பாக இருந்துள்ளது. பல்லவர்களின் கீழ் ஆட்சி செய்த வாணர்கள், மலையமான்கள் போன்றவர்கள் பல்லவர்கள் கலைப்பாணியை பின்பற்றி கொற்றவையின் தோற்றத்தை வடிவமைத்துள்ளனர்.

## பெரிய நெசலூர் கொற்றவை

பெரிய நெசலூர் கிராமத்தில் உள்ள மங்கமுத்தாயி அம்மன் கோயிலின் உள்ளே மேற்கு புறத்தில் இந்தக் கொற்றவை தனி மேடையில் உள்ளது. ஆரம்ப காலத்தில் இது கருவறைக்குள் இருந்திருக்க கூடும் இக்கொற்றவைகி.பி 9 - ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதலாம் பல்லவர்கள் கலைப்பாணியை பின்பற்றி மலையமான்களால் செய்யப்பட்டுள்ளது. பல்லவர்கள் வலு இழந்த 9 -ஆம் நூற்றாண்டில் மலையமான்கள் இப்பகுதியை ஆட்சி செய்ததை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இக்கொற்றவையின் உயரம் 102 செ. மீ, அகலம் 88 செ.மீ, தடிமன் 12 செ.மீ ஆகும். ஒரு பலகைக்கல்லில் புடைப்புச் சிற்பமாக வெட்டப்பட்டுள்ளது. எருமை தலையின் மீது சமபங்க நிலையில் நின்றபடி உள்ளார். தலையில் கரண்ட மகுடம், காதுகளில் பத்தர குண்டலம், கழுத்தில் சரபளி, சவடியுடன் புலிப்பல்லால் இணைக்கப்பட்ட தாலியை அணிந்துள்ளார். மார்புக்கச்சை பட்டையுடன் உள்ளது. மார்பில் சன்னவீரம் உள்ளது இந்த சன்னவீரம் என்பது போர் கடவுள்கள், போர் வீரர்கள் மட்டும் அணியும் வீர சங்கிலியாகும். வலது புற மேல் பகுதியில் சூலமும், கிளியும், இடது புறம் கொற்றவையின்

வாகனமான மானும், சிங்கமும் உள்ளது மானும், சிங்கமும் அருகருகே ஒரே பக்கத்தில் காட்டப்பட்டிருப்பது தமிழகத்தில் இதுவே முதன்முறையாகும். எட்டு கரங்களுடன் உள்ளார் வலது பின் புறக்கரங்களில் எறிநிலைச்சக்கரம், வாள், பாம்பு காணப்படுகிறது.

கையில் பாம்புடன் ஒரு கொற்றவை கண்டறியப்படுவது தமிழகத்தில் இதுவே முதன்முறையாகும். முன் கரம் அபய முத்திரையில் உள்ளது. இடது பின் கரங்களில் சங்கு, வில், கேடயமும் முன் கரம் கடியஸ்த நிலையிலும் உள்ளது. யானை தோலை போர்த்தி இடுப்பில் புலித்தோலால் ஆன மேகலையை அணிந்துள்ளார். முழு ஆடை உள்ளது இடப்புற காலில் சிலம்பும், வலப்புற காலில் சுழலும் அழிந்துள்ளார். கொற்றவையின் காலுக்கு அருகே நவகண்டம் கொடுத்துக் கொள்ளும் வீரன் உள்ளான். நவகண்டம் என்பது தன்னுடைய நாடு போரில் வெற்றி பெற ஒரு வீரன் தன் உடலில் உள்ள ஒன்பது பாகங்களின் சதையை அறிந்து கொற்றவைக்கு படையல் இட்டு தன் தலையை தானே வெட்டி பலி கொடுத்துக் கொள்வதாகும். இடப்புறம் கொற்றவையை வணங்கிய நிலையில் ஒரு அடியவர் உள்ளார்.

## கல்வெட்டு

எருமைத்தலையின் வலதுபுறம் 6 வரிகளில் சிதைந்த நிலையில் ஒரு கல்வெட்டு உள்ளது. ஸ்ரீ முக்குல மலையமான் சாதன் என கல்வெட்டு வாசகம் உள்ளது. முக்குல மலையமான் வம்சத்தை சேர்ந்த சாதன் என்பவன் இந்த கொற்றவையை செய்து வைத்திருப்பதை இக்கல்வெட்டு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மலையமான்கள் சங்க காலத்தில் இருந்தே திருக்கோவிலூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்துள்ளனர். சில காலம் சுதந்திரமாகவும், சில காலம் பல்லவர், சோழர், பாண்டியர்களின் கீழ் குறுநில மன்னர்களாகவும் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். பல்லவர்களின் கீழ் குறுநில மன்னர்களாக

இருந்த போது அவர்கள் பாணியில் அமைந்த கொற்றவை இதுவாகும்.

விநாயகர் (கணபதி) யானை கூட்டம் எலி கூட்டத்தை அடக்கியதால் விநாயகருக்கு எலி வாகனம் ஆனது.

## குமரி எனும் கொற்றவை

கொற்றம் + அவ்வை = கொற்றவை ஆனது, கொற்றம் என்றால் வெற்றி எனப்படும். எனவே வேட்டுவர்களின் வெற்றித்தாய் கொற்றவை ஆகும். இவள் சக்தி எனும் காளியாகும்.

சுமேரிய நாகரிகத்திற்கு அடுத்து சிந்துவெளி நாகரிகம் ஆகும். சக்தி (கொற்றவை) வணக்கம் சிந்துவெளியில் காணப்படுகிறது. கொற்றவை (சக்தி) வணக்கம் ஐந்திணைத் துறைகளுள் குறுஞ்சியில் தொல்காப்பியரால் கூறப்படுகிறது. குறிஞ்சியின் மக்கள் வேட்டுவர்கள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

## சபரிமலை

சபரர் என்றால் வேட்டுவர் என்றும், சபரி என்றால் வேட்டுவச்சி என்று பொருள்படும். சிவபெருமான் அர்ச்சுனனுக்கு பாசுபதம் அளிக்க வேட்டுவக் கோலத்தில் சென்றார். அக்கோலம் கிராதக கோலம் எனப்படும். கிராதகர் என்றால் வேட்டுவர் என்று பொருள்படும். கொற்றவைக் கோலம் ‘சபரி துர்க்கை’ எனப்படும்.

சைவத்தை வளர்க்க சிவனுக்கு 63 அவதாரங்கள் தந்தனர். வைணவத்தை வளர்க்க பெருமாளுக்கு பத்து அவதாரங்கள் தந்தனர். பழங்காலத்தில் சமண மதம் தழைத்தோங்கி இருந்தது. சமண மதத்திற்கு 24 தீர்த்தங்கர்கள் இருந்ததால் அதன் நினைவாக கொங்கு மண்டலம் 24 நாடுகளாகவும், தொண்டை மண்டலம் 24 நாடுகளாகவும் ஏன் இந்தியாவின் தேசிய கொடியில் உள்ள தர்ம சக்கரத்திற்குக் கூட 24 ஆரக் கால்கள் வைத்தனர்.

# வடுக வேட்டுவர்

சுந்தரமூர்த்தி நாயனார் கொங்கில் பயணம் செய்த பொழுது சேரமன்னன் சேரப் பெருமாளிடம் பெரும் பொருள பெற்று திருமுருகன் பூண்டி வரும் பொழுது சிவனின் கணங்களாக வடுக வேட்டுவர்கள் வந்து வழிமறித்து அப்பொருள்களை பறித்துச் சென்று விடுகின்றனர். பின் திருமுருகன் பூண்டி வந்து தெய்வத்தை (சிவனை) வேண்டியதால் அப்பொருள்கள் திரும்பக் கிடைக்கின்றன. இந்நிகழ்ச்சி உலகில் உள்ள அனைத்து கோயில்களிலும் 'வேடு பறி' என்ற பெயரில் நடக்கிறது. திருமுருகன் பூண்டியில் உள்ள சிவனின் லிங்க வடிவம் வில்லுடன் காட்சி அளிக்கிறது. சிவன் வில்லுடன் காட்சியளிக்கும் லிங்கம் இரும்பொறை (புஞ்சை புளியம்பட்டி) அருகில் உள்ள பெரிய குமாரபாளையத்திலும் காணப்படுகிறது. இந்த வடுக வேட்டுவன் தான் தன்னுடைய கதநாயுடன் காலபைரவராக வடுக தேசம் அமைந்திருக்கும் வடுக மூலையில் சிவன் கோயிலில் இந்த வடுக நாதர் சன்னதி உள்ளது. தேய்பிறை அஷ்டமி அன்று வைகத்து (கேரளம்) ஈஸ்வர மகாதேவன் ஆலயத்தில் இந்த காலபைரவருக்கு விசேஷ பூஜை இன்றும் மிகச் சிறப்பாக நடக்கிறது.

தமிழகத்தின் முதல் சொத்து ஆடு மாடுகள் தான். பழனியில் முருகனுக்கு வெள்ளியால் ஆன ஆட்டு வாகனம் உண்டு. ஆடுகளுக்கு சொந்தக்காரன் அவ்வையிடம் சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று கேட்டதால் அவ்வையார் முருகனை பழம் நீ அப்பா பழனியப்பா என்று அழைக்கிறார். ஆடுகளுக்கு உரிமை உடைய தமிழ்வேள் முருகன் சின்ன ஆண்டவர். குமரன் பெருமாளுக்கு (சேரனுக்கு) மாப்பிள்ளை முறையாகும்.

சிவனுக்கு வாகனம் மாடு, மாடுகளுக்கு சொந்தக்காரன் சிவன் பெரிய ஆண்டவர், எனவே "ஆகெழு கொங்கர்" வேட்டுவரே ஆவர்.

மௌரி என்றால் மயில் என்று பொருள். தமிழன் மௌரியர்களை தமிழகத்தில் நுழைய விடாமல் அடக்கியதால் தமிழ் கடவுள் வேட்டுவத் தலைவன் முருகனுக்கு மயில் வாகனமாக அமைந்தது. கோசர்களை அடக்கியதால் சேவல் கொடியோன் என்று அழைக்கப்பட்டான்.

## வேளிர் - வேளான் வேட்டுவன்

வேளான் (3) என்பது தலைவன், அரசியல் அதிகாரி என்ற பொருளில் வழங்குகின்றது. நாட்டு வேளான் என்பது நாட்டுக்கு தலைவன் அல்லது அதிகாரி என்ற பொருளைத் தரும். சங்க காலத்தில் வெள் என்று கூறப்படுவதின் அடியாக இச்சொல் பிறந்திருக்கலாம். வெள் என்பதற்கு காலம் தோறும் பொருள் மாறி வந்துள்ளதாக காணலாம். வேளிர் குலத்தார், சருக்கிகய வேந்தன், சிற்றரசன், சிறந்த ஆண்மகன் என்று பல பொருள்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இவை அனைத்தும் சிற்றரசர்கள் அல்லது தலைவன் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளமையால் வேள், வேளான், மூவேந்த வேளான் ஆகிய சொற்கள் ஊர்த்தலைவன், நாட்டுத் தலைவன் ஆகிய பொருள்களில் வழங்கி வந்தது. மூவேந்த வேளான் என்ற அதிகாரி நிலஞ்சம்பந்தமான ஆவணங்களில் மட்டும் கையொப்பமிட்டுள்ளான், அதனால் அவர்களுடைய பணி நிலஞ்சம்பந்தப்பட்டது என்று கூறலாம்".

(தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, ஈரோடு மாவட்ட தொல்லியல் கையேடு, பக்கம் 28, 29)

"மூவேந்த வேளான் என்னும் பட்டப் பெயர் முதல் பராந்தகன் காலம் முதல் வழக்கத்திலிருந்து வரும் பெயர். அதற்கு முன் "வேளான்" என்ற பட்டப் பெயர் பயின்று வர காணலாம். கொங்கு நாட்டு கல்வெட்டுகளில் மட்டுமின்றி

தமிழ்நாடு முழுவதும் வேளான் என்ற பட்டப் பெயரினை கல்வெட்டுகள் கூறும். அண்ட நாட்டு வேளான் என்று மயிலரங்கம் கல்வெட்டுகள் கூறும். கொங்கு நாட்டு கல்வெட்டு ஒன்று வேட்டுவரில் வேளான் என்று கூறும். வேளான் என்பதற்கு தமிழ் பேரகராதி ஒரு சாதிப்பெயர் என்றும், குலாலர் என்றும் கூறும், ஆனால் அச்சொல் கல்வெட்டில் பயின்று வருகிற இடமும், முறையும் இப்பொருள்களைத் தரவில்லை.

## வேளான் பட்டம் பெற்ற சில வேட்டுவர் கல்வெட்டுகள்

வெஞ்சமாங் கூடலூர் விகிர்தீசுவரர் கோயில் அர்த்த மண்டபத்து தென்புறச் சுவரில் உள்ள விக்கிரம சோழன் கல்வெட்டு வேளான் அந்துவன் சிலம்பன் எனும் அந்துவ வேட்டுவர் பற்றி குறிப்பிடுகிறது.

**"பட்டாலி காவலன் குறும்பிள்ளரில்
செயங்கொண்ட வேளான்"**

**"புன்னத்து பூவானி வேட்டுவரில் வேளான்
கரியான் ஆன மருதங்க வேளான்"**

**"கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் மயிலரில்
வேளான் வேள் பெரிய பிள்ளை"**

**"திருவசுழி மங்கலத்து கரைய வேட்டுவரில்
காளிப் பிடாரன் ஆன கரைய வேளான்"**

## காணி உரிமை

வெஞ்சமாங்கூடலூர் அமைந்துள்ள வெங்கல நாட்டில் வேட்டுவர் சிலர் காணியாளர்களாகச் சிறப்புற்று விளங்கினர். காணி ஆட்சி என்பதற்கு வழி வழி உரிமை என்று கா. அப்பாதுரை அவர்கள் கூறுவர்.

## வெஞ்சமகூடல் கல்வெட்டுகளில் காணப்பெறும் வேட்டுவர்கள்

1). நெடுங்குளியான முனிவரத பெருமாள் நல்லூர் காணியாளரில் கரு அண்ட வேட்டுவரில் சிறியான் அறியாத சவுந்தகால பெருமாளுக்கு...
2). கரடி சிறுவன சிறுவருந் மேல் நாட்டரையன்
3). வெளி கொச்சன் பெரியாள்
4). செங்காலன்
5). கண்ணப்ப நாயனாரைப் பூசிக்கும் தலையூர் நாட்டு அரையர்களில் பாணி பெருமாள் சோழனான சுந்தரபாண்டிய சோழகோன்
6). கரடி வேட்டுவரில் மாறபரணப் பல்லவரையன்
7). தலையூர் நாட்டு வேளான்
8). வேட்டுவரில் வேளான் அந்துவன் சிலம்பன் (அந்துவ வேட்டுவன்)

மூவேந்தர்கள் எனும் சேர, சோழ, பாண்டியர்கள் (வேட்டுவர்கள்)

நாவல் மரங்கள் நிறைந்த நாவலம் பொழில் என்னும் இந்த பூமியை வரலாற்றிக்கெட்டாத தொன்மை காலத்தில் இருந்தே மூவேந்தர்கள் எனும் சேர, சோழ, பாண்டியர்கள் ஆளத் தொடங்கி விட்டனர்.

**"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கொடுங் கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!"**
**- (சிலப்பதிகாரம். நாடுகான் கதை. 19 - 22)**

தெற்கே மூழ்கிப்போன குமரிக்கண்டம் (குமரி - கொற்றவை) முழுவதும் பழம் பாண்டிய நாடாகும் வடக்கில் கீழ் பகுதி சோழ நாடாகவும், மேற்பகுதி சேர நாடாகவும் இருந்தது.

“வேட்டுவரின் 44 கூட்டப் பெயர்கள் 15-ம் நூற்றாண்டு வரையிலான சுமார் 73 கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும் பகுதி கற்பொறிப்புகள் 13-ஆம் நூற்றாண்டிற்கு உரியனவாகும். இக்கூட்டப் பெயர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- விலங்கு - கரடி.
- அரசர் குலம் - அந்துவர், வளவர், வெண்கொற்றார்.
- தொழில் - ஊராளி, பாசறை, மன்றாடி, மன்றாடி என்னும் சொல் ஆலய நிர்வாகத்தோடு தொடர்புடையதாகும்.

வளவன் எனும் கூட்டப் பெயர் சோழரோடு வேட்டுவர் கொண்டிருந்த தொடர்பை குறிப்பிடும்.
- (கொங்கு நாடு வீ. மாணிக்கம், பக்கம்: 424)

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய பேரரசுகள் தோன்றினாலும் கொங்கு நாடு குறுநில மன்னர்களால் தான் ஆளப்பட்டு வந்தது. சங்க இலக்கியங்கள் கொங்கு நாட்டை தனி நாடாக குறிப்பதுடன், மூவேந்தர்களும் கொங்கு நாட்டை கைப்பற்ற நினைத்து ப் போர் தொடுத்த காட்சிகளையும் கண்முன்னே காட்டுகின்றன.

கொங்கு நாட்டைச் சேரர் வெற்றி கொண்டதை பதிற்றுப்பத்தில் 3, 8, 9 - ம் பத்துக்கள் மிகவும் விளக்கமாகக் கூறுகின்றன. புறநானூற்றில் 87 - வது பாடல் சோழர் கொங்கினை வெற்றி கொண்டதாக கூறுகிறது. குறுந்தொகை 392 - ல் பரணர் பாண்டியன் கொங்கின் மீது படையெடுத்ததை குறிப்பிடுகிறார்.

கொங்கு நாடு இயற்கை வளமும் வணிக வளமும் நிறைந்திருந்ததால் மூவேந்தர்களும் கொங்கு நாட்டைக் கைப்பற்ற நினைத்தனர் என்பது புலப்படுகிறது. கொங்கு நாடு மூவேந்தர்களால் அலைகழிக்கப்பட்டு இருந்தாலும் சேரனின் செல்வாக்கு ஈண்டு மிகுதி.

## சேரன்

"சேர நாடு மலையாற் சிறந்தது அதனால் பொறையன், மலையன், மலையமான் (மான் - மகன்) மலைநாடன் என்பன சேரன் பெயர்களாகும். தமிழ்நாட்டில் உள்ள சிறந்த மலைத்தொடர்கள் மேற்கு தொடர்ச்சி மலையும், கிழக்கு தொடர்ச்சி மலையுமே இவற்றைக் கொண்டது சேர நாடு. அந்நாட்டு நிலம் முழுவதும் மலையின் இரு பக்கமுள்ள சாரலே, சாரலாவது மலைச்சரிவு நிலம் அதனால் சாரல் நாடான் என்பது மலைநாடன் என்னும் பொருளில் வழங்கும்" - (பக்கம்: 58, தமிழ் வரலாறு, தேவநேயப் பாவாணர்)

சாரல் என்பது சாரலன் ஆகி பின் சேரலன் ஆனது. கடற்கரையை ஆண்டதால் சேர்ப்பன் என்பது சேரன் என்று மருவியது என்பர். சோழன், பாண்டியன் பாரதத்திற் சொல்லப்படும் திங்கள் மரபாகிய பரத குலம் பழம் பாண்டிய கிளையும், இராமயணத்திற் சொல்லப்படும் கதிரவக்குலம் (சூரியவமிசம்) சோழர்கிளையும் ஆகும். முசுகுந்தன், மந்தாதா, சிபி முதலியோர் தென்னாட்டுச் சோழர் குடிக்கும் வடநாட்டு கதிரவக் குலத்திற்கும் பொது முன்னோராகச் சொல்லப்படுவதால் இவ்விரு குடிகளும் ஒரே குலத்தைச் சேர்ந்தமையாலேயே சிபியின் வழியினன் ஆதலாலேயே சோழன் செம்பியன் எனப்பட்டான். பிற்காலத்து தெலுங்குச் சோடர் (சோழர்) மொழிப்பற்றி பிரிந்து போனது போன்றே, முற்காலத்து கதிரவ குல வடவரசரும் மொழியும் சேய்மையும் பற்றி பிரிந்து போயினர் என்க.

- (பக்கம்: 55 - 56, தமிழ் வரலாறு,<br>ஞா தேவநேயப் பாவாணர்)

பாரதத்தில் சொல்லப்படும் திங்கள் மரபாகிய பரதகுலம் பழம் பாண்டியன் ஆகும். பரதன் ஆண்டதால் பாரதம் ஆனது.

"குமரியோடு வடமியத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்க்கு திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன் கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப்" பேரியாற்று கரை போகிய செங்குட்டுவன்".

- (சிலப்பதிகாரம் - வாழ்த்துக்காதை,
உரைப்பாட்டு மடை)

"ஆரியர் வருமுன் வடநாடு முழுவதும் திராவிடர் பரவியிருந்தமையும் சில வடநாட்டு ஊர்ப்பெயர் தமிழாய்யி ருத்தலும் இதை வலியுறுத்தும். தெற்கே மூழ்கிப்போன குமரிக்கண்டம் முழுவதும் பழம் பாண்டிய நாடே. அது ஏறத்தாழ ஈராயிரம் கல் தொலைவு நீண்டது இதே அளவு வடக்கில் கீழ்ப்பகுதி சோழ நாடாகவும், மேற்பகுதி சேர நாடாகவும் இருந்ததாக தெரிகிறது.

கண்ணன் அழித்ததாகச் சொல்லப்படும் சோணிதபுரம் பழஞ்சேர நாட்டைச் சேர்ந்ததே, அது மாவிலி என்னும் சேர மாவேந்தனின் மகன் வாணனது தலைநகர்."

- (பக்கம்: 55, தமிழ் வரலாறு
- நா. தேவநேயப் பாவாணர்)

வில் வேட்டுவர், பனைய வேட்டுவர், சேர வேட்டுவர் ஆவ.ர் குட்டநாட்டையும் அதன் கடற்கரைகளையும் கரை வழிநாட்டையும் ஆண்ட சேரன் செங்குட்டுவனின் மூதாதையர் ஆன கரைய வேட்டுவர், பொறை நாட்டை ஆண்ட அந்துவன் சேரல் இரும்பொறையின் மூதாதையர் ஆன அந்துவ வேட்டுவர், சேர மரபினர் ஆவர். துளு நாட்டை ஆண்ட நன்னன் மரபினர், குட கொங்கை (ஊட்டி) ஆண்ட மரபினர், மழங் கொங்கை ஆண்ட மரபினர் மற்றும் வட தென் கொங்கை ஆண்ட மரபினர் சேர வேட்டுவ புத்திர வர்க்கத்தினர் ஆவர்.

மாவிலியர் வேட்டுவ மரபினர் ஆவர். பழம் சேர நாட்டில் கிருட்டினன் (கிருஷ்ணர்) அழித்த சோனிதபுரம் தென்னகப் பெருவேந்தன் மாவலிச் சக்கரவர்த்தியின் மகன் வாணனின் தலைநகர் ஆகும். மாவிலி வாணதி ராயர்கள் சங்ககிரி அருகில் உள்ள மாவிலிபாளையம் மற்றும் வாணியம்பாடியில் இருந்து மதுரை அழகர் கோவில் வரை அரசாட்சி செய்த சான்றுகள் அதிகம் உள்ளன உள்ளது. மாவலி வாணதிராயர்கள் சேர வேட்டுவ மரபினர் ஆவர். தலைவாசல், ஆத்தூ அடங்கிய மகதை நாட்டை ஆண்ட வாணக்கோவரையர் சேர வேட்டுவ மரபினர் ஆவர்.

பனைக் கொடியுடைய பளு வேட்டரையர் சேர வேட்டுவ மரபினர் ஆவர். இவர்கள் சேர நாட்டிலிருந்து வந்து சோழர் சாம்ராஜ்யத்தில் பெரும்பங்கு வகித்தனர்.

வேள்விக்குடி செப்பேடு "குறும்பு (கோட்டை) அமைத்து ஆய்நாட்டை ஆண்ட எய்னர் என்பதும் குறும்பு அமைத்து ஆண்ட குறும்பியன் என்பதும் வேட்டுவ குடியினரை குறிக்கும்) ஆய் அண்டிரன், ஆய்வேள் என்பவர்கள் வேணாடர்கள் எனும் சேர வேட்டுவ மரபினர் ஆவர்" என்று கூறுகிறது.

ஆய்நாட்டில் வெள்ளை கடவுள் வாலியோன் மரபில் வந்து இன்றும் ஆய் அம்மனைக் குலதெய்வமாக வணங்கும் வெள்ளை வேட்டுவர் புலியம்பட்டி அருகில் உள்ள கோப்பம் பாளையத்தில் ஆய் அம்மனுக்கு கோயில் அமைத்து வழிபாடு செய்கின்றனர் எனவே வெள்ளை வேட்டுவரும் சேர நாட்டு வேட்டுவ மரபினர் ஆவர்.

சேர நாட்டில் உள்ள பூழி நாட்டினை ஆண்ட பூழுவ வேட்டுவரும் சேர வேட்டுவமரபினர் ஆவர். சேர நாட்டில் உள்ள குடக்கொங்கு (ஊட்டி) நாட்டை ஆண்ட சேரமான் அஞ்சன் ஆவான். பின்னர் இவன் பரம்பரையினர் வெஞ்சன் மாக்கூடலை ஆண்ட வெஞ்சமன் ஆவான் இவன் களப்பிரரை

தமிழகத்திலிருந்து விரட்ட வீரப்போர் புரிந்தவன் ஆவான். சங்க காலத்தில் கொங்கு நாட்டை பதிற்றுப்பத்து கூறும் அந்துவன் சேரல் இரும்பொறையில் இருந்து கணைக்கால் இரும்பொறை வரை சுமார் 250 ஆண்டுகள் முதன்மை தலை நகரமாக கருவூரில் பொன், மாடத்தில் இருந்து ஆண்ட பொழுது அந்தியூரை இரண்டாவது தலைநகராக வைத்து வடகரை நாட்டு அந்தியூர் கோட்டையில் இருந்து ஆண்டனர். எனவே 'அந்தியூர் கோட்டை' ஒரு சங்க கால கோட்டை என்று புலப்படுகிறது. அந்துவ வேட்டுவ இனக்குழுவில் தோன்றியவர்களே அந்துவன் சேரல் இரும்பொறை மரபினர் ஆவர். இதனின் தொடர்ச்சியாக அந்தியூர் வடகரை நாட்டை மூவேந்தர்களும் கரூவூர் சாமிக்கு எண்ணெய்க் காப்பு செய்து அந்துவ வேட்டுவ சுந்தராயனுக்கு பட்டம் சூட்டினர்.

கொங்கு நாடே பழங்காலத்தில் சேர நாட்டில் இருந்து பிரிந்து சேர இளவரசர்களால் ஆளப்பட்டது என்கின்றனர். சேர்வராயன் மலை சேரராயர்களால் ஆளப்பட்டு வந்ததால் சேர ராயன் மலை என்று அழைக்கப்பட்டது. சேரராயன் மலை என்பதே பின்னர் சேர்வராயன் மலை என்று திரிந்தது.

சேர நாட்டின் நன்னன் மரபினர் துளுநாட்டை ஆண்டனர். மழங்கொங்கு நாட்டை ஆண்ட அதியமான், ஓரி சேர மரபினர் ஆவர். திருக்கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடி காரியும் சேரரின் கிளை மரபினர் ஆவான்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆவிநாடு என்றும் வையாவி நாடு என்றும் பெயர் பெற்றிருந்த (இப்போதைய பழனி மலை வட்டாரம்) நாட்டின் சிற்றரசனாகிய வேள் ஆவிக்கோமான் பதுமன் என்பவனுடைய பெண்களில் ஒருத்தியை திருமணம் செய்துகொண்டு வாழ்ந்தான். இவ்வரசியின் பெயர் வேள் ஆவி கோமான் பதுமண் தேவி என்பது (8 -ம் பத்து பதிகம் அடி 1-2) இந்த அரசியின் தமக்கையை இவனுடைய தாயதித் தமயனான சேரலாதன்

(இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மண்ஞ்செய்திருந்தான். அந்த அரசிக்கும் வேள் ஆவிக்கோமான் பதுமண் தேவி எனப்பெயர் இருந்தது. (4 - ம் பத்து பதிகம் அடி 1 - 3) எனவே செல்வக் கடுங்கோ வாழி ஆதனும் நெடுஞ்சேரல் ஆதனும் சமகாலத்தில் முறையே கொங்குநாட்டையும் சேர நாட்டையும் ஆண்டனர் என்று தெரிகின்றது. இவர்களுக்கு பெண் கொடுத்த மாமனாராகிய வேள் ஆவிக் கோமான் பதுமன், பொதினி என்னும் வையாவி நாட்டை ஆண்ட சிற்றரசன் என்றும் கூறினோம். அந்த வையாவி நாடு அக்காலத்தில் கொங்கு நாட்டின் தென்கோடியில் இருந்தது.

இக்காலத்தில் அது பழனி என்ற பெயருடன் பாண்டியநாட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளது. இன்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் சேர மரபினரான அந்துவ வேட்டுவர் வாழ்ந்து வருகின்றனர். வெப்படை அருகில் மண்டபத்தூரில் பொன் காளியம்மன் கோயிலில் உள்ள நடுகல்லிலும், ஊஞ்சலூர் கல்வெட்டிலும், வெஞ்சமன் கூடலில் உள்ள கல்வெட்டிலும் மற்றும் இருக்கூர் செப்பு பட்டயத்திலும் அந்துவ (அந்தி) வேட்டுவரின் ஆளுமைகள் பற்றி கூறுகின்றன. இவர்கள் கேரள எல்லைகளிலும் இன்றும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

**மூத்தவழிசேர நாட்டு சேரர்**

1).உதயஞ் சேரல் -

**வேண்மான் நல்லினி**

2). இமயவர்மன் நெடுஞ்சேரலாதன்

3). பல்யானைச் செல்கெழு குட்டுவன்

**இளையவழி**

**கொங்கு நாட்டு பொறை அரசர்:**

1). அந்துவன் சேரல் இரும்பொறை

2). செல்வக் கடுங்கோ வாழியாதன்

## பழனி

பழனிக்கு ஆவினன்குடி எனவும் பொதினி எனவும் பெயர் வழங்கியது. இங்கு வேளாவிக் கோமான், வையாவிக் கோப்பெரும் பேகன், நெடுவேளாவி என்ற மூன்று வேட்டுவ வேளிர்கள் அரசாண்டார்கள்.

வேளாவிக் கோமான் மகளிரை இமயவரம்பன், நெடுஞ்சேரலாதனும், செல்வ கடுங்கோவும் மணந்தார்கள். வேளாவி கோமானுக்கு பிறகு பேகன் அரசாண்டான். இவனை ஆவியர் பெருமகன் என்றனர். ஆவினங்குடி எனப்படும் பழனியை ஒளிர் வாள்கொங்கர் ஆகேழு கொங்கர்(2) எனப்படும் வேட்டுவ வேளிர் ஆன வேளாவி கோமான் ஆண்டதால் அவர்களை ஆவியர் குடி என்றனர். இந்நாடு வையாபுரி எனப்பட்டது. இதனை ஆண்ட பேகன் வையாவிக் கோப்பெரும் பேகன் எனப்பட்டான்.

பேகன் மனைவியின் பெயர் கண்ணகி ஆகும். இவன் மனைவியை பிரிந்திருந்தான். கபிலர், வன்பரணர், பரணர், அரிசில் கிழார் ஆகிய நால்வரும் ஒன்றாகப் போகும் வழியில் கண்ணகியின் அழுகுரலை கேட்டனர். புலவர் நால்வரும் பேகனிடம் கண்ணகியுடன் சேர்ந்து வாழ அறிவுறுத்தினர். பேகனுக்கு பின் நெடுவேளாவி பொதினியிலியிருந்து ஆண்டான்.

பழனி மலை ஆண்டவர் கோயிலை சேர மன்னர்கள் கட்டினார்கள் அதனால் தான் அது மேற்கு நோக்கி கேரளா நாட்டிற்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறது. மலையின் அடிவாரத்தில் உள்ள விநாயகர் கோயில் இன்றும் சேர விநாயகர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. பழனி மலை புலிப்பாணி சித்தர் ஒரு வேட்டுவ சித்தர் ஆவார். போக முனிவரும் புலிப்பாணி சித்தரும் இணைந்து பழனி மலை முருகன் சிலையை நவ பாசனத்தால் செய்தனர். இவர்களுடைய ஜீவசமாதி பழனி மலை கோயிலில் உள்ளது. அருணகிரிநாத சுவாமிகள் பழனியை பற்றி குறிப்பிடும்போது "சேரர் கொங்கு வைகாவூர் நன்னாடத்தில்" என்று பாராட்டி இருக்கிறார்.

## ஈரோடு மாவட்டத்தில் சேரர் ஆட்சி

சங்க காலத்தில் சேரர்கள் ஆட்சி பரவியிருந்தது. சேரன் செங்குட்டுவன், சோழர்களோடும், பாண்டியர்களோடும் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள செங்களம் என்ற இடத்தில் போர் செய்த குறிப்பு சிலப்பதிகாரத்தில் விரிவாக காணப்படுகின்றது.

அதியமான் சேரர் மரபினர் என்றும் அழைக்கப்பட்டனர். சேர அரசர்கள் கி.பி.8 முதல் 10 முடிய உள்ள ஆண்டுகளில் இரவிகோதை, கோக்கண்டன், வீரநாராயணன் போன்ற சேர அரசர்கள் ஈரோடு மாவட்டம் (கொங்கு) மீது பலமுறை படையெடுத்துள்ளனர். சேரனைப் பற்றி அனுமன் பள்ளியில் சேரர் கால செப்பேடு விவரிக்கின்றது. சேரர் கொங்கு இலக்கியத்தை அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இடைக்காலச் சேரர்களில் கோகண்டன் இரவி, இரவிகோதை, ஆகியோர் கல்வெட்டுகள் ஈரோடு மாவட்டத்தில் கிடைக்கின்றன. இரவிகோதைச் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. கோக்கலீமூர்க்கன் ரவீகோதை என்று தாழி ஏரிக் கல்வெட்டு குறிப்பிடும். ஈரோட்டில் இரவிகோதைக் கல்வெட்டும், இவனுடைய மருமகன் முதலாம் பராந்தகன் கல்வெட்டும் கிடைக்கின்றன. முதலாம் பராந்தகன் காலத்திலோ அல்லது அவனுடைய ஆட்சி தொடக்கத்திலோ ஈரோடு மாவட்டம் சேர மரபினர் ஆட்சி இருந்திருக்க வேண்டும் எனலாம். தாராபுரம் வட்டம் பிரமியம் கல்வெட்டு ஒன்று சந்திராதித்ய குல பராந்தக வீரநாராயணன் என்று தொடங்கு கின்றது. இரவி, இரவீகோதை ஆகியோர் சந்திராதித்திய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அந்தியூர் கோட்டை

அந்தியூர் வடகரை நாட்டில் அந்தி என்கிற அந்துவ வேட்டுவர் அந்தியூர் கோட்டை பத்ரகாளி அம்மன் கோயில்களில்

அம்மை அழைத்தல், கெண்டி, கோட்டை மாரியம்மன் கோயிலில் கம்பம் நடுதல், மற்றும் திருவிழாவில் நான்கு ராச வீதிகளில் நான்கு நாட்கள் தேர் ஓடி நிலை சேர்ந்த பின்பு கம்பம் பிடுங்குதல் போன்ற நிகழ்வுகளை இன்றும் வருடா வருடம் முன்னின்று நடத்தி வருகின்றனர்.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருமலை நாயக்கன் மதுரையை ஆண்டபொழுது அந்தியூர் கோட்டை செப்பனிடப்பட்டதாக நாயக்கர் வரலாறு கூறுவதால், அந்தியூர் கோட்டை திப்பு சுல்தானால் கட்டப்பட்டது என்பது வரலாற்றுப் பிழையாகும். அது அந்தி வேட்டுவன் கோட்டை என்பதுதான் உண்மை என்று வரலாறு கூறுகிறது. சேர நாடாம் கேரளாவில் உள்ள பொறைநாட்டில் இன்றும் அந்தியூர் என்ற ஊர் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தியூர் வடகரை நாட்டுப்பட்டயத்தில் ஊராட்சிக் கோட்டை மலை பரிபடை வேட்டுவரின் ஊராட்சியில் இருந்தது புலப்படும். மன்னர் ஆட்சிக்காலங்களில் இம்மலையைச் சுற்றிக் குதிரைப்படை பயிற்சி நடைபெறும். அரேபியக்குதிரைகள் பெரும் அளவு குதிரைப்படையில் இடம்பெற்றிருந்தது. பரிபடை வேட்டுவர் இக்குதிரைப்படையை வழிநடத்தி செல்வதில் வல்லமை பெற்றவர்கள் ஆவர். கொங்கு நாட்டை அந்துவ வேட்டுவ இரும்பொறை அரசர்கள் அந்துவன் சேரல் இரும்பொறையில் இருந்து கணைக்கால் இரும்பொறை வரை சுமார், 250 ஆண்டுகள் சங்க காலத்தின கருவூர் வேண்மாடத்தில் இருந்து ஆண்டனர். இவர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு கொங்குநாட்டை ஆண்டபொழுது அந்தியூர் கோட்டையை இரண்டாவது தலை நகராக அமைத்துக்கொண்டு தென் கொங்கு நாட்டை மற்றுமின்றி வட கொங்கையும் கைப்பற்றி ஆண்டனர்.

## அந்துவ வேட்டுவர் காணிப்பாடல்

சீருலவு நாகநகர் கீரனூர் ஆதியூர்
செப்பரிய மோடமங்கை
திகழ்ராசி யூர்பாலை மேடுதூ ரம்பாடி
சித்திரவீ திக்கோதையூர்
ஏருலவு வடகரை நன்னாட்டில் அந்தியூர்
இனியலக் காபுரமுடன்
எழில்பரவு தோட்டாணி மேவுசெவி யூருடன்
இனிதான வாய்ப்பாடியும்
காருலவு முடுதுறை அன்னாரு திருவாச்சி
கனககொடை யூருமிகவும்
காவேரி சூழுமேல் அரையநன் னாட்டினில்
கதிபெருளும் ஊஞ்சலூரும்
ஆரமணி மேடைதிகழ் தெக்கலூர் பூந்துறைசை
அதிகசே வூருருன்றை.

### அந்துவ (அந்தி) குலத்தாரின் பழம்பெரும் காணியூர்கள்

நாகம்பள்ளி, கீரனூர், ஆதியூர், மோடமங்கலம், ராசியூர், பாலைமேடு, தூரம்பாடி, கோதையூர், அந்தியூர், லக்காபுரம், தோட்டாணி, செவியூர், வாய்ப்பாடி, முடுதுறை, திருவாச்சி, கொடையூர், ஊஞ்சலூர், தெக்கலூர், பூந்துறை, சேவூர், குன்னத்தூர் போன்ற ஊர்களாகும்.

இதே போன்று அந்தியூர் வடகரை நாட்டில் உள்ள பிரம்ம தேசம் ஸ்ரீ பொங்காளியம்மன் கோயில், கூத்தாண்டை மாரியம்மன், சேத்துக்கால் மாரியம்மன், அணைக்கருப்புச்சாமி, முனியப்பன் கோயில், காபபபிடாரி அம்மன் கோயில்களில் முதல் மரியாதை கம்பம் நடுதல் போன்ற நிகழ்வுகளில் மூக்கன் (முக்கண்ணன்) பாளையத்தில் வசிக்கும் அந்தி என்கிற அந்துவ வேட்டுவர்கள் முன் நின்று சிறப்பு செய்கின்றனர் இன்று வரை.

## பிரம்மதேசம்

சங்ககாலத்தில் அந்துவன் சேரல் இரும்பொறை எனும் சேரவேந்தன் முதல் கணைக்கால் இரும்பொறை வரை சுமார் 250 ஆண்டுகள் கொங்கு நாட்டை இரும்பொறை எனும் சேரவேந்தர்கள் ஆண்டனர். அந்துவன் சேரல் இரும்பொறையின் மகன் செல்வக் கடுங்கோ வாழி ஆதன் கரூர் பொன்மாடத்தை கொங்கின் முதல் தலைநகரமாகவும் இரண்டாவது தலைநகரமாக அந்தியூர் கோட்டையையும் மற்றும் கேரளக் கடற்கரையில் உள்ள மாந்தை நகரை கடற்கரை துறைமுகமாகவும் அமைத்துக் கொண்டு கொங்கினை சீரும் சிறப்புடன் ஆண்டான். குறிஞ்சிப் பாடல் பாடி புகழ்பெற்ற பிராமணப் புலவன் கபிலன் செல்வ கடுங்கோ வாழி ஆதன் மீது பதிற்றுப்பத்தில் பத்துப் பாடல்கள் பாடியதால் செல்வக் கடுங்கோ வாழி ஆதன் கபிலரை பாராட்டி அந்தியூர் வடகரை நாட்டில் அமைந்துள்ள (ஊராட்சிக் கோட்டை மலை), திருநனா எனும் குன்றேறி (நாடுகாண் நெடுவரை) கண்ணில் படும் தூரம் வரையுள்ள கபிலர்மலை உட்பட அனைத்து பகுதிகளையும் உரிமையாக்கிய பொழுது அந்தியூர் கோட்டை அருகில் உள்ள பிரம்மதேசம் எனும் ஊரையும் பிரம்மதேயமாக பிராமணப் புலவன் கபிலருக்கு வழங்கினான். சேர மன்னன் கொங்கை கைப்பற்றுவதற்கு முன் நன்னன் என்ற வேட்டுவக் குறுநில மன்னன் ஆண்டமலை 'நன்னன் மலை' என்று அழைக்கப்பட்டது. பிற்காலங்களில் நன்னன் மலை 'நானா' என்றும் 'திரு நானா' என்றும் அழைக்கப்பட்டது.

சேர மன்னன் குலசேகர ஆழ்வார் தன்னை வேட்டுவன் என்றே கூறுகிறார். இவர் பாடிய முகுந்த மாலையில் இவன் தன்னை கொல்லி காவலன், கொல்லி வெற்பன், சிலம்பன் மற்றும் 'கொங்கர் கோன்' என்று கூறுகிறார். (புறம் 168)

வேட்டுவ அரசு தலைவனை 'வடிநவில் அம்பின் வில்லோர் பெரும' என்கிறது, எனவேதான் சேரனின் சின்னம்

வில் ஆனது. கொங்கில் வேளிர் (சிற்றரசர்) என்ற சொல் வேட்டுவச் சிற்றரசர்களை சங்ககாலம் முதல் சுட்டும் சொல்லாகும், பின்பு இடைக்காலத்தில் வேட்டுவர்கள் ராயர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அரசு உருவாக்கத்தில் வேட்டுவர் என்ற தலைப்பில் வரலாற்று சிற்பி பேராசிரியர். இராசசேகர தங்கமணி கூறுவது ‘வில்லோர் அரசே கொங்கு நாட்டில் உருவான முதல் அரசு ஆகும். இதனை ‘வேட்டுவ அரசு’ எனவும் கூறலாம், வேட்டுவ இனப்பிரிகளில் வில், வில்லி கூட்டங்கள் (குலங்கள்) இருப்பதை நாம் அறிவோம். தொல்குடியினரான இவ்வேட்டுவர்கள் வில்லை அரசு சின்னமாகக் கொண்டனர். கரூர் அமராவதி ஆற்றங்கரையில் இருபக்கமும் இது காறும் நூற்றுக்கு மேற்பட்ட வில் சின்னம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. இதில் சேர அரசின் சின்னமான யானை சின்னம் காணப்படவில்லை, எனவே இது சேர அரசிற்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை. இந்த அரசின் தலைவன் ‘வில்லோர் பெரும’ என்று இலக்கியங்களில் சுட்ட படுகிறான் (புறம்169). இந்த அரசே சேர அரசாக நாளடைவில் உருவாயிற்று. வேட்டுவருள் சேர வேட்டுவர் என்னும் கூட்ட பெயரும் உண்டு. பனைய வேட்டுவரும் உண்டு. வில்லோர் அரசு சேர அரசாக உருவான பின்னர் வில்லம்பும் யானையும் சேரரது அரசு சின்னமாக மாறியது.

‘வெட்ட வெட்ட தழையும் வேட்டுவர்படை’ என்பது முதுமொழி. போர் குணம் உடையவர்கள் வேட்டுவர்களே என்பதை உலகம் அறிந்தே.

‘வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது’ என்ற பழமொழியும் உண்டு. எண்ணற்ற வேட்டுவர் குலங்களில் இன்று ’அந்தி’ என்று சிறப்பித்துக் கூறப்படும் ’அந்துவன்’ குலம் பற்றியும் அந்தி வேட்டுவர் கட்டிய அந்தியூர் கோட்டை பற்றியும் காண்போம்.

தமிழ் பல்கலைக்கழகம் எண்-3 புலிமான் கோம்பை, தேனி மாவட்டம், கி.மு. 3 - ம் நூற்றாண்டு நடுகல்.

'கல்பேடு தீயன் அந்தவன் கூடலூர் ஆகோள்' பேடு என்னும் ஊரைச் சேர்ந்த தீயன் என்பாரின் மகன் அந்தவன் கூடலூரில் ஆவினங்களை கவர்ந்து வருகையில் வீரமரணம் எய்தினான், அவனுடைய வீரச்செயலை போற்றுமுகத்தான் இந்த வீரக்கல் எழுப்பப்பட்டது.

"தீயன்" என்றால் "அக்னிகுலத்தவன்" என்று பொருள். வழக்கமாக நினைவுக் கல்லைக்குறிக்கும். "கல்" எனும் சொல் கல்வெட்டின் இறுதியில் தான் காணப்பெறும், ஆனால் இங்கு கல்வெட்டின் தொடக்கத்தில் உள்ளது.

**கி.மு. 3 - ம் நூற்றாண்டு நடுகல் இது.**

**"கல் எழுத்துக்கலை" - நடன காசிநாதன் (பக்கம் 202)**

'அந்தவன்' என்பது 'அந்துவன்' என்ற பெயரின் மாற்றுருவமாகும். இதுவும் பிழையன்று, 'அந்து' என்ற பகுதி வெவ்வேறு விகுதிகளை ஏற்கும்போது,

அந்து + அன் = அந்துவன் என்றும் அந்து + அவன் = அந்தவன் என்றும் விரிவடைகிறது.

அந்தவன் என்ற பெயர் கொடுமணல். அகழ்வாய்வில் கிடைத்த கி.மு. 2 - ம் நூற்றாண்டைச் சார்ந்த பானை ஓடுகளில் பலமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (லு. சுப்பராயலு, கொடுமணல் பானை ஓடுகளில் பொறிப்புகள் 1996) புலிமான் கோம்பை நடுகற்கள் பல வகையாலும் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

1). இந்தியாவிலேயே இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களில் கி.மு. 3 - ம் நூற்றாண்டைச் சார்ந்த இவையே மிகவும் பழமையானதாகும்.

2). இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழிக் கலப்பின்றித் தமிழில் எழுதப்பட்டுள்ளது இவற்றின் தனிச்சிறப்பாகும்.

3). இக்கல்வெட்டுகள் மதுரையிலிருந்து தொலைவில் (அக்காலத்தில் காடுகள் சூழ்ந்திருந்த) ஒரு சிற்றூரில் கிடைத்திருப்பது சங்க காலத்திலேயே தமிழகத்தில் பரவலாக எழுத்தறிவு இருந்தது என்பதற்கு உறுதியான சான்றாகும்.

(ஐராவதம் மகாதேவன், சென்னை. ஆவணம் 17, 2006) சங்ககாலத்தில் வேந்தர்களும், வேளிர்களும் அந்துவன் என்று பெயர் பெற்று விளங்கினர். 'அந்துவன்' என்ற பெயர் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் கல்வெட்டுகளில் காணலாம் திருப்பரம்குன்றம் கல்வெட்டு 'அந்துவன் கொடுபித்தவன்' என்கிறது.

திருப்பரங்குன்றத்தை 'அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' என்று அகம் - 59 ல் மதுரை மருதன் இளநாகனார் சிறப்பித்துக் கூறுகிறார்.

அந்துவன் சேரல் இரும்பொறையின் நல்லிசைப் புலமை வியந்தே 'பதிற்றுப்பத்து' ஏழாம்பதிகம் "நெடு நூண் கேள்வி அந்துவன்" என்று சிறப்பித்துரைக்கிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தின் மீது (கி.பி 880 - 905) படையெடுத்துச் சென்று அதனை கைப்பற்றிக் கொண்டான் என்று "கொங்குதேச இராசாக்கள்" என்ற வரலாற்று நூல் கூறுகிறது. அந்நூல் கூறுவது 'சோழ வம்சத்திலே விசாயாட ராயன் மகன் ஆதித்யவர்ம ராயன் சோழதேசம் தஞ்சாவூரிலேயே பட்டங்கட்டிக் கொண்டு கொங்கு தேசத்திற்கு வந்து ராசா வேடர்களை செயம் பண்ணி அந்த அரசை ஆண்டனன் என்பதாகும்

# அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ வேட்டுவர் சுந்தராயப்பட்டயம்

சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட அந்துவன் சேரல் இரும்பொறையை தொடர்ந்து இடைக்காலத்தில் அந்துவன் சேரல் இரும்பொறையின் கால்வழியினரான அந்துவ (அந்தி) வேட்டுவன் சுந்தராயனின் அந்தியூர் வடகரை நாட்டில் அந்தியூர் அருகில் அடசபாளையத்தில் (அரசன்பாளையம்) வசிக்கும் திரு. சந்திரசேகர் சுந்தராயர் அவர்களின் செப்பு பட்டயம் கூறும் வரலாற்றை காண்போம்.

இந்தியத் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது (ARE. 2014 - 15) இப்பட்டயத்தில் "ஆண்டு எழுபத்தி ஐந்து ஆகிய ஆங்கிர வருடம் ஆடி மாதம் 18 ஆம் தேதி சேரன், சோழ, பாண்டியன் மூவராசாக்கள் பெருமாள் கம்பன் உடைய அந்துவ வேட்டுவ சுந்தராயருக்கு அந்தி ஊரு வடகரை நாடு முப்பது கிராமம் யுள்பட ஆதினம் செப்பேடு பட்டையம் குடுத்தது" என்று கண்டுள்ளது.

ஆண்டு எழுபத்தி ஐந்து என்பதை கொல்லம் ஆண்டாகக் கொண்டால் ஆங்கில ஆண்டு கி.பி. 899 - 900 ஆகும். இப்பட்டயம் ஆதித்த சோழன் கொங்கு நாட்டை தன் வசப்படுத்திய பின் கொடுக்கப்பட்டதாகும். கொல்லம் ஆண்டு எழுபத்தி ஐந்தில் (கி.பி. 899 - 900) ஆதித்த சோழன், சேரன்ஸ் தாணு ரவி, பாண்டியன் பராந்தக வீரநாராயணன் (880 - 905) இவர்களால் கருவூரில் முடிசூட்டப்பட்டவன்தான் அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ (அந்தி) வேட்டுவச் சுந்தராயன்.

சேரவேட்டுவ .மன்னர்கள் ஆட்சி செய்த தலைநகராக அந்தியூர் இருந்ததால் இவ்வூரில் பெரிய கோட்டை ஒன்று இருந்தது. "இப்பெரும் கோட்டை 1.5 கிலோ மீட்டர் நீளமும், அகலமும் கொண்டது, மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்தில் இருந்த

அரண்மனை, அத்தாணி மண்டபம், அந்தப்புரம், அலுவலகங்கள் ஆகியவை அழிந்துவிட்டன. செல்வக் கடுங்கோ வாழியாதனுடன் தொடர்புடைய செல்லீஸ்வரர் கோவில், அழகராசப் பெருமாள் கோயில், வீரபத்திரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றும் உள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும், கல்வெட்டுகளும் உள்ளன", இவை தமிழ்ப் பல்கலைக்கழகம் பதிப்பித்துள்ள வாழ்வியல் களஞ்சியம் முதல் தொகுதியில் கண்டுள்ளது.

இந்த அரிய "கோட்டை பகுதியில் ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், ரோமாபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், பழமைமிக்க எலும்புத் துண்டுகள், பலவகை நாணயங்கள், அகல் விளக்குகள், மண்பாண்டங்கள், மண்ணில் சுட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்னும் காணக்கிடைக்கின்றன" என்று தமிழ் பல்கலைக்கழக வாழ்வியல் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தியூர் வடகரை நாட்டுக் கல்வெட்டுகள் வேட்டுவர்களை நாட்டுக் காமிண்டன் கொங்கன் என்றும் கொங்காள்வான் என்றும் மற்றும் ஊராளி (சிற்றூர் மன்னன்) என்றும் குறிப்பிடுகின்றன. அந்தியூர் செல்லீஸ்வரர் கோயில் கல்வெட்டுச் செய்தி பாசறை வேட்டுவரில் குறும்பன், கொங்கன் என்றும் வேட்டுவர்களை குறிப்பிடுகிறது. வடகரை நாட்டு கொடிவேரிக் கல்வெட்டுச் செய்தி ஊராளி செம்ப வேட்டுவன் தொண்டையன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் என்று வேட்டுவர்களை ஊராளி மற்றும் கொங்காள்வான் என்ற சொற்களால் சிறப்பிக்கிறது.

வேட்டுவர்களின் வரலாற்றை கல்வெட்டுகளில் அள்ளித்தந்த உலகடமும், பட்லூரும் வடகரை நாட்டில் தான் இருக்கின்றன. சங்ககால வேட்டுவ வேந்தன் செல்வக் கடுங்கோவாழி ஆதன், கபிலர் தொடர்புடைய திருநனா எனும்

ஊராட்சி கோட்டை மலையும், பாரி, நள்ளி இவர்களின் தொடர்புடைய பர்கூர் மலையும், அந்தி வேட்டுவரின் திருக்கடம்பூர் மலையும், பொறையர் பாளையமும், அரசன் பாளையமும் (அடச பாளையமும்) வடகரை நாட்டின் வரலாறுகளை இன்றும் எடுத்துரைக்கின்றன.

“உலகடத்து கள்ள வேட்டுவன், நெரிஞ்சி ஊர் சாம வேட்டுவன், கோட்டை நவுலூரு புன்னை வேட்டுவன் - அந்துவ வேட்டுவன், கேசரமங்கலம் வன்னி வேட்டுவன், ஊராச்சி கோட்டை பரிபடை வேட்டுவன், சம்பை அந்துவ வேட்டுவன் - வெள்ளை வேட்டுவன், ஆப்பக்கூடல் படைத்தலை வேட்டுவன், கீழ்வாணி கிழங்கு வேட்டுவன், திரு கடம்பூர் அந்து வேட்டுவன், வேம்பத்தி வேம்ப வேட்டுவன், பட்லூர் பீச்சை வேட்டுவன், ஊழியத்து பெரிதான் யீஞ்ச வேட்டுவனுக்கு கருமலை வட்டம்" என்று சுந்தராயப் பட்டையம் கூறுவதால் வடகரை நாட்டில் உள்ள 30 கிராமங்களும் ஊராளிகளாக வேட்டுவர்களே இருந்தனர் என்பது புலப்படுகிறது.

சிற்றூர் மன்னன் என்ற ஊராளியாகவும், வேளிர் என்ற குறுநில மன்னனராகவும், வேந்தன் என்ற பேரரசனாகவும் வேட்டுவர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. உதாரணமாக கடம்பூர் சிற்றூர் மன்னன் (ஊராளி) அந்துவ வேட்டுவன், அந்தியூர் (வடகரை நாட்டு) குறுநில மன்னன் (வேளிர்) அந்துவ வேட்டுவ சுந்தரராயன், கொங்கு நாட்டின் வேந்தனாக அந்துவன் சேரல் இரும்பொறை ஆண்டது வேட்டுவர்களின் அரசு உருவாக்கத்தை நமக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## சோழர் ஆட்சி

சங்க இலக்கியத்தில் ஈரோடு மாவட்டம் செங்களம் என்ற இடத்தில் சோழர்கள் சேரர் மன்னர்களுடன் போர் புரிந்துள்ளனர்.

கரிகாலச் சோழன் கொங்கு நாட்டில் வாழ்நதுள்ளதை சோழன் பூர்வபட்டயம் குறிப்பிடுகின்றது. பிற்காலச் சோழன் ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்று கொழுமம் கோவிலுக்கு பொன் வேய்ந்தான் என்ற செய்தி உள்ளது. முதலாம் பராந்தகசோழன் காலத்து கல்வெட்டுகள் ஈரோடு கோவில்களில் உள்ளது. இராசேந்திரச் சோழன், இராசராசசோழன், குலோத்துங்க சோழன் போன்றவர்கள் ஈரோடு மாவட்டப் பகுதியை ஆண்டு உள்ளனர். கொங்கு சோழர்கள் இப்பகுதியை வெவ்வேறு பகுதிகளாக நிர்வாகித்துள்ளனர். அவற்றில் கொங்கு மண்டலமும் ஒன்றாகும்.

ஈரோடு மாவட்டத்தில் சோழர்கள் பல ஆலயத் * திருப்பணிகள் செய்துள்ளனர். சோழர்கள் காலத்தில் கி.பி.938 முதல் கொங்குச் சோழர் என்ற தனிப்பிரிவினர் இங்கு சிற்றரசர்களாக இருந்துள்ளனர். அவர்கள் கண்டராதித்த சோழன், உத்தமச் சோழன் வழியில் வந்தவர்கள் ஆவார்கள். கொங்கூருக்கருகில் பராந்தகபுரம் என்று பெயரிட்டு ஒரு நகரை உருவாக்கினார். பின்னர் அதற்கு இராசராசபுரம் என்று பெயரிட்டனர். இப்பெயர் கொங்கு சோழர்கள் ஆட்சிக் காலத்தில் இராசப்புரம் என்று அழைத்தனர். பின்னர் இப்பெயர் மருவி தாராபுரம் என்று அழைக்கப் பெறுகிறது. சோழர்களின் ஆட்சிக் காலத்தை ஈரோடு மாவட்டத்தின் பொற்காலம் என்று கூறலாம். ஆலயத் திருப்பணிகள் பல நடைபெற்றன வணிகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

## அந்தியூரை ஆண்டவர்கள்

"அந்தியூர் சங்க காலம் முதற்கொண்டே முதன்மை பெற்ற ஊராக இருந்துள்ளது. சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட சேரர்கள் அந்தியூர் அமைந்துள்ள வடகரைநாட்டையும் ஆண்டுள்ளனர். சேரருள் செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக்கட் சேய்

மாந்திரஞ் சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை ஆகியோர் வடகரை நாடாண்ட கொங்குச் சேரர்கள் ஆவர். முடிவேந்தர் போன்ற வேடர்களும் இப்பகுதியில் ஆட்சி செய்துள்ளனர். வேடர் தலைவனான கண்டீர கோப்பெரும் நள்ளி என்ற வள்ளலும் இப்பகுதியை ஆண்டுள்ளான். இவனால் ஆளப்பட்ட தோட்டி மலை இன்றைய பருகூர் மலையின் ஒரு பகுதி ஆகும்".

(கொங்கும் தமிழும், முனைவர். இரா. கா. மாணிக்கம், பக்கம்: 55)

## கொங்கு சோழர் காலம்

ஈரோடு மாவட்டத்தில் கொங்கு சோழர்கள் மிகவும் சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் கொங்கு நாட்டை சோழர் பேரரசுகளின் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்துள்ளனர்.

1. வீரசோழ பெருமான் - 942 - 980
2. இராசகேசரி வீரசோழ கலிமூர்க்க பெருமான் - 980 - 1004
3. பரகேசரி கலிமூர்க்க விக்கிரம சோழன் - 1004 - 1047
4. இராசகேசரி இராசிராசன் - 1085 - 1100
5. பரகேசரி இராசிராச உத்தம சோழன் -1100 - 1117
6. இராசகேசரி ராசாதி ராச வீரசோழன் - 1117 - 1138
7. பரகேசரி உத்தம சோழ வீரநாராயணன் - 1138 - 1149
8. இராசகேசரி - குலோத்துங்க சோழன் - 1149 - 1168
9. பரகேசரி வீரசோழன் - 1168 - 1195
10. இராசகேசரி குலோத்துங்கன் - 1195 - 1207
11. இராசகேசரி வீரராசேந்திரன் - 1207 - 1255

12. பரகேசரி விக்கிரம சோழன் - 1255 - 1266

13. பரகேசரி விக்கிரம சோழன் - 1273 - 1304

கொங்கு சோழர்களின் கல்வெட்டுகள், குண்டடம், சீனாப்புரம், திங்களூர், பட்ளூர், பிரமியம், கன்னிவாடி, மூலனு?ர். விசயமங்கலம், வள்ளியறச்சல், பாரியூர், கீரனூர், சாத்தாம்பூர். கத்தங்கன்னி, கொங்கூர், கொடிவேரி, போன்ற ஊர்களில் காணப்படுகின்றது.

சோழர்களில் முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டை வென்றதாகக் கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூல் குறிப்பிடும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திருத்தணி செப்பேடுகளும் அவ்வரலாற்றினை உறுதிப்படுத்தும் பத்து ஆண்டுகளுக்கு முன் கோவை நகருக்கருகில் இராசகேசரிப் பெருவழி பற்றிய கல்வெட்டு வட்டெழுத்திலும், தமிழெழுத்திலும் வடிக்கப் பட்டுள்ளதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## பிரம்மதேசம்

வடகரை நாட்டு பிரம்மதேசம் பிராமணர்களுக்கு வேட்டுவ மன்னர்களால் மானுவமாக அளிக்கப்பட்ட ஊர் இந்த பிரம்மதேசம் ஆகும்.

## பொங்காளி அம்மன் கோயில்

முப்பாடு - பிற்பாடு அம்மை அழைத்தல் முதல் மரியாதை பட்டாளத்து அம்மன் - முதல் திருநீர்.

**பெரிய மாரியம்மன் கோயில் - கம்பம் நடுதல்**
**முதல் திருநீர் - முதல் மரியாதை**

கூத்தாண்டை மாரியம்மன் - கம்பம் நடுதலும் மற்று அனைத்து நிகழ்வுகளும்

**சின்ன மாரியம்மன் - கம்பம் நடுதல்**
**முதல் மரியாதை - முதல் திருநீர்**

**அணை கருப்புசாமி கோயில்:**
**முதல் மரியாதை, முதல் திருநீர்**

காட்டுப் பிடாரி அம்மன் கோயில் மூக்கம்பாளையம்

## முதல் மரியாதை - முதல் திருநீர்

பெருமாள் கோயில் - பூஜை செய்தல் மூக்கம்பாளையம் (மூர்க்கன் பாளையம்) அந்துவ (அந்தி) வேட்டுவர்கள் மேற்கண்ட பிரம்மதேசம் மூக்கம்பாளையம் கோயில்களில் மேற்கண்ட மிராசுகளை இன்று வரை செய்து வருகின்றார்கள் என்பதும் பொறையபாளையம் ஊர்க்கவுண்டராக இருப்பதும் வடகரை அந்தியூர் கோட்டையை அந்துவ (அந்தி) வேட்டுவர்களே ஆட்சி செய்தனர் என்பதும் புலப்படுகிறது. சேர மன்னன் கலி மூர்க்கன் பெயரால் அமைந்ததே மூர்க்கன்பாளையம் எனும் மூக்கம்பாளையம் ஆகும். இவ்வூர் வேட்டுவ பாளையக்காரர்கள் ஆட்சியை நினைவுபடுத்தும் வகையில் மூர்க்கன் (மூக்கம்) பாளையம் என்று அமைந்துள்ளது. மனிதன் ஊர்ந்து சென்று அமைத்தது ஊர் ஆகும், நகர்ந்து சென்று அமைத்தது நகர் ஆகும், பாளையக்காரர்கள் ஆட்சி காலத்தில் அமைந்த ஊர்கள் பாளையங்கள் எனப்பட்டன.

இடைக்காலத்தில் சேர மன்னர்கள் கலி மூர்க்கன் என்ற பட்டப்பெயரில் கொங்கை ஆண்டனர் ஈரோடு தாழி ஏரிக்கல்வெட்டு கலிமூர்க்கன் இரவி கோதை என்று கூறுகிறது.

ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து செல்லும் பொழுது கொங்கு நாட்டை வேட்டுவ இராசாக்கள் ஆண்டனர் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. கொங்கு தேச இராசக்கள் சரிதம் கூறுவது உண்மை என்கிறது திருத்தொண்டர் திருவந்தாதி பாடல் 65.

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன் குல முதலோன்" என்கிறது ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தை தன் வசப்படுத்திய பொழுது கொங்கை ஆண்டு கொண்டிருந்த வேட்டுவ

இராசாக்கள் கொடுத்த பொன் கொணர்ந்து தில்லை சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியை உறுதிப்படுத்துகிறது, எனவே "கொங்குதேச ராஜாக்கள்" சரிதம் கூறும் ஒரு வரலாற்று நிகழ்ச்சி நம்பியாண்டார் நம்பியின் வாக்கினால் உறுதி செய்யப்படுகிறது. சங்ககாலத்தில் கருவூரை தலைநகரமாகக் கொண்டு அந்துவன் சேரல் இரும்பொறை முதல் கணைக்கால் இரும்பொறை வரை கொங்கு நாட்டை சீரும் சிறப்புடன் ஆண்டுவந்தனர் என்று பதிற்றுப்பத்து என்னும் நூல் சேரமன்னர்கள் பத்துபேரைப் பற்றிப் பாடுகிறது, அதில் முதல் பத்து பாடல்களும், கடைசிப் பத்து பாடல்களும் இன்று காணாமல் போய்விட்டது.

## சோழன் பூர்வ பட்டயம் T.1843

வெளியீடு: கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை கொங்கு நாட்டில் கோட்டையூர் நகர் அதிகாரம் செலுத்திய வேட்டுவ மன்னாடிகள் (மண்ணாடிகள்) அவர்களை நியமித்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வேட்டுவக் கவுண்டர்களின் உட்பிரிவுகளில் அதிகாரம் செலுத்திய மண்ணாடிகளின் பெயர்கள்.

வ.எண் கோட்டையூர் நகர் நியமித்த மன்னர்கள் நியமிக்கப்பட்ட பிரிவு மண்ணாடிகளின் பெயர்கள்

1. பழனி சேரன் வேடர் பழனி சின்னப்ப மன்னாடி
2. ஆயக்குடி (அமர பாண்டி நகர்) பாண்டியன் வேடர் சின்னப்ப மன்னாடி மைத்துனன் கொண்டப்ப மன்னாடி
3. பூம்பறை சேரன் வேடர் குன்னுவரில் நாகப்ப மன்னாடி
4. ஆணைமலை சேரன் பூழுவர் அள்ளியப்ப மன்னாடி
5. தென்சேரி (செஞ்சேரிமலை) சோழன் பூழுவர் பல்லவ மன்னாடி

6. சென்னியங்கிரி (சென்னிமலை) சோழன் வேட்டுவர் அமர மன்னாடி
7. வெள்ளிமா நகரம் (இரும்பொறைமூதூர்) சோழன் வேட்டுவர் மலைய மன்னாடி
8. சத்தியமங்கலம் சேரன் வேடர் சின்னப்ப மன்னாடி
9. திங்களூர் சேரன் வேட்டுவர் பெரியண்ண மன்னாடி
10. விஜயமங்கலம் சோழன் வேட்டுவர் குமாரவேல் மன்னாடி
11. கீரனூர் சேரன் பூழுவர் கண்டி மன்னாடி
12. கோனாபுரி சோழன் பூழுவர் மொள்ள மன்னாடி
13. நடுவன்சேரி சேரன் பூழுவர் செந்தேவியன் மன்னாடி
14. பல்லடம் சேரன் பூழுவர் பணிக்க மன்னாடி
15. தணாய்க்கன்கோட்டை சோழன் வேடர் சத்தியமங்கலத்து சின்னப்ப மன்னாடி அப்பால் தாணையத்து மன்னாடி
16. குள்ளந்துறை சோழன் வேடர் தாணையத்து மன்னாடி அப்பால் கங்குநதி மன்னாடி
17. வண்டிக்கோட்டை சோழன் வேட்டுவர் வில்ல மன்னாடி
18. வெள்ளாதி சோழன் வேட்டுவர் வில்ல மன்னாடி அப்பால் கொண்டப்ப மன்னாடி
19. கவையன்புத்தூர் சோழன் பூழுவர் சின்னப்ப மன்னாடி
20. சாமளபுரம் சோழன் காவலியர் வஞ்சி மன்னாடி
21. சிங்கா நல்லூர் சோழன் காவலியர் சிங்க மன்னாடி
22. வெள்ளலூர் சோழன் காவலியர் சோழியண்ண மன்னாடி
23. சூலூர் சோழன் பூழுவர் சூர மன்னாடி
24. இருகூர் சோழன் பூழுவர் கரும மன்னாடி

25. இடிகரை சோழன் பூழுவர் கவையன்புத்தூர் சின்னப்ப மன்னாடி அப்பால் வில்லிப்புத்தூர் மன்னாடி
26. துடியலூர் சோழன் பூழுவர் கவையன்புத்தூர் சின்னப்ப மன்னாடி
27. கோவன்புத்தூர் (கோவை) சோழன் மாவலியர் துடியலூர் சின்னப்ப மன்னாடி
28. பேரூர் சோழன் பூழுவர் குமார கோப்பண்ண மன்னாடி
29. அவினாசி திருமுருகன் பூண்டி சேரன் சோழன் பூழுவர் துடிசை மன்னாடி மகன் நாக தேவ மன்னாடி
30. சேவூர் சோழன் பூழுவர் செம்பிய மன்னாடி
31. அன்னூர் சோழன் பூழுவர் நல்ல வீரப்ப மன்னாடி
32. முட்டம் சோழன் பூழுவர் பேரூர் குமார கோபண்ண மன்னாடி அப்பால் நாகப்ப மன்னாடி

**சேரன் - சேரமான் பெருமாள்**

**சோழன் – கரிகாற் சோழன்**

பாண்டியன் – மீனாட்சி சௌந்திர பாண்டியன் பட்டயத்தில் மண்ணாடி என்றுள்ளது. மண்ணாடி என்பது மண்ணை ஆளுபவர் என்பதன் திரிபு. காவலியர், மாவலியர், பூழுவர் என்பது பட்டயத்தில் காவிலுவர், மாவிலுவர், பூவிலுவர் என்றுள்ளது.

சோழன் பூர்வ பட்டயம் வேட்டுவரில் காவிலியர், மாவிலியர், பூழுவர் கொங்கு நாட்டின் பூர்வகுடிகள் என்று கூறுவதால் கொங்கினை ஆண்ட கொங்கர் வேட்டுவரே என்பது புலப்படுகிறது.

காத்தல் தொழிலில் வல்ல காவலியர் நினைவாக ஆடி பதினெட்டாம் நாளும், பூழுவர் நினைவாக தைப்பொங்கலும், தென்னகப் பெருவேந்தன் மாவிலியர் நினைவாக ஓணம்

பண்டிகையும் இன்றும் கொண்டாடப்பட்டு வருவது இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

காவிலியர் கொங்கின் கிழக்குப் பகுதியையும், பூழுவர் கொங்கின் மேற்குப் பகுதியையும், மாவிலியர் கொங்கு நாட்டில் எல்லைப் பகுதிகளிலும், பாண்டிய நாட்டிலும் சிறப்பான ஆட்சியை நடத்தினர் என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. வில்லி வேட்டுவன் உருவாக்கிய ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுரம் தமிழக அரசு சின்னமாக உள்ளது. வேட்டுவர்கள் வில் எடுத்ததால் அது வில்லிபுத்தூர் ஆனது, வேல் எடுத்ததால் அது வேலூர் ஆனது, வாள் எடுத்ததால் அது வாளகிரி ஆனது களப்பிரர்களை வென்று பரசுராமன் எல்லையை அழித்து வாளைக்கழுவிய ஆறு வாளையாறு ஆனது. வேட்டுவரில் பூழுவர் என்பது பூழி நாட்டை ஆண்ட பூழுவ வேட்டுவரை குறிக்கும்.

கி.பி. 5 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்த ஆசாரிய புத்ததத்த தேரர் சோழநாட்டுத் தமிழர். அவர் புகழ் பெற்ற பௌத்த பெரியார். அவர் பாலி மொழியில் 'வினய வினிச்சயம்' எனும் நூலை களப்பிரர் காலத்தில் இவர் எழுதி முடித்ததாக அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**“அச்சுச்சுத விக்கந்தே களப்பகுல நந்தனே**
**மஹிம்ஸ மனு ஸாஸந்தே ஆரத்தோ சஸமாபிதோ”**

"Con temporary Budda Gosha" by A.P. Buddha Data.

(P.P. 34 -70.University of Ceylon Review 1945. Vol.III. No.1)

இதில் அச்சுத விக்கந்தன்களப்பிரர் குலத்தில் பிறந்தவன் என்று கூறப்படுகிறான். இந்த சான்றுகளினால் களப்பிர அரசர் வைணவர் என்றும், வைணவப் பெயராகி அச்சுதன் என்றும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தார்கள் என்பது தெரியவருகிறது. விக்கந்தன் என்பது உத்தண்டன் என்றும் கச்சிராசன் என்பது காஞ்சிராசன் என்றும் அறியப்படுகின்றன

மேற்கூறிய வேட்டுவகுலப் பாடலில் உள்ள உத்தண்டன் களப்பிர மன்னனான அச்சுத விக்கந்தன் ஆவான். (விக்கந்தன் = உத்தண்டன்)

## கடையெழு வள்ளல்கள் வேட்டுவர்

### நள்ளி

பர்கூரில் இருந்து கார்கே கண்டி வரையில் தொட்டி (தோட்டி) என்ற சொல்லே பரவலாக காணப்படுகிறது. இதனால் 'பட்டி தொட்டி எங்கும்' என்ற கொங்கு சொல் உருவானது எனலாம். கண்டி சாலை, கண்டி அம்மன், கார்கே கண்டி, கண்டீரம் என்னும் பெயர்களில் உள்ள கண்டி எனும் சொல் முட்காடுகளை குறிக்கும் சொல் என்று சொல்லலாம்.

கார்கே கண்டி என்றால் கார் மேகங்கள் சூழ்ந்த ஈரமுள்ள கண்டி என்பதாகும். கண்டீரமலை என்றால் ஈரமுள்ள முட்காடுகள் நிறைந்த மலை எனக்கொள்ளலாம். கண்டீரக் கோப்பெரும் நள்ளி எனும் வேட்டுவ குறுநில மன்னன் ஆண்ட மலையே கண்டீர மலையாகும். முடிவேந்தன் போல ஆட்சி செய்த வள்ளல் இவன். இம்மலை நாட்டில் யானை நிரைகள் நிறைந்து காணப்படும். இந்நாட்டின் வீரர்கள் யானைகளைச் சாந்தப்படுத்தி கரிப்படை எனும் யானைப்படை களை நிர்வகிப்பதில் வல்லமை படைத்தவர்கள், எனவே இன் நாட்டு வீரர்கள் சேரர் படைகளில் சாந்தப்படை எனும் யானைப் படை தளபதிகளாக பணியாற்றினர். பிற்காலங்களில் இவர்கள் சார்ந்த படை வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். நள்ளியின் மலைநாடு கிழக்குத் தொடர்ச்சி மலையில் கஜகட்டி கணுவாயிலிருந்து பர்கூர் மலையில் உள்ள கார்கே கண்டி வரை பரவியுள்ள நீண்ட நெடிய மலைத்தொடர் ஆகும். மூவேந்தர்களுக்கு நிகராக நால்வகைப் படைகளில் சிறந்து விளங்கிய யானைப்படையை உடையவன் கண்டீர கோப்பெரும் நள்ளி ஆவான்.

## கண்டீரம்

இப்பெயருடைய ஊர் கொங்கு நாட்டில் இருந்தது. கண்டீர நாட்டில் பெரிய மலையொன்று "தோட்டிமலை" என்று பெயர் பெற்றிருந்தது. அந்நாட்டை அரசாண்ட மன்னர்கள் ‘கண்டிரக்கோ’ என்ற பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களில் ஒருவன் ‘நள்ளி’ என்னும் பெயருடையவன். தோட்டி மலையையும் அதன் அரசனாகிய நள்ளியையும் வன் பரணர் கூறுகிறார். இரும்பு புனைந்தியற்றாய் பெரும்பெயர் தோட்டி, அம்மலை காக்கும் அணி நெடுங்குன்றின், பளிங்கு வகுத்தன்னத நீர், நளிமலை நாடான் நள்ளி (புறம் 150: 25 - 28)

## தோட்டி

> யானைப் பாகர் யானைகளை அடக்கி நடத்துகிற ஓர் ஆயுதம். இது இரும்பினால் செய்யப்படுவது, அந்தப் பெயருடைய இந்த மலை ‘இரும்பு புனைந்து இயற்ற தோட்டி’ எனப்பட்டது.
>
> (கொங்கு நாட்டு வரலாறு, பழங்காலம் கி.பி. 250 வரையில், மயிலை. சீனி வேங்கடசாமி. பக்கம்: 24)

பவானிசாகர் அணையில் பவானி ஆற்றுடன் மோயாறு என்ற ஆறு கலக்கிறது. இந்த மோயாற்றங்கரையில் பவானிசாகர் அணையில் இருந்து சுமார் 1.5 கிலோமீட்டர் தூரத்தில் பத்து, இருபது ஏக்கர் பரப்பரப்பில் ஒரு கோட்டை அமைந்துள்ளது. இக்கோட்டை ‘கஜகட்டி கோட்டை’ என்று அழைக்கப்படுகிறது. கஜம் என்றால் யானை என்று அர்த்தம் கண்டிரக் கோப்பெரும் நள்ளி அக்கோட்டையில் யானைகளை கட்டி வைத்து சாந்தப்படுத்தி அந்த யானைகளை போரில் ஈடுபடுத்தினான். இன்றும் பவானிசாகர் அணைக்கட்டு அருகில் ஆனைகட்டி என்ற ஊர் உள்ளது. அவூரில் பழங்காலந் தொட்டே யானைகளைச் சாந்தப்படுத்தி போர் செய்யும் யானைகளாக மாற்றும் கரிபடை வேட்டுவர் எனும் சாந்தப்படை வேட்டுவர் வாழ்ந்து வருகின்றனர்.

## தொட்டி

பருகூர் மலைப்பகுதியில் உள்ள கிராமங்களில் பெயர்கள் தொட்டி என்றே வழங்கப்படுகின்றன. வேட்டுவர்களின் வரலாற்றை கல்வெட்டுகளில் அள்ளித்தந்த உலகடமும், பட்லூரும் வடகரை நாட்டில் தான் இருக்கின்றன. தற்பொழுது சாந்தப்படை வேட்டுவர் கண்டி அம்மனை குலதெய்வமாக வழிபடுவது இவ்வரலாறுகளை உறுதி செய்வதாக உள்ளது. சேரரிடம் செல்வாக்குப் பெற்ற இவர்களுக்கு சேரரின் பிராமிக்கல்வெட்டு கொண்ட ஆறுநாட்டார் மலை நாட்டுத் தலைவனாக முடி சூட்டப்பட்டனர். இச்சாந்தப்படை வேட்டுவர் புகழூர் கண்டி அம்மனை குலதெய்வமாக வணங்கி வருகின்றனர், இன்றும் ஆறுநாட்டார் மலை முருகன் கோயிலில் முதல் மரியாதை சாந்தப்படை வேட்டுவருக்கே உரியது ஆகும். தற்சமயம் ஆறுநாட்டார் மலை முருகன் கோயிலில் பரிவட்டம் கட்டி முதல் மரியாதை பெறும் சாந்தப்படை வேட்டுவர் குன்னமலை கிராமத்தில் இரும்பு பாலம் அருகில் வசிக்கும் திரு. துரைசாமி (TNPL) என்பவர் என்று அறியப்படுகிறது. புறநானூறு 150 வது பாடலில் கண்டீரக் கோப்பெரு நள்ளியை வன்பரணர் பாடியது.

> **“செல்வத் தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன்**
> **இரும்பு புனைந்து இயற்றாப் பெரும் பெயர் தோட்டி**
> **அம்மலை காக்கும் மணி நெடுங் குன்றின்**
> **பனிங்கு வகத் தன்ன தீநீர்**
> **நன்மலை நாடன் நள்ளி அவன் எனவே”**

"செல்வச் செழிப்புடைய ஓர் வல்வில் வேட்டுவன்" என்றும் இரும்பால் செய்யப்படாத - ஆனால் அதனினும் வலிமையுடைய தோட்டி மலைத்தொடரில் உள்ள அழகிய பெருங் குன்றும், பளிங்கு போல் ஓடும் நீர் அருவிகளும் உடைய பெரியமலை நாட்டுத் தலைவன் கண்டீரக் கோப்பெரு நள்ளி அவன் என்றும் நாங்கள் அறிந்தோம். புறநானூறு 148

வது பாடலில் கண்டீரக் கோப்பெரு நள்ளியை வன் பரணர் பாடியது

### யானை நிரைகள் நிறைந்தது கண்டீரமலை

> "கறங்குமிசை அருவிப் பிறங்குமலை நள்ளி நின்
> அசைவுஇல் நோன்தாள் நசைவளன் ஏத்தி
> நாடொறும் நன்கலம் களிற்றொடு கொணர்ந்து"

ஓசை எழுப்பிக் கொண்டு உயர்ந்த மலைகளிலிருந்து விழும் அருவி வளமுடைய மலைநாட்டுத் தலைவனே! கோப்பெரு நள்ளியே! உன்னை நாடிவந்து, தளர்வில்லாத நின் செல்வ வளத்தையும், புகழையும் போற்றிப் பாடும் புலவர்களுக்கு கொடுக்க என்றே அன்றாடம் உன் மலைநாட்டில் வந்து குவியும் பொன்னும் பொருளும், யானைக் கூட்டமும் வான் முட்ட நிறைந்திருக்கின்றன.

பாரியின் மகளிரை (அங்கவை, சங்கவை) கபிலர் வடபாரி சார நாட்டின் அண்டை நாடுகளை ஆண்ட இருக்குவேளிர், கண்டீரக் கோப்பெரு நள்ளி என்னும் வேட்டுவ வேளிர்களை மணஞ் செய்ய வேண்டிய பொழுது அவர்கள் மறுத்ததிற்கு காரணம் மூவேந்தர்களின் பகையைப் பெற விரும்பாததே ஆகும்.

## வேட்டுவர் கட்டிய கோட்டைகள்

### தணாய்க்கன் கோட்டை (தன நாயக்கன்கோட்டை):

கொங்கு நாட்டில் உள்ள 32 ஊர்களுக்கு மேல் கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டதை சோழன் பூர்வப்பட்டையம் கூறுகிறது. இப்பணியை சேரமான் பெருமாள், கரிகாலச்சோழன் மீனாட்சி சௌந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாக பட்டயம் கூறுகிறது.

வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த சத்தியமங்கலம் சின்னப்ப மண்ணாடி வகை தாணையத்து மண்ணாடிக்கு கரிகாலச்

சோழனால் தணாயக்கண் கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார் அடுத்து வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த தாணையத்து மண்ணடி வகை கங்கு நதி மண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

வரலாற்று பெருமைமிக்க தணாய்க்கன் கோட்டை ஓடுவங்க நாட்டில் மோயாற்றின் கரையில் மோயாறும், பவானி ஆறும் சந்திக்கும் இடத்திற்கு சற்று மேலே தொரவலூர் என்ற இடத்தில் பல பெருமைகளையுடையதாய் அமைந்துள்ளது. சோழன் பூர்வ பட்டியத்தில் தணாய்க்கன் கோட்டை தணக்கன் கோட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோட்டை அதிகாரம் அவிநாசி வரை பரவியிருந்தது, இக்கோட்டை ஒடுவங்க நாட்டு அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது கிழக்கிந்திய கம்பெனியின் ஆய்வு அலுவலராக நியமிக்கப்பட்ட புக்கானன் கொங்கு நாட்டில் பவானி கோவை, நீலமலை பகுதிகளில் மக்களிடம் கருத்துக்கள் கேட்டு அவரது பயணக் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். அக்குறிப்பில் “அக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்த தணாநாய்க்கன் என்ற பாளையக்காரரால் கட்டப்பட்டதாகும். அந்தப் பாளையக்காரரின் சந்ததியினரிடமிருந்து மைசூர் ராஜா அதை கைப்பற்றினார் என்று அவ்வூர் மக்கள் கூறினர். தணாய்க்கன் கோட்டை பகுதியில் ஊருக்குச் சற்று மேற்கே பவானி ஆற்றின் அணை ஒன்று கட்டி சிதைந்த நிலையிலும் 400 ஏக்கர் நிலத்துக்கு நீர் பாய்ந்து வந்தது” என்று கண்டுள்ளார்.

இக்கோட்டையில் உள்ள சோமேஸ்வர மங்கலாம்பிகை கோயில் கோட்டை கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் கருவரை மேற்குச் சுவரில் இக்கோயிலின் முற்கால பெயர் "தான் தோன்றீஸ்வரமுடையார்" என்றும் இவ்வூருக்கு துரவலூர் என்றும் இங்குள்ள முற்காலக் கோட்டைக்கு ’நீலகிரி சாதாரண கோட்டை என்றும் அழைக்கப்பட்டன என்பதை

கல்வெட்டில் செதுக்கி வைத்துள்ளனர். இக்கல்வெட்டு போல பதினொரு கல்வெட்டுகள் இக்கோயிலில் அறிய ப்பட்டுள்ளன இக்கல்வெட்டுக்கள் இதன் பழமையை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

இக்கோட்டை ஒடுவங்க நாட்டு வேட்டுவப் பாளையக் காரனிடமிருந்து மைசூராரும் அதனைத் தொடர்ந்து இங்கிலீஷ்காரரும் பறித்துக் கொண்டனர். சோழன் பூர்வபட்டயத்தில் தணாய்க்கன் கோட்டை, குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டிருந்ததை அறிந்தோம். எனவே இக்கோட்டை பண்டுதொட்டு வேட்டுவ அதிகாரத்தில் இருந்ததை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறியலாம். இக்கோட்டை அந்நியர்கள் வசமானதை ஒரு பழம் பாடல் ஒன்றை ஓதிமலை ஆண்டவரை தரிசிக்க மலை ஏறும் போது மக்கள் இக்கோட்டையை பார்த்து பாடி செல்வார்கள் அப்பாடலில் சில வரிகள்.

**இங்கிருந்து பார்த்தால் அது இங்கிலீஷ் கோட்டை**
**அங்கு போய் பார்த்தால் அது தணாய்யன் கோட்டை**
**புட்டுப் பார்த்தால் அது புலியன் கோட்டை..**

## புலியன்பட்டி வங்க நாயக்கன் நாயக்கன் என்பது பட்டம்

அந்துவன் சேரல் இரும்பறையின் கால் வழியினரான அந்துவ வேட்டுவர் (அந்தி வேட்டுவர்) ஒடுவங்க நாட்டின் பாளையக்காரர்களாகத் தொன்று தொட்டு அந்நாட்டில் அதிகாரம் செலுத்தி வந்தனர். ஓதிமலை இரும்பறைக்கு அருகில் அந்துவ வேட்டுவர் புலிகுத்தி கற்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த ஒடுவங்க நாட்டு பாளையக்காரர் 'வங்க நாட்டு புலி' என்று அம்மக்களால் அழைக்கப்பட்டனர். இன்றும் இப்பாளையக்காரர்கள் வசிக்கும் ஊருக்கு வங்கநாயக்கன் பாளையம் என்று அழைக்கப்படுகிறது, இவர்கள் மதுரை

விஜயநகர ஆட்சியாளர்கள் காலத்திலும் ஒடுவங்க நாட்டு பாளையக்காரர்களாக சிறந்து விளங்கினர். கொங்கு நாட்டில் முதன் முதலில் வடகரை ஆத்தூரில் காவேரியை கரை ஏற்றி ராஜவாய்க்கால் (அல்லாள இளைய நாய்க்கன் கால்வாய்) வெட்டிய அல்லாள இளைய நாய்க்கன் எனும் அரையநாட்டு வேட்டுவப் பாளையக்காரன் சிறந்து விளங்கினார். வங்கப்புலி எனும் ஒடுவங்க நாட்டு அந்துவ வேட்டுவ பாளையக்காரர்கள் இன்று புலியின்பட்டி என்று வழங்கும் ஊர் அன்று இந்த புலி கவுண்டனின் ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி மட்டும் சுமார் 300 ஏக்கருக்கு மேல் போடப்பட்டிருந்தது. அன்று புலியன்பட்டியாக இருந்தது பின் அது நெசவாளர், கண்ணடி கன்னடியர் என பல குடியேற்றங்கள் நடந்து இன்று அது புளியம்பட்டி என்றும் திரித்து வழங்குகின்றனர் அன்று போல் இன்றும் இந்த அந்தி வேட்டுவப் பாளையக் காரர்கள் இரும்பொறையில் தைப்பூசத் திருநாளில் ஓதிமலை ஆண்டவருக்கு தேரோட்டி திருவிழா சிறப்புடன் செய்து வருகின்றனர். இவர்கள் பவானிசாகர் சேர்மன் ஆக வெகு காலம் பதவி வகித்தனர். புளியம்பட்டியிலும் அந்துவனின் ஒரு கிளை கோட்டை இருந்ததாக வரலாறு கூறுகிறது.

வீர நஞ்சராய உடையார் (கி.பி.1489 - 1500) கல்வெட்டு ஒன்றும் தணாய்க்கன் கோட்டையில் உள்ளது. மைசூர் மன்னர்களின் அதிகாரிகள் தணாய்க்கன்கோட்டை, சத்தியமங்கலம் கோட்டை, புளியம்பட்டி கோட்டை, கொடிவேரி கோட்டை, அந்தியூர் கோட்டை, ஊராட்சி கோட்டை எனும் கோட்டைகளில் தங்கி இருந்து வரி வசூல் செய்தனர் என்று அறியப்படுகிறது, மேலே குறிப்பிட்டுள்ள கோட்டைகள் எல்லாம் வேட்டுவ ஆட்சியாளர்களின் கோட்டைகளே ஆகும்.

சத்தியமங்கலம் கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவரில் சின்னப்ப மண்ணாடி என்பவரை சேரமான் பெருமாள் நியமித்தார் என்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது

என்றாலும், மைசூரார் கொங்கு நாட்டை கொள்ளையடிக்க அதன் தனவாய்கள் அடிக்கடி கொங்கு நாட்டின் எல்லை பகுதிகளில் படையெடுத்ததால் திருமலை நாயக்கர் சத்தியமங்கலத்தில் ஒரு ராணுவக் கோட்டையை கட்டினார் என்று வரலாறு கூறுகிறது.

பெருமாள் தணாய்க்கன் (தணாய்க்கன் என்பது தண்டநாயக்கன் என்பதன் மரூஉ ஆகும்) என்பவர் போசள வேந்தன் நரசிம்மனின் அமைச்சனாகவும், படைத்தலைவ னாகவும் பணியாற்றினார். இவன் நீலகிரியை வென்று தன் நாட்டுடன் இணைத்து ஒரு கோட்டையையும் கட்டிக்கொண்டு ஆட்சி செய்தான். இவன் மகன் மாதப்ப தண்ட நாய்க்கன் நரசிம்மன் மகன் வீரவல்லாளனின் படைத்தலைவன் ஆவான். போசள வேந்தன் வீரவல்லாளன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அதன் ஒரு பகுதியை கைப்பற்றி ஆண்டான். அவனது கல்வெட்டுகள் அவிநாசி, அந்தியூர், சேவூர், பட்லூர், அரச்சலூர், அயலூர், பெருந்தலையூர், பேரூர், வெள்ளலூர், தணாய்க்கன் கோட்டை, குன்னத்தூர், ஈரோடு, விஜயமங்கலம் ஆகிய இடங்களில் உள்ளன.

தணாய்க்கன் கோட்டையின் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் வீரவல்லாளன் காலத்தில் மாதப்ப தண்டநாயக்கரும் அவருடைய மக்களும் இக்கோவில்களுக்கு தானம் செய்ததை குறிப்பிடுகின்றன.

வீரவல்லாளன் காலத்திய போசளத் தண்ட நாயக்கர்களும் கொங்கு நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கு பெற்றுள்ளனர்.

இவர்கள் அரசனின் பெயரைக் குறிப்பிடாது தன்னாட்சி பெற்ற ஆட்சியாளர்கள் போன்று இவர்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். மாதப்ப தண்ட நாயகன் "நீலகிரி சாதாரணன்" என்ற பட்டமும் நீலகிரியை வென்று ஒத்தையைப் பிடித்ததால் "ஒத்தைக்கு மிண்டான்" என்ற பட்டமும்

பெற்றான். ஒத்தை என்பது ஒத்தக்கல் மந்து என்றிருந்தது பின்னர் அதுவே உதகமண்டலம் எனும் ஊட்டி ஆயிற்று. தணாய்க்கன் கோட்டைக்கு "நீலகிரி சாதாரண கோட்டை" என்று பெயர் ஆயிற்று.

மாதப்பனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மாதப்பாவின் மூத்த மகன் வீரசிக்க கேத்தய்யா பவானி ஆற்றின் மேல் கரையில் 'ஸ்ரீ மாதவராயப் பெருமாளுக்கு' ஒரு கோயில் கட்டினான். அக்கோவிலுக்கு குறுப்பு நாட்டு மக்கள் சில மானியம் கொடுத்தனர் என்பதை திருவாய்பாடி விஜயமங்கலம் கல்வெட்டு உறுதி செய்கிறது.

மாதப்பாவின் இளைய மகன் சிங்கய்யா தணாய்க்கன் இரண்டு ஊர்களை தானமாகத் துரவலூர் நீலகிரி சாதரணன் கோட்டை தான் தோன்றீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு தந்துள்ளான் என்றும் மாதப்பாவும் அவர் புதல்வர்களும் 14 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர் என்றும் பேரூர் கல்வெட்டு உறுதி செய்கின்றன.

நரையனூர் நாட்டில் அஞ்சாவது நல்லூர் என்ற ஊரை மாதவ நல்லூர் என்று புதிய பெயர் சூட்டி மாதவப் பெருமாள் கோவிலுக்கு கொடையாக அளித்துள்ளதை நறையனூர் ஊர் சபையினர் உறுதி செய்து கல்வெட்டு குறித்துள்ளனர். இக்கல்வெட்டு தாராபுரம் அருகே தாளக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டு ஈரோடு திருத்தொண்டீஸ்வரர் கோயிலில் மேற்கு மற்றும் கிழக்கு சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு 'திண்டல்' என்ற ஊரை திருத்தொண்டீஸ்வரர் கோவிலுக்கு தானமாக வழங்கியதாக கூறுகிறது.

மற்றும் இவருடைய கல்வெட்டு பெருந்துறை வட்டம் கத்தாங்கண்ணி நின் மனீசுவரர் கோயில் கருவறை மேற்குச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு மார்கழி திங்களில்

திருவெம்பாவை பாடச் சிவப்பிராமணர் மூவர்க்கு மூலப் பொருளாக 50 பணம் தந்ததை குறிக்கிறது.

மூன்றாம் வீரவல்லாள தேவன் காலக் கல்வெட்டு திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் பாப்பினி ஊரில் உள்ள நத்தக்காட்டு சாம்பல் மேட்டில் உள்ள தூணில் பொறிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஸ்வஸ்தஸ்ரீ | நீலகிரிசா |
| தாரன் | கோ ட்டையில் |
| நாயனார் ஸ்ரீ | மாதவப் |
| பெருமாளுக் | குக்காங் |
| கயனாட்டார் | திருவிடை |
| யாட்டமாக | விட்டப்பா |
| ற்பனியாள | கொங்கரமா |
| ரிமாத | வநல்லூர் |
| இதற்கும் | னான் |
| கெல் | லைக் |
| குட்ப | ட்டா |
| ர்க் | கும் |

மூன்றாம் வீரவல்லாளன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான் அவனது பிரதிநிதியாக கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்தவர் இராகுத்தராய மாதப்ப தண்ட நாயக்கன் என்பவர். இவருக்கு பின் இவரது மகன் வீரசிக்கய்ய தண்டநாயக்கன் பிரதிநிதியானான். இவன் தந்தை பெயரால் மாதவப் பெருமாள் கோயில் கட்டி கொங்கு நாட்டில் பல ஊர்களை கொடையாக விட்டான். கொங்கரமாரி எனும் பட்டப் பெயர் இவனுக்கும் இவன் தந்தைக்கும் உண்டு என்று இக்கல்வெட்டால் அறியப்படுகிறது. தணாய்க்கன் கோட்டைக்கு ’நீலகிரி சாதார ன் கோட்டை’ என்ற பெயர் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. பாப்பினிக்குத் தந்தை

பெயரால் கொங்குரமாரி மாதவ நல்லூர் என்ற புதிய பெயரை வைத்துள்ளான்.

புக்கானன் பயண குறிப்பு "இக்கோட்டையைப் பற்றி என்ன கூறுகிறது என்றால் இக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்த தணாய்க்கன் என்ற பாளையக்காரரால் கட்டப்பட்டதாகும். அந்த பாளையக்காரரின் சந்ததியினரிடம் இருந்து மைசூர் ராஜா அதை கைப்பற்றினார் என்று அவ்வூர் மக்கள் கூறினார்கள்"

இதுவரை நாம் அறிந்த வரலாற்றுச் சான்றுகளின் மூலம் அறியப்படுவது என்னவென்றால் தணாய்க்கன் கோட்டையை கட்டி ஆண்டவர்கள் ஒடுவங்க நாட்டு அந்துவ வேட்டுவ பாளையக்காரர்களே என்பதுதான்.

தணாய்க்கன் கோட்டைக்கருகில் குள்ளன் துறை இருந்தமையும் அதில் பரிசல் போக்குவரத்து நடந்தமையும் வனதுர்க்கை பத்திரகாளிக்கு கரிகாலச் சோழனை கொண்டு உத்திரவாசல் கோவிலும் கட்டிவைத்த செய்தியும் சோழன் பூர்வபட்டையம் கூறுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள 32 ஊர்களுக்கு மேல் கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டதை சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது. இப்பணியை சேரமான் பெருமாள், கரிகாலச்சோழன், மீனாட்சி சௌந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாக பட்டயம் கூறுகிறது.

வேட்டுவர் சமூகத்தைச் சார்ந்த சத்தியமங்கலம் சின்னப்ப மண்ணாடி வகை தாணையத்து மண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் தணாய்க்கண் கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

அடுத்து வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த தாணையத்து மண்ணாடி வகை கங்கு நதி மண்ணாடிக்கு கரிகாலச் சோழனால் குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

கஜல் கட்டிக்கணுவாய்க்கு சமீபத்தில் ஸ்கந்தபுரம் இருந்திருக்க வேண்டும் என சொல்லப்படுவதால் நீலகிரி தொடரில் குண்டா (குந்தா) மலைத்தொடரில் தோன்றி வடக்கு நோக்கி சென்ற மாயாறு காவேரி உபநதியான பவானியாற்றில் சேரும் இடத்திற்கு சமீபத்தில் மாயாற்றங்கரையில் தணாய்க்கன் கோட்டை என்னும் தணாய்க்கன் கோட்டை ஊர் அமைந்துள்ளது. இக்கோட்டை தற்பொழுது பவானிசாகர் அணையில் மூழ்கியுள்ளது.

## கஜல்கட்டி கோட்டை

### நீலமலைத் தந்த மற்றொறு பேராறு மோயாறு

இந்த தணாய்க்கண் கோட்டை அமைந்த மாயாற்றின் கரையிலேயே தணாய்க்கன் கோட்டைக்கு 25 கிலோமீட்டர் தூரத்தில் கசல் கட்டி கோட்டை, கசல் கட்டி கணுவாயில் 20 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. மைசூர் படையெடுப்பு இந்த கஜல் கட்டி கணுவாய் வழியாகத்தான் கொங்கில் புகுந்து கொங்கு நாட்டு வேட்டுவ பாளையக்காரர்களுக்கு அடிக்கடி தொல்லைகள் தந்தனர். திப்புவின் படையெடுப்பில் இக்கசல் கட்டி கோட்டை திப்புவின் வசம் சென்றது அது முதல் இக்கோட்டை திப்பு சுல்தான் கோட்டை என்று மக்கள் அழைத்து வந்தனர்.

### பைகாரா - மோயாறு

இந்த மோயாறு உதகையிலிருந்து கூடலூர் சாலையில் முதலில் வருவது தலைக்குந்தா, இந்த மோயாற்றங் கரையில் தான் ஆற்றங்கரை வேட்டுவ தலைவர்கள் இரண்டு கோட்டைகள் கட்டியுள்ளனர். ஒன்று கஜல் கட்டி கணுவாயில் (ஸ்கந்தபுரம்) அமைந்த கஜல் கட்டி கோட்டை மற்றொன்று தணாய்க்கண் கட்டிய தணாய்க்கன் கோட்டை ஆகும்.

> “நொய்யலாற்றங் கரையில் ’கொடுமணல்’ சங்ககாலத்தில் புகழ்பெற்ற நகரமாக விளங்கியது.

நான்கு திசைகளில் இருந்தும் வணிகர்கள் வந்து குவிந்து இங்கு மணிகற்களைச் பெற்றுச் சென்றனர். வடக்கு நோக்கி செல்லும் பெருவழி விசயமங்கலம், சத்தியமங்கலம் கடந்து பவானி ஆற்றின் துணை ஆறான மோயாற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த டணாய்க்கன் கோட்டை வழியாக எருமையூரான் மைசூர் அடைந்தது"

(கொடுமணல் - தொல்லியல் அகழாய்வு அறிஞர், முனைவர். கா. இராஜன்)

## ஆப்பக்கூடல் கல்வெட்டு

"சுவஸ்தி ஸ்ரீ மனுமகாப் பிரதானம் மாதப்பதண்ட நாய்க்கருக்கு வடகரை நாட்டு நாட்டவரும், கால யுத்தி சம்பவத் சாகு சித்திர கண்டன் சந்ததிக்கு அமுது படி சாத்துப்படி உபயமாக இவ்வூர் நாற்பாற் கெல்லை நஞ்சை புஞ்சை மேல் நோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும் மற்றும் எப்பேர் பட்டனவும் கடமை குடிகளும் இருக்க கூட வராகவும் என்று செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொடுத்தோம். விஷ்ணு ரட்சை 720" தணாய்க்கன் கோட்டை அரசனாக ஆண்டவன் மாதப்ப (தண்டநாயக்கன்.

(பவானி போற்றதும், முனைவர் க. வி. வேதநாயகம் பக்கம் - 107, 108)

## அட்டப்பாடி - அத்திக்கடவு

கூடல் பட்டியின் மேற்கே கொடுங்கரை பள்ள ஓடையும் சிறுவாணி ஆறும் ஒன்று சேர்ந்து வடக்கே சென்று வானியில் கலக்கிறது. வானி (பவானி) ஆற்றுடன் இவ்விரு நீர் நிலைகளும் சேர்வதால் இப்பகுதி 'கூடல் பட்டி' என்று அழைக்கப்பட்டது. இங்கு தமிழகத்தின் வனப்பகுதி தொடங்குகிறது, வானியாறு

இங்கிருந்து அத்திக்கடவு வனப் பகுதிக்குச் சென்று பில்லூர் அணையை அடைகிறது.

## காவேரிபுரம் (கஜல்கட்டி கோட்டைகள்)

காவேரிபுரம் காவிரி நதிக்கரையில் அமைந்த கோட்டையும், மோயாறு நதிக்கரையில் அமைந்த கஜல் கட்டி கோட்டையும் வேட்டுவ அரசர்களால் கட்டப்பட்ட கோட்டைகள் என்பதை அறிந்தோம்.

அத்திக்கடவு வனப்பகுதியை ஆண்ட வேட்டுவ மன்னன் அத்தி எனப்பட்டான். மேற்கு தொடர்ச்சிமலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை ஆண்ட அத்தி, கங்கன், கட்டி வல்வில், புன்துறை போன்றவர்கள் சங்ககாலத்தில் கொங்கை ஆண்ட வேட்டுவ மலை மன்னர்கள் தான். இவர்கள் சங்க காலத்தில் கொங்கை ஆண்ட இரும்பொறை எனும் சேர மன்னர்களுக்கு உற்ற துணையாகவும் படைத்தளபதியாகவும் சிறந்து விளங்கினார்கள் இதை சங்க பாடல்

**“நன்னன் ஏற்றை, நறும்பூண் அத்தி**
**துன்னருங் கருத்திறற் ‘கங்கன்’ கட்டி**
**வல்வில் புன்துறை என்றாங்கு”**

சோழன் பெரும்பூண் சென்னி புன்னாட்டை வயப்படுத்த அவனுடைய தானைத் தலைவன் பழையனை அனுப்பினான். அவன் புன்னாட்டின் தலைநகர் கட்டூரை நெருங்கியதும் இளஞ்சேரல் இரும்பொறைக்கு கீழடங்கிய நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி, துன்னருங் கருத்திறற் கங்கன், கட்டி, வல்வில் புன்துறை ஆகிய சிற்றரசர் ஒன்று கூடி பழையனை போர்க்களத்தில் உயிர் நீக்கினார்கள்.

## மோக்காளி வேட்டுவர்

வேட்டுவருள் 400க்கு மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன, இவற்றுள் மோக்காளி வேட்டுவர் குறிப்பிடத்தக்கவர்

இவர்கள் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் உள்ள காளியை வணங்கியதால் மோகனூர் காளி என பெயர் பெற்று நாளடைவில் மோக்காளி என அழைக்கப்பட்டதாக கூறப்பட்டது. முதற்காளி எனும் பெயரை மோக்காளி என மருவியது எனக் கூறுவாரும் உண்டு. இவர்களது பூர்வீகம் வாழவந்தி நாடு ஆகும்.

தென்னிலை சிறுத்தலை வேட்டுவர் மோக்காளி வேட்டுவனுக்குத் தனது வெள்ளைப் பெண் தேவியம்மாவை மணம் செய்து கொடுத்த ஒரு வரலாறு உண்டு.

மோகனூர் காளியம்மன், நவலடியான், தென்னிலையில் உள்ள சிவகாமியம்மை, தேவி பொன்னீலியம்மன், தேவேந்திர ஈஸ்வரர், சின்னதாராபுரத்தில் எழுந்தருளியுள்ள அகிலாண்டேஸ்வரி, முனி முத்தீஸ்வரர் ஆகியோர் மோக்காளி வேட்டுவரது குலதெய்வங்கள் ஆகும். மோகனூர் நவலடியானை கொங்கு வேளாளரும் வழிபடுகின்றனர் ஒரு சமயம் வெள்ளாளருக்கும் வேட்டுவர்க்கும் இடையே சிறு தகராறு ஏற்பட்டதால் வேட்டுவர்கள் மோகனூருக்கு விரும்பிச் செல்வதில்லை.

சிலர் தேவியம்மன் தளிக்கோட்டை புடவைத் தெய்வம், பிள்ளை தெய்வம், ஆகியோரையும் வழிபடுகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் உள்ள தென்னிலை, கரூர், பசுபதிபாளையம், அரிக்காரம் பாளையம் (தென்னிலை அருகே) வெள்ளியனை அருகில் உள்ள துறையூர், பச்சப்பட்டி, காட்டுப்பாளையம் மலப்பாளையம், மலையம் பாளையம், கக்கராம்பட்டி (திருவெஞ்சமாகூடல் அருகில்) மலையூர், பிச்சம்பட்டி, தாளப்பட்டி, செம்மாண்டம் பாளையம், தளிக்கோட்டை, காட்டுப்பாளையம், சின்ன தாராபுரம், அருகில் வெங்கடாபுரம் எனும் - 64 ஊர்களில் மோக்காளி குலத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புலிப்பட்டி, கல்லுப்பட்டி, நாரப்ப நாயக்கன்பட்டி, கோவிந்தாபுரம், சத்திரப்பட்டி, கன்னிவாடி, குளபுதுப்பட்டி, ஆர். டி புதுக்கோட்டை, நாலு புலிக்கோட்டை, கே. அணைப்பட்டி, வி. சிங்காரப்பேட்டை, பாடியூர், வடமதுரை, பி. என். கல்லுப்பட்டி, குளிப்பட்டி, பாகநத்தம், மலைப்பட்டி ஆகிய ஊர்களிலும் இவர்கள் வாழ்கின்றனர்.

வேட்டுவ வரலாற்றில் தென்னிலைக்கு சிறந்தோர் இடமுண்டு, தென்னிலை பட்டக்காரரின் தலைமையிடம் தென்னிலை தென்னிலையில் வேட்டுவர் கோட்டை கட்டி ஆண்டனர். தென்னிலை பட்டக்காரரின் குலதெய்வம் பொன்னீயம்மன் இவருக்கு சின்ன தாராபுரம் அகிலாண்டேஸ்வரி கோயிலில் முதல் உரிமை உண்டு. இப்பகுதிகளில் வேட்டுவர் படைவீரர்களாக பணிபுரிந்தனர், எனவே வேட்டுவர் விழாக் கொண்டாடும் உரிமையைப் பெற்றனர்.

தென்னிலை ஒரு பெரிய கிராமம் எனவே இது கீழ்பாகம், மேல்பாகம், தென்பாவும் என்று மூன்று தனித்தனி கிராமங்களாக பிரிக்கப்பட்டு மூன்று ஊராட்சிகள் செயல்படுகின்றன. கீழ்பாக்கம் மலையம்பாளையம் (பி. டி. தேவன கவுண்டரின் இருப்பிடம்) இங்கே வசிப்பவர்களுக்கு தளிக்கோட்டையில் எழுந்தருளியுள்ள தேவியண்ணசாமியே குலதெய்வம், காட்டுப்பாளையம் தளிக்கோட்டை ஆகியவை இதன் அருகில் உள்ளன. தென்னிலை நீலியம்மன் வேட்டுவருக்கு உரிமையுள்ள குலதெய்வம் ஆகும். வேட்டுவருக்கு இக்கோயிலில் முதல் உரிமை உண்டு. இரண்டாவது முதன்மை சிறுதலை வேட்டுவருக்கும், வெள்ளாளர் இன பெருங்குடியினருக்கு மூன்றாவது உரிமையும், நான்காவது உரிமை சோழிய வெள்ளாளர்க்கும் உண்டு.

தென்னிலை செப்பேடு வேட்டுவரின் சாதனையை கூறும் செப்பேடுகளில் ஒன்றாகும். இச்செப்பேடு தென்னிலை பட்டக்காரர் எம்.ஏ. பகவதிக் கவுண்டரிடம் இருந்தது ஒக்கிலியர் முதலான பகைவர்களை வேட்டுவர் வெட்டி முடுக்கியதால் இச்செப்பேடு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

– (வரலாற்று சிற்பி பேராசிரியர் தங்கமணி, கரூர்.)

## வடகொங்கை ஆண்ட வேட்டுவ ராசாக்கள்

### கொங்குவைச் சேரர்கள் கைப்பற்றியது

"பழங்கொங்கு நாட்டை சிற்றரசர்கள் அரசாண்டார்கள் அக்காலத்தில் அந்நாட்டில் பேரரசர் இல்லை என்றும் அறிந்தோம். கொங்கு நாட்டின் சுற்றுப்புறங்களில் இருந்த சேர, சோழ, பாண்டியர் கொங்கு சிற்றரசர்களை வென்று அந்நாட்டைத் தங்கள் இராஜ்ஜியத்துடன் சேர்த்துக் கொள்ள கருதி அவர்கள் தனித்தனியாக படை எடுத்து வந்து கொங்கு நாட்டில் போர் செய்தார்கள். கொங்கு நாட்டரசர்கள் தங்கள் நாட்டை எளிதில் விட்டு விடவில்லை, படையெடுத்து வந்த அரசர்களோடு அவர்கள் கடுமையாக போர் செய்து எதிர்த்தார்கள். இவ்வாறு பல காலமாகக் கொங்கு வடநாட்டில் போர்கள் நடந்தன. கடைசியாக சேர அரசே கி.மு. முதல் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கொங்கு நாட்டின் தென் பகுதியில் சில ஊர்களைக் கைப்பற்றினார்கள்.

பாலைக்காட்டுக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டில் வந்து சேர அரசர் யானைமலை காடுகளை முதலில் கைப்பற்றினார்கள். யானைமலை பிரதேசத்திற்கு அக்காலத்தில் உம்பல் காடு என்று பெயர் இருந்தது (உம்பல் - யானை) அங்கு பல ஊர்கள் இருந்தன, சேர மன்னர் கொங்கு நாட்டில் கால் ஊன்றுவதை கண்ட சோழ அரசர்களும், பாண்டிய மன்னர்களும் சும்மா இருக்கவில்லை, சேரர்களுக்கு

எதிராக அவர்கள் போர் செய்து அவர்களின் ஆதிக்கத்தை தடுத்தார்கள். அவர்கள் கொங்கு சிற்றரசர்களுக்கு உதவியாக இருந்து சேர அரசர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தார்கள், இதன் காரணமாக சேர மன்னர்கள் கொங்கு நாட்டை எளிதில் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் விடாமுயற்சியோடு போர் செய்து கொங்கு நாட்டில் சிறிது சிறிதாக சேர அரசர்கள் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள்.

- (பக்கம்: 58, 59 கொங்கு நாட்டு வரலாறு,
மயிலை சீனி வேங்கடசாமி)




## புன்னாடு

வட கொங்கை ஆண்ட வேட்டுவராசாக்களில் புன்னாடு வல்வில் புன்துறை புகழ்மிக்கவன் ஆவான். அது சங்க காலத்தில் வட கொங்கு நாட்டில் இருந்தது. சங்க காலத்தில் புன்னாடைச் சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். இதன் தலைநகர் கட்டூர் கபினி

ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. கபினி ஆறு கப்பினி என்று அழைக்கப்படுகிறது. இப்புனனாடு இன்று மைசூர் இராஜ்யத்தின் தெற்கில் ஹெக்கட தேவன் தாலுக்காவில் உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் கபினி உண்டாகி கிழக்கு பக்கமாகப் பாய்ந்து காவிரி ஆற்றில் இணைகிறது.

கபினி ஆற்றங்கரையில் அமைந்த புன்னாட்டின் தலைநகர் கட்டூர், கிட்டூர் ஆகிய பின்பு கீர்த்திபுரம் ஆனது. ஒருவகை நீலக்கல் உலகப் புகழ் பெற்றிருந்தது, நவரத்தினங்களில் ஒன்றான நீலக்கல் அக்காலத்தில் புன்னாட்டு சுரங்கங்களில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டது. புன்னாட்டில் மட்டும் கிடைத்த ஒரு அரிய வகை கல் ஆகும். இக்கற்களை உரோமாபுரி மக்களால் விரும்பி வாங்கப்பட்டது. யவன வாணிகர்கள் சேர நாட்டு மிளகை தங்கத்திற்கு பண்டமாற்று செய்தனர். நீலக் கற்களையும், பாண்டிய நாட்டு முத்துக்களையும் வாங்கிச் சென்றனர். தாலமியின் பூகோள நூலில் புன்னாட்டை பௌவுன்னட (Pounnata) என்று குறிப்பிட்டுள்ளார். நீலக்கல் (Beryl) கிடைத்த புன்னாடு கிரேக்க மொழி திரிப்பால் பொவுன்னட என்று அழைக்கப்பட்டது.

நவ மணிகளும் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் கிடைத்தன. எனவேதான் இலக்கியங்களில் மணிமேகலை, மணிமண்டபம், மனோன்மணி, மணிகண்டன் என்ற பெயர்கள் தோன்றின.

தமிழ் மொழி, துளு, மலையாளம், கன்னடம், தெலுங்கு என மொழிபெயர் தேயத்தில் பிரிந்து துளுவர், மலையாளிகள், கன்னடர், தெலுங்கர் என்று அந்நாட்டு மக்கள் அழைக்கப் பட்டனர். தமிழில் இருந்து கன்னடம் பிரிந்தது பின் தெலுங்கு பிறந்தது கன்னடர் மற்றும் தெலுங்கர் வடுகர் என்றும் வடுக தேசத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர். களப்பிரர் என்பவர்கள் கன்னட வேட்டுவர்கள் ஆவர். பல்லவர் என்பவர்கள் ஆந்திரா வேட்டுவர்கள் ஆவர். வேட்டுவர்கள் என்பவர்கள் போர் தொழில் (கொலை தொழில்) செய்தவர்கள் ஆவர். போர்

தொழில் செய்த வேட்டுவ அரசர்களே கொங்கு நாட்டில் கொங்கு வேளீர் என்றும் அழைக்கப்பட்டனர்.

## வல்வில் புன்துறை

புன்னாட்டை ஆண்ட வேட்டுவ வேளிர்களில் (குறுநில மன்னர்கள்) புகழ்பெற்ற வேள் வல்வில் புன்துறை ஆவான். இந்நாட்டை ஆண்ட வேட்டுவர்கள் புன்ன வேட்டுவ இனக்குழுவில் தோன்றியவர்கள் ஆவர். இவர்கள் கருவூரின் அருகில் புன்னம் சத்திரம் பகுதியில் வாழ்ந்தனர் என்பதற்கு கருவூர் கோயிலில் உள்ள கல்வெட்டு புன்னத்து வேட்டுவர் பற்றி கூறுகிறது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் புன்னம் பகுதியில் உள்ள வேட்டுவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் புன்னம் வேட்டுவ கவுண்டர்கள் என்ற தனிப்பிரிவை ஏற்படுத்தி சட்டரீதியாகப் பல அடக்கு முறைகளைக் கொண்டு வந்தனர். வேட்டுவ இனக் குழுக்களில் புன்ன வேட்டுவர் என்ற இனக்குழு இருப்பதை மறுக்க முடியாது. மணலூர் நாட்டு 18 பங்காளிகளில் புன்னகுடி (புன்னாடி) வேட்டுவரும் ஒருவர் உண்டு என்று மணநாடு (மணலூர் நாடு) மெக்கென்சி ஆவணம் (எண்: டி 3139) கூறுகிறது.

**"முன்னைகுலன் முசட்டைகுலன் முனைகுலன் மோக்காளி**
**புன்னை குலன் மச்சாடி மும்முடி குலன் அன்னைகுலன்"**
**- என்று வேட்டுவர்கள் பற்றி கலிவெண்பா கூறுகிறது.**

## துளுநாட்டு நன்னன்

நீலக்கல் வாணிகத்தினால் மிகச்சிறந்த வருமானம் புன்னாட்டு மக்களுக்கு கிடைத்தது. இப்புன்னத்திற்கு மேற்கில் இருந்த துளு நாட்டை சேரர்களின் கிளை மரபினரான நன்னன் மரபினர்கள் ஆண்டு வந்தனர். புன்னாட்டில் நீலக்கல் வாணிபம் மிகச் சிறப்பாக நடைபெற்றதால் நன்னன் புன்னாட்டை தன் வசப்படுத்த எண்ணி அதன் மீது படையெடுத்தான். சங்க காலத்தில் நன்னன் என்ற பெயரில் பல மன்னர்கள் இருந்தனர்.

வேணாட்டு வெளியன் வேண்மான் ஆய் எயினன் களங்காய் கன்னி நார்முடி சேரல் புன்னாட்டு அரசனுக்கு உதவி செய்ய தன்னுடைய சேனைத்தலைவன் வேணாட்டு வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பவரை அனுப்பினான். ஆய் எயினன் நன்னனுடைய துளு நாட்டின் மீது படையெடுத்த பொழுது நன்னனுடைய சேனாதிபதியான மிஞிலி என்பவன் ஆய் எயினனை பாழிப் பறந்தலை என்னும் இடத்தில் இறந்து போகச் செய்தான்.

**"வெளியன் வேண்மான் அ ஆ யெயினன்**
**அளியியல் வாழ்க்கை பாழிப் பறந்தலை**
**இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு**
**நண்பகல் உற்ற செருவிற் புண் கூர்ந்து**
**ஒள்வாள் மயங்கர் வீழ்ந்தென" - (அகம். 208: 5-9)**

## புன்னாட்டின் மீது சோழர் போர்:

காவேரிக்கரையில் போர் என்னும் ஊரில் வாழ்ந்த பழையன் பரம்பரையினர் சோழரின் படைத்தலைவராக பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தனர். (அகம். 326: 9 -12)

## சோழன் பெரும் பூண் சென்னி

பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டில் இருந்த காமூர் கொல்லி கூற்றம் தகடூர் நாடு இவைகளை வென்று தன் நாட்டுடன் இணைத்ததைப் போல இளஞ் சேரல் இருபொறை தன் ஆட்சிக்கு உட்படாமல் இருந்த 'வடகொங்கு நாடுகளை வென்று தன் ஆட்சியுடன் இணைக்க விரும்பினான்" நீலக்கல், கோமேதகம் நிரம்பிக் கிடக்கும் புன்னாட்டின் மீது படையெடுத்து அதை கைப்பற்றினான். சோழன் பெரும்பூண் சென்னி இளஞ்சேரல் இரும்பொறை கைப்பற்றிய புன்னாட்டை வயப்படுத்த அந்நாட்டின் மீது போர் தொடுக்க தன் தானைத் தலைவன் பழையனை அனுப்பினான்.

இளஞ்சேறல் இரும்பொறைக்குக் கீழ் அடங்கிய "நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, வல்வில், புன்துறை" ஆகிய சிற்றரசர்கள் ஒன்று கூடிப்பழை யனை எதிர்த்துப் போரிட்டனர். இப்போரில் பழையயன் போர்க் களத்திலேயே உயிரிழந்தான் சோழன் தோல்வி அடைந்தான் தோல்வியுற்ற சோழன் இளஞ்சேரல் இரும்பொறைக்கு உட்பட்ட கொங்கு நாட்டில் இருந்த கழுமம் என்னும் இடத்தைத் தாக்கி அதை காத்து நின்ற கணையணையும் சிறை பிடித்துச் சென்றான்.

இந்தச் செய்தி அறிந்த இளஞ்சேரல் இரும்பொறை பெரும்படையுடன் சென்று சோழனை தோற்கடித்து கணையனை மீட்டான். இப்போரில் தோற்ற சோழ படைகள் போட்டுவிட்டு ஓடிய வேல்கள் இளஞ்சேரல் இரும்பொறையின் பாட்டன் செல்வக் கடுங்கோ வாழி ஆதன் கபிலருக்கு பரிசாக கொடுத்த ஊர்களை விட அதிகமானவை என்று பெருங்குன்ற த்தூர் கிழார் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

## விச்சிப்போர்

புன்னாடு வெற்றிக்கு பின் இளஞ்சேரல் இரும்பொறை வடகொங்கு நாட்டிலிருந்த விச்சிக்கோவின் விச்சியூர் மீது போர் தொடுத்ததை அறிந்த சோழ, பாண்டிய வேந்தர்கள் தங்களது படைகளை விச்சிகோவுக்கு உதவ அனுப்பி வைத்தனர். இளஞ்சேறல் இரும்பொறை சோழ, பாண்டிய வேந்தர்களின் படைகளையும் விச்சிக்கோவையும் தோற்கடித்து விச்சி நாட்டை தன் ஆட்சிக்குள் அடங்கச் செய்தான்.

கிபி 5 - ம் நூற்றாண்டு வரையில் புன்னாட்டு அரச பரம்பரையினர் ஆன புன்ன வேட்டுவ வேளிர்கள் புன்னாட்டை ஆண்டு வந்தனர். ஸ்கந்தவர்மன் என்னும் புன்னாட்டு அரசனுக்கு ஆண்மகன் இல்லாத படியால் அவனது ஒரே மகளை கங்க மன்னனான துர்வினிதன் (அவனிதனுடைய மகன்) மணம் புரிந்து கொண்டான். துர்வினிதன் கி.பி. 482 முதல் கி.பி. 517 வரை கங்க நாட்டை அரசாட்சி செய்தான். இவன் புன்னாட்டை

தன் கங்க இராட்ச்சியத்தோடு இணைத்துக் கொண்டான். (Mysore and Goorg from inscriptions by B. Lcuies Rice 1909) பின்பு இப்புன்னாட்டின் வேட்டுவர் படைகளை களப்பிரர்களுடன் போர் செய்ய மூவேந்தர்களும் இவர்களை கரூவூர் அழைத்துச் சென்றனர்.

**"நன்னன் ஏற்றை நறும் பூண் அத்தி**
**துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி**
**பொன்னணி வல்வில் புன்துறை என்றாங்கு**
**அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்**
**பருந்து படப் பண்ணிப் பழையன் பட்டென". - (அகம் 44: 7-11)**

## அத்திகடவு

நீலமலையின் முகட்டில் தோன்றும் வானியாறு நிலம் தொட்டு தமிழகத்தின் அத்திக்கடவு வனப்பகுதியை அடைகிறது. கூடல் பட்டி என்ற இடத்தில் சிறுவானியாறும் கொடுங்கரைப்பள்ள ஓடையும் வானியாற்றுடன் கூடுகிறது. இருளர்களின் குடியிருப்பும் இங்கு உண்டு. இங்கு தமிழகத்தின் வனப்பகுதி தொடங்கிறது. இங்கிருந்து வானியாறு அத்தி கடவு வனப்பகுதிக்குச் சென்று பில்லூர் அணையை நிரப்புகிறது. இங்கு அத்தி, மத்தி. ஆல், நாவல், வேலம் மரங்கள் வானியாற்றின் இரு கரைகளிலும் வளர்ந்து ஓங்கியுள்ளது. இன்றும் தமிழர்கள் வாழும் ஊரின் பெயர்களில் தமிழ் மணம் வீசுகின்றன. இவர்களின் ஒத்துழைப்பால் கேரள அரசின் பாதகமுயற்சிகள் தடுக்கப்படுவது சற்று நிம்மதி அளிக்கின்றன. அத்திகடவு பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகம் உண்டு.

பில்லூர் அணையின் நீர் மின் நிலையத்தில் தேக்கப்படும் நீரானது கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்கு தேவைப்படும் குடிநீரை பல குடி நீர்த்திட்டங்களால் வழங்குகின்றனர். நெல்லித்துறையில் பில்லூர் அணையிலிருந்து வழியும் வானி ஆறு நிலப்பகுதியை அடைகிறது. இவ்வாற்றங்கரையில் உள்ள

கொற்றவை கோயில் மேட்டுப்பாளையம் வனபத்ரகாளி என்ற பெயரில் புகழ்பெற்று விளங்குகிறது.

## சேர வேட்டுவ இளவரசன் ஆட்டன் அத்தி

“பதிற்று பத்தினுள் ஏழாம்பத்தில் பதிகத்தில் குறிப்பிடப் பெறும் ‘நன்றா’ என்னும் குன்று பவானியின் அருகே வடக்கே உள்ள ஊராட்சிக்கோட்டை மலையாகும். சேர இளவசன் ஆட்டன் அத்தியும் சோழர் குலக்கொடி ஆதிமந்தியும் நீர் விழாவிற்கு வந்து கலந்து கொண்ட ‘கழார்’ நீர்த்துறை பவானி கூடுதுறை தான் என்பது அறிஞர் தம் கருத்தாகும்.”
(‘கொங்கு ஏழு சிவத்திலங்கள்’. ஆசிரியர் - இறைவி MA, B.Ed)

‘தமிழர்வரலாறு’. புலவர் கா.கோவிந்தன, எம்.ஏ பக்கம்: 237 ஆட்டன் அத்தி + ஆதிமந்தி

## கரிகாலன்

சிலம்பு 21 ஆம் காதை 11 முதல் 15 வரையான வரிகள் கரிகாலன் மகள், அக்காலச் சேர அரசனை மணந்திருந்தான் எனத் தெளிவாக அறிவிக்கிறது.

**“மன்னன் கரிகால் வளவன் மகள், வஞ்சிக்கோன்**
**தன்னைப் புனல் கொள்ளத், தான் புனலின் பின்சென்று**
**கன்னவில், தோளாயோ என்னக் கடல் வந்து**
**முன்நிறுத்தித் காட்ட அவனைத் தழீ இக் கொண்டு**
**பொன்னங்கொடிபோலப் போதந்தாள்”**
**- (சிலம்பு - வஞ்சின மாலை:11-15)**

கரிகாலனின் இச்சேர மாப்பிள்ளையின் பெயர் ஆட்டன்அத்தி அவன் மனைவி ஆதிமந்தி.

காவிரியில் ஆட்டன் அத்தி நீராடி சாகசங்கள் செய்து கொண்டிருந்த பொழுது தாவிரியில் புதுவெள்ளம் வந்து

அடித்துச்செல்ல ஆதிமந்தி புனலின் பின் சென்று மீட்டாள் என்கிறது சிலம்பு. ஆட்டன் அத்தி சேர வம்சத்தவன் ஆவான். ஆதிமந்தி கரிகாலச்சோழனின் மகள் ஆவாள்.

இச்சேர மன்னன் ஆட்டன் அத்தியின் வம்சா, வழியில் வந்த அத்தி சேரனின் கிளை மரபினன் ஆவான். இவனை 'நன்னன, ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, ஏற்றை, நன்னன், வல்வில் புன்துறை' என்ற சங்கப்பாடலால் அறியப்படுகிறது. இக்குறு நில மன்னர்கள எல்லாம் கிழக்கு தொடர்ச்சி மலையை ஆண்ட வெற்பன்எனும் வடகொங்கு வேட்டுவ மன்னர்கள் ஆவார். (நற்றினை.36. குறிஞ்சி)

## ஏற்றை

**'குறுங்கை இரும்புலிக் கோன் வல் ஏற்றை'**
**- (நற்றிணை 36.1வது வரி)**

**'கல்லக வெற்பன் சொல்லின் தேறி'**
**- (நற்றிணை 36.4 வது வரி)**

வெற்பன் என்னும் சொல் குறுஞ்சியை ஆண்ட வேட்டுவ மன்னனை குறிக்கும்.

**"கோடல் கண்ணிக்குறவர் பெருமகன்"**
**- (புறநானூறு - 157)**

இவன் தன் நாட்டில் வாழும் குறவர்களைக் காப்பாற்றியதால் இளவெயினி இவனைக் குறவர் பெருமகன் என்றார். எயினன் என்பது பாலை நில வேட்டுவரையும் எயினி என்பது வேட்டுவச்சியையும் குறிக்கும் சொல் ஆகும்.

**"நன்னன் ஏற்றை, நறும்பூண் அத்தி**
**துன்னருங் கருந்திறற் கங்கன் கட்டி**
**பொன்னணி வல்வில் புன்துறை என்றாங்கு" - (அகம். 44)**

மறக்குடியில் பிறந்த சிறுவர்கள் விளையாடும் போது ஓடும் எலிமீது அம்பை எய்து விற்றொழில் கற்றுக்கொள்வார்கள்.

“வேட்டுவர் விரும்பும் சிறார்கள் வேல முள்ளை ஊகம்புல்லின் ஈர்க்கில் செருகிய அம்பினை வலாரால் செய்த வில்லை வளைத்தும் பருத்தி வேலியில் இருக்கும் எலி மீது குறிபார்த்து விடுவார்கள் (புறம்: 324)

வேந்தன் ஏவி விட்டபடி (வேந்து விடு தூது) வீரர்கள். அயலார் நிலத்திற்குப் போய்ப் பசுகளையும் எருதுகளையும் பிடித்துக்கொண்டு வருவார்கள் அதனால் வீரர்களைக் கள்வர் எனப்புலவர்கள் கூறினார்கள்.

எனவே "கன்வர்கோமான் "என வேங்கடத்தை ஆண்ட புல்லி (அகம் 64:11) அழைக்கப்பட்டான்.

**“வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்தோம்பல் மேவற்றாகும்.”**
**- (தொல்காப்பியம் - பொருளதிகாரம்-57)**

**“நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி**
**துன்னரும் கடுந்திறற் கங்கன் கட்டி**
**பொன்னணி வல்விற் புன்துறை யென்றாங்**
**கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்**
**பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்**
**கண்டது: நோனா னாகித் திண்டேர்க்**
**கணையன் அகப்படக் கழுமலந் தந்த**
**பிணையலங் கண்ணிப் பெரும் பூட் சென்னி” - (அகம் 44: 7 - 14)**

கங்கன் கோலாரில் (கோலார் தங்கவயல்) குவாலபுரம் (வடகொங்கில்) மன்னனாக இருந்து ஆட்சி செய்தவன் . கன்னடம் பேசும் மொழிபெயர் தேயத்து தமிழ் மன்னன் ஆவான். கட்டி என்பவன் தெலுங்கு பேசும் மொழிபெயர் தேயத்தின் வேங்கட மலையை அடுத்து ஆண்ட தமிழ் மன்னன் ஆவான். கொங்கின் கங்கில் ஆண்ட மன்னர்களைப் பொதுவாக கங்கர் என்று அழைக்கப்பட்டனர். பிறகாலங்களில் தமிழ்க் கங்கர் என்றும் கன்னட கங்கர் என்றும் அழைக்கப்பட்டனர்.



கொளத்தூர் தேரை வேட்டுவர் கொங்காண்டான் கல்:

## தேரை வேட்டுவ குலம்

**இடம்:** ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திற்கு வடக்கே 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொளத்தூர் கிராமத்தில் உள்ள நடுகல்.

காலம்: கி.பி. 1415 - 1475

## செய்தி

நடுகல்லின் பின்புறம் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நடுகல்லின் முன்புறம் ஒரு வீரன் புலியை குத்துவது போல் செதுக்கப்பட்டுள்ளது. வீரன் தலைமேல் கொண்டை

காணப்படுகிறது. கைகளிலும் கால்களிலும் காப்புகள் காணப்படுகிறது. வீரன் புலியின் வயிற்றில் ஈட்டியை குத்துவதை போல் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. தேரை வேட்டுவ குலத்தைச் சேர்ந்த கங்காண்டார் என்பவர் புலியோடு சண்டை செய்து இறந்ததற்கு எடுக்கப்பட்ட நடுகல் ஆகும். 15ஆம் நூற்றாண்டில் இருமுறை (1415-1475) மன்மத வருஷம் வருகிறது. எனவே இந்த கல்வெட்டு வெட்டப்பட்ட ஆண்டு இந்த இரண்டு ஆண்டுகளில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம்.

**கல்வெட்டு**

1. மன்மத வருசம்
2. மாசி மாதம் 11
3.குளத்தூர் தேரை
4. வேட்டுவரில்
5. கங்காண்டான்
6.கல்



1). சேர மன்னர்கள் - சங்க காலம்.

2). கங்கர் - இரட்டர் - கி.பி 9 ஆம் நூற்றாண்டு வரை.

3). சோழா (குறும்பர்) பாண்டியர் - கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை,

4). இடைக்கால சேரர்கள் - 10 ஆம் நூற்றாண்டு வரை
5). கொங்கு சோழர்கள் - 14 ஆம் நூற்றாண்டு வரை
6). கொங்கு பாண்டியர்கள் 14 ஆம் நூற்றாண்டு வரை
7). ஒய்சாளர்கள் - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு பிற்பகுதி
8). விசயநகர் - கி.பி. 16ஆம் நுற்றாண்டு
9). நாயக்கர்கள் கி.பி. 17 - 18 நூற்றாண்டு
10). பிரித்தானியர் கி.பி. 18 - 19 ஆம் நூற்றாண்டு

## இருக்கு வேளிர் (இருங்கோவேள்)

## துவரை (துவார சமுத்திரம்)

இவ்வூர் ஹளைபீடு (படைவீடு) என்று பெயர் பெற்று தெற்கு மைசூரில் உள்ளது. இப்பொழுதும் துவரையில் துவார சமுத்திரம் என்னும் பெரிய ஏரி இருக்கிறது. இங்கு அரையம் என்னும் ஊரில் இருங்கோவேள் அரச பரம்பரை யார்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்டு கொண்டிருந்தார்கள். அரையம் நகரில் சிற்றரையம் பேரரையம் என்று இருபிரிவுகள் இருந்தன.

பழங்காலத்தில் கோலார் தங்கவயல், மைசூர், பெங்களூர் (வெண்கல்லூர்) எல்லாம் வடகொங்கி லும் குடகொங்கிலும் இருந்த வேட்டுவ வேளிர்களின் ஊர்களாகும்.

கோலார் தங்கவயலும் பொன்படுமால் வரைக்கிழவ வெள் வேல் இருங்கோவேள் (இருக்குவேள்) ஆண்ட பொன் நிறைந்த மலையும் கொங்கர் எனும் கொங்கு வேட்டுவ வேளிர்கள் ஆண்ட பொன் விளைந்த பழங்கொங்கு நாட்டில் தான் இருந்தது.

**புறம் 201: பாரி மகளிர்க்குப் பார்த்த கணவன்**
**இவர் யார்? என்குவை ஆயின் இவரே**
**ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்**

**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர் யானே**
**கெடல் அரும் குரைய நாடு கிழ வோயே!**

என்னோடு வந்திருக்கும் இவர்கள் யார் என்று கேட்பாயானால், இவர்கள் - தனக்குச் சொந்தமாயிருந்த ஊர்களை எல்லாம் பாடிப்பரிசில் பெற வந்தவர்களுக்குத் தந்ததோடல்லாமல், தன்னுடைய தேரையும் கூட முல்லைக் கொடிக்குத் தந்து, அழியாப் புகழுடைய, மணி ஒலிக்கும் யானைகளுடைய பறம்பு மலைத் தலைவன் வேள்பாரியின் மகளிர் யான் இவர்களுடைய தந்தைக்கு நண்பன். இவர்கள் எனக்கும் மகளிர் போன்றவர், பாடிப் பரிசில் பெறும் புலவன-அந்தணன் நான். நீயோ வடதிசை முனிவன் வேள்விக் குண்டத்தில் தோன்றிய, செம்பால் செய்த உயர்ந்த நெடு மதில்களை உடைய துவாரபுரி என்னும் படை வீட்டை ஆண்ட வற்றாத கொடைவளம் மிக்க, நாற்பத்தொன்பது தலைமுறையாகத் தாளாது சிறந்து விளங்கும், வேளிர்களுள் எல்லாம் சிறந்த வேள், போர்வெல்ல, வெற்றிமாலை சூடிய யானை மீது ஏறி வரும் இருங்கோ வேளே! வீரர் தலைவனே! பாணர்க்கு உதவும் பண்பறிந்து வாழ்பவனே!

அழகிய தளிர்க் கண்ணிமாலை சூடிய புலிக்கடிமாலே நான் இங்கே அழைத்துவந்துள்ள - இந்தப்பாரி மகளிரை நான் உனக்குத்தர விரும்புகிறேன்.நீ ஏற்றுக் கொண்டருள வேண்டும். வானம் சுற்றி வளைத்துள்ள, கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் நெருங்க முடியாத வலிமை உடைய பொன் விளையும் மலைக்குத் தலைவனே! வெற்றி வேலேந்தியவனே! பகைவர் அஞ்சப்படை நடத்தும் குறையாத வள நரட்டுக்கு உரிமை உடையவனே! இவர்களை ஏற்றுக் கொள். (மணம்புரிந்து கொள்ள வேண்டும்) இருங்கோவேளைக் கபிலர் பாடிய பாடலின் திணையும் துறையும் - பாடாண்திணை, பரிசில்துறை. துவரை- இன்று மைசூர் நாட்டில் உள்ள நகரம் ஆகும். பு லி மாய் என்ற ஆந்திர சாதவாகன வேந்தனை வென்ற

இருங்கோவேள் புலிகடிமால் என்று போற்ற ப்பட்டனன். இவன் வழி வந்தோர் இன்றைய புதுக்கோட்டைப் பகுதிகளில் வாழ்ந்தனர் என்பது கல்வெட்டு வரலாறு.

## பாண்டியர் போர்

தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் எனும் பாண்டியன் நன் மாறனுக்குப் பின் அரசுக்கட்டில் ஏறியவன். இவன் மாங்குடி மருதனாரிடம் முறைப்படி தமிழ் பயின்றான். தன்னை எதிர்த்துப் போரிட்ட சோழனையும், சேரனையும் அவர்களுக்குத் துணையாக. வந்த திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் ஆகிய ஐந்து அரசர்களையும் தலையாலங்கானம் என்னும் ஊரில் நடந்த போரில் வென்று "தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆனான்" என்று பாண்டியர் வரலாறு கூறுகிறது. மாங்குடி மருதனார், 'மதுரைக் காஞ்சி' பாடினார். நக்கீரர், இடைக் குன்றூ கிழார், கல்லாடனார், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் ஆகியோர் இவன் வெற்றியை பாடியுள்ளனர்.

தலையாலங்கானத்தில் தோல்வி அடைந்த சோழன் தனக்குத் துணை நின்ற இருங்கோவேளை சோழர்களுக்கு உட்பட்ட கோனாடுப் பகுதியை ஆள அனுமதித்தான். இருக்குவேள் எனும் ரிக்கு வேளிர்கள் கோனாட்டை ஆண்டுவந்தனர். கொங்கு சோழரும் கொங்கு பாண்டியரும் வேட்டுவ புத்திர வரத்தினரே ஆவார்கள்.

## இருகொங்கையும் ஆண்ட வேட்டுவர்கள்

கி.பி. 957 முதல் கொங்கு நாட்டின் வடபகுதி (வடகொங்கு) மகிமாலய இருக்கு வேளின் ஆட்சியின் கீழ் இருந்தது. தென்கொங்கு மட்டும் சேரமான் பெருமாள் மரபினரின் ஆட்சின் கீழ் இருந்தது. "பாண்டியர்களுக்கும்,

கோநாட்டரசர்களுக்கும் இடையில் மனைவினை உறவு ஏற்பட்டுள்ளது. அதுவும் பாண்டியரில் ஒரு பிரிவினருடன் இவ்வுறவு இருந்துள்ளது. இருகொங்கை யும் ஆண்ட கொங்க வேந்தர்களுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுகளை நசுக்குவதற்கு பாண் டிய மன்னன் ஒருவன் கொங்கு அரசியலில் தலையிட்டான். இரு மன்னர்களையும் அன்புடன் சிறையில் வைத்திருந்தான் என்று சாசனங்கள் கூறும். கோநாட்டரசன் பாண்டியர் மனை வினை உறவு கோநாட்டரசர்களின் இறுதி நாட்கள் வரை நிலை பெற்றிருந்தது. திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று விக்கிரம சோழனைப் பாண்டியன் மைத்துனன் என்று கூறுகின்றது, இவனுக்குப் பின் சந்ததி இல்லாமையால் பாண்டியாகள் நிருவாகத்தை மேற்கொண்டனர். என்று கருத வாய்ப்புண்டு. அவ்வூரில் வீரபாண்டியன் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன அவற்றில் ஊர்தானமும், வரி பற்றிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன".

(பக்கம்: 19 - 20 மற்றும் 27, "ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையடு" பதிப்பாசிரியர்.தி. ஸ்ரீ ஸ்ரீதர். ஐ.ஹ.ளு. ஆசிரியர், பெ. கௌதமபுத்திரன்)

பாரி மகளிரை இருங்கோவேள் ஏற்கமறுத்த நிலையில் மனம் நொந்த கபிலர் பாடிய பாடல். பாடாணதிணை, பரிசில் துரை

**வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்**
**கட்சிக் கானத்துக் கடமா நல்ஏறு**
**கடறு மணி கிளரச் சிதறுபொன் மிளிரக்**
**கடிய கதழும் நெடுவரைப் படப்பை**
**வென்றி நிலை இய விழுப்புகழ் ஒன்றி**
**பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே - புறம்: 202**

வெட்சிக் கொடி படர்ந்த காட்டில் வேட்டுவர்கள் விரட்ட புகலிடம் தேடி அலையும் கடமான் மணிஒலி. எழுவவும், பொன்துகள் சிதறவும் விரைந்தோடும் மலைச் சாரலில் இருபக்கமும், சிற்றரையம், பேரரையம் என்று இருபிரிவாக இருக்கும் புகழ் பெற்ற மூதூரில் கோடி கோடியாகக் குவித்த பொருட்களை உங்களுக்குத் தந்து தவிய நிலைத்த பெரும் செல்வம் அழிந்ததன் காரணம், தன் செல்வத்தோடு உன்னுடைய தந்தையால் உரிமையோடு தரப்பட்ட பொருளையும் பெற்றிருந்த இளந்தளிர் மாலை அணிந்த புலிகடிமாலே! உன்னைப் போன்ற அறிவுள்ள உன் முன்னோர்களில் ஒருவன். கழா அத்தலையர் என்னும் புலவரை அவமதித்ததன் பயன் என்பதை அறிவாயாக!, அலங்கரிக்கப்பட்ட தேருடைய தலைவனே! இவர்கள் வள்ளல் பாரி மகளிர் உயர் குடியில் பிறந்தவர்கள் என்று நான் சொன்ன மொழி பொருள் பொறுப்பாயாக! வேள் பெருமானே! நான் விடைகொள்கிறேன். வெல்லும் வேலேந்தியவனே! வேங்கைமலர் பூத்திருக்கும் மலைச் சாரலில், பெரிய கரும் புலியினுடைய தோற்றத்தை ஒத்திருக்கும் மலை நாட்டுக்கு உரியவனே! வாழ்க! வாழ்க!

வெட்சிக் கொடி படர்ந்த வேட்டுவர்கள் வாழும் மலைச்சாரல்களை ஆளும் வேட்டுவ வேள் இந்த இருக்குவேள் என்பது கபிலரின் புறநானூற்று 201, 202 பாடல்களின் மூலம் அறியலாம. பாரிவேள் எனும் வேட்டுவ வேளிர் மகளிர்களை மணக்க வேண்டும் என்று கண்டீரக் கோப்பெரும் நள்ளி, விச்சிக கோ இருக்குவேள், மலையமான் திருமுடிக்காரி என்ற வேட்டு வேளிர்களை நாடும் அந்தணப் புலவர் கபிலரின் கருணையை தமிழ் உள்ள வரை நிலைத்து நின்று. வேட்டுவர்களின் வரலாறுகளைக் கூறிக்கொண்டு தான் இருக்கும். இந்த இருக்குவேள்பரம்பரை வட கொங்கு நாடுமுழுதும் ஆண்ட வேட்டுவப் பரம்பரை என்று பூலோகமே சொல்லும்.

இந்த இருக்குவேளிர் குடுமியான் மலையை ஆண்ட குடுமி வேட்டுவர் என அறியப்படுகிறது. இவர்கள்

புதுக்கோட்,டை, குடுமியான் மலை அடங்கிய கோனாட்டை ஆண்ட கோனாட்டார் என்று. அழைக்கப்பட்டனர், குடுமி வேட்டுவ குலத்தைச் சேர்ந்த மகி மாலய இருக்கு வேளிர் வம்சா வழியினர் வடகொங்கில் ஆட்சி புரிந்தனர்.

## குடுமி வேட்டுவர் கல் வெட்டுகள்

**இடம்:** திருப்பூர் மாவட்டம், தாராபுரம், குண்டடம் அமிர்தகாடேசுவரர் கோயில்.

**காலம்:** குலோத்துங்க சோழனின் பத்தாவது ஆட்சி ஆண்டு கி.பி.1159

**செய்தி:** குண்டோடத்தில் இருக்கும் குடுமி வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த இருங்கோளன் என்பவன் குறிப்பிடப்படுகிறான்

## கல்வெட்டு

| | |
|---|---|
| 1. ஸ்வஸ்தி ஸ்ரீகு | 2. லோ த்து |
| 3. ங்சோழ | 4. தேவர்க்கு |
| 5. இயாண் | 6. டுபத்தா |
| 7. வதுகுண் | 8. டோட்டத்தி |
| 9. ல் குடும்பரில் | 10. இருங்கோளன் |
| 11. ன்.....காவ | 12. ணா...யா... கெ |
| 13. கொங்க.... | 14. வார் மற்றுந் |
| 15. ருவன் இத்தி | 16. ருவாசல் திரு |
| 17. மண்டபத் | 18. துக்கு சந்தி |
| 19. யா தீபம் ஒன்றும் | 20. விடாமல் சந்திராதித்த வரை |
| 21.செலுத்தக்கட | 22. வோமாகவும் |
| 23. இது பன்மகேசுர | 24. ர் இரட்சை... |

**குடுமி வேட்டுவர் கல்வெட்டு** (S.l.l: Vol_V.No 278)

**இடம்:** திண்டுக்கல் மாவட்டம் பழனிவட்டம், கீரனூர் வாகீசுரமுடையார் கோயில்

**காலம்:** வீரராசேந்திர சோழனின் 10 - வது ஆட்சி ஆண்டு கி.பி. 1217

**செய்தி;** கீரனூர் குடுமரில் ன்அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளன்

**கல்வைட்டு**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வீரராஜேந்திர தேவர்குயாண்டு பத்தாவது பொங்கலூற்கா நாட்டு
2. கீரனூர் குடுமரில் சுந்தன் அதிசிய சோழனான குலோந்துங்க சோழ இருங்கோ
3. னனேன் இந்நாயனார் திரு வாகிஸ்வரமுடையார்க்கு நட்டு வெப்புறத்துக்கு வி
4. ட்ட நீர் நிலமாவதுக்கு நான் கெல்லையாவது என்நிலத்து.....
5. குளத்தில் மெத்தலை ஏரிக்கு மேற்கும் கீழ் மேல் ப
6. ழா் வாய்க்காலுக்கு தெற்கும் ஆக
7. நெல் விதை இருகலமும் நட்டுவ புற
8. மாக இட்டுக் குடுத்தேன் சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்
9. கோளனேன் சந்திராதித்த வற் இந்நிலம் இடனை மாராய
10. னுக்கு பன்ம கேசுவர ரட்சை.

**உலகடம்**

அந்தியூர் வடகரை நாட்டில் உள்ள உலகடம் பழமையான ஊராகும், இவ்வூரில் உலகேசுவரர் கோயில் மாரியம்மன் கோயில் வரலாற்று சின்னங்களாக உள்ளது..

இவ்வூரில் நிலைக் கல்லில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சரர்ந்த கொங்கு சோழர் காலத்து வேட்டுவர் கல்வெட்டுகள் உள்ளன.

### பட்லூர்

அந்தியூர் வடகரை நாட்டில் உள்ள படலூரில் வரலாற்றுச் சின்னமாக சௌந்தர நாயகியுடன் வாகிஸ்வரர் காட்சி தரும் கோயில் உள்ளது. இக் கோயில்களில் கொங்குச் சோழர், கொங்கு பாண்டியர் காலத்து வேட்டுவர் கல்வெட்டுகள் பல்வேறு செய்திகளை தெரிவிக்கின்றன.

## கொங்குச்சோழர்

### வடகொங்கு

கொங்கு சோழர்கள் ஆட்சி கொங்கு நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் நிலைத்திருந்தது. வடகொங்கு என்று அழைக்கப் பெற்ற ஈரோடு மாவட்டப் பகுதியை அவர்கள் ஆண்டார்கள்.

### தென்கொங்கு

கோவை மாவட்டத்தில் சேரர்,வீரகேரளர் செல்வாக்கு மிகுந்திருந்தது. வீரகேரளர்கள் கேரள நாட்டைச் சேர்ந்த சேர மன்னர்களின் கீழ் ஆண்ட சிற்றரசர்கள். இம் மன்னர்களுடைய கல்வட்டுகள் பழனி, பேரூர், வெள்ளலூர, ஆனை மலை போன்ற பகுதிகளில் கிடைக்கின்றன. ஆனைமலை பகுதியிலும் இம்மன்னர்களின் கல்வெட்டு மிகுதியும் உண்டு இவர்கள் கி.பி.12 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை தென் கொங்கினை ஆண்டுளளார்கள். பின்னர் கொங்குச் சோழர்களால் தோற்கடிக்கப் பெற்று வரலாற்றுத் திரையிலிருந்து மறைந்தொழிந்தார்கள். வடகொங்கு என்று அழைக்கப்பெற்ற பகுதி இன்றைய ஈரோடு மாவட்டம், பழனி வட்டம், கரூர் வட்டத்தின் மேல பகுதி ஆகும். வடகொங்கில் கொங்குச் சோழர்

ஆட்சியில் நிலை பெற்றிருந்தது. ஈரோடு மாவட்டத்திலும் பழனி கரூர் வட்டங்களிலும் அவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. வடபாரி சார நாடு கோவை மாவட்டத்தில் அவினாசி வட்டத்தையும், கோவை வட்டத்தின் வட பகுதியையும் பெற்றிருந்தது. இந்தப் பகுதியைக் கொங்குச் சோழர் கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனர்.

## கிழக்கு கொங்கு

தஞ்சைச்சோழர்கள் காலத்தில் கொங்கு நாட்டிற்கு அதிராஜ ராஜ மண்டலம் எனவும் சோழ கேரள மண்டலம் எனவும் பெயர் வழங்கப்பபடதாகக் கூறுவர். ஆனால் இவ்விரண்டு பெயர்களும் சோழநாட்டை ஒட்டியுள்ள கரூர் உள்ளிட்ட கிழக்கு கொங்குநாடு மட்டும் சில காலங்களில் தஞ்சைச் சோழர்களின் ஆட்சியின் கீழ் வந்த போது அப்பகுதிகளுக்கு மட்டுமே இடப்பட்ட பெயராகும்.

## கொங்குச்சோழர் வழிமுறை

கொங்குச்சோழ அரசர்களின் வரிசைமுறை பற்றி வரலாற்றாய்வாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக் கின்றனர். கோவைகிழார் கொங்குச் சோழரின் முதல் அரசன் கோக்கலி மூர்க்க விக்கிரம சோழன் என்பார்.

அவினாசி வட்டத்தில் உள்ள சமணர் கோயிலில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று "வீரசோழப் பெரு மானடிகள்" என்று தொடங்குகின்றது.

கே. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கலி மூர்கன் என்ற பெயர் விருது பெயர் என்று கருதுகின்றார். ஆனால் கே.வி.சுப்பிரமணிய அய்யர் கருதுவது வரலாற்றுப் பொருத்தமுடையது காரணம் கலிமூர்க்க விக்கிர சோழன் என்பதில் உள்ள முதல் பெயர் கலிமூர்க்கன் என்பது மகன் பெயராகவும் கொள்ளலாம்.

வள்ளியெறிச்சல் என்ற ஊரில் உள்ள கோயில் கல்வெட்டு கலி மூர்க்கப் பெருமாள் என்று கூறுகிறது (Damulica vol.1. P.23). ஆகையால் கொங்கு சோழர் அரச மரபில் கலிமூர்க்கப் பெருமாள் என்ற மன்னன் ஆண்டுள்ளான் என்பது உறுதிப்படுகின்றது. கொங்கில் கிடைக்கின்ற கல்வெட்டு ஆண்டு முறைப்படி வீரசோழன் 942 முதல் 980 வரையும், கலிமூர்க்க விக்கிரமசோழன் 1004 முதல் 1049 வரையும் ஆண்டுள்ளனர் ஆலத்தூர் என்ற ஊரில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று "ஸ்வஸ்தி ஸ்ரீ கோநாட்டான் வீரசோழப் பெருமானடிகளுக்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திரு நல்லியாண்டு முப்பத்தேழாவது" என்று தொடங்குகின்றது. (புவனேசுவரி க.அ. அன்னூர் வரலாறு பக்கம் 52). இக் கல்வெட்டு வட்டெழுத்தில் அமைந்துள்ளது. தந்தை பெயருடன் இணைந்து காணப்படவில்லை 'வீரசோழ ப் பெருமாள்' என்று கூறப்படுவதால் வீர சோழக் கலிமூர்க்கன் என்பவரின் தந்தையாக இவளை எடுத்துக் கொள்வதில் தவறில்லை.

– (கொங்குச் சோழர் – க. அ. புவனேசுவரி, பக்கம்: 40 – 44)

ஈரோட்டில் மகிமாலீஸ்வரன் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் கட்டிட அமைப்புப்பாணியிலிருந்து இது ஒரு கொடும்பளூர் பாணிக் கோயிலாகவே தோன்றுகிறது. சிற்பவடிவமைப்பும் கொடும்பளூர் பாணியிலேயே காணப்படுகிறது. கோணாட்டில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ள கொடும்பாளூரை ஆண்ட (வேளிர்) சிற்றரசர்கள் இக்காலத்தில் சோழர்களை ஆதரிதித்து அவர்களுடைய மேலாதிக்கத்தின் கீழே இருந்து வந்தனர். இம்மரபினரின் ஒருகிளையில் வந்தவன் மகிமாலய இருக்குவேள் என்பவன். இவனுடைய தந்தை இறந்தபோது இவன் சிறுவனாக இருந்தமையால் போலும் கொடும்பாளூர்

அரசு இன்னொரு கால் வழிக்குச் சென்று விட்டது. எனவே இவன் உரிய வயதை அடைந்த கரலத்தில கண்டராதித்தன் கொங்கு நாட்டை ஆண்டு கொண் டிருந்ததால் அவனை ஆதரிப்பவனாக இவன் மாறினான். கண்டராதித்தன் இறந்த காலம் கி.பி.957 ஆகலாம், எனவே இந்த ஆண்டில் மகிமாலய இருக்கு வேள் கொங்கு நாட்டின் தனி உரிமை பெற்ற அரசன் ஆனானோ அல்லது தஞ்சை சோழனாக அப்போது ஆண்டு கொண்டிருந்த சுந்தர சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாக விளங்கினானோ தெரியவிலலை. ஆக கி.பி.957 முதல் ஏறக்குறைய பத்தாண்டு காலம் கொங்கு நாட்டின் வடபகுதி மகிமாலய இருக்கு வேளின் ஆட்சியின் கீழ் இருந்தது. தென் பகுதி மட்டும் தொடர்ந்து சேரமான பெருமாள் மரபினரின் ஆட்சியின் கீழே இருந்து வந்தது.

கண்டராதித்தனின் இன்னொரு மகனான பார்த்தியேந்திர வர்மனும் சுந்தர சோழனுக்கு உட்பட்ட அரசனாகவே தொண்டை நாட்டை ஆண்டு வந்திருக்க வேண்டும். இதற்குச்சான்றாகச் சுந்தர சோழனின் 5 ஆம் ஆட்சியாண்டான கி.பி.958 முதல் அவனது கல்வெட்டுகள் தொண்டை நாட்டிலும் காணப்படுவதைக் கூறலாம்.

கண்டராதித்தன் தன் தந்தை பராந்தக சோழனின் சார்பாகக் கொங்கு நாட்டின் அரசப்பிரதிநிதி நிலையில் இருந்த போது மழ நாட்டையாண்ட வேட்டுவ மழவச்சிற்றரசன் ஒருவனின் மகளை மணந்திருந்தான் என்பதையும், அவளே சிவநெறிச்செல்வியான செம்பியன் மகா தேவி என்பதையும் நாமறிவோம். இவளுடைய குமாரனே மதுராந்தக உத்தம சோழனாவான். ஆனால் கண்டராதித்தனுக்குப் பிறகு இந்த உத்தம சோழன் தன் தந்தை ஆண்ட பகுதிகளில் அதாவது கொங்கு அதைச்சார்ந்த நாடுகளின் அரசுரிமையை அடையவில்லை. காரணம் கண்டராதித்தன் இறந்த போது உத்தம சோழன் அரசுரிமை பெறத்தக்க வயதுடையவனாக இல்லை.

கண்டராதித்தனின் மகளை மணந்திருந்த பெருமாள் மரபுச் சேர அரசன் கண்டண் ரவிக்கு அவள் வயிற்றில் ஒருமகன் பிறந்து இருந்தான். இவனுக்கு தன் தாய் வழிப் பாட்டனாண பராந்தக சோழனின் மற்றோரு பெயரான வீர சோழன் என்ற பெயர் இடப்பட் டிருந்தது போலும். ஆயினும் சோழ மரபினின்றும் தன்னை வேறுபடுத்தி காட்டிக் கொள்ள தன் தந்தை தரித்திருந்த கலிமூர்க்கன் என்ற பெயரை, தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொண்டு தன்னை வீரசோழக் கலிமூர்க்கன் என்று அழைத்துக் கொண்டான் சேர அரசர்களுக்கு கலிமூர்க்கன் என்ற இணைப்பு பெயர் இருந்து வந்ததை ஈரோடு தொண்டீசுவரர் கோயிலில் காணப்படும் சேர அரசனான இரவி கோதை என்பவரின் கல்வெட்டு ஒன்று "ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராசகேசரி பற்மரான திருபுவனைச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ இரவி கோதையான கோக்கலி மூர்க்கருக்கு" என்று குறிப்பிட்டுச் சொல்வது உறுதிப்படுத்துகிறது. (S.l.l. vol. Vl. No. 413 ARE.121of 1891)

இவனது காலம் எதுவாயினும் இரவி கோதை என்ற பெயர் சேர அரசர்களுக்கே உரியது. ஆதலால் சேர அரசர்கள் கலிமூர்க்கன் என்ற பட்டம் தரித்திருந்தனர் என்பது நிச்சயமாகிறது. அன்றியும் மேலே கண்ட இரவி கோதை என்ற சேர அரசனின் பெயர் கொச்சியில் காணப்படும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. எனவே கலிமூர்க்கன் என்ற பெயருடைய சேர அரசனுக்கும் கண்டராதித்த சோழனின் மகளான சோழ இளவரசிக்கும் பிறந்தவனே மேலே குறிப்பிட்டபடி வீர சோழக் கலிமூர்க்கன் என்ற பெயருடன் தாராபுரத்தை தலைநகரமாகக் கொண்டு கொங்கு நாட்டை சுதந்திர மன்னனாக ஆளத் துவங்கினான் எனலாம்.

('கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்' வி. இராமமூர்த்தி (வீயாரெம்) பக்கம்: 108 - 183)

தாராபுரத்திற்கு வஞ்சிபுரி என்ற ஒரு பெயர் உண்டானதலால் இத்தாராபுரம் உள்ளிட்ட தென்கரை நாடு, பொங்கலூர் நாடு ஆகிய இரண்டிற்குமே கோனவள நாடு (கோனாடு) என்ற பெயர் வழங்கப்பட்டது.

கோனவள நாட்டை ஆண்ட அரசனும் பெருமாள் என்று குறிக்கப்படுகிறான். பெருமாள் என்ற பெயர் கொங்கு மன்னர்களான வீரசோழக் கலி மூர்க்கன் முதலானோருக்கும் இருந்து வந்திருக்கிறது. இப்பெருமாள் என்ற பெயரும் சேரமான் பெருமாள் மரபைக் குறிக்கக்கூடும் என்பது பொருத்தமாக உள்ளதாலும் கொங்கு மன்னர்கள் சேர மரபின் ஒரு பிரிவினரே என்றும் கோனவள நாட்டு தாராபுரத்தை தலை நகரமாகக் கொண்டு தனியரசு ஆளத் தொடங்கியதால் தம்மை கோனாட்டார் என்று குறித்துக் கொண்டார்கள் என்பதுமே மிகப் பொருத்தமாக உள்ளது.

மகிமாலய இருக்குவேள் கி.பி. 967 வரை வட கொங்கு நாட்டை அரசாண்டான் என்று கொண்டால் இவனுக்குப் பிறகு கி.பி. 967 முதல் அல்லது அதற்கு முன்னர் கூட இருக்கலாம் வீரசோழக் கலிமூர்க்கன் கோனாட்டான் என்ற பெயருடன் கொங்கு நாட்டை சுதந்திர மன்னனாக ஆளத்தொடங்கி தாய் வழி மரபினர் படி இவன் வீரசோழன் என்று பெயர் சூடியிருந்ததால் இவன் வழி வந்தோரும் தஞ்சை சோழர்களின் பெயர்களையும், அவர்கள் தரித்து வந்த ராஜசேகர், பரசேகரி பட்டங்களையும் தரித்துத் தம்மைச் சோழன் என்ற பெயரிட்டே அழைத்துக் கொண்டனர்.

சமீபத்தில் இவருடைய 38 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றும் கிடைத்திருப்பதால் இவனுக்கு அடுத்துப் பட்டத்திற்கு வந்த இவன் மகன் கலி மூர்க்க விக்கிரம சோழன் கி.பி. 1005 ல் பட்டம் பெற்றிருக்கிறான் என்பதை விக்கிரமனின்

சக ஆண்டு குறிப்பிட்ட கல்வெட்டு ஒன்று தெரிவிப்பது கொண்டு வீர சோழ கலிமூர்க்கன் கி.பி. 967 ல் பட்டமேற்றியிருக்கலாம் என்று கூற முடியும் ஆயினும் நமது முடிவின் படி இவன் மகிமாலய இருக்கு வேளிருக்குப் பிறகு கி.பி. 965 ல் பட்டமேற்று இருக்கலாம் என்று ஆவதால் இவன் இன்னும் 2 ஆண்டுகள் கூடவே அதாவது 40 ஆண்டுகள் ஆண்டிற்கக் கூடும். (பக்கம்: 184 - 185 'கொங்கு நாட்டு கவுண்டர்கள்' வி. இராமமூர்த்தி)

கொங்குச் சோழர் வழிமுறைகளை பற்றி க. புவனேஸ்வரி மற்றும் வி. இராமமூர்த்தி ஆகியோர்கள் கூறிய வரலாற்றுச் செய்திகளை அறிந்தோம். இனி நாம் காஞ்சிக்கோயில் நாட்டுப் பெரிய பெருமாள் கம்பனுடைய அந்துவ வேட்டுவ சுந்தராயன் வானவரம்பன் கலிமூர்க்கன் மற்றும் பெருமாள் பற்றிய வரலாறுகளை அந்தியூர் ஆதீனம் அரச பாளையம் சந்திரசேகரின் வடகரை நாட்டு செப்பு பட்டயத்தில் கண்டுள்ளதையும் நோக்க கடமைப்பட்டுள்ளோம்.

மேற்கண்ட கொங்குச் சோழர் மற்றும் கொங்கு பாண்டியர் வரலாற்றுத் தடங்களில் பயணித்துப் பார்த்தால் கொங்குச் சோழர்களும் கொங்கு பாண்டியர்களும் வேட்டுவ புத்திர வர்க்கத்தினரே என்பது புலப்படும்.

கொங்கர் ஒட்டி நண்பர்களுக்கு நாடு பல தந்த பசும்பூண்பாண்டியன். இளஞ்சேரல் இரும்பொறைக்கு அடங்கியிருந்த நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி வல்வின் பூந்துறை சோழன் பெரும்பூண் சென்னியுடன் போர் செய்து பழையனைக் கொன்று பின் நடந்த கழுமம் போரில் சென்னி சிறைபிடித்த கணையனை சிறை மீட்டான் இளஞ்சேரல் இரும்பொறை.

தலையாளங் கானத்தில் நடந்த போரில் பாண்டியன் நெடுஞ்செழியன் சேரர், சோழர் மற்றும் திதியன், எழினி, எருமையூரன் இருங்கோ வேள், பொருநன் ஆகியோர்களை

வென்று தலையாலங்காளத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று அழைக்கப்பட்டான்.

## வேட்டுவ அரையர்கள்

இருங்கோவேள் ஆண்ட துவரையில் (துவார சமுத்திரம் - துவரை) மேல் அரையம் கீழ் அரையும் எனும் மலைச்சரிவில் உள்ள மூதூர்களை ஆண்ட வேட்டுவ அரையர்கள் தமிழகத்தில் பல இடங்களில் பரவி பின் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான் மலையை ஆண்ட குடுமி வேட்டுவர்கள் இவர்கள் சேரனை விட சோழரை ஆதரித்ததால் இவர்கள் சோழன் ஆதரவுடன் வடகொங்கை ஆண்டனர். இவர்கள் சென்னியின் (சோழரின்) ஆதரவாளர் எனவே சென்னி மலையில் உள்ள பிராட்டி அம்மன் குடிமி வேட்டுவர் குலதெய்வம் ஆகும். இவர்கள் வடகொங்கு நாட்டை சோழர் என்ற பெயரில் ஆண்டு வந்தனர்.

வேட்டுவ மன்னர்கள் வேணாட்டை ஆண்டதால் வேணாட்டார்கள் என்றும், ஒய்மா நாட்டை ஆண்டதால் ஓவியர் என்றும், பழனி எனும் ஆவினன் குடியை ஆண்டதால் ஆவியர் என்றும், குறும்பு என்னும் குறுப்பு நாட்டை ஆண்டதால் காட்டுக் குறும்பர் என்றும் மாவிலங்கை ஆண்டதால் இலங்கை வேட்டுவர் என்றும் அருவா மற்றும் வடதலை அருவா நாடுகளை (தொண்டை நாடு) ஆண்டதால் அருவாளர் என்றும் காஞ்சிபுரத் தை ஆண்டதால் வெங்காஞ்சியர் (வெங்காஞ்சி வேட்டுவர்) என்றும் கொங்கு நாட்டை ஆண்டதால் கொங்கர் என்றும் சேர நாட்டை ஆண்டதால் சேரர் என்றும் சோழ நாட்டை ஆண்டதால் சோழர் என்றும் பாண்டிய நாட்டை ஆண்டதால் பாண்டியர் என்றும் வேட்டுவ மன்னர்களை காரணப் பெயரிட்டு அழைத்தனர்.

# கொங்கு நாட்டை ஆண்ட வேட்டுவர்கள்

இருக்கு வேளிர் குடுமி வேட்டுவர் இவர்கள் கோனாட்டையும் ஆண்டனர். கட்டி நாட்டை ஆண்ட குன்றக்கட்டி பொன்னக் கட்டி வேட்டுவர்கள் குறுப்பு நாட்டை ஆண்ட காட்டுக்குறும்ப வேட்டுவர்கள் கிழங்கு நாட்டை ஆண்ட கிழங்க வேட்டுவார்கள், கரைவழி நாட்டை ஆண்ட கரையவே வேட்டுவார்கள், அந்தியூர் நாட்டை ஆண்ட அந்துவ வேட்டுவர்கள், பூ வாணி நாட்டை ஆண்ட பூவாணி வேட்டுவர்கள், வாழவந்தி நாட்டை ஆண்ட உயர வேட்டுவர்கள், ஒடுவங்க நாட்டை ஆண்ட அந்தி வேட்டுவர்கள். அருவா நாட்டு அரவக்குறிச்சி வேட்டுவர்கள், புன்னாட்டை ஆண்ட புன்ன வேட்டுவர்கள், மலைய மான் நாட்டை ஆண்ட மலைய வேட்டுவர்கள், கொல்லி நாட்டை ஆண்ட கொல்லி வேட்டுவர்கள், அதிகமான் நாட்டை ஆண்ட அதிய வேட்டுவர்கள், கொங்கின் கங்கில் ஆண்ட கங்க வேட்டுவர்கள், கண்டீரமலை (கார்க்கே கண்டி) கண்டி அம்மனை குலதெய்வமாக வணங்கும் கஜல் கட்டி கோட்டையில் யானைகளை கட்டி சாந்தப்படுத்தும் சாந்தப்படை வேட்டுவர் - பர்கூர் மலை பறம்பு மலையை ஆண்ட பாரியூரை ஊராண்மை செய்த மணிய வேட்டுவர், வெள்ளோட்டை ஆண்ட வெள்ளை வேட்டுவர்.

## சோழ நாட்டை ஆண்ட வேட்டுவர்கள்

செம்ப வேட்டுவர்கள். உறையூர் (கோழியூர்) ஆண்ட மொடக்கோழி வேட்டுவர்கள் வேந்த வேட்டுவர்கள், தேவேந்திர குல வேட்டுவர்கள், விளக்கு வேட்டுவர் இவர்கள் சோழ மன்னர்களின் கால் வழியினர் ஆவர்.

## பாண்டிய நாட்டை ஆண்ட வேட்டுவர்கள்

பாண்டிய வேட்டுவர், பழையன் மாறன் எனும் வேம்ப வேட்டுவர், அண்ட வேட்டுவர், கடிய நெடு (உயர) வேட்டுவர்

இவர்கள் பாண்டிய மன்னர்களின் கால்வழியினர் ஆவர்.

புறநானூறு 324 பாடலில் வேட்டுவர் ஆநிரை உரிமையுடைய தலைவர் என்றும் ஆநிரை மேய்ப்பவர் இடையர் என்றும் உணர்த்துகிறது.

**ஆயர் வேட்டுவர் ஆடூ உத் திணைப் பெயர்**
**ஆ வயின் வரூ உம் கிழவரும் உளரே**

**- (தொல்காப்பியம்)**

ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்த பொழுது கொங்கு நாடு முழுவதும் வேட்டுவ இராசாக்கள் ஆண்டனர் என்று கொங்கு தேச இராசாக்கள் எனும் நூல் கூறுகிறது.

**"கொங்கர் எனும் பெயர் கொண்டு குல வும் நல வேட்டுவரை"**

**- மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்திப் பாடல்.**

## திருவண்ணாமலை (சங்ககாலச் சேரவேந்தர்கள், க. சண்முகசுந்தரம்)

சங்ககாலத்தில் திருவண்ணாமலை சேர நாட்டில் இருந்தது. இங்கு கோயிலில் உள்ள கல்லெழுத்தில் "நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்" என வரையப்பட்டிருக்கிறது. செங்கம் ஊரில் சிவன் கோயிலிலுள்ள கல்லெழுத்தில் "மலைக்கடாம் பாட்டுண்ட மால்வரை" என வரையப்பட்டிருக்கிறது.

மலைபடுகடாம் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் செங்கம் ஊரிலிருந்து ஆட்சி புரிந்தான். அவனுடைய பரந்த மலை நாட்டில் திருவண்ணாமலை இருந்தது.

போளூர், திருவண்ணாமலை, கரூர், பழனி, திருச்செங்கோடு, கொல்லம் சேர நாட்டைச் சேர்ந்தவை. தமிழகத்தில் வடக்கில் போளூரில் இருந்து தெற்கே கொல்லம் வரை மேற்கு திசையில் உள்ள நிலப்பரப்பை சேர மன்னர்கள்

ஆண்டார்கள். கிழக்கு திசையில் வேங்கடம் முதல் உறையூர் வரை சோழர் ஆண்டனர். அதற்கு தெற்கில் குமரி வரை பாண்டியர் ஆண்டனர்.

## நன்னன்

சாசனம். 50னு. 200 - 10 திருக்கோவிலூர் வட்டத்தில் கீழையூரில் உள்ள கோயிலில் கர்ப்ப கிரகம் வடபுறம் வச்சிரப்பட்டையில் பலா மரத்துக்கு மேற்கே எழுதியிருப்பதாக குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு பல்லவ மன்னனான கோவிசய நிருபதுங்க விக்கிரமனுடைய 21 - ஆம் ஆண்டு கல்வெட்டு "வேட்டுவ தரையர்க்கு (வேட்டுவ அரையர்) அனா முண்ணும் நன்னன் கொற்றன் என்பான் திரு. வீரட்டானது மகா தேவருக்கு ஒரு நுந்தா. ( நுந்தா - நந்தா) விளக்கு எரிக்கப் பன்னிரண்டு கழிச்சு பொன்" அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

( - எபி கிராபியர்இந்திக. ஏடட வால்யூம், தென்னிந்திய கல்வெட்டுக்கள், பக்கம். 139, )

இக்கல்வெட்டினால் நன்னனின் சந்ததியார் சங்க காலத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் சிற்றரசர்களாக இருந்தது தெரிய வருகிறது. அவர்கள் சேர மரபினரான வேட்டுவர்கள் என்பது புலப்படுகிறது.

சேர மன்னர்கள் ஆண்ட சேர ராயன் மலையே இன்று சேர்வராயன் மலை என்று அழைக்கப்படுகிறது. இராஜராஜ சோழன் குடமலை நாட்டின் மீது படையெடுக்கும் பொழுது குடமலை நாட்டை வேட்டுவக் கொங்காள்வான் மரபினர் ஆண்டனர் என்று சோழர் வரலாறு கூறுகிறது.

ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுக்கும் பொழுது கொங்குநாடு முழுவதும் வேட்டுவ ராஜாக்கள் ஆண்டனர் என்று "கொங்கு தேச ராஜாக்கள்" எனும் நூல் கூறுகிறது. இதைச் சோழர்களின் பெருவழி கல்வெட்டுக்களும் நம்பி ஆண்டார் நம்பியின் பாடல்களும் மெய்ப்பிக்கின்றன.

களப்பிரர் போர் என்பது கன்னட வேட்டுவர்க்கும், தமிழ் வேட்டுவர்க்கும் நடந்த போர் இதில் படுகளம் ஆனது கன்னட வேட்டுவர் இவர்கள் மூன்று தரைகளை ஆள முயற்சி செய்ததால் முத்தரையர் எனப்பட்டனர். படுகளம் ஆன முத்தரையருக்கு தமிழ் வேட்டுவர்களால் எடுக்கப்பட்டது அண்ணமார் வழிபாடு ஆகும். வழிபாடு கி. பி. 5 - ஆம் நூற்றாண்டு முதலே இருந்தது.

பல்லவ மன்னர்கள் என்பவர்கள் ஆந்திர வேட்டுவர் ஆவர். சாலிவாக சகாப்தம் இது பற்றியதே ஆகும். கங்க மன்னர்கள் தமிழ் வேட்டுவ மன்னர்கள் ஆவர். கொங்கின் கங்கில் ஆண்டவர்கள் கங்கர் ஆவர். கொங்கின் தமிழக எல்லையில் ஆண்டவர் தமிழக கங்கர் கொங்கின் கன்னட எல்லையில் ஆண்டவர்கள் கன்னட கங்கர் ஆவர்.

**"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ் கூறும் நல்லுகத்து" - என்கிறார் பணம் பாரணார்.**

**"வேடர் திருவேங்கடம்**
**மேய விளக்கே" - திருமங்கையாழ்வார்.**

வேடு ஆர் - வேடுவர்கள் மலிந்திருக்கும் திருவேங்கடம் என்கிறார் திருமங்கையாழ்வார்.

## வெறுங்கை வேடன்

"திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் அபிஷேகத்தின் போது ஏழுமலையான் தன்னுடைய மூன்றாவது கண்ணை திறக்கிறார் என்ற ஐதீகம் உள்ளது. ஏழுமலையான் ஆலயத்தின் தலவிருட்சம் புளியமரம் ஆகும். பொதுவாக திருமாலின் எந்த ஒரு அவதாரமாக இருந்தாலும் கையில் தாங்கிய நிலையில் இருப்பதை நாம் பார்த்திருப்போம். ஆனால் திருப்பதி ஏழுமலையானின் கரத்தில் எந்த ஆயுதமும் கிடையாது அவர் நிராயுதபாணியாக நின்று பக்தர்களுக்கு அருளை வாரி வழங்குகிறார். இதனால் இவரை "வெறுங்கை வேடன்" என்று அழைக்கிறார்கள்.

**"சில வேட்டுவர் சார்பினிலே"**
**இறைவனைக் காண்போம்.**
**வேடனாய் வந்த ஆதியே (சிவன்)**
**வேடனால் ஏற்றாய் அந்தமே (மால்)**
**வேடன் நம்பிமகள் வள்ளியை**
**வேடனாய் வந்து மணந்தாய் (முருகன்)**
**வேடன் திண்ணன் கண்ணப்பனாக**
**வேடன் குகன் சகோதரனாக**
**வேடன் ஏகலைவன் ஏற்றமுற**
**வேடன் மல்லிவள மன்னனுக்கு**
**வட பத்ர சாமியாய் வந்த**
**சீலமே! சிவமே! மாலே! நின்**
**வேடமும் வேட்டுவமும் தழைக்க**
**சரணம்! சரணம்!!**

**- திருக்கோயில். முனைவர். ந. மைதிலி**

## வேட்டுவர்கள் அரசர்கள் என்பதற்கான கல்வெட்டு

புறநானூறு 324 பாடலில் வேட்டுவர் (அநிரை உரிமையாலர் / தலைவன்) என்றும் ஆ நிரை மேய்ப்பவர் இடையர் என்றும் உணர்த்தும் பாடல் மேலும்

**ஆயர், வேட்டுவர், ஆடூஉத் திணைப் பெயர்**
**ஆ வயின் வரூஉம் கிழவரும் உளரே.**

**- (தொல்காப்பியம் 21)**

வேட்டுவர் பற்றி தொல்காப்பியம் கூறுகிறது.

தொல்காப்பியரால் பேசப்பட்ட வேட்டுவர் (காவலியர், மாவலியர், பூவலியர், வேட்டுவர், வில் வேடுவர்) 5 பிரிவுகளாக இருந்தார்கள் என்பதை கல்வெட்டுகள் செப்பேடுகள் மூலம் அறியலாம்

கார்த்திகேசு சிவத்தம்பி என்ற அறிஞர் கூறியிருக்கிறார் சிலப்பதிகாரம் வேட்டுவர் வரி வேட்டுவர்களின் வாழ்க்கை

முறையும், போர் நெறியையும், வீரப்பண்பையும், வேட்டுவர்களின் போர் தெய்வமான கொற்றவையை வழிபடும் பாங்கையும் அற்புதமாக விவரிக்கிறது. சிலம்பு வேட்டுவர் வரி வேட்டுவர் குலத்தவரை மறவர், எயினர், கொங்கர், கானவர், தொல்குடி, வேடர் என அழைக்கப்படுகிறது.

சங்ககாலத்தில் பசும்பூண் பாண்டியன் என்னும் பாண்டிய அரசன் கொங்கர்களை (கொங்கு வேட்டுவ இராசாக்களை) வென்று கொங்கன் என்னும் பட்டப் பெயரை சூட்டிக்கொண்டான். இந்த போரில் தனக்கு ஆதரவு அளித்த கொங்கு நாட்டின் வேட்டுவ இராஜாக்களை அந்தந்த பகுதியை ஆள சிற்றரசர்களாக நியமித்தான். ஆட்சிகள் காட்சிகள் போல் மாறினாலும் கொங்கு வேட்டுவ மன்னர்க ளை யாராலும் அசைக்க முடியவில்லை.

## வடுக வேட்டுவர்கள்

சங்க காலத்தில் தமிழகத்தின் வடக்கே வாழ்ந்த வடுக வேடர் இனத்தவர்களை பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் கொங்கு நாட்டில் காவலர்க ளாக பணிபுரிய அழைத்து வந்தான். வடுக வேட்டுவர்கள் தங்களுடன் அவர்களது தெய்வமான வடுகநாதர் அல்லது பைரவரை தங்கள் வழிபாட்டிற்காக பிரதிஷ்டை செய்தனர். பைரவர் சிவாலயங்களில் காவல் தெய்வமாக வடுக மூலையில் வேட்டை நாயுடன் காட்சியளிக்கிறார்.

## மலையமான்கள்

சேர நாட்டின் மேற்கு பகுதி கடற்கரை பகுதியாதலின் சேர மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை அங்கு விரிவாக விரிவாக்க இயலவில்லை. எனவே சேரர் குடியின் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கி மலைகள் நிறைந்த சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்ட பகுதிகளில் குடியேறினர், அவர்கள் தங்கிய

இடங்களும் சேர நாட்டைப் போன்றே மலைப்பகுதிகள் நிறைந்த இடங்களாக இருந்தன. மெல்ல மெல்ல சிற்றரசுகளை நிறுவினர். சேரர் குடியின் ஒழுகலாற்றலின்படி இவர்கள் மலையர் என்று அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் இவர்கள் மலைமான்கள் ஆயினர்.

(நூல். மாலைய மான்கள், பக்கம்: 20)

கொங்கு நாட்டில் வாழ்ந்த மக்கள் "ஆகெழு கொங்கர்", "கொங்கர் ஆபரந்தன்ன" என்று ஆநீரைச் செல்வத்தோடு ஒப்பிட்டு சங்க இலக்கியங்கள் புகழ்கின்றன. அவர்கள் வீரத்திலும் சிறந்தவர்கள் எனும் படியால் "ஒளிருவாட் கொங்கர்" எனப்பட்டுள்ளனர். குறிஞ்சியில் வேட்டுவர்களின் ஆநிரைகளை புலையர் மேய்த்தனர், முல்லையில் வேட்டுவர்களின் ஆநிரைகளை இடையர் மேய்த்தனர்.

## சிவன் கோயில் கல்வெட்டு

மங்க முத்தாயி அம்மன் கோயில் அருகே ஏரிக்கரையின் கீழ் ஓர் சிவன் கோயில் இருந்தது அழிந்து போய் உள்ளது. ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் துண்டுக்கற்கள் தூண்களில் சில கல்வெட்டுகள் உள்ளன.

## சோழர் காலம்

ஒரு துண்டு கல்லில் திரிபுன சக்கரவர்த்திகள் மது கருவூரும் பாண்டியன் முடித்தலையும் குலோத்துங்க சோழ தேவர்க்கு என உள்ளது. இது சோழ மன்னர் மூன்றாம் குலோத்துங்க சோழனின் மெய்கீர்த்தியாகும். இதன் மூலம் 12 - ஆம் நூற்றாண்டில் இந்த ஊர் சோழர்களின் ஆட்சி நிலவியது உறுதியாகிறது.

## பாண்டியர் காலம்

இங்குள்ள ஓர் உடைந்து போன தூணில் 13 - ஆம் நூற்றாண்டை சேர்ந்த பாண்டியரின் கல்வெட்டு 13 வரிகளில்

காணப்படுகிறது. கல்வெட்டின் நடுவே பாண்டியரின் அரசு சின்னமான இரட்டை மீன் நடுவே செண்டு புடைப்பாக பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியத்தேவர் என்பவர் தானமாக கொடுத்த திருநாமத்துகாணி நிலத்தை முதலீடாக கொண்டு இராசாக்கள் மண்டபம் என்ற ஒரு மண்டபத்தை கட்டிக் கொடுத்ததை இக்கல்வெட்டு சொல்கிறது. அந்த மண்டபம் தற்போது அங்கு இல்லை முற்றிலுமாக அழிந்து விட்டது. இப்பகுதியில் மேலும் ஆய்வுகள் செய்தால் இன்னும் பல வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ஆறகளூர் பொன் வெங்கடேசன்)

ஆனைமங்கலம் நடுக்கல் கல்வெட்டு ஆண்டு 10 - ம் நூற்றாண்டு (911) அரசு முதலாம் பராந்தக சோழர் கல்வெட்டு பாடம்

**கோபர கே**
**சரி பன்மக்**
**கு யாண்டு நா**
**ன்காவது வே**
**ட்டுவ அரை**
**யர் வாணகோ**
**வரையர் ஆல**
**ஆனைமங்கலம்மு டை**
**ய கள்ளன் தாழ ன் மேல்க் கோவல்**
**லூர் நாட்டு அளவி**
**ப்பாடி தொறு மீட்டு ப**
**ட்டான் மன்றாடி கல்**

## விளக்கம்

முதல் பராந்தகனின் நான்காவது ஆட்சி ஆண்டில் கி.பி. 911 வேட்டுவ அரையராக வாணகோவரையர் ஆன ஆனை மங்கலத்தின் காவலனாக தாழன் மேற்கு கோவலூர் நாட்டு

அளவி பாடி ஊரின் கால்நடைகளை பகைவரிடம் இருந்து மீட்டு வீர சாவடைந்தான் அதற்கு அவர் ஊரின் இடையன் (மன்றாடி) நினைவுகல் நாட்டு வித்தான்.

## நடுகல் மற்றும் கொற்றவை வழிபாடுகள்

வேட்டுவ குடியினர் தமிழ் மண்ணில் முதன்முதலில் நடுக்கல் மற்றும் கொற்றவை கடவுள் முருகன், சிவன், காளி போன்ற கடவுள்களோடு தொடர்பு படுத்தப்பட்டது.

## சோழ மலாடுடையான்

மலையமான் நாடு மலாடு எனப்பட்டது. "தென்னார்க்காடு ஜீல்லாவில் திருக்கோவலூரைத் தலை நகராகக்கொண்ட மலையமான் நாட்டினை ஆண்ட குறுநில மன்னன் ஆன உத்தம சோழ மலாடுடையானுக்குப் பிறகு குறுநில மன்னன் ஆன கங்கை கொண்ட சோழ மலாடுடையான் மலையமான் நாட்டை ஆண்டான். இவன் கி. பி. 1924 - ல் திருக்காளத்தி கோயிலில் கார்த்திகை விளக்கீட்டிற்கு நிவந்தமாகப் பொன் வழங்கிய செய்தி அவ்வூரிலுள்ள கல்வெட்டு ஒன்றால் அறியப் பெறுகின்றது. முதலாம் இராசேந்திர சோழ சக்கரவர்த்திக்கு கீழ் இருந்த இந்த சிற்றரசர்களின் கடமைகள் ஆவது, போர்க்காலத்தில் தங்களது படையை போருக்கு அனுப்புவது, மேலும் சோழ படைத் தளபதியாக படைக்குத் தலைமை தாங்குவது ஆகும். கி. பி 1035- ல் வேங்கி நாட்டில் நவி திண்டியில் மேலைச் சாளுக்கியரோடு, உத்தம சோழ கோன் ஆகிய 3 சோழப், படைத்தலைவர்களும் வீரமரண்முற்றனர். அவர்களுக்கு அந்த ஊரில், போரில் வென்ற சோழ்ச்சக்கரவர்த்தி அவர்களுக்கு 3 சமாதிக் கோயில்களை எழுப்பி நிவந்தங்களையும் வழங்கியுள்ளான்.

(இறைவி, திருச்செங்கோடு, (கண்ணப்பர் கல்வி மடல் -மே.2017 பக்: 34)

சிலப்பதிகார வேட்டுவர் வரியில் வேட்டுவர் குலத்தவரை மறவர், எயினர், கொங்கர், கானவர், தொல்குடிவேடர் என அழைக்கப்படுகிறது.

ஆய் வேள், ஆய் அண்டிரன் எனும் ஆய் எயினன் 'சேரநாட்டின தென்கோடியான வேணாட்டில் பழைய ஆய் அண்டிரனின் மரபினர் திருவிதாங்கூர் அரசர் என்ற பெயருடன் தொடர்ச்சியாக ஆண்டு வந்தனர். மாலிக்கபூர் படையெடுப்பின் இரவிவர்மன் என்ற குலசேகரன் என்ற திருவிதாங்கூர் அரசன் (கி.பி 1309-16) மலையாளக் கரை முழுவதையும் வென்று. சோழ, பாண்டிய நாடுகளையும்தன கீழ்ப்படுத்தி கி.பி. 1316 ல் காஞ்சியில் பேரரசனாக முடிசூடிக் கொண்டான். ஆனால் ஒய்சாளர்கள் படையெடுப்பால் அவன் ஆட்சி கவிழ்ந்தது. உமா என்னும் பாண்டிய இளவரசியை இவன் மணந்திருந்தான்.

கி.பி. 1320-ல் வீரராகவனும் 15 ஆம் நூற்றாண்டின பிற்பாதியில் மண் கொண்ட பூதலன் என்ற நான்காம் வீரவர்மனும், கி. பி, 1595 - 1607 ல் ஐந்தாம் இரவிவர்மனும் ஆட்சி செய்தனர்.

18 - ஆம் நூற்றாண்டில் வேணாடு பலசிற்றரசுகளாப் பிளவுபட்டது. திருவிதாங்கூர் அரசர் தென்கோடியை மட்டும் ஆண்டனர். மார்த்தாண்டவர்மன் என்ற அரசன் திருவிதாங்கூர் முழுவதையும் ஆண்டான். இந்த மன்னர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டதால் அவர்களின் ஆதரவைப் பெற்றனர்.

கடையேழு வள்ளல்களில் ஒருவன் ஆன ஆய் அண்டிரனின் கோட்டை திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் இரயில் நிளையத்திற்க்கு அருகே பொதிகை மலைக்கு அப்பால் கோட்டை மலை என்ற இடத்தில் அமைந்திருந்தது. அம்மலை மீது ஒரு கோட்டை இருந்ததற்கு அடையாளமாகக் கோட்டையின் சிதைவுகளும், அரசர்கள் வாழ்ந்த அரண்மனைப் பகுதிகளின் தடயங்களும் காணப்படுகின்றன.

பொதிகை மலைக் கோட்டைக்கு உரிய ஆய் அண்டிரன் கொங்கு நாட்டை தனக்கு அடிபணியவைத்தவன். சங்க இலக்கியப் பாடல்களில் அதிகமாகப் பாடப்பெற்ற பாட்டுடைத் தலைவன் ஆவான்.

> எளிதில் பாண்டிய நாட்டை அடையவும், சேரர் தம்படை வீடாகவும் பயன்படுத்த இந்தக் கோட்டை பயன்பட்டது. இந்தக் கோட்டைக்கு அடுத்து வாணதீர்த்தம் என்கின்ற பாவநாசம் அணைக்கட்டு உள்ளது. சேர மரபினர் வேட்டுவ குலத்தவர்கள் என்பது மேற்கண்ட ஆய்வாள் ஊர்ஜிதமாகின்றது. சேர மன்னர் கொடியின் சின்னம் வில் அம்பு, வேட்டுவர்களின் கால்வழியினர் சேரமன்னர் ஆவர். மூவேந்தர்களும் முதுகுடிகள் ஆன வேட்டுவக் குடியரசில் இருந்து உதித்த முடியரசர்களே ஆவார்கள்"
>
> (இறைவி, கண்ணப்பர் கல்வி மடல்,
> ஆகஸ்ட் 2017, பக்கம்:33 - 34)

கடையெழு வள்ளல்களான வேட்டுவ வேளிர்களில் ஒருவரான ஆய் அண்டிரன் சங்க காலத்தில் கட்டிய குடைவரைக் கோயில் தென்காசி திருமலாபுரம் ஊராட்சியில் உள்ளது. இது தற்பாழுது தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். விநாயகர், பிரமன், முருகன் எனப்பல சிற்பங்கள் அக்குடைவரைக் கோயிலில் அழகாக வடிவமைக்கப் பட்டுள்ளது. சிவனுக்கு ஒற்றைக்கல்லால் ஆன தனிச்சந்நதி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்,

சங்ககாலத்தில் இந்த ஆய் நாட்டில் இருந்து வந்து ஆய்நாட்டு ராணி செம்பவளம் எனும் பெண் கொரியாவில் 'கயா' (யலய) எனும் இராஜ்ஜியத்னை பல ஆண்டுகள் முதன் முதலில் ஆட்சிசெய்தார் என்று 'சமயோக் யுஷா' (ளயஅபரம லூரளய) என்ற கொரியன் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகம், பாரதம் மற்றும் அயல் நாடுகளையும் ஆண்ட சரித்திரச்சான்றுகள் உள்ள உலகின் பழம்பெரும் குடியான வேட்டுவர் எனும் தமிழ் தொல்குடி முழுவதையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.



கொங்கு தலைய நாட்டு தலையூர் காளிக்கு வேட்டுவர் வீரன் தன் தலையை பலி கொடுக்கும் சிலை

# தலையூர் நாடு - வேட்டுவ வேளிர்கள்

## தலையூர் நாடு

தலையூர் நாடு என்பது கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் ஒன்றாகும், இது அமராவதி ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்தது, மேலும் இது "கரைவழிநாடு" என்றும் அழைக்கப்பட்டது, இதன் தலைநகரம் தலையூர், இன்றைய சின்னத் தாராபுரத்திற்கு அருகில் உள்ள பகுதியாகும். தலையூர் நாட்டின் தலைவன் "தலையூர் காளி" எனப்பட்டான், இவர் ஒரு வலிமைமிக்க அரசன்னாவார், கொற்றவை (காளி) பக்தனாகவும், ஒட்டுமொத்த வேட்டுவக் கவுண்டர் குலத்தின் தலைவனாகவும் இருந்தார்.

## தலையூர் நாட்டின் முக்கிய அம்சங்கள்

கொங்கு மண்டலத்தில், அமராவதி ஆற்றின் தெற்கே அமைந்தது. இந்த ஆறு மிகவும் தொன்மைவாய்ந்தது ஆற்று நகரிக்கதின் பிரபிடாமகும் .இங்குதான் அரசு உருவாகியுள்ளது என்றும் வேட்டுவர்கள் சிட்ரசர்களாக தோன்றினார்கள் என்று ஆய்வின் முலாம் உறுதி செயியபட்டுள்ளது .

“கொடுமனம் என்ற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது. அப்போது வேட்டுவர்கள் என்ற சிற்றரசர்கள் தோன்றினர்.”(தினமலர் 12.05.2012 கோவை பதிப்பு)

கோவையில் நடந்த வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கில் கி.மு.500-களில் (கொடுமனம் காலம்) வேட்டுவர்கள் அரசமைப்பை உருவாக்கினார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்களே கூறியுள்ளனர்.

இரண்டு புறமும் வில் உருவம் பொறிக்கப்பட்ட நிறையக் காசுகள் கொங்கு நாட்டில் (கரூர், அமராவதி ஆற்றங்கரை) கிடைத்து இருக்கின்றன. இந்தக் காசுகள் கி.மு.500 அல்லது கி.மு.400 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

கொடுமனம் பகுதியில் கிடைத்த கணையாளிகளில் “வேடுவன்” என்று பெயர் பொறித்த கணையாளிகள் கிடைத்திருக்கின்றன. இந்தக் கணையாளிகள் கி.மு. 400-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். (கொங்கு வரலாற்று ஆய்வுகள் அன்றும்-இன்றும்) மேலும் கொடுமனம் பகுதியில் கிடைத்த பானையோடுகளில் அந்துவன், பன்னன், ஆதன் மற்றும் பல வேட்டுவக் கூட்டப்பெயர்கள் தமிழ், பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இதன் மூலம் உலோகங்களை கி மு 300இல் வேட்டுவர்கள் பயன்படுத்தியதையும் எழுதரிவு மிக்கவாராகவும் உள்ளதை இந்த ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

**தலைநகரம்:** தலையூர், இது சின்னத் தாராபுரத்திற்கு அருகில் உள்ளது. பிற பெயர்கள்: கரைவழிநாடு என்றும் அழைக்கப்படுகிறது.

ஒரு முறை குன்னாடி ராசனும், உரிமைப்படை ராசனும், தென்கரை நாட்டில் தொல்லை தந்த கள்வர்களை நாட்டை விட்டே விரட்டினார் எனவே பாண்டடியன் “வேட்டுவ ராசாக்களை “ பாராட்டி 18 விருதுகளும் கொடுத்து மணுலூர் நாட்டை சோர்ந்த பாடி பண்ணிரண்டு, பூண்டி மூப்பத்தாறு கிராமங்கள் உட்பட சீமைக்கு பட்டகாரராகப் பட்டம் சூட்டினார்; பின்னர் இவர்கள் மணுலூர் நாட்டில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தனார். மணலூர் பட்டக்காரர் என்ற பெயா? விளங்கியது. பின்னர் “மணலூர் நாடு”, தலையூர் நாடு என்றும் பெயரானது:

ஒருமுறை பாண்டிய மன்னனை சந்திக்க வேட்டுவ அரசா் சென்ற பொழுது எதிரிகளின் தலையை வெட்டி சென்று பாண்டிய மன்னன் முன் வைத்ததால் அவர் ஆட்சி செய்த நாடு தலையூர் நாடு என்று பெயர் வந்ததாக வரலாறு உள்ளது .

தலையூர் 24 கொங்கு நாடுகளில் ஒன்றாக இருந்தது, மேலும் இது வலிமைமிக்க வேட்டுவக் கவுண்டர்களின் பகுதியாகும். தலையூர் நாட்டை குண்ணி வேட்டுவர் என்ற குன்னடி வேட்டுவர் ஆட்சி செய்து வந்தனர்.

இவர்கள் சங்க காலம் முதல் ஆட்சி செய்து வந்துள்ளதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியாளலாம்.

இந்த அரச மரபினரில் தலையூர் காளி மிகவும் புகழ் பெற்றவர் இவர் பொன்னர் சங்கரை வெற்றி பெற்று வேட்டுவர் பெருமையை உலகறிய செய்தவர்.

## கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளி

கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளி, 24 நாடுகளுக்கும் தலைமை வகித்தவர் .தலையூரை தலைநகராகக் கொண்டு

ஆண்ட வேட்டுவ கவுண்டர் மன்னனின் மகன் ஆவார் . தலையூர் காளி மன்னன் வில்லாற்றலில் கடியநெடு வேட்டுவனை போன்று திறமை மிக்கவர். கடியநெடு வேட்டுவனின் வழித் தோன்றலே இந்த தலையூர் காளி மன்னன். இவன் தலையூரில் உள்ள பிரம்ம காளித் தேவி அம்மனை குலதெய்வமாக கொண்டவன்.

இளமையில் இவனை மக்கள் தலையூரான் என அழைத்தனர். இவன் இளவயதிலே தனக்கென ஒரு படையை தந்தையிடம் வாதிட்டு பெற்று நிருவகித்து வந்தான். அப்படையானது தலையூரான் படை என்றும் காளி கவுண்டர் சேனை என்றும் எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தது. வேட்டுவக் கவுண்டர் குலத்தில் பிறந்த மாவீரன் என மக்கள் அவனை போற்றினர். ஒரு முறை காட்டிற்கு வேட்டையாட சென்றபொழுது இரண்டு புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டான். உடன் சென்றோரோ இளவரசன் ஆயுள் முடிந்துவிட்டது என அரசருக்கு கூறுமாறு பணியாள் ஒருவன் மூலம் தகவல் கொடுக்கப்பட்டது..

இரண்டு புலிகளுக்கு நடுவே பயமறியாது பாயும் வேங்கை போல நேர்கொண்ட பார்வையுடன் புலியை எதிர்த்து நின்றான். உடன் சென்றவர்கள் இதுபோன்று மனவலிமை கொண்ட ஒரு கொங்கனை கண்டதில்லை என எண்ணி வியந்து செய்வதறியாது நின்றனர். ஒரு கையில் தன் முன்னோர்களின் மிக முக்கிய ஆயுதமான தண்டெறியும் (3 முதல் 5 அடி நீளம் கொண்ட குத்து ஈட்டி) மறு கையில் கூர்மையான வாளும் கொண்டு நின்றான். வலது புறத்திலிருந்த புலி பாய்ந்து காளி முதுகை பிளக்க முயன்றது. முதுகில் புண்படுதலோ தற்கொலை செய்தலோ வீரமற்ற கோழைகளின் செயல் என்பதை நன்கு அறிந்த காளி தனது மார்பை வலப் பக்கம் திருப்பி கையொன்றில் இருந்த தண்டெறியால் புலியின் மார்பிலே குத்தி தனது கையினால் அப்புலியை தாங்கி நின்றான். மறு கையில் கொண்ட வாளால் மற்றொரு புலியை நோக்கி

வீசினான். அன்று முதல் அவன் புலிக்குத்தி என்னும் பட்டத்துடன் அழைக்கப்பட்டான்.தலைய நாட்டின் மாமன்னர் நம்பினோரை கைவிடாத நட்பின் இலக்கணம் போற்றும் கொங்கு தலையூர் மாமன்னர் தலையூர் காளி மன்னர் ஆவார்.இவர் கொங்கர் இனத்தை சார்ந்தவர். வேட்டுவர் குலத்தை சார்ந்தவர்.

போரில் முரட்டுத்தனமாக தண்டேறி எறிபவர். இவருடைய வம்சத்திற்கு தண்டேறி முத்துராஜா பட்டமுண்டு. இவர் வேட்டுவர்களின் பாரம்பரியமான குல தெய்வமான காளி எனப்படும் போர்த்தெய்வமன கொற்றவையை வணங்க கூடியவர். இவர் மிகச்சிறந்த காளி பக்தர் என்பதனால் வெற்றித்திலகம் நெற்றியில் இடும் பழக்கமுடையவர்.இவர் பிறந்த வேட்டுவர் குலத்தை தழைக்க வைப்பதற்காக போர்க்களத்தில் சூழ்ச்சி வலை பின்னபட்டபோது தன்னுடைய குல தெய்வமான தலையூர் பிரம்ம காளி தேவி இடம் வணங்கி "சத்தியம் காக்கும் கொங்க வேட்டுவர் குல அரச வம்சம் சத்தியமாய் வெட்ட வெட்ட தழைக்கும்" என தன்னுடைய கொங்கர் படைக்கு வரம் வாங்கியவர். பொன்னர்சங்கர் கதையின் வெற்றித்திருமகன் ஆவார்.





தலையூர் காளி மன்னர் ஆட்சிக்குப் பிறகு அரன்மணையும் கொத்தளங்களும் மன்னர் வழிபட்ட பத்ரகாளி கோவிலும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சிதைந்து நலிவடைந்தது தேவியின் கோபம் தான் காரணம் என்று அறிந்த பிறகு அம்மனுக்கு இஷ்டமான மன்னர் ஜீவசமாதியில் காலப்போக்கில் பீடம் அமைத்து அம்மனை நிலைநிறுத்தி மக்கள் வழிபட தொடங்கினர். இன்றைய ஆலயத்தின் கோபுரத்தில் மன்னரும் இரு சிப்பாயுமாக செங்கன்காட்டையனும், மெய் காப்பாளரும் இருவரும் உள்ளனர்.

செங்கன்காட்டு அய்யன் 8 கிலோமீட்டரில் கருப்பண்ண வலசு கோவில் உள்ளது மெய்காப்பாளர் சமாதி கார்விழி சிவன் கோயில் வளாகம் அம்மனின் கோபம் தீர ஆற்று வெள்ளத்தை நோக்கி பிரதிஷ்டை செய்துள்ளனர். மன்னர் எல்லா காலகட்டத்திலும் அம்மனை வணங்கி எல்லா காரியத்திற்கும் செல்வது வழக்கம். மன்னர் வம்சாவழியின் இரு பிரிவாக வாழ்கின்றனர்.

1. புங்கம்பாடி அரண்மனையார் அரவக்குறிச்சி கோயில்கள்

2. ஆண்டமுத்து குடும்ப வகையறா இனுங்கனூர்

## தலையூர் கோயில்

மன்னர் மறைவுக்குப் பிறகு அரண்மனை இரண்டாகப் பிரிந்து தங்கள் எல்லைகளைப் பிரித்து வாழ தொடங்கியுள்ளனர்.

தனது வாழ்நாள் முழுதும் வெற்றியை மட்டுமேகண்ட மன்னர் வயது மூப்பின் காரணமா இறைவனடி சேர்ந்த பிறகு அடக்கம் செய்யப்பட்ட இடம் கோடந்தூரில் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மதியாகூடலூர் செல்லும் ரோட்டில் ஆண்ட அப்பத்தான் பெயரில் அருள் பாலித்து கொண்டுள்ளார். தற்போது வெண்டுவ வெள்ளாளன் கூட்டம் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். மூடுகல்லுடன் உள்ளது. மன்னர் மகளை பிச்சம்பட்டி பட்டயத்திற்க்கு உட்பட்ட குவாரி சைட்

இடத்தில் கன்னிமார் தெய்வமாக அனைத்து மக்களும் வழிபட்டு செல்கிறார்கள்.

## கோட்டை கவுண்டர் வரலாறு

தம்மா நாயக்கன்பட்டி, கன்னிமார் பட்டி, கொரவப்பட்டி பாண்டியர்கள் காலத்தில் வீரப்பூரில் வேட்டுவ சிற்றரசர்கள் அரண்மனை கட்டி வீரமலை, தோகைமலை, நாகமலை, குன்றுகளை எல்லையாக கொண்ட புலியூர் செல்லாண்டியம்மன் வரையும், சோழர் எல்லையாக கொண்ட பொன்னிவள நாடு வரையும், சேரமான் நகர் வஞ்சியூர் வரையும், வீரப்பூர் வேட்டுவ அரசர்கள் ஆட்சியும், மும்மாரி மழை பொழிந்து உழவுத் தொழிலும் செய்து மக்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். வேட்டுவ அரசர் காலத்தில் இடையர் குலம், கோனார்கள், சாம்புவர், நாடார் போன்றவர்கள் அரசகுலத்திற்கு உறுதுணையாகவும், பாதுகாவலராகவும், உழவுத் தொழில் செய்து, ஆடுமாடு மேய்த்தல் தொழிலும் செய்து வந்துள்ளனர். சேர, சோழ நாட்டுடன் வேட்டுவ அரசர்கள் இணக்கமாகவும் பாண்டிய மன்னனின் ஆட்சியின் கீழ் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். மற்றும் மதுரை பாண்டிய மன்னர் குலத்திற்கு அரணாக இருந்து நல்லாட்சி புரிந்து வந்துள்ளனர்.

வீரப்பூர் வேட்டுவ அரசர் குலத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு மீனாட்சி என்று பெயர் வைப்பது இன்றுவரை இவ் வம்சாவழியினர் கடைப்பிடித்து வருகின்றனர். இவர்களின் குலதெய்வம் வீரண்ணன் (சிவன்) வீராயி (பார்வதி) ஆகும் ஒரு சமயம் அரச குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் குழந்தை, அரண்மனையில் கேள்வி ஞானத்துடன் வளர்ந்து வந்துள்ளது. அப்பெண் குழந்தை பூ பெய்யும் காலத்திற்கு முன் அகால மரணம் அடைந்துள்ளது. பிறகு தெய்வ நிலையை அடைந்து சிரசுமலைக்கு கீழ் வெம்புடியில் பெரிய அக்கா என்னும் தெய்வமாக மக்களுக்கு அருள்பாலித்து கொண்டிருக்கிறது. வீரப்பூர் சிறசுமலை வனத்திற்குள் ஆலயம் உள்ளது. தற்போது

சோழிய வெள்ளாளப் பிள்ளைகளின் குலதெய்வமாக உள்ளது. வீரப்பூர் வானம் பார்த்த பூமி ஆகும்.

## தலையூரும் வீரப்பூரும் திருமண உறவு முறை

இரு அரண்மனைக்கும் நீண்ட காலமாகவே திருமண உறவுமுறை இருந்துள்ளது வீரப்பூர் அரண்மனைக்கு தலையூர் மன்னனின் சகோதரி தங்காய் இளவரசியை திருமணம் முடித்து வைத்துள்ளனர்.

## வீரப்பூர் போர்

களப்பிரர் படைக்கு தலைமையேற்ற இரு தளபதிகள் (அண்ணன், தம்பி) வீரமரணம் அடைந்தனர். பலர் பிணையக்கைதியாக பிடிக்கப்பட்டனர், தலையூர் படை இன்றைய நாடு காணி மேடு வந்து செருப்பிலுள்ள மண்ணை தட்டியதால், அது செருப்பு தட்டிய மேடு என பேரும் உள்ளது. வீரப்பூர் போரில் தோல்வியுற்று வீர மரணம் அடைந்த களப்பிரர் தளபதிகள் (அண்ணன், தம்பி) இருவருக்கும் நடுகல் வைத்து வழிபட தொடங்கினர். நடுகல் வழிபாட்டை முத்திரையர்கள், சோழிய வெள்ளாளர்கள், கோணார்கள், ஊராளி கவுண்டர்கள் குலதெய்வமாக வணங்கி வருகிறார்கள். நடுகல்லுக்கு பூஜை செய்யும் வீரப்பூர் நாடு பூசாரிகளாகவும் உள்ளனர். வீரப்பூர் வெற்றியினால் வெங்கல நாட்டை, தலையூர் நாட்டு வேட்டுவர்களுக்கு பாண்டியனால் வழங்கப்பட்டது.

## மூவேந்தர்களின் வீழ்ச்சி

மூவேந்தர்களின் ஒற்றுமையின்மை காரணமாக விஜயநகர பேரரசு பெரும்படையுடன் வந்து மதுரையை கைப்பற்றியது,

மதுரையில் திருமலை நாயக்கருக்கு மன்னர் பட்டம் சூட்டப்பட்டது நாயக்கர்கள் ஆட்சிக்குப் பிரகடன படுத்தப்பட்டது. பாண்டியநாடு 76 பாளையக்காரர்களாகவும், ஜமீன்களாகவும்

பிரிக்கப்பட்டது. கொங்கு 24 நாட்டு சிற்றரசர்கள் திருமலை நாயக்கருக்கு இணக்கமாகவும் நாயக்கருக்கு கப்பம் கட்டியும் வேட்டுவ ராஜாக்கள் சிறப்பாக ஆட்சி செய்தனர்.

வீரப்பூர் வேட்டுவ அரசர்களின் அதிகாரம் பறிக்கப்பட்டு வீரப்பூருக்கு மாற்றா கடம்பூர் ஜமீனாக நாயக்கர் இனத்தாவரை மதுரை நாயக்கஅரசரால் நியமிக்கப்பட்டார்.இதனால் தான்தோன்றி மலை அருகிலுள்ள மூர்க்கனாங்குறிச்சி கிராமம் நத்தம் மேட்டிற்கு வேட்டுவ அரசகுடியினர் குடி பெயர்தனார்

வேட்டுவ ராஜாக்களின் குடும்பம் மற்றும் அவர்களை சார்ந்த பல குடும்பங்களும் நத்தமேடு பகுதியில் குடி அமர்த்தப்பட்டனர். பிற்காலத்தில் அப்பிபாளையம் (கருப்பண்ணன் பாளையம்) காக்காவாடியில், பிச்சம்பட்டியிலும் அரண்மனைக்காரர்களாகவும் இன்றும் வாழ்ந்து கொண்டு உள்ளனர். தம்மா நாயக்கன்பட்டியில் மூன்று ஏக்கரில் கோட்டை கட்டி நல்ல ஆட்சி புரிந்து வந்துள்ளனர். கோனார், பறையர், சாம்பவர் சமூகம் இவர்கள் உழவு தொழிலுக்கு பேருதவியாக இருந்தனர். கோட்டையை பராமரித்த பறையருக்கு 8 ஏக்கர் பூமி வழங்கப்பட்டது. நத்தமேட்டில் பாண்டிய லிங்கேஸ்வரர், துர்க்கை மாரியம்மன், காளியம்மன், பகவதி அம்மன் என அனைத்து கோவில்களும் அமைத்து வழிபாடு செய்தனர். வீரப்பூரை ஆண்ட வேட்டுவ வம்சத்தின் சிலைகளும் கல்வெட்டும் உள்ளது. இதன் ஆதாரம் கரூர் சேரமான் அருங்காட்சியகத்தில் உள்ளது.

கோட்டைக்கவுண்டர் வகையறா குலதெய்வம் முற்காலத்தில் நஞ்சை குறிச்சி குங்கும காளியம்மன் ஆகும். தற்பொழுது கொரவபட்டி - அரசுமரத்தையன் சாமி, புடவைக்காரி அம்மன், வீர மருதையண்ண கருப்பண்ணசாமி சூரியனும் - சந்திரனும் உள்ளவரை நத்தமேடு கிராமத்திற்கு (மூர்க்கணாங்குறிச்சி) பெரிய வீடு முப்பாடுஉரிமை கோட்டை கவுண்டர் குடும்பம் தான். காலத்தின் காரணமாக கோட்டை

அழிந்து சேதமடைந்தது பிற்காலத்தில் அரசாங்க கல்விக்கூடம் அமைக்க தானமாக வழங்கப்பட்டது. கோணார்கள் ஆடு, மாடு மேய்த்தல் தொழில் செய்து வந்தனர். கால்நடைகள் நீர் அருந்த இன்றும் அவர்கள் பயன்படுத்திய கிணறு தம்மா நாயக்கன்பட்டியில் உள்ளது. இடையர்கள் (கோணார்) வணங்கும் வீரமாத்தி அம்மன் கோவில் அங்கு உள்ளது.

## தலையூர் காளியின் வீரவாள் திருவிழா

கொங்கு தலைய நாட்டின் அருள்மிகு காளியம்மன் கோயில் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஆண்டு தோறும் மாசி மாதம் மகாசிவன் ராத்திரி முடிந்து திருவிழா சாட்டி, அம்மனுக்குக் காப்புக் கட்டி, தலைய நாட்டு அரண்மனையார் பட்டுத்துறை பெரியாயி வள்ளல் கவுண்டருக்கும். பூமாதேவம் சௌந்திரபாண்டிய வள்ளல் கவுண்டர். நவமரத்துப்பட்டி. நீலியப்பகவுண்டர் வம்ச அரண்மனையாருக்கும் கோயில்லில் கெடா வெட்டி வேட்டுவ முத்துராஜா கோயில் பூசாரிக்கும். தோட்டி பறையருக்கும் காப்புக் கட்டி பிறகு அரண்மனையார் அனைவரும் கிராமங்களில் வரிவசூல் செய்யச் செல்வதால் இவர்கள் காப்பு அவிழ்த்து அருள்மிகு. காளியம்மன் காவல் பூதத்தில் கட்டிவிட்டு வரிவசூலுக்குச் செல்வார்கள். மற்றவர்கள் அனைவரும் கோயிலில் பச்சைப்பாயில் படுத்து விரதம் இருந்து வருவார்கள்.

தலையூர் அரண்மனை பிள்ளையார் சன்னதியில் பச்சைப் பந்தல் போடப்படும். காப்புக்கட்டி 8-ஆம் நாள் கோயிலில் இருந்து அரண்மனையார் வீட்டுக்குச் சென்று அங்கிருந்து அரண்மனையாரை அழைத்து தலையூர் அரண்மனையார் பிள்ளையார் சன்னதிக்கு வந்தவுடன் கோயிலிலிருந்து மேளதாள முழக்கத்துடன் ஊர்மக்கள் காப்புக் கட்டிய அனைவரும் அரண்மனை பிள்ளையார் சன்னதிக்குச் சென்று, அங்கிருந்து சௌந்திரபாண்டிய வள்ளல்கவுண்டர் இல்லத்துக்குச் செல்வர்

பின்னர் அவர் துணைவியார் அரண்மனை அன்னதான மடத்துக்கு வந்து, வண்ணான் மாத்து விரித்து தாம்பாளத் தட்டில் பூசைப்பொருள் மற்றும் வீரவாள் வைத்து, தாம்பாளத் தட்டுடன் அரண்மனையார் மனைவி மேள முழக்கத்துடன் அரண்மனைப் பிள்ளையார் சன்னதிக்குச் சென்று பிள்ளையாருக்குப் பூசை செய்து சௌந்திரபாண்டிய வள்ளல் கவுண்டரிடம் அந்த வீரவாளை கொடுப்பார் அதன் பின்னர் அருள்மிகு காளியம்மன் சன்னதிக்கு வந்தவுடன் "குதிரை துலுக்கும் விழா". நடைபெறும் குதிரையை அழைத்துக்கொண்டு. தலையூர் அரண்மனைப் பிள்ளையார் சன்னதிக்குச் சென்று, அங்கிருந்து பின் ஈஸ்வரன் சன்னதிக்குச் சென்று. பின் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று. மகாமுனி கோயில் சென்று, ஆற்றுக்குச் சென்று. பச்சக்கரும்பு பந்தல் போடப்பட்டு வண்ணான் மாத்து விரித்து. மூன்று கரகம் வைத்து, மூன்று எலுமிச்சம்பழம் வைத்து பூசை செய்து, குதிரையின் கால்களை மூன்று கரகம் நீரில் கழுவி எலுமிச்சம்பழம் மூன்றையும் எடுத்து வண்ணான் மாத்துடன் குதிரையின் முதுகில் வைத்து அருள்மிகு காளியம்மன் அருள் இறங்கி குதிரை துலுக்கியவுடன் ஆட்டுக்குட்டி வெட்டி. குதிரையை அழைத்து அருள்மிகு காளியம்மன் சன்னதிக்கு வந்தவுடன் அரண்மனைப் பொங்கல் விழா நடக்கும் . அரண்மனைக் கிடா வெட்டி விழா தொடங்கும். மறுநாள் காலையில் பொங்கல் விழா, அதன் பின் அன்று மாலை அரண்மனை குதிரை எடுப்புவிழா நடைபெறும் (அரண்மனை பிள்ளையார் சன்னதியிலிருந்து) மறுநாள் பொதுக் கிடா வெட்டுதல். அதன் மறுநாள் அம்மன் தேர்விழா முடிந்து அன்று இரவு வரவு செலவு பார்த்தல், பின் அம்மனுக்கு ரத்தச்சோறு காவு கொடுத்த பின் மறு அபிஷேகம் நடைபெற்றதும் திருவிழா முடியும்.

**தகவல்:**

**கி.பன்னீர் செல்வம்**

பசுபதிபாளையம், கரூர்.

கொங்கு வரலாற்றில் தலையூர் நாடு, வேட்டுவக் கவுண்டர்களின் வலிமையையும், அவர்களின் பாரம்பரியத்தையும் குறிக்கிறது.

# தலையநாட்டுப் பட்டாக்காரார்கள்

தலையநாட்டுப் பட்டாக்காரார்கள் வேட்டுவ கவுண்டர் குலதை சார்ந்த குன்னடி வேட்டுவர்கள். பிற்காலப் பாண்டியார் காலத்தில் முதலாம் மாறவார்மன் குலசேகரப் பாண்டியன் பிரதிநிதியாக பாண்டிய அரசன் சடையவார்மன் சுந்தர பாண்டியன் என்பார் கி.பி. 1276 முதல் 1293 முடிய கொங்கு தேசத்தில் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்துள்ளார். அப்போது தாராபுரம் பகுதிகளில் கள்ளர்களின் தொல்லைகள் அதிகமாக இருந்துள்ளன. கள்ளர்களை அடக்குபவர்களுக்குச் சீமை சாரி செய்து கொடுப்பதாக அறிவித்தனர். இந்த அறிவிப்பு பல்வேறு பகுதிகளிலும் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில்

தாராமங்களத்தை ஆட்சி செய்து வந்த குன்னாடி ராசாவும், உரிமைப்படை ராசாவும் வேட்டைக்காகத் தென்னாடு வந்தபோது மேற்படி அறிவிப்பைத் அறின்தனர்.

குன்னாடி ராசாவும், உரிமைப்படை ராசாவும் மாமன் மைத்துனர்கள். இவர்கள் சடையவர்மன் சுந்தர பாண்டியனைச் சந்தித்து மேற்படி கள்ளர்களை அடக்கிவிடுவதாகப் வெற்றிலை, பாக்கு வாங்கிக் கொண்டு தன் நாட்டிற்கு திரும்பிச் சென்றனர். அங்கு பெரியவர்களிடம் நடந்தவற்றைக் கூற அவர்கள் தேவையான ஆயுதங்களையும், படைகளையும் அளித்து நல்வாக்கு கொடுத்து, தென்னாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

குன்னாடி வேட்டுவ மன்னர் சங்ககிரி மலையின் முதல் கோட்டை கட்டினார் பின்னர் மாரியம்மன், காளியம்மன் கோயில் கட்டிய வரலாறை கூறும் கல்வெட்டுச் சாசனம். சேலம் அரசு ஆவணத்தில் (அரசிதழ்ளில் குறிகக்கப்பட்டு உள்ளது).

தென்னாடு வந்த குன்னாடி ராசனும், உரிமைப்படை ராசனும், கள்வர்களை விரட்டி வெற்றிபெற்று நாட்டை விட்டே விரட்டினர் இதனால் பாண்டடியன் “வேட்டுவ ராசாக்கள்“ பாராட்டி 18 விருதுகளும் கொடுத்து . மணுலூரைச் சேர்ந்த பாடி பண்ணிரண்டு, பூண்டி மூப்பத்தாறு கிராமங்கள் உட்பட சீமைக்கு பட்டகாரராகப் பட்டம் சூட்டினார்; மணலூர் நாட்டில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தனர். மணலூர் பட்டக்காரர் என்ற பெயர் விளங்கியது. பின்னர் “மணலூர் நாடு”, தலையூர் என்றும் பெயரானது:

இப்பரம்பரையில் கீழ்க்கண்ட பட்டக்காரர் பெயர்கள் வம்சாவளி மூலம் தெரிகிறது

**அலகடம் செய்தகைக்கு ஆளியிடும் பாண்டிய வள்ளல்.**
**தண்டேறி முத்தைய பாண்டிய வள்ளல்.**
**சவுந்தர பாண்டிய வள்ளல்.**
**அன்னதானப் பாண்டிய வள்ளல்.**
**வாரணவாசிப் பாண்டிய வள்ளல்.**
**மெய்ப்பொருள் நாத பண்டிய வள்ளல்.**
**சொக்கய பாண்டிய வள்ளல்.**
**சவுந்தர பாண்டிய வள்ளல்.**
**கனகசபாபதி பாண்டிய வள்ளல்.**
**சௌந்தர பாண்டிய வள்ளல்.**
**கனகசபாபதி பாண்டிய வள்ளல்.**

**சௌந்தர பாண்டிய வள்ளல்.**

இந்தப் பரம்பரை மெக்கன்சி சுவடி ஆவணத்தின்படி கி.பி. 1393 முதல் கி.பி. 1784 வரை 12 தலைமுறைகள் (391 ஆண்டுகள் தலையூர் நாட்டை ஆண்டுள்ளனர்).

தலையூரில் பெரியநாயகி அம்மன் என்ற பிரம்மகாளிக்குக் கோயில் கட்டி வழிபட்டு வந்தனர்.

குன்னாடி ராசனுக்கு சௌந்தர பாண்டிய வள்ளல் என்றும் உரிமைப்படை ராசனுக்கு பெரியசாமி வள்ளல் ராசனென்றும் இரு வகைப்பேருக்கும் செப்பேட்டுச் சாசனம் கொடுக்கப்பட்டது.

இப்பரம்பரையில் வந்த கனகசபாபதி வள்ளல் என்பார் திருஞான சம்பந்த கண்ணுடைய வள்ளல் மடத்திற்குச் சீடரானார்; கனகசபாபதி பாண்டிய வள்ளல் எனப் பெயர் மாற்றம் பெற்றார். பிறகு அப்பரம்பரையினர் சைவர்களாயினர். அதன் பின் வந்த அனைத்துப் பட்டக்காரர்களும் தங்கள் பெயரில் "வள்ளல்" என்பதைச் சூட்டிக் கொண்டனர்.

பின்னர் கீழ்த்தலைய நாடு மேல் தலைய நாடு என இருபாகமாகச் செய்து கீழ்த்தலைய நாட்டுக்கு 8 கிராமங்களும், மேல் தலைய நாட்டுக்கு 5 கிராமங்களும் பிரிவினை செய்து கொண்டார்கள். கீழ்த்தலையூர் கிராமங்கள் தாராபுரம் வட்டத்தில் 1.தலையூர், 2.வேஸாம்பூண்டி (அரவக்குறிச்சி வட்டம்), 3.சாந்தப்பாடி, 4.மொடக்கூர், 5.சேந்தமங்கலம், 6.புங்கம்பாடி, 7.இனுங்கலூர், வேலம்பாடி, 8.அரவக்குறிச்சி - பள்ளப்பட்டி ஆக 8 கிராமங்கள் சவுந்தர பாண்டிய வள்ளலுக்கும், மேல் தலைய நாட்டைச் சேர்ந்த கிராமங்கள் தாராபுரம் வட்டத்தில் 1.கிளாங்குண்டல், 2.பெரியமருதூர், 3.சின்னமருதூர், 4.கன்னிவாடி, 5.இடைக்கல்பாடி ஆக 5 கிராமங்களும் மேல்தலைய நாட்டுப்பட்டக்காரர் வள்ளல் பெரியாயி மன்னர்அவர்களுக்கும் இவ்விதமாகப் பிரிந்து நன்கு ஆண்டு வந்துள்ளனர்.

## மைசூரு சமஸ்தானதுடன் போர்

பதினோராம் பட்டக்காரர் காலத்தில் சுமார் கி.பி.1755-இல் மைசூர் சமஸ்தானத்தின் (கி.பி. 1742 மதுரை போரில் நாயக்கர்களிடமிருந்து திண்டுக்கல் சீமை மைசூரு

சமஸ்தானத்தால் வெற்றி கொள்ளப்பட்டது).எனவே மைசூர் சமஸ்தானம் பட்டக்காரருக்கு தலைய நாட்டு நஞ்சைக் காணியின் 12 புஞ்சைக் காணயில் 500. என தண்டிகை மானியம் இவர்களுக்கு விட்டார்கள். மைசூர் சமஸ்தானத்தால் திண்டுக்கல் சீமை கைப்பற்றப்படும் முன்பு தலைய நாட்டுப் பட்டக்காரர் மெய்ப்பொருள்நாத வள்ளலின் இரண்டு மகன்களும் தலையூரை விட்டு நீங்கி தனக்கான கிராமங்களைப் பிரித்துக் கொண்டு புங்கம்பாடிக்கு மூத்த மகன் பூசைய வள்ளலும், பூமதேவத்திற்கு இளைய மகன் கனகசபாபதி வள்ளலும் சென்று தங்களுக்கான அரண்மனை கட்டி பட்டக்காரர்களாக இருந்துள்ளனர். புங்கம்பாடியில் பூசைய வள்ளல் கரிய காளியம்மன் கோயிலும், பூமதேவத்தில் பட்டக்காரர் கனகசபாபதி வள்ளல் மண்மாரியில் கரியன்னன் கோயில் கட்டி வழிபட்டுள்ளனர்.

### ஆங்கிலேயர் காலத்தில் ஜமீன்தாரார் முறை இரத்து

ஆங்கிலேயர் காலத்தில் ஜமீன்தாரார் என்பது இரத்து செய்யப்பட்டு கிராம முன்சீப் ஆக நியமிக்கப்பட்டார்கள்.

கீழ்த்தலைய நாட்டு வள்ளலுக்கு புங்கம்பாடியில் 700 ஏக்கர் பூமியும், பூமதேவத்தில் 500 ஏக்கர் பூமியும், இனுங்கனூர் - வேலம்பாடியில் 500 ஏக்கர் பூமியும், தலையூரில் நஞ்சை நிலமும் மாந்தோப்பும் இருந்தன.

## ஐந்து அணைகட்டிய வேட்டுவர் அரசர்கள்

பூமதேவம் பட்டக்காரர் பரமத்தி பட்டக்காரர் பரம்பரையில் பெண் கேட்டபோது, “உங்கள் நாடு மேட்டாங்காடாக இருக்கிறது. பெண் தர முடியாது” என்று கூறிவிட்டனராம். அதற்காகவே பூமதேவம் பட்டக்காரர் கனகசபாபதி வள்ளல் நங்காஞ்சியாற்றில் கோரையூத்திலும், பள்ளப்பட்டி அருகில் 2 தடுப்பு அணைகளும், அரவக்குறிச்சியில் 2 தடுப்பு அணைகளும் மண்மாரியில் குளமும் கட்டினார். “வள்ளல் நாரம்”

என்ற ஊரை உருவாக்கினார். அதன் பிறகே பரமத்தி (இருக்கூர்) பட்டக்காரர் அரண்மனையிலிருந்து பெண் கொடுப்பதும் எடுப்பதும் நடந்து வருகிறது. அந்த வள்ளல் நகரமே மங்கபுரமாக மாறி இன்று பள்ளபட்டியாக இருக்கிறது.

பூமதேவம் பெரியபட்டக்காரர் வாரணவாசி வள்ளல் 1923-இல் காலமானார். அதன்பின் அவரது மகன் கனகசபாபதி வள்ளல் நிர்வாகத்திற்கு வந்தார். பள்ளபட்டிக் கோயில் உரிமை மறுக்கப்பட்டபோது தக்க சாட்சியங்களோடு உரிமையை மீட்டார்; எதிர்த்தவர்கள் ஊரை விட்டே போய் விட்டனர். பிறகு வழக்குப் பதிவு செய்து இனுங்கனூர் பட்டக்காரரான கனகசபாபதி வள்ளல் பள்ளபட்டி மாரியம்மன் கோயில் முதல் உரிமை பெற்றார்.

பூமதேவம், இனுங்கனூர் பட்டக்காரர் கனகசபாபதி வள்ளல் 1930 முதல் 1985 வரை 55 ஆண்டுகள் வேலம்பாடி கிராம முன்சீப் வேலை பார்த்து வந்துள்ளார். அரசுச் சான்றுகள் பல பெற்றுள்ளார். கவிராயர்கள் பாடிய கவிதைகள் உள்ளன. அரசுக்கும், காவல் துறைக்கும் உதவியாக இருந்துள்ளார்.

தலையாரிப்பட்டி பிரபல காளி குறவன் 2 வேலி தாண்டி ஓடியபோது கனகசபாபதி வள்ளலின் மணிக் குதிரையும் 2 வேலி தாண்டி ஓடி காளிக்குறவனைக் பிடிக்க உதவியது. 17.10.1904 அன்று பிறந்த கனகசபாபதி வள்ளல் 30.01.1987 அன்று காலமானார்.

அவருடைய மகன் ஆண்டமுத்து வள்ளல் முதுகலைப் பட்டம் பெற்று ஆசிரியர் பணியாற்றி, நொய்யல் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக விளங்கி இப்போது, புஞ்சைப் புகழூரில் வாழ்ந்து வருகிறார். அவரது மகன் சரவணக்குமார் வள்ளல் பெங்களூரில் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

பட்டக்காரர் கனக சபாபதிவள்ளலின் மூத்த சகோதரர் பெரியசாமி வள்ளல் என்பார் நெடுங்காலம் இனுங்கனூர் கிராம முன்சீப் ஆக இருந்துள்ளார்.

**வாரணவாசி வள்ளல்**
**அண்மைக்கால வம்சா வழியினா?**
**பெரியச்சாமி வள்ளல் வழயினர்**
**கனகசபாபதி வள்ளல் 1904-1987**
**சௌந்திரபாண்டிய வள்ளல்**
**மகன் ஆண்டமுத்து வள்ளல்**
**முத்துராமையா வள்ளல்**
**பேரன் சரவணக்குமார் வள்ளல்**

**மெய்ப்பொருள் நாத வள்ளல்**
**தமிழரசு வள்ளல், பூபதி வள்ளல்**
**கதிர்வேல் வள்ளல்**
**ரவிக்குமார் வள்ளல் வேலுசாமி வள்ளல்**
**தமிழரசு, கவியரசு வள்ளல்கள்**
**மேல் தலையநாட்டுப் பட்டக்காரர்கள்**

தமிழ்நாட்டில் பழமையானதோர் ஊர் பொருளூர். வேளாம்பூண்டி, தலையூர் கன்னிவாடி கிழாங்குண்டல் சின்னமருதூர், இடைக்கல்பாடி குமாரபாளையம் ஆகிய 7 ஊர்களைக் கொண்டது மேல் தலையநாடு.

பொருளூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேல் தலையூர் பட்டக்காரராக நியமிக்கப்பட்டார்கள். வேட்டுவர் மரபில் வந்த வள்ளல் பெரியாய்க்கவுண்டர் வம்சாவளியினர். இவா?கள் நல்ல பெரியாய்க்கவுண்டர் வள்ளல் பெரியாய்க் கவுண்டர் என்ற பெயர்களை மாறி மாறிப் புனைந்து கொண்டு நாட்டு நிர்வாகம் செய்தனர். இவர்களின் வம்சாவளி கி.பி.1379 முதல் பட்டம் பெற்று நிர்வாகம் செய்ததாகக் கூறுகிறது. கம்பெனியார் ஆட்சி வரும்வரை 13 பட்டக்காரா?கள் 388 வருடம் நிர்வாகம் செய்ததாகக் கூறுகிறது.

2 - ஆம் பட்டக்காரர் 13-இல் பெரியாய்க் கவுண்டா் மருணப்பட்டி என்னும் ஊரில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தார். 5-ஆம் பட்டக்காரர் கிழாங்குணடலில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தார்.

கி.பி. 1765 - ஆம் ஆண்டு (விய தை 13) வள்ளல் பெரியாய்க்கவுண்டர் காலமாகவே அவர் மகள் நல்ல பெரியாய்க்கவுண்டர் அவர்கட்கு மைசூர் ஐதர் அலியின் அதிகாரி பீமரால் பட்டம் கட்டி நிர்வாகம் செய்ய அனுமதித்தார்.

இவ்வம்சாவளியின் இன்றைய வாரிசுகள் சக்திவேல் பெரியாய்க்கவுண்டர் அவரது மகன் பரணீதரன் பெரியாய்க் கவுண்டர் ஆகிய இருவரும் அரவக் குறிச்சி வட்டம் இனுங்கனூரிலும், காலம் சென்ற ராமமூர்த்தி பெரியாய்க் கவுண்டர் மகன் ஜீவன் ராம் பெரியாய்க் கவுண்டர் தாராபுரம் வட்டம், கிழாங்குண்டலிலும் வாழ்ந்து வருகின்றனா?.

**சான்றுகள்:**

1. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி - தொகுதி II வள்ளல் கவுண்டன் வம்சாவளி பக்கம் 143 TV BOK 0010699, 194 Pages. 194 Page, 12 MB PDF.

2. பட்டக்காரர் கனக சபாபதி வள்ளல் எழுதிய “தலையநாட்டுப் பட்டக்காரர்கள் வரலாறு என்ற கையெழுத்துச் சுவடி

**தகவல்:**

**க.ஆண்டமுத்து வள்ளல்,**
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,
தலைமை ஆசிரியர் (பணி நிறைவு),
புஞ்சைப் புகழூர்

## குன்னாடி வேட்டுவர் (குன்ற கட்டி)

குண்ணாடி என்பது குன்னாடி, குன்றாடி என்பதன் திரிபு. குண்ணுடையான் என்பது குன்னுடையான், குன்றுடையான் என்பதன் திரிபு.

குன்னத்தூர் என்பது குன்றத்தூர் என்பதன் திரிபு. குன்னுடையாக் கவுண்டர் என்பது குன்றுடையாக் கவுண்டர் என்பதன் திரிபு ஆகும்.







தலையூர் தூவக்கத்தில் உள்ள நாயக்கர் கால "காளிகோயில்"



கெட்டி முதலியார்களைப் பற்றி குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர், கொங்கு மண்டலம் சேர, சோழ, பாண்டியர் காலத்திற்கு பின்னாலும் வேட்டுவப் பாளையக்காரர் களால் சீரும் சிறப்புடனும் ஆளப்பட்டு வந்தது எனவும், அவர்களே சங்ககிரி சாமப்பள்ளி தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் (Andiyur) ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டிக் கொண்டு ஆண்டனர் என்று கூறியுள்ளார் (Wilson. P. 425. No. XVlll) சரம்பள்ளியில் தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்கள் கோட்டை இருந்ததாக பாளையப்பட்டுகளின் வரலாறு (தொகுதி -1 பக்கம் 1 - ல்) கூறுகிறது.

சரம் பள்ளியில் தென்மனை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்களின் கோட்டை இருந்ததாக பாளையப்பட்டுகளின் வரலாற்று நூலில் (தொகுதி 1, பக்கம். 1 – ல்) குறிப்பிடப்பட்டுள்ளது.

## குன்னாடி வேட்டுவர் பற்றிய வரலாற்று ஆவணங்கள்

1) **கல்லெழுத்துச் சான்று:** கி.பி.7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்று ‘குன்ற கட்டி’ என்பாரைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு எடக்கல் என்ற இடத்தில் கிடைத்துள்ளது.

2) மூவேந்தர்கள் களப்பிரர் காலத்தில் சங்ககிரி கோட்டை மற்றும் அந்தியூர் கோட்டையிலிருந்து குன்னாடிகளை தலையூர் அழைத்து சென்றனர்.

(கொடிவேரி அணை: பக்கம். 111, 112, 113)

### குன்ன வேட்டுவர் - பொன்ன வேட்டுவர்

#### மோரூரை ஆண்ட பொன்ன வேட்டுவர்

சோழன் பூர்வ பட்டயத்தில்(கூ.1843): காவலியர், மாவலியர், பூழுவர், குன்றுவர் கொங்கின் பூர்வ குடியினர்

என்றுள்ளது. பூம்பரையில் வேடர் குன்னுவரில் நாகப்ப மண்ணாடி (மன்னாடி) கோட்டையூர் நகர் அதிகாரிய சேரன் நியமித்துள்ளார்.

3) அல்லாள இளையான் செப்பேடு 15ஆம் நூற்றாண்டு பட்டையம்

குன்னாடி கவுண்டர் குன்றத்தூர் துர்கம் (கோட்டை) என்று குறிப்பிட்டு உள்ளது (துர்கம் என்பது கோட்டை என்பதின் வடமொழி சொல்) மேலும் பட்டையத்தில் முதலில் குன்னடி வேட்டுவர் பெயரே இடம் பெற்றுள்ளது மேலும் கோட்டை என்றும் உள்ளது இதன் மூலம் குன்னடி வேட்டுவர்கள் அரசு அதிகாறதுடன் இருந்து உள்ளார்கள் என்பதை உறுதி செய்ய முடிகிறது

தலையநாடு, மணல் நாடு, வேங்கல நாடு, கிழங்குநாடு ஆகிய கொங்கு 24 நாடுகளில் ஊராளும் பொருப்பு அல்லாள இளையானுக்கு இருந்தது. அதனால் நாயக்கர் பட்டம் உண்டு, அவன் அரைய நாட்டு வடகரையாற்றூரில் இருந்தவன். திருச்செங்கோட்டில் ஸ்ரீ நாகேசுவரர் அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலியவை கட்டியவன். கொங்கு மண்டல சதகத்தில் இவனைப் பற்றிய குறிப்பு வருகின்றது.

**வடமுக நின்று வருகா விரியின் வளத்தை யென்றுந்**
**திடமுறு கொங்கினும் பாசனமாகச் செவப்பிரித்த**
**அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்**
**வடகரை யாற்றூர் திகழ்வது வுங் கொங்கு மண்டலமே.**

அவன் எடுத்த வாய்க்கால் ராச வாய்க்கால் ஆகும். அது ஜேடர்பாளையம் அணையின் இடது கரையில் பிரிகின்றது. கொங்குநாட்டில் காவிரியில் இருந்து பிரியும் முதல் வாய்க்கால் இதுவேயாகும். இதற்கு முன் காவிரியால் கொங்கு வளம் பெறவில்லை. இதனை மாற்றிய புகழ் அல்லாளனை வந்து அடைகிறது.

இதகையா பெருமை மிக்க அல்லாள இளையான் செப்பேட்டில் குன்னாடி கவுண்டர் **குன்றத்தூர் துர்கம்** (கோட்டை) என்று குறிப்பிட்டு உள்ளது (துர்கம் என்பது கோட்டை என்பதின் வடமொழி சொல்) மேலும் பட்டையத்தில் முதலில் குன்னடி வேட்டுவர் பெயரே இடம் பெற்றுள்ளது மேலும் கோட்டை என்றும் உள்ளது இதன் மூலம் குன்னடி வேட்டுவர்கள் அரசு அதிகாறதுடன் இருந்து உள்ளார்கள் என்பதை உறுதி செய்ய முடிகிறது

**அல்லாள இளையான் செப்பேட்டில் அவையில் கூடியிருந்தோர் பெயர்கள் வருமாறு:**

குன்றத்தூர் துர்கம்(கோட்டை ), குன்னாடிக்கவுண்டர்

2. மோரூர் பொன்ன வேட்டுவரில்
கீழ்கரை பூந்துறை நாட்டில் பாண்டி கோத்தரம் பேரகவுண்டர்
வேம்ப கோத்தரம் குமரகவுண்டர், சின்னாக்கவுண்டர்

3. பரமத்தி சீமை

| | |
|---|---|
| மூளைக் கோத்தரம் | அல்லாழி இளையா நாயக்கர் |
| மூளைக் கோத்தரம் | திருமலை நாயக்கர் |
| மூளைக் கோத்தரம் | நாதக்கவுண்டர் |
| மூளைக் கோத்தரம் | முத்துகாளி கவுண்டர் |

4. தலையநாடு

| | |
|---|---|
| குன்னாடு கோத்தரம் | வள்ளய கவுண்டர் |

| | | |
|---|---|---|
| 5. | மணல் நாடு | பிள்ளைத் தேவணன் |
| 6. | நடந்தை | குமார கவுண்டர் |
| 7. | வேங்கல நாடு | காளத்தி கவுண்டர், நீலியப்பகவுண்டர் |
| 8. | கிழங்கு நாடு | திருமலைக்கவுண்டர், குமாரசாமிகவுண்டர் மற்றும் பலர் |

திருச்செங்கோடு குன்றத்தூர் துர்க்கத்தைச் சேர்ந்தது. மோரூர், நடந்தை என்பன ஊர்ப் பெயர்கள். பரமத்தி சீமை அரைய நாட்டைச் சேர்ந்தது.

4) வேங்கடத்திற்க்கு அருகில் கட்டி நாட்டு அரசர்களான குன்னக்கட்டி மற்றும் பொன்னங் கட்டி அரசர்கள் ஓமலூர் தாரமங்கலத்தை ஆண்டனர். இவர்கள் சங்ககிரி கோட்டை வரை சேர வேந்தன் துணையுடன் ஆட்சி செய்தனர் பின்னர் இவர்கள் களப்பிரர்களை அடக்கப் மூவேந்தர்களால் கருவூர் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அருவா, வடதலை அருவா நாட்டில் (தொண்டை மண்டலம்) இருந்த அருவாளர்கள் எனும் வேட்டுவ ஆட்சியாளர்களை கருவூர் பகுதிக்கு அழைத்து வந்தனர். அந்தப் பகுதிகள் இன்று அரவக்குறிச்சி என்று அழைக்கப்படுகிறது. அருவா நாட்டில் எல்லையிலிருந்த வடுகர் தமிழுக்கு இட்ட பெயர் அருவா, தமிழர்களுக்கு அவர்கள் இட்ட பெயர் அருவாளர்கள். தொண்டை மண்டலத்தில் மாவிலங்கையை ஆண்ட இலங்கை வேட்டுவர்கள் கொங்கில் தன் ஆட்சி (தன்னாட்சி) பெற்றனர்.

களப்பிரர் போர் (தமிழ் வேட்டுவர் ஏளு கன்னட வேட்டுவர்) தமிழகத்தில் நடந்ததால் வட கொங்கில் இருந்த தமிழ் வேட்டுவ ஆட்சியாளர்கள் மற்றும் தொண்\டை மண்டலத்தில் இருந்த தமிழ வேட்டுவ ஆட்சியாளர்களையும் சேர, சோழ, பாண்டிய வேந்தர்களால் கொங்கில் இடப்பெயர்ச்சிகள் செய்தனர்.

இதேபோல் காஞ்சிபுரம் எனும் கச்சியில் இருந்து வெங்காஞ்சி அல்லது வெங்கச்சி எனும் வேட்டுவர்கள் கொங்கில் இடப்பெயர்ச்சி ஆனார்கள்.

5) குன்ன வேட்டுவப் பாளையக்காரர்கள் அமராவதிப் பட்டணம் குன்ன வேட்டுவப் பாளையக்காரர்கள் கைப்பீது:

6) சுந்தரபாண்டியனின் கி.பி1290ம் ஆண்டுக் கல்வெட்டு இளையான் நல்ல உடையப்ப முதலியால் கட்டப்பட்டது இளமீசுரர் கோயில்' என்கிறது (AR 23/1900)

7) குண்ண வேட்டுவர் நடுகள்

**இடம்:** நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குட்டிமேய்க்கம்பட்டி நடுகல்.

**காலம்:** கி.பி 16

**செய்தி:** குண்ண வேட்டுவ குலத்தைச் சேர்ந்த பெரிய கவுண்டன் மகன் ஆவுடைய கவுண்டன் கருகஞ் சண்டையில் இறந்ததாக அவன் மகன் வா மலைக்கவுண்டன் எடுத்த நடுக்கல். குன்றத்தூர் துர்க்கத்தை குன்னத்தூர் துர்க்கம் என்றும் அழைக்கப்பட்டது.

## கல்வெட்டு

1). பிரசோற்பதி வரு

2). ஷம் ஆவணி மாதம் 5 தேதி

3). குன்னத்தூர் துருக

4). த்திலிருக்கும் குண்ணா

5). ம் வேட்டுவரில் பெரிய

6). கவுண்டன் மகன்

7). ஆவுடைக் கவுண்ட

8). ன் கருகஞ் சண்டையில்

9). பட்டதுக்கு அவன் மகன் வா

10). மலை கவுண்டன் உபை யம்.

கண்ணப்பர் கல்வி மடல்செய்தி, மோரூர் ஊராளியப்பன் நடுகல் பொன்ன வேட்டுவர்என்கிறது. அல்லாளன் இலையான் வரலாற்றில் குன்னத்தூர் துர்க்கம் - குண்ணாடி வேட்டுவர் என்றும் போரூர் ஊராளி பொன்ன வேட்டுவர் என்றும் கண்டுள்ளது.

8) சங்ககால கட்டி எனும் 'பல் வேற்கட்டி' மரபினர் வேற்படையில் சிறந்தவர்கள்.

**"நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி**
**தொன்னரும் கடும் திறல்கங்கன் கட்டி**
**பொன் அணி வல்வில் புன்றுரை" - அகநானூறு 44**

சங்க காலத்தில் கொங்கு வேட்டுவ படையில் 'கவுணப்படை' சிறந்து விளங்கியதாக பதிற்றுப்பத்து கூறுவதுபோல் வேற்படையில் சிறந்தவர்கள் கட்டி அரசர்கள். அவர்கள் குன்றக் கட்டி எனும் குன்னக் கட்டி (குன்னாடி வேட்டுவர்) பொன்னங் கட்டி எனும் பொன்ன வேட்டுவர் ஆவர். கஜல் கட்டி எனும் யானை கட்டி வேட்டுவர். கரிபடை வேட்டுவர் சத்தியமங்கலம் அருகில் ஒடுவங்க நாட்டு புலியன்பட்டி (புளியம்பட்டி) அருகில் வாழும் யானை கட்டி எனும் ஊரில் வாழ்ந்தது குறிப்பிடத்தக்க தாகும். வடகரை நாட்டு தலைநகர் அந்தியூரில் செல்லீஸ்வர கோயில் கல்வெட்டு பொன்னங்கட்டியார் எனும் துறவி சமாதி ஆனதால் சமாதி கட்ட பாசறை வேட்டுவர் உள்பட ஐந்து பேர் நிலம் கொடுத்தது பற்றிக் கூறுகிறது. மற்றும் அந்தியூர் வடகரை நாட்டில் இன்றும் வேட்டுவர் வாழும் கீழ்க் கட்டியாக் கவுண்டனூர் மேல் கட்டியாக் கவுண்டனூர் எனும் ஊரின் பெயர்கள் கட்டி அரசர்களின்புகழ் பாடுகின்றன. பரிப்படை வேட்டுவர் குதிரைப்படைக்கு தலைமைதாங்கும் வேட்டுவ இனக்குழு ஆகும். கரிப்படை வேட்டுவர் யானைப்படைக்கு தலைமை தாங்கும் வேட்டுவ இனக்குழு ஆகும். கரி என்றாலும் வேழம் என்றாலும் கஜம் என்றாலும் யானையை குறிக்கும்.

சங்க காலத்திலேயே கொங்கில் ஆட்செய்த கொங்கர் எனும் வேட்டுவ வேளிர் முவேந்தர்களும் வேட்டுவர்களே கொங்கில கடைஎழு வள்ளல்களான வேள், பாரி, ஓரி, அதியமான் போன்ற வேட்டுவ வேளிர்கள் ஆவார்கள்

9 ஆம் நூற்றாண்டில் ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்த போது கொங்கு நாடு முழுவதும் வேட்டுவ

இராசாக்கள் ஆண்டனர் என்று கொங்கு தேசராசாக்கள் எனும் நூல் கூறுகிறது. பல்லவ மன்னர்கள் ஆந்திர வேட்டுவர் ஆவர். களப்பிரர் என்பவர்கள் கன்னட வேட்டுவர் கள் ஆவர். பிற்காலங்களில் கொங்கின் கங்கில் ஆண்ட ஆட்சியாளர்களை தமிழ்க் கங்கர் கன்னட கங்கர் என்று அழைக்கப்பட்டனர்.

## இளமீசுவரர் கோயில்

இளையர் மற்றும் மழவர்,கொங்கர்,அருவாளர் என்ற சொற்கள் சங்க காலந்தொட்டே வேட்டுவரைக் குறிக்கும் சொற்களாகும். பரமத்தியில் கோட்டை கட்டி அரைய நாட்டை ஆண்டு வடகரை ஆற்றுரில் காவேரிக்குத் தடுப்பணை கட்டி காவிரி ஆற்றை முதன்முதலில் கொங்கில் ஏற்றிய அல்லாளன் அல்லாள இளைய நாயக்கன் என்று அழைக்கப்பட்டான். கொங்கு நாட்டைச் சுந்தரபாண்டியன் தன் ஆளுமைக்குக் கொண்டுவர துணை நின்ற வேட்டுவ தலைவர்களின் கல்வெட்டுகளில் கொங்கில் திருச்செங்கோட்டில் எடுக்கப்பட்ட அந்தியூர் வடகரை நாட்டு ஒலகடத்து கள்ளை வேட்டுவன் அந்தியூரன் கல்வெட்டு ஒன்றாகும். அது இன்று சேலம் அருங்காட்சியகத்தில் உள்ளது. இது கி.பி 1290 சுந்தரபாண்டியனின் ஐந்தாம் நூற்றாண்டு கல்வெட்டு ஆகும். (முதலி என்பது பட்டப் பெயராகும். படைகளில் முதன்மை வகிப்பவர்கள், கோயில் குலங்களில் முதன்மை வகிப்பவர்கள் முதலி என்று அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு வேந்தர்கள் கொடுத்த பட்டம் முதலிப்பட்டம் ஆகும்) மற்றொன்று நாமக்கல் மாவட்டம் பவானி குமாரபாளையத்திற்கும் வெப்படைக்கும் இடைப்பட்ட மண்டபத்தூர் நாட்டுத் தலைவன் அந்துவ வேட்டுவன் சுந்தர பாண்டியனுக்குத் துணைநின்று இறந்தது பற்றிய நடுகல் கல்வெட்டு கி.பி 1307 சுந்தரபாண்டியன் 22 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டாகும். இது மண்டபத்தூர் பொங்காளி அம்மன் (பொன்காளி) கோயில் நிலத்தில் உள்ளது கல்வெட்டின் சரிபாதி சிதைக்கப்பட்டுள்ளது.

இரும்பொறை அரசர்களாக கொங்கில் ஆண்ட சேர மன்னர்களின் படையில் கட்டி அரசர்கள் படையை நடத்தும் தளபதிகளாக இருந்ததால் முதலி எனப்பட்டனர்.

முதன்மை தளபதிகளாக இருந்ததால் கட்டி முதலி என அழைக்கப்பட்டனர். சேரனின் படைத்தலைவர்களாக இருந்த கட்டி அரசர்கள் அந்தியூர் சக்ரவர்திகளான சேரப்பொறை அரசர்கள் துணையுடன் பூவாணி நாட்டை பூவாணி வேட்டுவரை வென்று தனதாக்கி கொண்டனர். சுந்தரபாண்டியனின் கி.பி1290ம் ஆண்டுக் கல்வெட்டு இளையான் நல்ல உடையப்ப முதலியால் கட்டடப்பட்டது 'இளமீசுரர் கோயில்' என்கிறது (ஹசு 23/1900)

இளையர் என்ற சொல் சங்க காலந்தொட்டே வேட்டுவர்களைக் குறிக்கும் சொல்லாகும். மேற்கண்ட கல்வெட்டால் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தாரமங்கலத்து முதலிகளான குன்றக்கட்டி எனும் குன்னாடி வேட்டுவ முதலிகள் தம் பெயரால் 'இளமீசுவரம்' என்று தாங்கள் கட்டிய கோயிலுக்கு பெயரிட்டு சீரும் சிறப்புடனும் வாழ்ந்தனர் என்று புலப்படுகிறது.இதனால் வேட்டுவர்கள் தாரமங்கலத்தை 13ம் நூற்றாண்டு முதலே ஆண்டு வந்தது புரிகிறது.

கி.பி 1300 ல் சுந்தர பாண்டியனின் 15-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு பூவாணி நாட்டுவரும் இந்நாட்டின் தாரமங்கலத்து முதலிகள் நீருணி இளையான் நல்லப்ப உடையப்பர் தமக்கு காணியான அமர குன்றில் பற்றில் செயப் பெருமாள் ஏரி என்ற குலத்தையும் நீர் பாயும் நஞ்சை இவைகளைப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கியுள்ளார். இதனால் 14ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அமர குன்று (அமரகுந்தி) என்ற ஊர் தாரமங்கலத்து கட்டி முதலிகளான குன்னக்கட்டி (குன்னாடி வேட்டுவர்) முதலிகள் வசம் இருந்தது புலப்படுகிறது.

திருமலை நாய்க்கன் (1623 - 1659) கி.பி 1659 க்குப்பின் மதுரை தளர்ச்சியடைந்து மைசூர் முன்னேறத் தொடங்கியது. திருமலை நாய்க்கன் காலத்தில் அடியிற்கண்ட கோட்டைகள் பழுது பார்க்கப்பட்டன. திண்டுக்கல், தாராபுரம், கோயமுத்தூர், டணாய்க்கன் கோட்டை, சத்தியமங்கலம், அந்தியூர், ஈரோடு, காங்கயம், விஜயமங்கலம், கரூர், நாமக்கல், சேந்தமங்கலம், சேலம், ஓமலூர், சங்ககிரி, சாம்பள்ளி, ஆற்றூர், பரமத்தி, அரவக்குறிச்சி, மோகனூர் என்பன இக் கோட்டைகள் எல்லாம் கொங்கு நாட்டில் உள்ளனவே.

திருமலை நாய்க்கன் கல்வெட்டுகள் திருமுருகன் பூண்டி (1642) ஈரோடு (1655) கண்ணாடிப்புதூர் (1655) திருச்செங்கோடு (1659) முதலிய இடங்களில் இருக்கின்றனர். (கொங்கு நாட்டு வரலாறு கோவை இராமச்சந்திர செட்டியார்)

வீர வசந்தராயர் காலத்தில் கி.பி 15ஆம் நூற்றாண்டில் இம்மடி இளம நயினா முதலியார் வணங்காமுடியின் நல்லுடையப்பர் தாரமங்கலத்து உரிமையாளராகக் குறிப்பிடுகிறார். தாரமங்கலம் நல்பள்ளியான திருத்தோன் பட்டியைத் தம் மரபுப்பெயராக இளம் சமுத்திரம் என்று பெயர் மாற்றம் செய்தார். (SII:VI:No19) அச்சுதராயர் (1529 - 1542) காலத்தில் வணங்காமுடி முதலியார் நல்ல உடையப்பன் தன்னை 'இம்மடி கட்டி முதலியார்' என்று அழைத்துக் கொண்டார். (SII:VI:No 28)

சதாசிவராயரின் (கி.பி 1545) காலத்தில் இளம் இளமீசுவரர் கோயில் கல்வெட்டு "வணங்காமுடி சமுத்திரம் என்றும் நாமதேயம் பண்ணி" என்று கூறுகிறது. எனவே இம்மரபினரில் ஒருவர் வணங்காமுடி என்ற பட்டத்தை சூடி இருந்தார் என்று இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

கட்டி முதலிகளின் முன்னோரான நல்ல உடையப்ப முதலி 'சீயால கெட்டி') என்ற பெயரைப் பெற்றிருக்கவில்லை யாதலால் 'சீயால கெட்டி' என்ற பெயர் அமர குந்தியின் பழமையான ஆட்சியாளரால் பிற ஊழியருக்கு வழங்கப்பட்ட

பட்டப்பெயர் என்பது உறுதியாகிறது. மேலும் திருமலை நாய்க்கன் (1623 - 1659) காலத்தில் கி.பி 1655 ல் 'சீயால கெட்டி' யின் கல்வெட்டு சேலம் மாவட்டம் இலவம்பட்டி என்ற ஊரில் வரையப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## குன்ன வேட்டுவப் பாளையக்காரர்கள் அமராவதிப் பட்டணம் குன்ன வேட்டுவப் பாளையக்காரர்கள் கைப்பீது

கோயம்புத்தூர் ஜில்லா அந்தியூர் தாலுக்கா சரம்பள்ளி (கிராம)க் கணக்குப்பிள்ளை எழுதிக் கொடுத்த கைபீத்து பருவத்தில் கெட்டி (கோடி) முதலியாருடைய விவரம்.

முன்னாலே பெரியவர்கள் சொல்ல கேள்வியினாலே கணக்கு காளிப்பிள்ளை யெழுதிய கைபீத்துகள்.

பூர்வத்தில் இந்தப் பிராந்தியத்தில் சாலிவாகன சகாப்தம் கி.பி. 1200-க்கு மேல் வேடர்கள் பாளையக்காரராய் இராச்சியம் பண்ணிக் கொண்டு வந்தார்கள். அந்த வேடர் ராச்சியம் பண்ணது சேர, சோழ, பாண்டியர்க்குப் பிற்காலம் வேடர் பாளையப்பட்டுயிருந்தது.

வேடற்னாளையில் பொடிராசு கெட்டியன் நாளது அசலு பேருபட்டது. சக்கர நுனுக்கம் -1. சரம்பள்ளியில் தென்மனை, காவேரிபுரம், ஆண்டியூரு இந்த யிடங்களில் அவாள் கட்டிவிச்ச கோட்டைகள் இருக்கின்றன. இன்னும் இது முதலான யிடங்களிலே தேவஸ்தானம் முதலானது பிரசித்தம் பண்ணிவிச்சுயிருக்கிறார்கள். அந்த வேடனுடைய செனங்களும் அவாள் பரம்பரையாயிருக்கப்பட்ட யிடங்கள் முதலான (து) (வை) விவரமாய் தெரியவில்லை. அதுகளுக்கு தற்காலம் இருக்கப்பட்ட சாசனங்கள் சமீபத்தில் ஒண்ணும்யில்லே. அந்த வேடனுடையவர்கள் ஆண்டு வந்த பட்டங்களிலே குண்ண வேடன் யென்னப்பட்டவன் அமராவதிபட்டணம் என்று

தன்னுடைய பட்டணத்திற்கு பெயர் விச்சுக் கொண்டு இராச்சிய பாரம் பண்ணிக் கொண்டுயிருந்தார். அந்த அமராவதி பட்டிணத்தில் குண்ண வேடன் வமுசத்தில் சிறிது பேர்கள் ஆண்டுயிருக்கிறார்கள்.

மேலே யெழுதப்பட்ட அமராவதி பட்டணம் யென்னப்பட்டது நாளது அமரகுந்தியென்று பேர் வரப்பட்டு சேலத்து சீமையிலே ஓமலூரு தாலுக்காவில் அமரகுந்தியென்று பேறுயிருக்கிறது. அந்த வேடன்னாளையில் இருக்கப்பட்ட ஒரு பட்டணம். அந்த பட்டணம் இப்போ ஒரு (மோடா) யிருக்கிறது. இப்படிக்கு வேடர் வெகு பேர் ராஜ்ஜியம் பண்ணியிருக்கிறார்கள். அது தங்கள் விசாரணையில் சகலமும் தெரிய வருகிறது.

அதற்கு பிற்காலும் சாலிவாகன சகாப்தம் 1800-க்கு மேல் மதுரப் பாண்டிய சமஸ்தானத்துக்கு கர்த்தராகிய திருமலை நாயக்கரவர்கள் துரைதனத்தில் அவரிடத்தில் காரிய கர்த்த யோக்கியமாயிருந்த கொமாற யென்றும் கெட்டியென்றும் ரெண்டு பேர் அண்ணன் தம்பிகள் ஊழியம் பண்ணிக் கொண்டு இருந்தபோது அவாள் இடத்தில் ரொம்பவும் பிரீதியாயிருக்கும் காலத்தில் ஒருநாள் ஆலயத்தில் மேற்படி நாயக்கரவர்கள் அப்பியங்க ஸ்நானம் பண்ண, பொன் ஆலயத்தில் அவருடைய கிரீடம் முதலான ஆபரணங்கள் இங்கே வெச்சுயிருக்கிறதே இந்த ஊழியம் பண்ணப்பட்ட தம்பியான கெட்டியன்... ராசாவினுடைய கிரீடம் முதலான ஆபரணங்கள் வஸ்திரங்கள் தறீச்சுக் கொண்டு ராசாவினுடைய படுக்கை மேல் சாஞ்சுகொண்டு இருந்து அதுக்கு மேல் ராஜாவினுடைய சிம்மாசனத்தில் நித்திரை பண்ணினான்.

அந்த சமயத்தில் ராசாவுக்கு ஊழியம் பண்ணிக் கொண்டிருந்த அண்ணனான கொமாரயென் குறன் முன்னதாக வந்து ராசாவுக்கு அனுஷ்டானத்துக்கு வேண்டிய வஸ்தாபரணங் களை எடுத்து கொடுப்பதற்காக அரண்மனை முன்னுக்காக வந்தான்.

வந்த விடத்தில் இந்த தம்பியான கெட்டி ராசாவினுடைய ஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலானதுகள் தறிச்சுக் கொண்டு சிம்மாசனத்தில் இருக்கிறவனைப் பாராமல் தன்னுடைய ஊழியத்தில் சாக்கிரதையாயிருந்தான்.

ராசாவானவர் திருமலை நாயக்கரவர்கள் அப்பியங் கண்ட ஸ்னானமான உடனே அரண்மனைக்குப் போகிற போது தன்னுடைய ஆபரணங்கள் முதலானது ஊழியக்காரன் தரிச்சுக் கொண்டு சிம்மாசனத்தில் மேல நித்திரை போகிறதை பார்த்து யெழுப்பாமல் வந்து விட்டார்.

மறுபடி ராசாவானவர் போசனத்துக்குப் போன சமயத்தில் தம்பியானவனைக் காணோமேயென்று தேடிக் கொண்டு வந்தயிடத்தில் தம்பி அலங்காரத்துடனே சிம்மாசனத்தில் இருந்ததைப் பார்த்து ரொம்பவும் மனசுக்கு விசனம் தோன்றி ராசாயிது வழியாய் பார்த்துப் போயிருப்பார் என்றும் இனிமேல் ஆக்கினை பண்ணிவிப்பார் என்றும் பயிஷீ தோன்றி தம்பியை யெழுப்பி கீரிடம் முதலான ஆபரணங்கள் எல்லாம் அவ்விடத்தில் கழட்டி விச்சுப் போட்டு அண்ணன் தம்பி ரெண்டு பேரும் மதுரையை விட்டுப் பராரியாய்ப் புறப்பட்டு வந்து அமராவதி பட்டணத்து பாளையக்காரன் சீர்மைக்கி சேர்ந்த காடையப் பேட்டைக்கிவந்து ஒரு நந்தவனத்தில் படுத்துக் கொண்டார்கள். அவாளுடைய சிரமத்தினால் சூரியன் உதிச்சு பிரகாசமாகும் வரைக்கும் நித்திரை போயிக் கொண்டுயிருந்தார்கள். அந்த சமயத்தில் நாக சர்ப்பம் வந்து யிந்த தம்பியான கெட்டி யென்னப்பட்டவனுக்கு நிழலாய் முத்தித்து காத்துயிருந்தது. அந்த சமயத்தில் அந்த நந்தவனத்துக்கு கர்த்தராகிய றாகவன் மயிர் வேலை பண்ணப்பட்டவன் என்று மனசுத் தோன்றி நாவிதன் கைசப்தம் பண்ணினான்.அந்தஸர்ப்பம் தானே போச்சுது.

இவாளையெளுப்பி நாவிதன் கா....டயான் யென் குரவனுக்கு சந்தானம் இல்லாதபடியினாலே அவர்களை

அதறனை பண்ணி சமலாபமா விசாரிச்சு தன்னிடத்தில் வச்சுக் கொண்டு யிருந்த தன்னுடைய வயித்துனுடைய தொழிலை கற்பிக்கக் கொடுத்து வெச்சுக் கொண்டு இருந்தான்.

இப்படி தொழிலில் சௌக்கியமாய் இருக்கிற காலத்தில் அக்காலத்துப் பாளையப்பட்டுக்குக் கர்த்தரான வேடர் வமுசத்தில் அமராவதி பட்டணத்தில் குன்ன வேடர் எனப்பட்டவனுக்கு மு...கு பொளவை ராசா புன்னு வந்து உபத்திராப்பட்டுக் கொரண்டிருந்தார்.அந்த சமயத்தில் இந்த கெட்டி யென்னப்பட்ட பண்டித் தொளுவளான அந்த பாளையக்கார வேடனுக்கு மொகல் மாமுகம் அளைப்பிவிச்சு இரலுப்புனாலே பஷம் குடுங்கள் பண்ணி அந்த தகடுகளுக்கு துவாரங்கள் விரட்டு அந்த மாமுசங்களையும் விச்சு அந்தயிலுப்புக் குடுக்கணும்.

**கட்டி**

முதுகிலே வச்சுக்கட்டி மூணு கட்டு கட்டின யெடத்தில் ரெனுமாராச்சியாய் முதுகுலே துவாரம் இருந்து விழுந்து மூங்கில் கொளவினால் தான் அதினாலே யிருக்கப்பட்ட சியிகளையும் உறிஞ்சி உமிஞ்சு பட்டான். அதனாலே அந்த பாளையக்காரனுக்கு சரீரம் சொந்தமாச்சுது.

அதற்கு மேல் அந்த பாளையக்காரனுக்கு இந்த கெட்டி யெடத்தில் ரொம்பவும் சந்தோசமாயி இவனுடைய சேமலாபம் விசாறித்து ஒளுகுறான யென்ன பேருபாதி பண்ண போரேயென்றும் எனக்குப் புத்திர சந்தானம் இருக்கிறது. ஆனாலும் என்னுடைய ராச்சியத்துக்கு வடக்கே போகிறேன் என்று சொல்லி என்னுடைய சரீரத்தில் இருக்கப்பட்ட சீயை உறிஞ்சு இராச்சியம் பண்ணப்பட்ட படியினாலே நீயின்று சீயால கெட்டியென்கிற பேரும் கொடுத்து அமராவதி பட்டணத்துக்குச் சேர்ந்த ராச்சியங்களையும் கொடுத்து விட்டு தான் புறப்பட்டுப் போனான்.

# குன்னாடி (குன்னி) வேட்டுவர் கட்டிய சங்ககிரி கோட்டை

## குன்னாடி வேட்டுவர் காட்டிய 5 கோட்டைகள்

குன்னாடி வேட்டுவ அரசர்கள் 1) சங்ககிரி கோட்டை, 2) கோனூர் கோட்டை, 3) பொட்ட நெரிக் கோட்டை, 4) கோட்டையூர் கோட்டை 5) ஆண்டிக்கரை கோட்டை ஆகிய கோட்டைகளை ஆண்டனர். காவிரி ஆற்றின் இடது கரையில் இக்கோட்டைகள் உள்ளன.

## சங்ககிரி கோட்டை

சங்கு வடிவத்தில் அமைந்துள்ள மலை சங்ககிரி (உயரம் 2345 அடி) மூன்று திசைகளிலும் செங்குத்தாய் மலை உயர கிழக்கு பக்கம் மட்டும் மேலேறதக்க வண்ணம் அமைந்திருக்கிறது இந்த சங்ககிரி மலை. இயற்கைச் சூழலை முழுமையாக பயன்படுத்தி இம்மலை மீது ஒரு பெரும் கோட்டை கட்டடப்பட்டிருக்கிறது.

சங்ககிரி மலை அரணான மலைக்கோட்டை செப்பம் செய்யப்பட்ட மலைக்கற்கள், செங்கல், காரைக்கலவை கட்டுமானம், ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக பத்து மதில்கள் மலைமீது உயர்கின்றன. இதனை கோட்டை தொடர் என்றாலும் பொருந்தும். இம்மதில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. நுழைவாயில் பெயரே மதிலுக்கும் ஒவ்வொரு வாசல் (வாயில்) அமைப்பும் வெவ்வேறு, அமைந்துள்ள இடமும் உயரமும் வெவ்வேறு, மலைகளின் கழுத்தில் புரளும் மணிவடம் போன்ற இக்கோட்டை தொடர் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு காலங்களில் கட்டடப்பட்டிருக்கிறது.

கோட்டையின் முதல் கட்டுமானம்புலி முகவாசல் ஆகும், இவ்வாசலை 'குன்னி வேட்டுவன்' என்னும் வேட்டுவத் தலைவன் முதலில் கட்டினான், அதன்பின் உச்சி வரைக்கும்

கால வளர்ச்சிப்படிகட்டிக்கொண்டே போனார்கள். ஐந்தாம் வாசல் திப்பு கட்டியதாம், 6, 7, 8, 9 ஆம் வாசல்கள் கும்பினியார் அமைந்ததாம். பத்தாம் வாசல் மைசூர் உடையார் பணியாம்.

ஒவ்வொரு மதிலுக்கும் இடைவெளிகள் இருந்தன, அதைத் திப்புவும், கும்பினியாரும் இணைத்து கட்டினார்கள்.

நான்காவது வாசல் இரணமண்டல வாசல் இங்கிருந்து அடிவாரம் வரையான பெரும்பகுதியை பாதுகாக்கலாம். துப்பாக்கி வெளியே தெரியாதவாறு மறைத்துக் கொண்டு ஏறிவரும் எதிரிகளை வீழ்த்தி விடலாம். ஐந்தாவது வாசல் புதுக்கோட்டை வாசல் இங்கே ஆறு கொத்தளங்கள் உள்ளன, இக்கொத்தளங்கள் மீது பீரங்கிகள் நிறுத்தலாம். குதிரை மண்டலம் எனப்படும் கட்டடம் ஆயுத சாலையாகலாம். பூவல் திட்டி வாசல் எனப்பெறும் ஏழாம் வாசலில் பெரிய உறுதியான வெடிமருந்து கிடங்கு உள்ளது. ஒன்பதாம் வாசல் வெள்ளைக்காரன் வாசல், பத்து மைசூர் வாசல், மைசூர் வாசலுக்கு மேலே மூன்று கட்டடங்கள் உள்ளன, அவற்றுள் பெரிது கோட்டை தலைவனின் வசிப்பிடம், இன்னொன்று எண்ணைக்கிணறு ஆகும். மூன்றாய் பிரிக்கப்பட்டுள்ள இதில் விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணை சேமிக்கப்பட்டதாம். அக்காலத்தில் தமிழ்நாட்டில் மிக உயரத்தில் அமைந்திருந்த நுகர்பொருள் பாதுகாப்பிடம் இதுவே ஆகும்.

கோட்டைக்குள் ஐந்து இந்து கோவில்களும் இரண்டு மசூதிகளும் உள்ளன. கர்னல் ஓரம் இங்கே தங்கியிருந்ததால் (1797) இரண்டாம் வாசலான திட்டிவாசலில்ஒரு நீர் குளம் உள்ளது. மலை உச்சியில் இயற்கை சுனைகளும், செயற்கை குளங்களும் உள்ளன, ஒன்றின் பெயர் மான்சுனை. ஒரு காலத்தில் கோட்டையில் உள்ள குளங்கள் சங்ககிரி கோட்டையை சுற்றியிருந்த மக்களுக்கு குடிநீர் வழங்கின.

சங்ககிரி கோட்டை அடைக்கலம் புகவும், எதிரிகளை அடைத்து அழிக்கவும் பயன்பட்டது. ஆளிறக்கும் குழி,

உருட்டிவிட்டான் பாறை, தோலுருச்சான் மேடு எனும் இடப்பெயர்கள் கோட்டைக்குள் நடந்த கொடூர செயல்களுக்கு மௌன சாட்சிகள் ஆகும். ஒரு மதிலின் பெயரே ரணமண்டலம். நல்ல தற்காப்பு அமைப்பு கொண்ட அது எதிரிகள் சித்திரவதைக்கு ஆளாக்கப்படும் இடமாகலாம். எனவே இக்கோட்டை அக்காலத்தில் முழுவதும் ராணுவத்தேவைக்காக அமைந்த கோட்டை இது.

> குன்னத்தூர் (குன்றத்தூர்) என வழங்கிய காலம் முதலே ஆட்சித் தலைமை இடமாக விளங்கிய சங்ககிரி ஒரு தலைநகரமாக இருந்திருந்தால் அதன் கோட்டை இன்னும் சிறப்பானபணியாற்றியிருக்கும்.
>
> "கொங்கு களஞ்சியம்" (இரண்டாம் தொகுதி, பக்கம் 36, 37) கவிஞர் தமிழ்நாடன், சேலம்.

## கோனார் கோட்டை

மேட்டூரிலிருந்து நேர் கிழக்காக ஐந்து கி.மீ வந்தால் சேலம் சாலையில் சற்று வடக்கே தள்ளி கோனூர் என்ற இடத்தில் ஒரு மண்கோட்டை இருந்து அழிந்ததற்கான சான்றுகள் காணப்படு கின்றன. இங்கு கோட்டைமேடு என்று அழைக்கப்படும் பகுதியில் நடுகற்களும், கன்னட கல்வெட்டுகளும், பல்லவ கல்வெட்டுச் சிதைவுகளும் கிடைக்கின்றன.

## ஆண்டிக்கரைக் கோட்டை

மேட்டூரிலிருந்து கோனூர் சென்று பின் அங்கிருந்து வடக்கே 5 கி.மீ தூரம் சென்றால் ஆண்டிக்கரை என்னுமிடத்தில்

| | SALEM DISTRICT SANGAGIRI TALUK | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | Mōrūr. - On the stone wall of the hero stone complex. | ... | ... | ... | Tamil | Damaged and worn out. It seems to record that a person (name lost) from [illegible] nāḍu had died in the action of saving his village. In characters of the 12th century CE. |




ஒரு மண் கோட்டை இருந்து அழிந்ததற்கான சிதைவுகள் காணப்படுகின்றன.

## பொட்டநேரி கோட்டை

மேட்டூரிலிருந்து கோனூர் சென்று பின் அங்கிருந்து கிழக்கே 5 கி.மீ தூரம் சென்றால் பொட்டநேரி என்ற கிராமம் காணப்படும். இங்கு ஒரு மண் கோட்டை இருந்து அழிந்து விட்டதற்க்கான சுவடுகள் காணப்படுகின்றன.

## கோட்டையூர் கோட்டை

மேட்டூர் அணை கோட்டையூரில் ஒரு சிறிய கோட்டை உள்ளது. மேட்டூர் அணையின் நீர் வற்றி விட்டால் மட்டுமே இதனை காண முடியும். கோடைகாலத்தில் கோட்டையைச் சுற்றி ஏரி போல நீர் நிறைந்த அகழி காணப்படும். இங்குள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் புதுமையானது. கோபுரமும், விமானமும் ஒரே அளவில் உள்ளது. கோபுரத்தின் உச்சியில் கலசங்கள் இல்லை மாறாக பெரிய நந்தி ஒன்று படுத்து இருக்கிறது. இந்தக் கோட்டைகள் நாடு என்று அந்தநாளில் பிரிக்கப்பட்டிருந்தத சிறு பகுதிகளை ஆண்ட குன்னாடி சிற்றரசர்கள் அரண்மனைப் பகுதிகளாக இருக்கலாம்.

தமிழகத்தில் வடுகர் எனும் கன்னடம், தெலுங்கு மக்கள் பாதி அளவு இன்றும் வாழ்கின்றனர். இன்று தமிழகத்தில் தமிழர் பாதி, வடுகர் பாதி என்னும் பழமொழி கூட வழக்கத்தில் உண்டு.

are "consummated" together. The ceremony[1] is conducted by the barber (*Ambattan*) assisted by other *arumaikkarans*, and after it is over the couple go and dig cooked rice out of the pot in which rice is boiled for their son's marriage; they are then qualified to officiate in other marriages in the caste.

The prominence of the barber in the marriage rite is accounted for in the following story. A Vettuva Raja, out for his morning ride, saw a Konga Vellalan being shaved by the road-side. The Raja, who wanted a shave, ordered the barber at once to attend on him, and the obedient barber complied, leaving the unfortunate Vellalan half shaved. The Vellalan, feeling shy of appearing in public, shut himself up at home, and begged his son to complete the barber's unfinished task; the son refused, however, saying that, if he complied, no parent, whether within or outside the caste, would ever accept him as son-in-law. A potter overheard this, and offered his daughter in marriage on condition that the son finished shaving his father. The son accepted the offer, and ever after the son was called "barber", and a barber has had to conduct the marriage rite among Konga Vellalans and Nattans. It is said to be in consequence of this marriage between a Vellalan and a potter girl that the Potters sometimes call themselves Vellala Chettis.

When a boy becomes eligible for marriage, his maternal uncle goes to his parent's house with a few rupees, some *tenai* (millet) and a mould used for making palmyra jaggery. The *tenai*-flour is mixed with water, and made into a big ball, and into it is put the jaggery mould. The whole is boiled, and the ball is placed on the threshold of the house where the boy's parents live; the parents, in company with their *arumaikkaran* and his wife, then break the ball in two with a pickaxe. If the jaggery mould is found to be uninjured, the marriage will be auspicious. If it be damaged, the marriage will be unlucky.

The next test is to mix some red dye in ghee; this mixture the *arumaikkaran* daubs on the pit of the throat of the bridegroom's mother, and the stream of liquid is watched as it trickles down between her breasts; if the marriage is to be auspicious the stuff must trickle down in a straight line to the navel; if its course is deflected the omen is bad. Sometimes the mixture is applied at the back of the neck, in which case it must trickle straight down the valley which marks the backbone.

If these omens are favourable the two parents proceed to the shandy, and buy salt and turmeric, and some red *kunkumam* or [illegible]

[1] *Vide Trichinopoly Gazetteer*, p. 106.



and cholera are [illegible] though sore-eyes [illegible] dryness of the cli[illegible]

The Hill of [illegible] rising to a height [illegible] above sea-level, and nearly 1,500' above the plain.[2] The upper part of the eastern face is, roughly speaking, crescent-shaped in contour, the horns pointing eastward. It is on this side that the summit is most easily reached, and on this side the hill is defended by no less than ten lines of fortification.[3]

The first gateway (*Ullungam-Vasal*) is said to have been constructed by "Kunni Vettuva Raja." The line of fortifications to which the gate gives access extends right round the foot of the hill. Immediately behind it is the second gateway (called *Doddi-Vasal*, *Nal-kombu-Kottai*, or *Kotta-Vasal*). Beyond the third gateway (*Gadiyara Vasal* or Clock Gate) is a large temple dedicated to Varadaraja Perumal. A steep flight of steps leads to the fourth gateway (*Ratta-mandala-Vasal* or *Gate of Blood-shed*), strongly built of stone and topped with brick. The fifth gateway (*Pudu-Kottai* or *New Fort*) is defended by two bastions, one square and the other semi-circular. The rampart on which this gate is placed is one of the largest on the hill. It is coated with brick-work, bound in parts with iron clamps, and is provided with embrasures for cannon. Its construction is ascribed to Tipu Sultan. The rampart on the left runs to a cave in the southern spur of the hill. This cave, which is in one part 30' high, is sacred to a Muhammadan Saint, Shah-ba-Mardan-Ghazi, who once upon a time entered the cave and never emerged from it. On the same day, however, he was seen to come out of a similar cave at the falls of Siva-samudram on the Kaveri, and it is there that the Saint is said to be interred. It is also said that panthers and other wild animals worship at this tomb, and keep it tidy by sweeping the precincts with their tails. Another flight of steps leads to the sixth gateway (*Sikkal-Doddi-Vasal*). The seventh gateway (*Panal-Doddi-Vasal*) is close behind the sixth, and is about half-way up the hill. Between this and the site of the next gateway is a strongly built magazine of brick, with a semi-circular bomb-proof roof in almost perfect preservation. The eighth gateway became unsafe, and was demolished in about 1890. It was known as the *Idi-Vilundhan-Gundu-Vasal*, or the Gate of the Thunder-stricken Stone. The boulder from which it takes its name is a massive rock, about 40' high, cleft in

[2] The railway at Sankaridrug Station is 878' above sea-level.

[3] A sketch of Sankaridrug appears in Vol. IV of Daniell's *Oriental Scenery*.

Persistent tradition, already referred to, connects Sankaridrug with the "Vettuva Rajas" and the Gatti Mudaliyârs, but these traditions find little support in the local lithic records. A Vettuva Raja is named in connection with a curious stone in the village of Agrahâra Talaiyûr.[1] Lakshmi Kânta Raja has been mentioned in connection with the sixth, seventh and eighth gateways on the Durgam.

Sankaridrug was added to the Mysore Empire by the conquest of Chikka Dêva Raja in 1688 and 1689 A.D. In 1717 his successor Dodda Krishna Raja (1714–1731) settled a colony of Kanarese Brahmans at Sankagiri, nominally in honour of his marriage with his eight wives, but perhaps in reality for political reasons. A copper-plate *sâsanam* of great interest, bearing on the endowment of this political Agrahâram, has been translated by the Rev. Thomas Foulkes.[2]

After the usual preliminary verses, extolling the pedigree of the grantor, the document runs:—

"While King Sri Krishna Raja—who is the stage manager of the beautiful drama in which the female actor dances by his direction over the jewelled crowns of all other kings—was performing all the various kinds of charities, he had the desire, amongst other things, of forming a Brahman settlement. This Emperor of Karnataka sought out the most healthful, fertile, and sacred places within his dominions, and he then selected one of the best of them for this particular charity. That spot is situated to the south-east of Srirangapattana, the city of the god of gods, the blessed Western Ranga. That country is called the Kongu-mandalam, abounding in wealth and crops. There, at the distance of twice ten miles (literally two *yojanas*) from the undivided stream of the river Kâveri, and nine times ten miles to the north-west of the original Sri Ranga, is situated a sacred and salubrious spot. Here is the fortress called Sanka-giri-durga, which in former days bore the name of Ramantur. To the east of its eastern wall, which bears the name of Vijaya, in the open space at the foot of the hill, there is a temple of the god Kapardin under the name of Sômanâtha; and to the westwards of that temple there is a temple of the god Sharngin, under the name of Vallabharâja, the god of all the worlds. On the north side of this temple he built a neat Brahman street with two rows of houses; with court-yards to each house, measuring forty feet in width, and a hundred and twenty feet in length. He built a separate substantial house for each of the 32 shares of the endowment. Thus he happily settled the site of the Brahman settlement, which he had longed to establish, on the sacred northern bank of the two bathing tanks called Râma and Lakshmana."

---

[1] For Talaiyur see below p. 282. The stone is carved with six human figures and the figure of some animal, probably a horse. It stands in S. No. 48 of Agrahara-Talaiyûr. The legend is that the Vettuva Raja went to Tiruchengodu to conduct a car procession, after defeating the Pallis in battle. The Raja unluckily got his foot crushed by the car wheel, and died on his return journey at Talaiyûr. His attendants committed suicide. The stone was set up as a memorial of this incident. For "Vettuva Rajas," compare p. 288.

[2] S.I.M., Vol. II, pp. 128-40.

## குன்ன வேட்டுவர் குலதெய்வம்

புங்கம்பாடி, பூமதேவம், இணுங்கனூர் பட்டக்காரர் குலதெய்வம் தலைய நாடு தலையூர்க் கிராமம் ஆனங்கூர் கரிய காளியம்மன்.

**புங்கம்பாடி பட்டக்காரர் குலதெய்வம்**
**புங்கம்பாடி கரிய காளியம்மன்.**
**பூமதேவம் பட்டக்காரர் குலதெய்வம்**
**பள்ளபட்டிக்கிராமம் மண்மாரி கரியகாளியம்மன்.**
**கோத்திரம் பெயர்: குன்னாடி வேட்டுவர்.**
**இருக்கூர் பட்டக்காரர்: மூலவேட்டுவர்.**
**குலதெய்வம்: ஸ்ரீ கோட்டையண்ண சுவாமி, பரமத்தி - வேலூர்.**
**நவமரத்துப்பட்டி பட்டக்காரர். வெங்காஞ்சி வேட்டுவர்.**
**குலதெய்வம்: ஸ்ரீ காஞ்சி காமாட்சியம்மன்.**

குன்னாடி ராசனுக்கும் சௌந்தர பாண்டிய வள்ளல் என்றும் உறுமப்படை ராசனுக்கு வள்ளல் பெரியாயி ராசன் என்றும் இருவகை பேருக்கும் செப்பேடு சாசனம் கொடுக்கப்பட்டது.

## உரிமைபடை வேட்டுவ குலம்

**இடம்:** கரூர், திருவெஞ்சமாக்கூடல் கல்வெட்டு. SITI - 726, 1905:148, Vol - 11

**காலம்:** சுந்தரபாண்டியனின் 6வது ஆட்சி ஆண்டு. கி.பி.1291.

**செய்தி:** வேட்டுவ இனத்தில் மாவலியர் பிரிவைச் சேர்ந்த உரிமைபடை (உறுபடை) வேட்டுவ குலத்தை சேர்ந்த பாணி பெருமாள் (பாண மன்னர்) சோழனான சுந்தரபாண்டிய சோளகோன் என்பவரைப் பற்றி கூறுகிறது.

## கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடை பன்மரான திரிபுவன சக்கிறவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு ஆண்டு ஆராவது புரட்டாசி மாதம் உடையார் திருவெஞ்சமாக் கூடலுடைய ஆளுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுர தேவர்களுக்கு தென்கரை மணலூர் நாட்டு அரைய நாட்டு அரையர்கள் பொலப்பற்கள் இளமாடத்தூர் குளப் பிரமாணம் பண்ணிக்

குடுத்த பரிசாவது இன் நாயகனார் திருப்பணிக்கும் திருநாள் படிக்கும் திருக் கண்ணப்ப நாயனாரைப் பூசிக்கும் எங்கள் நாட்டுக்கு அப்பால பரப்பு தொறை தேவதானமாக இந்த நாள் முதல் கைக்கொண்டு அனுபவிப்பார் களாகவும் அனுபவிக்கு மிடத்து இவ்வூர் நான்கெல்லைக்குட்பட்ட நத்தம் குளம் குள பரம்பும் திருவாசல் வினியோகம் திருமஞ்சனப் படம் யெற்க்கடமை கூத்து வரி தெரியெறுது குற்றம் தெண்டம் மற்ற யெப்பெற்ப்பட்டதவும் கைக்கொண்டு சந்திராதித்தவரையும் தேவதானமாக செல்வதாகவும் செம்பிலும் சிலையிலும் யிப்படி நாங்கெல்லையிலும் திருசூல ஸ்தாபனம் பண்ணி கொள்வாராகவும் இப்படி சம்மதித்துப் பிரமாணம் பண்ணி குடுத்தோம் ஆதி சண்டேசுவர தேவர்களுக்கு தலையூர் நாட்டு அரையர்கள் பொலபறக்ள் இளமாடத்தூர் இப்படி இவை தலையூர் உறுபடை அரையர்களில் பாணி பெறுமாள் சோளனான சுந்தரபாண்டிய சோளக்கோன் எழுத்து. இப்படிக்கு தலையூர் நாட்டு ... எழுத்து ஒப்பம் பன்ஹேஸ்வர ரஷை.

குறிப்பு: தென்கரை நாட்டு அரையர்கள், மணலூர் நாட்டு அரையர்கள், அரையநாட்டு அரையர்கள், தலையூர் நாட்டு அரையர்கள் ஆகியோர் வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவர்கள்.

## கீழ் மேல் தலையநாடு

இவர்களுக்குள் நாடு பிரிவினை செய்துகொள்ள முயற்சி செய்து கீழ்த்தலைய நாடு, மேல் தலைய நாடு என இருபாகம் செய்து கீழ் தலைய நாட்டுக்கு 8 கிராமமும் மேல் தலைய நாட்டுக்கு 5 கிராமமும் பிரிவினை செய்து கொண்டார்கள். கீழ் தலைய நாட்டுக்குச் சம்பந்தப்பட்ட கிராமங்கள்

தாராபுரம் தாலூக்காவில் 1. தலையூர். 2. வேளாம்பூண்டி, கரூர் தாலூகாவில் 3. சாந்தப்பாடி, 4 மொடக்கூர், 5. சேந்தமங்களம், 6. புங்கம்பாடி, 7. இணுங்கனூர் - வேலம்பாடி, 8. அரவக்குறிச்சி - பள்ளபட்டி ஆக 8 கிராமங்கள் கீழ்த்தலைய நாட்டுப் பட்டக்காரர் சவுந்திர பாண்டிய வள்ளல் அவர்களுக்கும்

மேல் தலையநாட்டுக்குச் சேர்ந்த கிராமங்கள் தாராபுரம் தாலூகாவில் 1. கிளாங் குண்டல், 2. பெரிய மருதுார், 3. சின்ன மருதூர், 4. கன்னிவாடி. 5. எடைக்கல் பாடி ஆக ஐந்து கிராமங்களும் மேன்தலைய நாட்டுப் பட்டக்காரர் வள்ளல் பெரியாயி மன்னர் அவர்களுக்கும் இவ்விதமாகப் பிரித்து நாடு ஆண்டு வந்திருக்கிறார்கள். கீழ்த்தலைய நாடு பட்டக்காரர் சவுந்திர பாண்டிய வள்ளல் அவர்களுக்கும் மேல் தலைநாடு பட்டக்காரர் வள்ளல் பெரியாயி மன்னர் அவர்களுக்கும் பூர்வீகமாகச் சம்மந்தியாகவே சம்மந்தம் இன்றும் செய்து கொண்டு வருவதுண்டு.



## தலையூர்

புங்கம்பாடி - பூமதேவம் பட்டக்காரர்கள். கீழ்த்தலைய நாட்டுப் பட்டக்காரர் நாடு பிரித்து முதல் அரண்மணை கட்டிய இடம் தாராபுரம் தாலுக்கா தலையூர் பூர்வீகமாகப் புலால் உண்ணாத சைவப் பட்டம் பெற்ற சவுந்திர பாண்டிய வள்ளல் தலைய நாட்டுக்குத் தலையூர் என்று பெயர் சூட்டித் தலையூரில் அரண்மனை கட்டியும் அம்மன் கோயில் கட்டியும் ஆண்டுவந்தனர். தலையூர்க் காளிதேவியை சிறப்புடன் கொண்டாடி - தலையூரிலேயே வெகுகாலம் சீமையாண்டு வந்து அதன் பின் தான் புங்கம்பாடிக்கும், பூமதேவத்திற்கும் இரண்டு பிரிவாகக் குடியேறி வந்திருக்கிறார்கள்.




## நச்சுழிவேட்டுவர் பகை

தலையூர்க் கிராமத்தைச் சேர்ந்த ஆனங்கூரில் கரிய காளியம்மன் கோவில் கட்டி அவ்விடம் குளம் என்னும் வாவியாக ஒரு தடாகம் உண்டாக்கித் தலையூரிலிருந்து பல்லக்கு மூலம் ஆனங்கூர் வாவிக் கிணற் றுக்கு வந்து குளித்து ஆனங்கூர்க் கரிய காளியம்மன் கோவில் போய் பட்டக்காரரிடமிருக்கும் வெண்களச் சிலைகளை வைத்துப் பூசை செய்து சுவாமி தரிசனம் செய்து கொண்டு பின் பல்லக்கில் தலையூர்லிருந்து சாப்பிடுவது வழக்கம். இப்படி அனேக காலம் நடந்து வந்தது. மேற்கண்ட ஆனங்கூரில் நச்சுழி வேட்டுவக்கவுண்டர்கள் பலர் குடியிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்று கூடிப் பட்டக்காரர் சவுந்திர பாண்டிய வள்ளல் அவர்கள் பேரில் சதித்திட்டம் அதாவது நாமும் வேட்டுவர் தானே அவர் அனுதினமும் தலையூரிலிருந்து பல்லக்கில் வந்து இங்கு வாவிக் கிணற்றில் குளிப்பதும், கரியகாளியம்மன் கோவிலில் வெண்கலச்சிலை வைத்துப் பூசை செய்து வருவது நமக்கு மிகவும் பெருமைக் குறைவாக தெரிகிறது. ஆகையால் பட்டக்காரர் வாவியில் குளிக்கும்போது தலையை வெட்டிக் கொண்டு போய் விட்டால் பட்டம் அழிந்து போய் விடும். நாமே

நாட்டுக்குப் பட்டக்காரராகி விடலாம் என்று ஒற்றுமை செய்து கொண்பார்கள். ஆனால் ஒரு பிரிவுதான் தளையை வெட்டக் குறிப்பிட வேணும். இல்லாவிட்டால் பலபேர் திட்டம் நிறைவேராது என முடிவு செய்து, யார் பட்டக்காரர் தலையை வெட்டுகிறார்களோ அவருக்கே பட்டம் வைக்கவேண்டியது என்று தீர்மானித்து விட்டார்கள். ஆனால் ஒரு பிரிவினர் கூடிய கூட்டத்தில் எழுந்து நின்று நான் பட்டக்காரர் தலையை வெட்டிக் கொண்டு வருகிறேன் என ஒப்பம் கொடுத்து விட்டார். ஆனால் கூட்டத்தார் முடிவு, நீ பட்டக்காரர் தலையை வெட்டிக் கொண்டு வரும் வரையில் உனக்கு வீட்டில் சாப்பாடு இல்லை. அப்போது தான் உனக்கு அக்கறையேற்பட்டு பட்டக்காரர் தலையை வெட்டிக் கொண்டு வருவாய் எனத் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் மாமூல் வழக்கப்படி தலையூரிலிருந்து பல்லக்கு மூலமாகப் பட்டக்காரர் ஆனங்கூர் வந்து கிணற்றுப்பக்கம் மரத்து நிழலில் பல்லக்கை சிவியர்கள் இறக்கி வைத்து விட்டார்கள். வாவி தடாகத்தில் பட்டக்காரர் குளிக்கும் போது பல்லக்கு கொண்டு வந்த சிவியாட்கள் தூங்கிவிட்டார்கள். அப்போது சந்தர்ப்பம் எதிர்பார்த்த ஆனங்கூரில் குடியிருக்கவும் நச்சுழிக்கவுண்டர், பட்டக்காரர் தலையை வெட்டிக் கரிய காளியம்மன் கோவிலில் கொண்டுபோய் வைத்து விட்டுத் தங்கள் வகையறாப் பேர்களிடம் சொல்லிவிட்டுத் தலைமறைவாகி விட்டார்.

## நல்லடக்கம்

குளிக்கப் போனவரைக் காணாததால் பல்லக்குக் கொண்டு வந்த சிவியர்கள் வாவி தடாகத்தைப் போய்ப் பார்க்கத் தண்ணீர் முழுதும் ரத்தமாகவும். தலையில்லா முண்டத்தைக் கண்டார்கள். சிவியர்கள் கதறிய சத்தம் கேட்டுக்கூட்டம். கூடிவிட்டது. முண்டத்தைப் பல்லக்கில் போட்டுக் கொண்டு தலையூர் அரண்மனைக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள்.

அரண்மனையிலிருந்த பட்டத்து மகளிர் கதறி அழ, ஊர் மக்கள் திரளாக வந்தும் உறவினர் கூடியும் நல்லடக்கம் செய்து விட்டார்கள். தலையூர்ப் பட்டக்காரருக்கு மேல் தலைய நாடு, பெரிய மருதூரில் அப்போது அரண்மனை கட்டிக் குடியிருந்த வள்ளல் பெரியாயி மன்னரின் அரண்மனையில் விவாகம் நடந்திருந்தது. மேல் தலைய நாட்டுப் பட்டக்காரர் வந்து மரண சடங்குகள் செய்துவிட்டு மகளைத் தலையூரில் விட்டுவிட்டு அவர் மருதூர் சென்று விட்டார்.

## ஆண் குழந்தை பிறப்பு

தலையூர்ப் பட்டக்காரர் மரண காலத்தில் பட்டத்து ஸ்திரீ நிறைமாத கர்ப்பம். தவிர முன் ஆணோ பெண்ணோ ஒன்றும் கிடையாது. தகப்பனார் வீட்டிலிருந்து யாரும் வரவில்லையென்று தானே தகப்பனார் அரண்மனை செல்ல மேல் தலைய நாட்டைச் சேர்ந்த எடைக்கல் பாடி வழியாகப் போகும் போது அவ்வூரில் ஒரு கொங்கு வெள்ளாளர் அம்மாவைக் கண்டு நீங்கள் யாரென விசாரிக்க நான் மேல் தலைய நாடு பட்டக்காரர் மகள். தலையூரிலிருந்து பெரிய மருதூர் செல்கிறேன் என்றார்களாம். நிறை கர்ப்பினியாக இருந்து கொண்டு நீங்கள் செல்ல வேண்டாம். உங்கள் ஐயாவை இவ்விடம் வரவழைக்கிறேன் என்று சமாதானம் சொல்லிக் கூடவந்த துணைவி மார்களுடன் தன் வீட்டிற்குக் கூட்டிப்போய் இருப்பிட வசதி செய்து கொடுத்து விட்டுத்தான் உடனடியாக மருதூர் சென்று வள்ளல் பெரியாய் மன்னரிடம் தகவல் கொடுக்க அவர் எடக்கல்பாடி வந்து மகளைச் சந்தித்துக் கொண்டார். அதன்மேல் தானும் எடைக்கல்பாடிக் கவுண்டரும் ஒரு முடிவு செய்து கொண்டார்கள்.

அம்மாவுக்குக் குழந்தை பிரசவம் ஆனபின் தான் உங்கள் ஊருக்குக் கூட்டிப் போக வேணும். அதுவரை இங்கு இருக்கட்டும்" என்று நிறுத்தி விட்டார்கள். மூன்றாம் நாள் பட்டத்து ஸ்திரீக்கு ஆண் குழந்தை ஜனனமாகி விட்டது. அதன்பின் தாய் தகப்பனாருடன் பெரிய மருதூர் சென்று

விட்டார்கள் பட்டக்காரர் இறந்த பின் குழந்தை ஆண் அரசனாவே பிறந்தது சத்தியக்கட்டளை என நாட்டில் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள்.

## கொடுமுடியில் கூட்டம்

சில வருடங்களுக்குப் பிறகு கொடுமுடியில் 24 நாட்டுப் பட்டக்காரர்கள் ஒன்று கூடிக் கூட்டம் நடக்கும் போது தலைய நாட்டும்பட்டக்காரர் மகன் மெய்ப்பொருள் நாத வள்ளல் கூட்டத்தில் கலந்திட அப்போது ஆனங்கூர் நச்சுழிக் கவுண்டர்கள், அவர் அல்ல நான்தான் தலைய நாட்டுப் பட்டக்காரர் எனத் தடையேற்படுத்திவிட்டார்கள் அப்போது மேல் தலைய நாடு வள்ளல் பெரியாயி மன்னர், இவர் ஆனங்கூரில் சாதாரணக் கவுண்டரே ஒழிய பட்டக்காரர் அல்லவென்று ஆட்சேபித்து விட்டர் இதில் ஒருவருக்கொருவர் பெரும் தகராறாகிவிட்டது. அதற்கு மேல் அங்கு கூடியிருந்த பல நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். இதை யாரும் பைசல் செய்ய முடியாது. தெய்வம் தான் பைசல் செய்ய வேண்டும் என்று இருவருக்கும் ஒரு தீர்மானம் சொல்லி முடித்தார்கள்.

## கோயில் யானை மாலை சூடுதல்

ஆனங்கூர் நச்சுழிக் கவுண்டர் பாலனைவும், தலையூர்ப் பட்டக்காரர் பாலனையும் காவேரியில் குளிக்கச் செய்து ஈஸ்வரர் கோவில் சன்னதியில் இருவரையும் கிழக்கு முகமாக ஜோடியாக உட்கார வைத்து அதன் பின் சுவாமி யானையின் தும்பிக்கையில் ஒரு மாலை கொடுத்து அந்த யானை யாருக்கு மாலை அணிவிக்கின்றதோ அவர்தான் தலய நாட்டுப் பட்டக்காரர் எனத் தீரமானித்து விட்டார்கள். அதற்கு இரு தரப்பினரும் சம்மதித்து அங்கு கூடியிருந்த பல நாட்டுப் பட்டக்காரர்களிடம்

ஒப்புதல் கொடுத்து விட்டார்கள். பின் பைசல் சொன்னபடி காவேரியில் இருபாலரையும் குளிக்கச் செய்து ஈள்வரர் கோவிலில் இருவரையும் அமரச் செய்து சுவாமி யானையின்

தும்பிக்கையில் மாலையை கொடுத்து காவேரிக் கரையிலிருந்து மேள தாளத்து டன் ஈன்வரன் கோவில் வந்து யானையை நிறுத்தி விட்டார்கள். அப்போது யானை பிளிறிக் கொண்டு தலையூர்ப் பட்டக்காரர் சவுந்திர பாண்டிய வள்ளளின் பாலகருக்கு மாலை சூட்டிவிட்டது. பிறகு மண்டியிட்ட யானை எழுந்திருக்காமல் அப்படியே யிருக்க அங்குள்ள நாட்டுப்பட்டக்காரர்களும், பொது மக்களும் மாலையணிந்த பட்டக்காரரை யாணை மீது வைத்து அப்போதே ஊர்வளம் வந்து கொடுமுடியிலேயே பட்டாபிஷேகம் சூட்டிவிட்டார்கள்.

## பழிக்கும் பழி

அதன் பின் பட்டக்காரர் தலையூர் சென்று, தன் அரண்மனையிலிருந்து கொண்டு தன் தகப்பன் தலையை நச்சுழிக்கவுண்டர் வெட்டியதைப் பழிக்கும் பழி செய்ய வேண்டுமென உடனே தன் படைகளைத்

திரட்டி ஆனங்கூர் சென்று அங்குள்ள நச்சுழிக் கவுண்டர் வகையறாக்களைத் தலையை வெட்டி எறிந்தும் தப்பி ஓடியவர்களின் வீடுகளை இடித்துத் தரைமட்டம் செய்தும் தலைய நாட்டுக்குள் நச்சுழிக்கவுண்டர் யாரிருந்தாலும் தலையை வெட்டிக் கொண்டு வரும்படி தீர்மானம் செய்து விட்டார்கள். அப்போது ஆனங்கூர் காலியானது. இன்றும் அந்த இடத்தில் யாரும் வீடு கட்டவில்லை, ஆனங்கூர் என்ற ஊரும் இல்லை. இப்போது அங்கு பேருந்து நிறுத்தம் மட்டுமே உள்ளதால் அந்த இடத்தில் இதர ஜாதியினர் ஒருசில கடைகள் வைத்திருக்கிறார்கள். ஆனங்கூரில் உள்ள கரியகாளியம்மன் கோவில் சிகிலமான முறையில் இருக்கிறது.

## கெர்ப்பாத்தாக்கவுண்டர் / செய்நன்றி மறவாமை

எடைக்கல்பாடி வெள்ளாளன் தான் கர்ப்பத்திலிருக்கும் போது கர்ப்பத்தைக் காப்பாற்றிப் பாதுகாப்புச் செய்ததற்காக அவரைக் கூப்பிட்டு இனி நீங்கள் உங்கள் வகையறாவில் ஆண்

குழந்தை பிறந்தால் என்னைக் காப்பாற்றி யதற்காக உங்கள் குழந்தைகளுக்குப் பெயர் கெர்ப்பாத்தாக் கவுண்டர் எனச்சூட்ட வேண்டியது எனத் தீர்மானம் செய்து பட்டக்காரர் மெய்ப் பொருள் நாத வள்ளல் தன் அப்பிச்சி வள்ளல் பெரியாய் மன்னரிடம் இருந்த எடைக்கல்பாடிக் கிராம முன்சீப் வேலையை இனாமாகக் கொடுத்தும் இருக்கிறார்கள். அதுமுதல் இதுவரை கிராம முன்சீப் வேலை பார்த்துக் கொண்டும், கெர்ப்பாத்தாக் கவுண்டர் என்றும் பெயர் சூட்டி வருகிறார்கள்.

## ஆனங்கூர் நச்சு வாவி

தலையூர்ப்பட்டக்காரர் வார்ய மகன் தலையூரை விட்டுப் பிரிந்த இடமும், கோட்டை கட்டி ஆண்ட இடமும் கரிய காளியம்மன் இருக்குமிடமும். பின் விவரமாகக் கூறிவரும்.

தலையூர்ப்பட்டக்காரர் வார்யமகன் புங்கம்பாடி, அரவக்குறிச்சி, பூமதேயம் இனுங்கனுர் வேலம்பாடி இந்த நான்கு கிராமத்திலும் முன்சீப் வேலையும் குடியிருந்தும் வருகிறார்கள். மேற்கண்டவர்கள் இன்னும் ஆனங்கூர் வாவி தடாகத்தில் தண்ணீர் குடிப்பதில்லை. மேற்படி வார்ய மக்கள் யாரும் தெரியாத்தனமாகத் தண்ணீர் குடித்து விட்டாலும் 24 மணி நேரத்தில் சிறுநீர் ரத்தமாகவும் திரேக பீடையும் காட்டிப் படுக்கையில் இருக்கும்படி சோதனை நடந்து வருகிறது.

தற்காலம் இனுங்கனூரில் வசித்துவந்த வாரணவாசி வள்ளல் மகன் பெரியசாமி வள்ளல் என்பவர் தலையூர் சுவாமி தரிசனம் செய்யப் போனவர் ஆனங்கூர் வாவியில் தெரியாத்தனமாக தான் தண்ணீர் குடித்தும் அசுவ வாகனத்திற்குத் தண்ணீர் காட்டியும் தலையூர் போவதற்குள் குதிரைக்கும் தனக்கும் ரத்த நீர்க்கண்டு உடனே ஊர் வந்து விவரம் சொல்லி கரிய காளியம்மன், காமாட்சியம்மன் கோவிலுக்குச் சென்று தப்பிதம் கட்டி விபூதி தீர்த்தம் போட்ட பின் சௌகரியப்பட்டதும் இப்போதே ஆகும்.



## செல்வச் சிறப்பு

தலையூர்ப் பட்டக்காரருக்கு ஒரு ஆண் குழந்தை மட்டும் இருந்தது. அவருக்கு மெய்ப்பொருள் நாத வள்ளல் என்று பெயர் சூட்டி வந்திருக்கிறார்கள். அவருக்கு இரண்டு பாலகர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. புங்கம்பாடியில் 700 ஏக்கர் பூமியும், பூமதேவத்தில் 800 ஏக்கர் பூமியும் இணுங்கனூர் வேலம் பாடியில் 500 ஏக்கர் பூமியும், தலையூரில் நஞ்சை மாந்தோப்புக்கள் சகிதம் இருந்ததில் தலையூர் நஞ்சை தோப்புக்கள் சகிதம் விற்றுவிட்டுப் புங்கம்பாடிக்கு மூத்தமகன் பூசைய வள்ளலுக்குக் கோட்டை கட்டி, கரியகாளியம்மன், மீனாட்சியம்மன் கோவில் கட்டி அங்கு பட்டக்காரராக நியமித்து விட்டார்கள். இளைய மகன் கனகசபாபதி வள்ளலுக்குப் பூமதேவத்தில் கோட்டை கட்டி மண் மாரியில் கரிய காளியம்மன் கோயில் கட்டிப் பூமதேவத்தில் பட்டக்காரராக நியமித்துவிட்டார்கள்.

## ஆங்கிலேயர் சந்திப்பு

இவர்கள் ஆங்கிலயர் சீமையை கைப்பற்றும் முன்பு தலைய நாட்டுக்கு ஜமீன் தாரர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் காலத்தில் ஜமினைவிட்டு நீக்கிவிட்டதாகவும் கூறுகிறார்கள். ஜமீனை நீக்குவதற்குக் காரணம் ஆங்கிலேயர்

வந்து சீமையைக் கைப்பற்றிய பின் சிற்றரசராகிய ஜமீன்தார்களுக்குத் தகவல் அனுப்ப "பட்டக்காரர் நித்திரை செய்கிறார் எழுப்ப முடியாது" என்று கூப்பிட வந்தவர்களுக்குக் கூறி அங்கிருந்தவர்கள் ஆயிரம் பொன் கொடுத்து அனுப்பி விட்டார்கள். பின் நித்திரை தெளிந்து எழுந்ததும் தகவல் தெரிந்து பூசை முடித்துவிட்டு ராசாக்களைத் தரிசிப்பதற்காகப் படை திரட்டி ஆயுதங்கள் மேளதாளத்துடன் ஆங்கிலேயரைக் காண்பதற்குப் போகிறார்கள். பட்டக்காரருக்கு எதிரியாய் இருந்தவர்கள் ஆங்கிலேயரிடம் ஒரு தலைய நாட்டுச் சிற்றரசர் உங்கள் மீது படையெடுத்து வருகிறார் எனத் தூண்டிவிட்டு ஆங்கிலேயருக்குக் கோபம் வரும்படி செய்துவிட காலா காலத்தில் வராததால் உங்கள் ஜமீனை கேன்சல் செய்த்துவிட்டோம் என உத்தரவு செய்துவிட்டார்கள், பின் பட்டக்காரர் எட்டுக் கிராமத்திற்கும் ஜமீன் ஆக இருந்தவர்களை நீக்குவது சரியல்ல என வாதிட்டபிறகு எட்டுக் கிராமத்திற்கும் முன்சீப் வேலை பார்த்துக் கொள்ளுங்கள் என தீர்மானித்து விட்டார்கள். எனக்கு எட்டுக் கிராமத்திற்கும் வேலை கொடுத்தால் என் மந்திரிக்கும் வேலை வேண்டுமெனக் கேட்க உங்கள் மந்திரிக்கு எட்டுக் கிராமத்திலும் கணக்கு வேலைக்கு உத்தரவு செய்கிறேன் எனத்தீர்ப்புக் கூறிவிட்டார்.

ஆங்கிலேயர் காலத்தில் எட்டுக்கிராமக் கணக்கு வேலையும் சோழிய வெள்ளாளராகிய பிள்ளைமார் கூட்டத்திற்குச் சாரி செய்தும் அந்த வகையறாப் பேர்கள்தான் புதிய சட்டங்கள் வரும்வரை கணக்கு வேலையைப் பார்த்து வந்திருக்கிறார்காள்.

## கிராம முன்சீப்

சர்க்கார், ஒரு நபருக்கு ஒரு மணியம் தான் பார்க்க வேண்டும். பல கிராமங்கள் ஒரு நபருக்குக் கொடுக்க முடியாது என உத்தரவு போட்ட பின் அதற்குத்தக்கபடி வார்ய மக்கள் அதிகம் இல்லாததால் புங்கம்பாடி பூசை வள்ளல் அவர்களுக்கும், அரவக்குறிச்சி பள்ளபட்டி சொக்கைய வள்ளல் அவர்களுக்கும்,

பூமதேவம் பட்டக்காரர் சவுந்திரபாண்டிய வள்ளல் அவர்களுக்கும் இனுங்கனூர் வேலம்பாடியும், தலையூர் கிராம முன்சீப் வேலை வாரணவாசி வள்ளல் அவர்களுக்கும் நியமித்து வேலை பார்த்து வந்திருக்கிறார்கள்.

## நவமரத்துப்பட்டிப் பட்டக்காரர்

சேந்தமங்கலம் கிராமம் நவமரத்துப்பட்டிப் பட்டக்காரருக்கு சட்டகர் முறையானதால் சேந்தமங்கலத்திலுள்ள முன்சீப் வேலையும், அந்தக் கிராமத்தில் நடக்கும் கோவில் மரியாதை சகிதத்தையும் தானமாகக் கொடுத்துவிட்டார்கள். நவமரத்துப் பட்டிப் பட்டக்காரர் கோத்திரம் பெயர் வெங்காஞ்சி வேட்டுவக்கவுண்டர் அவர்களுக்கு ஒண்டியகவுண்டர் என்றும் பட்டப்பெயர் உண்டு. அவர்கள் முன்னோர்கள் ரங்கமலை அடிவாரத்தில் மலைப்பட்டிப் பக்கம் கோட்டை கட்டி ஆண்டு வந்திருக்கிறார்கள். கோரையூத்தில் நங்காஞ்சி ஆற்றுப் பாசனத்தில் அவர் வயலில் ஒரு திடலில் கல்சாசனம் நஞ்சுண்ட ஒண்டிய கவுண்டர் என்று பதிக்கப்பட்டு உள்ளது.

## நவமரத்துப்பட்டி காமாட்சியம்மன் கோவில் உற்சவம்

நவமரத்துப்பட்டியில் மேல்தலைய நாட்டுப் பட்டக்காரர் வள்ளல் பெரியாயி மன்னர் அவர்களால் சீதனம் கொடுக்கப்பட்ட காமாட்சி அம்மன் கோவில் ஒன்று உண்டு. அந்தக் கோவிலில் பூசையும், மானியப்பூமியும் உண்டு. பரம்பரை பரம்பரையாக மாசிமாதம் சிவராத்திரிக்கு பெரும் உற்சவமாக நான்கு நாட்களுக்கும் நவமரத்துப் பட்டிப்பட்டக்காரர் சுதாவாகவே இன்றும் நடத்திவருகிறார்கள். புங்கம்பாடி, பூமதேவம், இனுங்கலூர்ப் பட்டக்காரர்களும், பொருளூர், பட்டுத்துறைப் பட்டக்காரர்களும் நவமரத்துப்பட்டிக்குக் காமாட்சியம்மன் உற்சவத்திற்குப் போனால் நவமரத்துப்பட்டிப் பட்டக்காரர் சகலவிதமான மேளதாள வாத்தியத்துடனும், சுருட்டி சூரியவானம் வெஞ்சாமர விருதுகளுடனும் பெரும் கூட்டத்துடன் வந்து அழைத்துச் செல்வது வழக்கம்.

## முன்கீப் வேலை தானம்

மொடக்கூர் கிராம முன்சீப் வேலையைக் குன்னாடிக் கவுண்டர், பெரியாயிக் கவுண்டருக்கு இனாமாகக் கொடுத்து அம்மன்கோவில் பாளையத்திலிருக்கும் பெரிய நாயகி அம்மனின் முதன்மையும் இனாமாகக் கொடுத்து விட்டார்கள். சாந்தப்பாடி முன்சீப் வேலையை அவ்வூர்க் வெள்ளாளர் ஒருவருக்கு இனாமாகக் கொடுத்து விட்டார்கள். வேளாம் பூண்டி மணியத்தையும் இனா மாகக் கொடுத்து விட்டார்கள். பள்ளபட்டி முன்சீப் வேலையை முஸ்லீம் ஆகிய இதயத்துல்லா வகையறாவுக்கு இனாமாகக் கொடுத்து விட்டார்கள். ஆனால் இதயத்துல்லாவுக்கு மணியம் கொடுத்த விவரம் இதன் கீழ்க்கூறப்படும்.





## இருக்கூர்ப்பட்டக்காரர் உறவு

இனுங்கனூர்ப் பட்டக்காரர்களின் முன்னோர்கள் பூமதேவத்தில் கோட்டைகட்டி ஆண்ட காலத்தில் சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா இருக்கூர் பட்டக்காரர் இம்முடிப் பட்டம் அல்லாள இளைய நாயக்கர் அரண்மனையில் போய்ப் பெண் கேட்க உங்கள் நாடு மேட்டாங் காடாக இருக்கிறது, நஞ்சையில்லாத நாடாக இருப்பதால் காவேரி ஆற்றுப் பாசனத்தில் நஞ்சை சாகுபடி செய்யும். நாங்கள் புஞ்சையுள்ள மேட்டாங் காட்டுக்குப் பெண்தரமுடியாது" என்று சொல்லிவிட்டார்கள்.

## வள்ளல் நகரம் உருவாதல்

நஞ்சையுண்டு பண்ணிக்கொண்டு வந்தால் பெண் கொடுக்க முடியுமா என்று கேட்க "நஞ்சையுண்டு பண்ணிக்கொண்டு வந்தால் உறுதியாகப் பெண் கொடுக்கிறோம்" என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு புங்கம்பாடி பூமதேவம் பட்டக்காரர்கள் ஒன்றுகூடி விருப்பாட்சி மலையிலிருந்து வரும் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தலைய நாட்டைச் சேர்ந்த சேந்தமங்கம் கிராமம் கோரையூத்தில் ஒரு அணை கட்டியும், பள்ளபட்டி அணைக்கட்டு அருகே இரண்டு தடுப்பணைகள், அரவக்குறிச்சி பக்கத்தில் இரண்டு தடுப்பணைகள், பள்ளபட்டி அருகே அணைக்கட்டு நீரை வாய்க்கால் மூலம் எடுத்துச் சென்று மண்மாரி ஆற்றின் மேல் பெரிய குளம் கட்டினர்.

## கன்னிமார்கள்

சுவாமி சிலைகள் வைத்து ஒரு பெரும் நஞ்சை உருவாக்கினார்கள். அதை உழுவதற்கு பள்ளர்களை கொண்டு வந்து வெற்றிலைக் கொடிக்கால் போட பாண்டமங்கலத்தில் இருந்து இருக்கூர் பட்டக்காரர் மூலம் கொடிக்கால்காரரையும் கூட்டி வந்து அணைப்பக்கம் ஊர் உண்டு பண்ண உத்தேசித்து குளத்தில் இருக்கும் கன்னிமார் சுவாமி கோவிலிலிருந்து

பட்டடத்து குதிரைக்கு மஞ்சள் நீர் தெளித்து அது எவ்விடத்தில் சென்று துலுக்குகிறதோ அவ்விடத்தில் ஊர் கட்டுவது என்று தீர்மானித்தார்கள். அக்குதிரை இப்போது ??பள்ளப்பட்டி இருக்கும் இடத்தில் வந்து துலுக்கியது. அதன் பின் அதே இடத்தில் ஊர் கட்டியும் இந்துக்களுக்கு தனியாக மாரியம்மன், காளியம்மன் கோவில் கட்டியும் அந்த ஊருக்கு வள்ளல் நகரம் என்று பெயர் சூட்டடப்பட்டது.

## கொடிக்கால்காரருக்கு நிலம் தானம்

அரண்மனைக்கு வெற்றிலை கொடுப்பதற்காகச் சுமார் 100 ஏக்கர் வரை கொடிக்கால் போடுபவர்களுக்குத் நிலம் தானம் செய்திருக்கிறார்கள். கொடிக்கால்காரர்களுக்கும், பள்ளர் களுக்கும் சாமான்கள் கொடுப்பதற்குக் கடைகள் வைப்பதற்காக முஸ்லிம் ஒருவரை நிலை நாட்டி - அப்போது நெருஞ்சி தூற்றி, பட்டடத்துக்கத்தியை வைத்து ஒருவர்க்கொருவர் சத்தியம் செய்து கொண்டு நிலை நாட்டடப்பட்டது.

## பெயர் மாறியது

முஸ்லிம்களுக்கும் அப்போதே பள்ளி வாசலும் கட்டடப்பட்டது. ‘வள்ளல் நகரம்’ என்று பெயர் இருந்ததை வெகு காலத்திற்குப் பின் ’மங்கபுரம்’ என்றும் பெயர் மாற்றப்பட்டது. அதன் பின்தான் தற்காலம் ’பள்ளபட்டி’ என்று பெயர் மாற்றப்பட்டது.

## திருமண உறவு

இதற்குமேல் இருக்கூர் போய்ப் பெண்கேட்க அவர்கள் புங்கம்பாடி, பூமதேவம் வந்து பள்ளபட்டி அருகே அணைக்கட்டு களையும், நஞ்சைகளையும் நேரில் பார்வையிட்டுப் பெண்கொடுப்பதாக உறுதிமொழி கூறிவிட்டார். அதற்கு மேல் புங்கம்பாடி, பூமதேவம் பட்டடக்காரர்கள் இருக்கூர் போய்ப் பெண் கேட்டு நிச்சயம் செய்து விவாகம் செய்து விட்டார்கள். அதிலிருந்து புங்கம்பாடி பூமதேவம் அரண்மனைக்கு இருக்கூர்ப்

பட்டக்காரர் பெண் கொடுப்பதும் புங்கம்பாடி, பூமதேவத்தில் பெண் எடுப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. இப்போது இருக்கும் இருக்கூர்ப் பட்டக்காரர்கள் இடும்பைய இளைய நாயக்கருக்குப் புங்கம்பாடியிலும், அவர் சின்னையா முத்துத்திருமலை இளைய நாயக்கர் குமாரர் கணேச இளைய நாயக்கருக்கும் பூமதேவம் பட்டக்காரர் இணுங்கனூரில் வசித்து வந்த கனகசபாபதி வள்ளல் அவர்களின் பெண்ணை விவாகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதேமாதிரி, மேல் தலைய நாடு பொல்லூர் பட்டுத்துறை அரண்மனையில் இருந்து இன்னும் விடாமுயற்சியாக சம்பந்தம் செய்து வருகிறார்கள்.

நவமரத்துபபட்டிப் பட்டக்காரரும் பொளூர் - பட்டுத்துறை சம்மந்தம் நீண்ட காலமாகச் செய்து வருகிறார்கள்.

## சீரும், சிறப்பும்

பள்ளபட்டி ஊர்கட்டி வள்ளல் நகரம் எனப் பெயர் சூட்டியதிலிருந்து புங்கம்பாடி- பூமதேவம் பட்டக்காரர்கள் பள்ளபட்டிக்குள் குதிரைச்சவாரியில் வருவது வழக்கம். பட்டக்காரரைத் தவிர வேறு யாரும் பள்ளபட்டிக்குள் குதிரைச்சவாரியில் போக முடியாது. மாரியம்மன், காளியம்மன் கோவிலில் முதல் மரியாதையும் பூமதேவம் - இணுங்கனூர்ப் பட்டக்காரருக்கு நடந்து வந்தது.

## வாரணவாசி வள்ளல் மரணம்

பெரிய பட்டக்காரர் வாரணவாசி வள்ளல் அவர்கள் 1923.ம் ஆண்டு காலமாகிவிட்டார்.

## பள்ளபட்டி மாரியம்மன் கோயில் உரிமைப் பிரச்னை

வாரணவாசி வள்ளல் அவர்கள் காலமாகிவிட்ட பின் அவரது மகன் கனகசபாபதி வள்ளல் மாமூலாகப் பள்ளபட்டி மாரியம்மன் உற்சவத்திற்கு 1930 ஆம் ஆண்டுபோக *ஶ்ரீ* “முதல் மரியாதை உங்களுக்குக் கிடையாது எனவும், ஊர்கட்டி

எங்களைக் குடி கொண்டு வைத்தபோதே கோவில் சுதந்திரமும் எங்களுக்கே கொடுத்து விட்டார்கள்” எனப் பள்ளபட்டிக் கொடிக்கால்காரர்கள், கொத்துக்கார கருப்பண பிள்ளை வகையறாவும் முதல் மரியாதையைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

அதன்பின் பள்ளபட்டி சௌந்தரபுரம் ப.முத்துச்சாமிக் கவுண்டர் பெரும் கும்பலுடன். பள்ளபட்டி போய்க் கைலாசம் பிள்ளையிடம் பட்டக்காரருக்கு முதல் மரியாதை இல்லையென்று சொல்வது தவறு. மாமூல்படி பட்டக்காரருக்கு முதல் மரியாதை நடக்க வேண்டும். இல்லாவிட்டால் திருவிழா நடக்க விடமாட்டோம் என நிராகரித்து நோன்பு நடக்காமல் நிறுத்திவிட்டார். அதன் பின் கைலாசம் பிள்ளை வகையறா. போலீஸ்காரருக்குப் பெட்டிசன் கொடுத்து - இணுங்கனூர் பட்டக்காரர் கனக சபாபதி வள்ளல், சௌந்தரபுரம் முத்துசாமிக்கவுண்டர், அவர் தம்பி கருப்பண கவுண்டர், மருதையப்ப கவுண்டர், இந்த நான்கு பேர்க்கும் 144 உத்தரவு வாங்கி விட்டார்கள். பின் கும்பம் கோவிலில் வைத்து உற்சவம் நடத்தினார்கள். 144 உத்தரவு இருந்தாலும் முத்துசாமிக் கவுண்டர் பெரும் கும்பலாக ஆட்கள் சேர்ப்பது தெரித்து, 144 உத்தரவு பெற்றுக் கொண்டும் மேற்கண்ட எதிரிகள் நால்வரும் மீண்டும் கலகம் செய்ய ஆள் சேர்க்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சியர், டி.எஸ்.பி. இவர்களுக்குத் தந்தி கொடுத்து அதிகாரிகள் போலீஸ் படையுடன் பள்ளபட்டி மாரியம்மன் கோவிலுக்கு வந்து விட்டார்கள். அவர்கள் வந்து நான்கு எதிரிகளையும், பெரும் கும்பலையும் பார்த்து ’பூர்வீகப் பழக்கம் எப்படி எனக்கேட்க’, முதல் மரியாதை பட்டக்காரர் கனகசபாபதி வள்ளல் அவர்களுக்கும், இரண்டாவது மரியாதை முத்துசாமிக் கவுண்டருக்கும், மூன்றாவது மரியாதை கொத்துக்காரக் கருப்பண்ண பிள்ளைக்கும்" என்று பட்டக்காரரும் முத்து சாமிக்கவுண்டரும் சொல்ல கருப்பண்ண பிள்ளை வகையரா மறுத்துவிட்டார்கள்.

## முஸ்லிம்கள் சாட்சி

ஊரில் பெரிய மிராஸ்தார் யார் என்று மேலதிகாரிகள் விசாரித்து பள்ளபட்டி சேர்மன் உதுமன்ஷா செல்லத்தா ராவுத்தர், சேலம் செல்லக்கனி ராவுத்தர், ஊக்கர் காதர் பாட்சா ராவுத்தர், தம்பி அன் ராவுத்தர், நோட்டம் காட்டுவா ராவுத்தர், இவர்களும் இன்னும் பல முள்லிம் மக்களும் அதிகாரிகளிடம் சொன்ன வாக்கு மூலம் இந்த "ஊர் பள்ளபட்டியின் ஆதி பெயர் வள்ளல் நகரம். இது பட்டக்காரர் கட்டி வைத்த ஊர். கோவில் பட்டக்காரர் கட்டிவைத்தது நங்காஞ்சி ஆற்றில் அணைகட்டி விவசாயம் செய்வதற்காகப் பள்ளரும், கொடிக்கால் போடுவதற்க்காக கொடிக்கால்காரரையும், இவர்களுக்குச் சாமான் கொடுக்க எங்கள் வகையில் ஒரு கான்ராவுத்தரையும் வகையறாவையும் பட்டக்காரர்தான் கூட்டிவந்து நிலை நாட்டியதால் அதிலிருந்து குடியேறி வந்த நபர்களாலும் பெரும் ஊராகி விட்டது.

பட்டக்காரர் குடும்பம் நாளுக்கு நாள் பண்ணைக் குறைவும், சொத்துக் குறைவும் ஏற்பட்டு விட்டது. அதை முன்னிட்டுக் கைலாசம் பிள்ளை வகையறா தங்களுக்கு உண்டான செல்வாக்கைக் கொண்டு பட்டக்காரருக்கு முதன் மரியாதை இல்லையென்று சொல்வது தவறு. அவருக்குத்தான் இந்த ஊரிலும் தலைய நாட்டிலே பூராவும் முதல் மரியாதை உண்டு. இந்த பள்ளபட்டியில் இந்தப் பட்டக்காரார்தான் குதிரைச்சவாரியில் வரலாம் யாரும் ஆட்சேபிக்கக் கூடாது. இது ஆதியிலிருந்து உள்ள பழக்கம். மற்றவர்கள் யாரும் குதிரை ஏறி நீங்களுமே வரமுடியாது' என வாக்குமூலம் சொன்னார்கள்.

## கோபமும், சாபமும்

“பட்டக்காரரும் வேட்டுவக்கவுண்டர், முத்துசாமிக் கவுண்டரும் வேட்டுவக் கவுண்டர். பட்டக்காரருக்கு முதல் மரியாரை இல்லாததால் கும்பலிருப்பதைப் பார்த்தால்

எத்தனையோ கொலை நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. பட்டக்காரருக்கு மாமூல் மரியாதை இல்லையென்று சொன்னால் சொன்னவர்கள் இந்த ஊரில் வாழ முடியாது. பட்டக்காரர் சாபம் கொடுத்தால் வாக்கும் பலித்து அழிந்து போய் விடுவார்கள் என்பது உறுதி இதுவே எங்கள் அபிப்ராயம் என்று முஸ்லிம் மக்கள் சாட்சி சொல்லி முடித்து விட்டார்கள். அதைக்கேட்டதும் மாவட்ட ஆட்சியர் அவர்களும், டி.எஸ்.பி. அவர்களும் பள்ளபட்டி கிராம முன்சீப் இதயத்துல்லா அவர்களை அழைத்து சீல்லைத்துவிட உத்தரவிட்டார்கள். கோவிலுக்குள் இருக்கும் கும்பங்களை எடுத்து ஆற்றில் விட்டு விடுகிறோம்" என்று கைலாசம் பிள்ளை வகையறா அனுமதிகேட்டார்கள். அதற்கு அனுமதி கொடுக்காமல் கோவில் பூட்டிச் சீல்வைக்கப்பட்டது. அப்போதே பட்டக்காரர் கனக சபாபதி வள்ளல் சூடம் ஏற்றி கோவிலின் புகழையும் கோவில் மரியாதையையும் அழிக்க நினைத்தவர்கள் குடும்பம் அழிந்து போக வேண்டுமெனச் சுவாமியை விழுந்து கும்பிட்டார்.

முஸ்லிம் மக்கள் சொன்னபடியும் பட்டக்காரர் சுவாமி கும்பிட்டபடியும் 1960 ஆம் ஆண்டுக்குள் கைலாசம் பிள்ளை வகையறாக் குடும்பங்களும், கொத்துக்காரக் கருப்பண பிள்ளை குடும்பங்களும் என சுமார் 30 வீடுகள் முழுவதும் தெய்வாதீனமாகவே காலியாகி ஊரை விட்டு ஓடி விட்டார்கள். இன்றும் பள்ளபட்டியில் கொடிக்கால்காரர்கள் வம்சமே இல்லாமல் அழிந்து போய் விட்டது. பள்ளபட்டியின் ஒரு வேட்டுவக்கவுண்டரான வி.ஆர்.கருப்பண கவுண்டர் இணுங்காணூர்ப் பட்டக்காரர் மற்றும் சௌந்தரபுரம் முத்துசாமிக் கவுண்டரிடமும் வந்து, பள்ளபட்டி மாரியம்மன் கோவிலை சுற்றிலும் மதில்சுவர் கட்டப் பிரார்த்தனை செய்திருக்கிறேன். அதை நான் கட்டுகிறேன் எனக் கேட்க இருவரும் அனுமதி கொடுத்து விட்டார்கள்.

## நீதி மன்றத்தில் வழக்கு

வி. ஆர். கருப்பணகவுண்டர் மதில்சுவர் கட்டுவதை முஸ்லிம்கள் தடுப்பதாகவும், அதை யாரும் தடுக்கக் கூடாது என்றும், தான்தான் கோவிலுக்குச் சொந்தமென்று கலெக்டர் அவர்களிடம் ரகசியமாக ஒரு உத்தரவு வாங்கிவிட்டார். இந்தச் செய்தி பட்டக்காரருக்கும், முத்துசாமிக் கவுண்டருக்கும் தெரிந்து வி. ஆர். கருப்பண்ண கவுண்டர் பேரில் முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து விட்டாங்கள். மாரியம்மன் கோவில் பூசாரி ஆ. நல்லியாண்டிப் பண்டாரம், முத்தாளம்மன் கோவில் பூசாரி கவண்டப்பர் வத்த வண்ணான் இவர்களை முன்சீப் கோர்ட்டில் விசாரணை செய்து, மாவட்ட ஆட்சியர் போட்ட உத்தரவைத் தள்ளுபடி செய்து பரம்பரையாய்ப் பாத்தியம் முதல் மரியாதை விபூதி பிரசாதம் இணுங்கனூர்ப் பட்டக்காரர் கனக சபாபதி வள்ளலுக்கும் 2.வது மரியாதை முத்துசாமிக் கவுண்டருக்கும் என்று கரூர் o.K. கோர்ட் கேஷ். நம்பர் O.S 204/64 தீர்ப்பாகி விட்டது. அந்தத் தீர்மானத்தை எதிர்த்து வி.ஆர் கருப்பண கவுண்டர் திருச்சி சப்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்து வியாச்சியம் தொடர்ந்தார், வியாச்சியம் முடிவுக்குள் கருப்பண கவுண்டரும் காலமாகிவிட்டார். சப்- கோர்ட்டிலும் பட்டக்காரர் கனக சபாபதி வள்ளலுக்கு முதல் மரியாதை, முத்துகாமிக் கவுண்டருக்கு 2.வது மரியாதையென்று As No.39/1967ல் தீர்ப்பாகி ஜட்ஜ்மெண்ட் வழங்கப்பட்டது.

## மண்மாரி, பூமதேவம் முதல் மரியாதை

பள்ளபட்டி கிராமம் மண்மாரி கரிய காளியம்மன் கோவிலில் குதிரை துலுக்குப் பிடிப்பது, பூமதேவம் இணுங்கனூர்ப் பட்டக்காரர் குதிரைதான். கோவில் முதல் விபூதி பிரசாதம் பெற்று வருவது நடைமுறையில் நடந்து வருகிறது.

பூமதேவத்தில் அரண்மனையார் அவர்கள் ஆதியில் காலை மாலை வந்து அமரும் சலவைக்கல் இருக்கிறது. அவ்விடத்தில்

அரண்மனைக் குதிரை துலுக்கப் பிடிக்கும் வழக்கம் இன்றும் நடந்து வருகிறது பூமதேவம், கருங்கல்பட்டி ஊர்ப்பொது மக்கள் பெருங்கும்பலாக கூடி அரண்மனைக் கிணற்றில் குதிரை குளிப்பாட்டி, சலவைக்கல்லுக்கு மேள் தாளத்துடனும், வாத்தியத்துடனும் அழைத்துவந்து அவ்விடத்தில் சலவைக் கல்லில் மாத்து விரித்து கொழுக்கட்டை, அரிசி, தேங்காய் பழம் வைத்து அரண்மணையாரே தான் சலவைக் கல்லுக்குப் பூசை செய்து அதன் பின் குதிரைக்கு மஞ்சள் நீர் போட்டு குதிரை துலுக்குவது வழக்கம். அதன் பின் ஊர் பொதுமக்கள் அரண்மனையாருக்கு புது வேட்டி தாம்பூலம் கொடுத்து அழைத்து வருவது வழக்கமாயிருந்து வருகிறது.

மலைப்பட்டிக் கம்பளத்து நாய்க்கர்கள் தை நோன்புக்கு சலை எருது மறிக்கிறவர்கள் பூமதேவம் அரண்மனைக்குச் சலை எருதுடன் பெரும் கும்பலாக வந்து பூசை செய்து கொண்டு அதன் பின் நவமரத்துப்பட்டிக் கோவிலுக்கும் அவ்வூர் அரண்மனைக்கும் செல்வது வழக்கமாக நடந்து வருகிறது.

## ரெட்டியார் மரியாதை

பூமதேலத்தில் சுமார் 200 ஆண்டுகள் முன் குடியிருந்து வந்த ரெட்டியார் ஒருவரை ஏதோவொரு தவறான காரியம் செய்து விட்டதால் அவரைப் பட்டக்காரர் ஊரை விட்டு வெளியேற்றி விட்டார், அந்த வம்சத்தார் இப்போது ஒட்டன்சத்திரம் வட்டம் புலியூர் நத்தம் கிராமம் குளிப்பட்டியில் குடியிருந்து வருகிறார்கள், ரெட்டியார்கள் பூமதேயத்தில் குடியிருந்த காலத்தில் முகூர்த்த காலத்தில் அரண்மனைக்கு முதல் தாம்பூழம் கொடுத்துத்தான் மற்ற உறவினருக்குக் கொடுப்பது வழக்கம். இப்போது அவர்கள் ஊரைவிட்டு வேறு தாலுக்கா கிராமத்திற்குக் குடியேறிப் போயிருந்தாலும் இன்றும் குளிப்பட்டியில் கல்யாணம் நடப்பதில் உறவினர்க்கு வெற்றிலை பாக்குக் கொடுப்பதற்கு முன் “பூமதேவம் பட்டக்காரர் வெற்றிலை பாக்கு” என்று செல்லி அவ்வூர்ப் பெரிய

தனக்காரர் வசம் கொடுத்து அதன் பின்பு தான் பெரிய தனக்கராருக்கும் மற்ற உறவினருக்கும் தாம்பூழம் வழங்கப்பட்டு வருகிறது.

## வாரனவாசி வள்ளல் வீரமும் தீரமும்

தாராபுரம் தாலூகா தலையூர்க்கிராமத்தில் அம்மன் கோவில் உண்டு. அவ்வூரில் வன்னியரும் அதிகமுண்டு. 1880-ம் ஆண்டு தலையூர் முன்சீப் வேலை பார்த்து வந்த பூமதேவம் பட்டக்காரர் வாரணவாசி வள்ளல் அவர்களுக்குக் கோவிலில் முதல் மரியாதை விபூதி கொடுப்பதைப் வன்னியர் தடுக்க முயற்சி செய்தது தெரிந்து வன்னியர் கோவிலுக்கு வந்தால் பண்டாரம் பூசை செய்யக்கூடாது தோட்டிகள் தப்புத்தட்டக் கூடாது" என்று பட்டக்காரர் திட்டம் செய்திருக்க வன்னியர்கள் வேலாண்டி என்பவரைக் கூப்பிட்டு “நாங்கள் நூறு பேரிருக்க ஒரு பட்டக் காரர் உன்னை என்ன செய்யமுடியும்? உனக்கு 100 ரூபாய் பணமும் தருகிறோம் பட்டக்காரர் வந்தால் நாங்கள் கலகம் செய்யத் தயாரா இருக்கிறோம் நீ வந்து கோவிலில் பூசை“எனச் சொல்லி பூசை செய்ய முயற்சி செய்தும், பொங்கல் மாவிளக்கு எடுத்துவந்து கும்பலுடன் பூசை செய்து கொண்டிருந்தார்கள்.



பட்டக்காரர் வாரணவாசி வள்ளல் தனிநபராகவே குதிரைச் சவாரியிலேயே கோவிலுக்குள் நுழைந்து பூசை செய்த வேலாண்டியைக் கொறடாவில் அடிக்க அடிதாங்காமல் வன்னியர் கும்பலுக்குள் நுழைந்து ஓடக் குதிரையும் வேலான்டி ஓடின வழியே ஓட அடி மேல் அடிவைத்துவிட்டு வன்னியர் கும்பளை பார்க்க, திக்குத்திக்காய் எல்லோரும் ஓடிவிட்டார்கள் அதன்பின் வந்து பட்டக்காரர் கோவிலைப் பூட்டி விட்டு அரண்மனைக்கு வந்துவிட்டார்கள். பின் கிராமத்தார் அனைவரும் வந்து கோவிலுக்குப் போக முயற்சித்துப் பட்டக்காரர் குதிரைச் சவாரியுடனும் மேளதான வாத்தியத்துடன் அம்மன் கோவிலுக்கும் போக, வன்னியர் வந்து சரணாகதியடைந்து நாங்கள் நடந்து கொண்டது தவறு. இனிமேல் மாமூல்படி பட்டக்காரரே முதல் மரியாதை பெற்றுக் கொள்ளட்டும். தகராறு வேண்டாம் பட்டக்காரர் வராவிட்டாலும் கூடப்பட்டக்காரர் விபூதியைக் கோவில் படிக்கல்லில் போட்ட பின் மற்றவர்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று உறுதி கூறியதின் பின் சமாதானம் ஆகிச் சாமிகும்பிட்டு வருகிறது. த லையூர் அம்மன் கோவில் ஈசுவரன் கோயில் சகிதத்திலும் பூமதேவம், இணுங்கனூர்ப் பட்டக்காரர்களுக்குத்தான் இன்றும் முதல் மரியாதை விபூதி பிரசாதம் வழங்கும் வழக்கம் நடைபெற்று வருகிறது.

## புங்கம்பாடிப் பட்டக்காரர்

புங்கம்பாடிப் பட்டக்காரர், புங்கம்பாடியிலுள்ள கரியகாளியம்மன், மீனாட்சியம்மன், அரவக்குறிச்சியில் காசி விஸ்வநாதசாமி, சுப்பிரமணியர் கோவில், காளியம்மன், மாரியம்மன், பகவதியம்மன் கோவில் மொடக்கூர் கிராமம் கோவிலூர் மெய்ப்பொருள் நாத சுவாமி கோவிலிலும் முதல் மரியாதை விபூதி பிரசாதம் பெற்று வருகிறார்கள். குறிப்பாகப் புங்கம்பாடியில் கரியகாளியம்மன் சாட்டிக் கும்பிடுவதில் அரண்மணைக்குதிரை தான் துலுக்குப் பிடிப்பது வழக்கமாக நடந்து வருகிறது.



மொடக்கூர்க்கிராமம் கோவிலூரில் மெய்ப் பொருள் நாத சுவாமிக்கு வருடாவருடம் தேர் உற்சவம் நடக்கிறது. உற்சவத்திற்கும் புங்கம்பாடி பட்டக்காரர் போய்த் தேர் முன்நின்று பட்டம், பரிவட்டம் கட்டியும், இரண்டாவதாக மொடக்கூர் முன்சீப் அம்பைய கவுண்டருக்குப் பட்டம் பரிவட்டம் கட்டிய பின்தான் தேரிழுத்துச் செல்வது வழக்கமாக நடந்து வருகிறது.

## வேளாம்பூண்டி மாலமேடு கம்பளத்தார் கோயிலில்

வேளாம் பூண்டிக்கிராமம் மால மேட்டின். கம்பளத்து நாயக்கர் மாலைக்கோவில் இருக்கிறது. அக்கோவிலுக்குப் பல்வேறு ஊர்க்காரர்கள் சுமார் ஆயிரம்பேர்கள் கம்பளத்து நாயக்கர் கூடி மாலை கும்பிடுவது வழக்கம். அக்கூட்டத்திற்கும் புங்கம்பாடி பட்டக்காரரை அழைத்துக் கொண்டுபோய் அங்கு போட்டிருக்கும் பச்சைப் பந்தலில் வைத்து அவர்கள் கும்பலுடன் கூடிச் சுவாமி கும்பிட்டு, அதன் பின்தான் சலை எருது மறிக்க விடுவது வழக்கமாக நடந்து வருகிறது. பட்டக்காரரைத் தவிர வேறு வர்ணத் தாவு வைத்துக் கம்பளத்தார் பேசமாட்டார்கள். இவ்விதம் நடத்தக் கம்பளத்தார் வசம் சாசனம் இருக்கிறது. மாலை கும்பிட்ட பின் பட்டக்காரருக்குத் தாம்பூலம், புது வேட்டி கொடுத்துக் கம்பளத்து நாயக்கர் மரியாதையை செலுத்தி வருகிறார்கள்.

புங்கம் பாடிப்பட்டக்காரரும், பூமதேவம் இனுங்கனூர்ப் பட்டக்காரரும் ஒரு பாகஸ்தர்கள்.

## இருக்கூர்ப் பட்டக்காரரும், திருமலை நாயக்கரும்

இருக்கூர் பட்டக்காரர் வம்சத்தார்கள் மதுரைக்கு சுவாமி தரிசனம் செய்யப் போயிருக்கிறார்கள் திருமலை நாயக்கரின் குதிரை ஒன்றில் யாரும் சவாரி செய்ய முடியாமல் இருந்தது. அப்போது தண்டோரா மூலம்

"அரண்மனையில் குதிரை இருக்கிறது அதை யாராவது சவாரி செய்து காட்டினாள் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும்" என்று அடிக்கப்பட்டது. அப்போது இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்கள் வம்சத்தார் திருமலை நாயக்கர் அவர்களின் அரண்மனைக்குப் போய்க் குதிரையைப் பார்த்துவிட்டு நான் குதிரைச் சவாரி செய்கிறேன் என்று சொல்ல சவாரி செய்யும்படி திருமலை நாயக்கர் உத்தரவின்படி அரண்மனையிலுள்ள குதிரையின் மீது விபூதி போட்டதும் அந்தக் குதிரையைப் பிடித்துச் சேனம் வைத்து மதுரை மாநகர் முழுவதும் சவாரி செய்துவிட்டு அரண்மனை முன் திருமலை நாய்க்கர் அவர்கள் முன்னால் வந்து குதிரையை விட்டு இறங்கினார். குதிரை நிறைந்த வேர்வையுடன் நின்றது அப்போது திருமலை நாயக்கன் அவர் சிம்மாசனத்தை விட்டு இறங்கி வந்து குதிரைக்காரனைக் கூப்பிட்டுக் குதிரையைக் கட்டும்படி உத்தரவிட்டும், இருக்கூர் பட்டக்காரரைக் கை பிடித்துக் குலுக்கித்தன் சிம்மாசனம் பக்கத்தில் மறு சிம்மாசனம் போட்டு பட்டக்காரரைக் கூடவே அமரும்படி உத்தரவிட்டு அமரவைத்துக் கொண்டார். மீண்டும் மூன்று நாள் பட்டக்காரரையே சவாரி செய்ய பரீட்சை பார்த்து நான்காவது நாள் திருமலை நாய்க்கர் அவரே குதிரையின் மீது ஏறிச்சவாரி செய்து பரீட்சை பார்த்துக்கொண்டு அதன்மேல் இருக்கூர்ப் பட்டக்காரரிடம் உங்களுக்கு வடநாட்டில் அரையநாடு 36 கிராமம் உள்ளதைச் சாரி செய்திருக்கிறேன்.

அதற்கு நீங்கள் ஒரு சிற்றாரசராகவும், ஜமீன்தாராகவும் ஆண்டு வர வேண்டும் . மேலும் நான் பெரிய நாய்க்கர். நீங்கள் இளைய நாயக்கர் என்று பெயர் சூட்டி ஆட்சி செய்ய வேண்டும் என்று கூறி நீங்கள் உங்கள் வம்சப்பெயர் வைத்தாலும் கடைசியில் இளைய நாய்க்கர் என்று பெயர்சூட்டிக் கொள்ளவேண்டும் எனக்கூறி அரைய நாட்டுக்குப் பட்டக்காரர் அல்லாள இளைய நாயக்கர் என்று செப்புப்பட்டயம் கொடுத்தும் வேண்டிய விருதுகள் கொடுத்தும் அனுப்பிவைத்திருக்கிறார். அதுமுதல் இன்றும் இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்கள் வம்சத்தில் பெயர் சூட்டுவது முத்துத்திருமலை இளைய் நாயகர், அல்லாள இளைய நாயக்கர், குமரவேல் இளைய நாயக்கர், இரும்பைய இளைய நாயக்கர் என்றுதான் திருமலை நாயக்கர் அவர்கள் கொடுத்த செப்புச் 'சாசனப்படி பெயர் சூட்டப்பட்டு வருகிறது.

## இருக்கூர்ப் பட்டக்காரரும், ஆங்கிலேயரும்

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வரும் வரையில் இருக்கூர்ப்பட்டக்காரர் ஜமீன்தாராக இருந்து வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் நம் நாடு வந்ததும். சிற்றரசர் முறையில் பேட்டிகாண, பட்டக் காரர் தம் சேனைப் படைகளுடன் போக பட்டக்காரருக்கு எதிரியாய் இருந்தவர்கள் ஆங்கிலேயரிடம் தங்கள் பேரில் யுத்தம் செய்யப் பட்டக்காரர் வருகிறார்" என்று தூண்டி விட்டார்கள். மீண்டும் ஆங்கிலேயரைப் போய்ப் பார்க்க உங்கள் சாசனம் கொண்டுவாருங்கள்" எனக்கேட்க சேடர்பாளையத்திலிருந்து இருக்கூர் போய்ச் சாசனத்தை எடுத்து வரும்படி சொல்லி வேலைஆளை அனுப்ப அவர் போய்ச் சாசனத்தை வாங்கி வந்து காவேரியின் ஒரு சுழகில் போட்டு விட்டு ஓடி விட்டார். சாசனம் ஒப்படைக்காததால் ஜமீன் கேன்சல் செய்து விட்டார்கள். அந்தச் சாசனத்தில் தவறியது ஒன்று இருக்கூர்ப்பட்டக் காரர் வசம் இருக்கிறது.

## உரிமையும், பெருமையும்

ஜமீன் இல்லாவிட்டாலும் திருமலை நாயக்கர் கொடுத்த செம்புச் சாசனப்படி அரைய நாடு 36 கிராமத்திலும் கோவில்

கட்டிக் கும்பாபிசேகத்திற்கு ராஜ தரிசனம் காண்பதும் குறிப்பாகக் கபிலர் மலைத் தேர் பட்டம் பரிவட்டம், குதிரை துலுக்குப் பிடிப்பது சுப்பிரமணிய சுவாமி கோவில் இவற்றிலும் முதல் விபூதி பிரசாதம் பட்டக்காரருக்குத்தான் நடந்து வருகிறது. மகார் நோன்புக்கு இருக்கூரிலிருந்து கபிலர்மலைக்குப். பல்லக்கில் போய் அம்பு போட்டும், சுப்பிரமணிய சுவாமிக்கு அபிஷேகம் செய்து கொண்டு ஆண்டு தவறாமல் நடத்தி வருகிறார்கள். மேலும் பிலிக்கல்பாளையம் தோல் பட்ட பரிவட்டம் கட்டுவதும் முதன் மரியாதையும் வெங்கரையின் அம்மன்கோவினின் பட்டக்காரர் குதிரை துலுக்குப் பிடிப்பதும் முதல்மரி யாதையும் நடந்து வருகிறது.

## பரமத்திக்கோட்டை

ஆதியில் இருக்கூர்ப்பட்டக்காரர் வேலூர் பரமத்தியில் கோட்டைகட்டி ஆண்ட காலத்தில் இளைய நாயக்கர் பரமத்தி என்று பெயரிருந்தது. இருக்கூர்ப் பட்டக்காரருக்கு இம்முடிப் பட்டம் இளைய நாயக்கர் என்ற பெயரும் உண்டு.

## இராஜ வாய்க்கால்

இருக்கூர்ப் பட்டக்காரர் ஜமீன்தாராக இருந்த காலத்தில் சேடர்பாளையத்திலிருந்து காவேரி ஆற்றில் இருந்து வாய்க்கால் ஒன்று இடையாறு வரையிலும் வெட்டியிருக்கிறார்கள். அந்த வாய்க்காலுக்கு இளைய நாயக்கர் வாய்க்கால் என்றும், ராஜ வாய்க்கால் என்றும் பெயர் சூட்டப்பட்டது.

## அரண்மனைத் திருமணம்

புங்கம்பாடி, பூமதேவம், இனுங்கனூர் பட்டுத்துறை, நவமரத்துப் பட்டி இவர்கள் அரண்மனையில் விவாக காலத்தில் பந்தல் போட்டும், பந்தலுக்கு மேல் கட்டு என்று சேலைகள் கட்டியும், மண்ணுடையார் சிறப்புப் பானைகள் குன்னுமிடா ஒன்று 4, 5 குடம் தண்ணீர் கொள்ளும் பாண்டமும், மிடா, தாழி, குடகம், கரகப் பானை, மண்ணிலே மயில் வாகனம் செய்தும்

மயில் வாகனத்தில் விளக்குக் கட்டி வைப்பதற்கும், பந்தலில் கட்ட மண்ணில் செய்த தேங்காய் பழம் மற்ற கனிவர்க்கங்கள், கிளி இவைகள் மணவரையில் வைத்துப் பூசை செய்து அதன்பின் மண்பாண்டங்களை எடுத்துக்கொண்டும் மணவரைப் பக்கத்தில் மயில் வாகனம் வைத்து விளக்குச் சட்டியில் எண்ணெயூற்றித் தீபம் போட்டு வருகிறது. அதன்மேல் மற்ற காய் கனி, கிளி இவற்றைப் பந்தலில் கயிறுகட்டித் தொங்கவிடுவது வழக்கமாக நடந்து வருகிறது. அதன்மேல் முகூர்த்தக்கால் போட்டு அல்லி அரசாணி வைத்து அதன்பின் சீர்வரிசைகள் நடந்துவரும். முகூர்த்தம் முடிந்ததும் மணமக்கள் மணவறையில் இருக்கும்போது பரிகாரியால் மங்கள வாழ்த்தும் பாடி அதன் பின்தான் மணமக்கள் வீட்டுக்குப் போவது வழக்கமாக நடைபெற்றுவருகிறது.

## அரண்மனைத்தோரணம்

சகல ஊர்களிலும் நோன்புக்கும், கல்யாண காரியத்திற்கும் தலைவாசலில் நாட்டுக்கல் பக்கம் ஒரு தோரணம் தான் கட்டுவது வழக்கம். ஆனால் மேற்கூறிய புங்கம்பாடி, பூமதேவம், இணுங்கனூர், பட்டுத்துறை, நவமரத்துப்பட்டி, இருக்கூர் அரண்மனைகளில் அரண்மனைத் தோரணம் என்றே அரண்மனை வாசலில் தனித்தோரணம் கட்டி அதன் மேல் நாட்டுக்கல் தோரணம் கட்டுவது வழக்கமாக நடந்து வருகிறது.



இதுவரையி ல் பூர்வீக காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும் நடை முறையில் தற்போது இருப்பவற்றையும் விரிவாகக் கூறப்பட்டது.

## வாரணவாசி வள்ளல் புதல்வர் கனக சபாபதி வள்ளல் வாழ்வும், வளமும் மற்றும் சாதனைகள்

பூமதேவம் மற்றும் இனுங்கனூர்ப் பட்டக்காரரான கனக சபாபதி வள்ளல் 1930 முதல் 1985 வரை 65 ஆண்டு காலம் வேலம்பாடிக் கிராம முன்சீப் வேலை பார்த்து வந்துள்ளார். நீதிப்படியும் முன்னோர் நடந்த வீரத்தன்மையையும் அனுசரித்து அரசாங்கத்தாரிடம் வாங்கிய சான்றிதழ்கள், கவிராயர் பாடிய கவிதையும் இதன் கீழ் விளக்கமாகக் கூறப்படுகிறது.

1. குற்ற எண் 52. 1932 - ன் கீழ் CT ஆக்ட் அரவக்குறிச்சிப் போலீசுக்கு உதவியாக இருந்து சாந்தப்பாடிக் கிராமம், கோட்டப்பம்பாளையம் பிரபல கேடியாகிய சிங்காரக் குறவனை வெடிக்காரன்பட்டியில் கண்டு பிடிக்க முயல அவன் ஐந்துவேலி தாண்டி ஓட கி.மு. கனக சபாபதி வள்ளல் குதிரை மீது இருந்தே ஐந்து வேலியையும் குதிரையைத் தாண்டவிட்டு சிங்காரக்குறவனை மடக்கிப் பிடித்து அரவக்குறிச்சி போலீசில் ஒப்படைத்ததற்கு திருச்சி ஜில்லா சூப்பிரண்டென்டண்ட் அவர்களால் கொடுக்கப்பட்ட எண் D.o. Ne 353/1953 13.4.1933 - ல் நற்சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

2. C.T சட்டம் கள்ளி மந்தயம் ஸ்டேஷன் குற்ற எண். 55 - 1937 பிரிவு 22 - 25 கிரிமினல் சட்டபடி இனுங்கனூர்க் கிராமம் தலையாரிபட்டி பிரபல கேடி ச. காளிக் குறவனைச் சந்தேகத்தின் பேரில் வழிமறித்து வி சாரிக்க . கையில் அரிவாளுடன் நின்றவன் ஓட்டம் பிடித்தான் குதிரைச் சவாரியுடன் கி.மு. கனக சபாபதி வள்ளல் பின்னாலிருந்து விரட்ட காளிக்குறவன் இரண்டு வேலி தாண்டினான்,

குதிரையும் இரண்டு வேலி தாண்டியது அவனை நெருங்கிய போது காளிக்குறவன் அரிவாளைக் கீழே போட்டுவிட்டுச் அவரிடம் சரணாகதி அடைந்தான். அவனைப் பிடித்து அரவக்குறிச்சி போலீசில் ஒப்படைத்ததற்கு மதுரை வடக்கு ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டன்ட் அவர்களால்ட வழங்கப்பட்ட நற்சான்றிதழும் பெற்றிருக்கிறார்.

3. அரியலூரில் 27.11.45 முதல் 26.12.45 வரை கிராம அதிகாரிகள் முன்னேற்றப் பயிற்சியின் விழாவில் அரியலூர் பஞ்சாய்த்து போர்டில் நடத்திய தலைவர் அவர்களிடம் சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

4. அரவக்குறிச்சி போலீஸ் ஸ்டேசனில் மதுவிளக்குக் கேசில் உதவி செய்ததற்கு திருச்சிராப்பள்ளி ஜில்லா சூப்பிரன்டெண்டண்ட் அவர்களால் குற்ற எண் 16-10-19 / 1952 மதுவிலக்குச் சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்பட்ட நற்சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

5. அரவக்குறிச்சி போலீஸ் ஸ்டேஷனில் மதுவிலக்குக் கேசில் உதவி செய்ததற்காக திருச்சி ஜில்லா சூப்பிரன்டெண்டண்ட் அவர்களால் கொடுக்கப்பட்ட D. 2450 / 54 குற்ற எண் 32.34 / 34 / 54. கேஸ் எண் . 561 / 63 / 54 உள்ள சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

6. சொந்த விவசாயத்தில் அதிகமான மரங்கள் நட்டு விருத்தி செய்ததற்கு ஜமாபந்தியில் கரூர் சப் - கலக்டர் அவர்களால் தாலூகா ஆபிசில் 23.05.55 அன்று, கடப்பாரை 3 மண் வெட்டித்தகடு 2 இவைகளுடன் பரிசு அளிக்கப்பட்டு R.C.B 5 2897/55/18.05.55 சான்றிதழ் பெற்றுள்ளர்.

7. லாண்டு ரிவின்யூ வசூல் செய்ததற்காக ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்களால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் எண் 15308.55 / 8.6.56

8. 1957ல் விக்டோரிய லோனுக்கு முன் வந்து சந்தா வசூல் செய்ததற்கு கரூர் தாசில்தார் அவர்களால் சான்றிதழ் கொடுக்கப்பட்டது

9. 1975 - ம் ஆண்டு தாலுக்கா அலுவலகத்திற்கு ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்து 1.1.76 அன்று தாலூகா தாசில்தார் திரு. S.M.M. இப்ராஹிம் அவர்களால் வாழ்த்தும் பெற்றிருக்கிறார்.

10. 26.5.77 அன்று மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியும், ஜமாபந்தி அதிகாரியுமான திரு.ஜி. முத்துசாமி அவர்களிடம் நிலவரி, வீட்டுவரி, கடன் வசூல் திறம்படச் செய்தமைக்காகச் சான்றிதழும் பெற்றுள்ளார்.

(வேலி தாண்டிய குதிரையையும், வேலி தாண்டவிட்ட கனக சபாபதி வள்ளல் அவர்களையும் புகைப்படம் எடுத்து வைக்கப்பட்டுள்ளது.)

## பள்ளபட்டி க. ந பாட்சா புலவர் பாடிய கவி

**குறள் வெண்பா:**

தெள்ளு தமிழ்த்தாய் சேயென வுதித்த வள்ளலிப்
புவியில் வாழ்க வாழ்கவே.
எண் சீரடி ஆசிரிய விருத்தம்
முத்தமிழ் செறிந்திலகு தென்னாட்டிலே
பெரிய முவேந்தர் போற்றும் வள்ளல்
மூவுலகும் புகழ் கொண்ட கீர்த்திப்
பிரதாபமே முடிமேல் புனைந்த வள்ளல்.
இத்தரையிற் கொங்குமுதல் தெட்சான
மாமதுரை எழில் கொண்டு
ஆண்ட வள்ளல்
இரவலர் புரவலர் கவிராஜர் புகழ்
கொண்டு ஏத்தித் துதித்த வள்ளல்
நித்திரைக் காயிரம் பொன்னீந்து

**கீர்த்தியை நிலைக்கவே செய்த வள்ளல்
நீள் ராஜதானியாம் பூமதேவம் பதியில்
நிலை கொண்டு வாழ்ந்த வள்ளல்
பக்தி செறி சிவபூசை குருபூசை தவறாத
பாக்கியம் படைத்த வள்ளல்
பார்தனில் வாரணவாசி வள்ளலென்றோது
சீர் பகரும் வழிவந்த முதலே
கலி விருத்தம்.
திருவிளங்கிய இனுங்கனூர்ப் பதிதனில்
மரு விளங்கிய தாரணி மாலை சேர்
பெருமைக் கனகசபாபதி வள்ளலும்
அருமைக் கடவுளினருளினால் வாழ்கவே!
பெருமை சேர் வள்ளலே பெண்ணின்
கல்யாணத் தருமையால் யான் வந்தேனப்பனே
கருமை சேர் ஆட்டுக் கிடா யொன்று
அரசே யெனக் கீந்து
தாட்டிகமாய்ப் புகழ் நிறுத்துவாய் தான்.**

**இப்படிக்கு க. ந. பாட்சா புலவர், பள்ளபட்டி
(ஒப்பம்) 6-11-35**

மேற்கூறிய விவரங்கள் எழுதியவர் உயர்திரு. வா. கனகசபாபதிவள்ளல் அரண்மனையார், இனுங்கனூர். வேலம்பாடிக்கிராம முன்சீப்.

## வேட்டுவ மன்னன்

சேர நாட்டில் மன்னனின அடையாளமாக இருந்தது வில் என்பதை "இங்கு எண்ணும் போது ஆதியில் வேடனாக் இருந்தவன் நாளடைவில் மன்னனாகத் திகழ்ந்திருக்களாம் என்று கருத இடமுண்டு"

(தமிழகவரலாறு மக்களும் பண்பாடும் பக்:166 டாக்டர், கே. கே. பிள்ளை, உலத்தமிழாராய்ச்சி நிறுவனம்)

## குறள் கூறும் வேட்டுவன்

**"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"**

இக்குறள் அறத்துப்பாலில், துறவற இயலில் கூடா ஒழுக்கம் எனும் அதிகாரத்தில் 274 வது குறளாகும்.

"தவ வேடத்தில் தன்னை மறைத்துக் கொண்டு தவமல்லாதவற்றைத் செய்தல், வேட்டுவன் புதரில் தன்னை மறைத்துக்கொண்டுபறவைகளை வேட்டையாடுவதற்கு இணையாகும்" என்கிறது இக்குறள்.

இவ்விடத்தில் திருவள்ளுவர் வேட்டுவனின் வேட்டைத் தொழிலை தொழில் உவமைக்காக ஒப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஒன்றாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அதாவது வரலாற்றுக் காலத்திற்க்கு முற்பட்ட மிகத்தொன்மையான ஒரு இனம் இன்றும் நிலைத்து நின்று பெயர் சொல்லும் பெருமை மிகு வேட்டுவ இனமாகும் . இவவினம் தமிழகம் மற்றுமின்றி. இப்பாரத கண்டத்தையும் மற்றும் அயல் நாடுகளையும் ஆண்ட், வேட்டுவ இனமாகும்.

**ஆதிமனிதன் கல்லை எடுத்துவேட்டை ஆடினான் அடுத்து**
**அவள் காட்டை அழித்து நாட்டை ஆக்கினான.**

**- கவியரசு கண்ணதாசன்.**

வேட்டை ஆயுதத்தைப் போர் ஆயுத்மாகமாற்றி. உலகில் முதல் அரசு கண்டது வேட்டுவ அரசாகும். விற் (வில்) படை, வேற் (வேல்) படை, கவுணப் (கவுண்) படை என பல படைகள் அமைத்து போரில் வெற்றி பெற்று ஊரையும் நாட்டையும் ஆண்டனர். சங்ககாலத்தில கொங்கில் சேரர்களின் போரில் வேட்டுவக் குறுநில மன்னர்களின் கவுண்ப்படை புகழ்பெற்றுது. ஆங்கிலேயர்களின் பீரங்கிப் படையை திணறடித்தது வேட்டுவப் பாளையக்காரர்களின் கவுணப்படையாகும். கவுண்ப் படையில் வேட்டுவச்சிற்றரசர்கள் மற்றும் வேட்டுவப்

பாளையக்காரர்கள் சிறந்து விளங்கியதால் உலகில் முதல் கவுண்டன் என்று பெயர் பெற்று வேட்டுவக்கவுண்டன் என்று அழைக்கபப்பட்டனர். இது வரலாறு கூறும் உண்மை ஆகும்.

வேட்டுவர்களின் தொழில் வேட்டைத் தொழிலாக இருந்தாலும் அல்லது போர்த்தொழிலாக இருந்தாலும் அவ்வகைத் தொழில்கள் கொலைத் தொழில்களே, என்பதைக் கருத்தில் கொண்டு தான் திருவள்ளுவர் கூடா ஒழுக்கம் எனும் அதிகாரத்தில் துறவற இயலில் அறத்துப்பாலில் வேட்டுவர்களின் கொலைத்தொழிலை கூடாஒழுக்கம் என்றும் இது அறச்செயல் அல்ல என்றும் துறவறமே நல்அறம் என்றும் மேற்கண்ட திருக்குறளில் வேட்டுவர்களின் வேட்டைத் தொழிலை தொழில் உவமையாகக் கொண்டு தவவேடத்தில் தன்னை மறைத்துக் கொண்டு தவம் அல்லாத மற்ற செயல்களை செய்யக்கூடாது என்கிறார் தன் ஊண் பெருக்க பிற உயிர்களின் ஊணைத் திண்ணுதல் வேட்டைத் தொழிலில் உள்ளதால் பிற உயிர்களை கொல்லுதல் அறமில்லாத, ஒழுக்கமற்ற செயல் என்கிறார் திருவள்ளுவர்.

தமிழ் உலகின் முதன் மொழி ஆகும். இன்றைய துளு, மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளின் தாய்மொழி தமிழ் மொழியாகும். சமஸ்கிரத்த்தின் மூலமொழியும் தமிழ்தான். ஏன் உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் மூலமொழி தமிழ் மொழிதான். உலகில் முதன்முதலில் குறிஞ்சியில் தோன்றிய நாகரிகம் வேட்டுவ முருகனின் நாகரிமாகும் . பான்டிய மன்னன் ஆன சிவனின் வழிபாடும், சேரமன்னன் ஆன பெருமாள் வழிபாடும் உலகில் உள்ள சுமார் 200 க்கும் மேற்பட்ட கடல் சார்ந்த நாடுகளில் பரவிக்கிடக்கின்றன.

கிறிஸ்து பிறப்பிற்கு முற்பட்ட காலங்களில் கடல் வணிகத்தின் மூலமும் தமிழரின் படையெடுப்பு மூலமும் உலகம் முழுவதும் தமிழை விதைத்து தமிழ் நாகரீகத்தை பரப்பியவர்கள் தமிழரே அன்றி வேறு ஒருவரும் இல்லை. ஜாவா

நாட்டில் இருந்து கரும்பை கொண்டு வந்து அதியமான் தமிழ்நாட்டில் பயிர் செய்தான். எகிப்து ரோமர் நாட்டில் சேரர் காசுகள் சிதைந்து கிடக்கின்றன. உலக அதிசயங்களில் ஒன்றான எகிப்து பிரமிடுகளின் மேல் தமிழ்நாட்டின் சேலத்தின் இரும்பு இடம் பெற்றுள்ளது. ஆய் நாட்டின் தமிழ் பெண் செம்பவளம் கொரிய நாட்டை ஆண்டதால் தமிழ் மொழியின் நான்கு ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட தமிழ் சொற்கள் அப்படியே கொரிய மொழியில் இன்றும் ஆட்சி செய்கின்றன. மத்திய தரை செங்கடல் பகுதியில் சேர மரபினன் ஆன பனை ஓரியின் பெயர்கள் பானை ஓடுகளில் கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஊர் பெயர்கள் கேரளம் மட்டுமின்றி அனைத்து உலக நாடுகளிலும் இன்றும் உள்ளன.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவின் மலைமீது உள்ள சிவன் கோயில் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானது.

வேட்டுவ முருகன் எனும் குமரனின் நாகரிகம் குமரி நாகரிகம் ஆகும். குமரி நாகரிகம் சுமரி நாகரிகமாகும். சுமேரியாவில் உள்ள போர் தெய்வம் குமரன் ஆவான்.

## அருவாளர்கள் எனும் தொண்டை மண்டல வேட்டுவர்கள்

காஞ்சி வரதனே ஒரு வேட்டுவ வரதன் ஆவான். அருவா வடதலை அருவா நாடுகள் தொண்டை மண்டல நாடுகள் ஆகும். ஆந்திர நாட்டின் எல்லையில் உள்ள அருவா நாட்டில் வசிக்கும் தமிழ் மக்களை அருவாளர்கள் என்று வடுகர்கள் அழைத்தனர். வடுகர்கள் தமிழுக்கு இட்ட பெயர் அருவம்.

### அரவக் குறிச்சி

அருவா வடதலை அருவா நாட்டில் இருந்தது வேங்கல நாட்டில் குடி அமர்ந்த தொண்டை மண்டலத்து வேட்டுவர்களின் ஊரினை அரவக்குறிச்சி என்று அழைத்தனர்.

## வெங்கட்சி வேட்டுவர்

காஞ்சிபுரத்தில் இருந்து வெங்கல நாட்டில் பாண்டியனால் குடி அமர்த்தபட்ட வேட்டுவ இனக்குழு தான் இன்று வெங்கல நாட்டு வெங்காஞ்சி வேட்டுவர் என்றும் திருக்கச்சி ராஜ வேட்டுவர் என்றும் வெங்கட்சி வேட்டுவர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

## இலங்கை வேட்டுவர்

மாவிலங்கை நாட்டை ஆண்டதால் (மா) இலங்கை வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். ஓய்மா நாட்டை ஆண்ட வில்லி ஆதன் எனும் வேட்டுவ மன்னன் (திண்டிவனம்) (வில்லி + ஆதன்) ஆவான். ஒய்மா நாட்டின் தலைநகர் மா விலங்கை ஆகும். மா விலங்கையை ஆண்ட வேட்டுவர் மாவிலங்கை எனும் இலங்கை வேட்டுவர் ஆவர். இலங்கை வேட்டுவரை கொங்கில் குடியேற்றியவர்கள் சேர மன்னர்கள் ஆவார். இலங்கை வேட்டுவர் கல்வெட்டு அந்தியூர் வடகரை நாட்டில் காணப்படுகிறது.

## சாந்தப்படை வேட்டுவர்

சாந்தப்படை வேட்டுவர்களை கரிபடை (யானைப்படை) வேட்டுவர் என்றும் அழைப்பர். இவர்கள் மலைகளில் சுற்றித் திரியும் யானைகளைப் பிடித்து சாந்தப்படுத்தி போர்களில் பயன்படுத்த பயிற்சி அளித்ததால் சாந்த படை வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். வட கொங்கில் கிழக்கு தொடர்ச்சி மலையியில் கண்டீர மலையை ஆட்சி செய்து கஜல் கட்டி (ஆனைகட்டி) கோட்டையை சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் கட்டி யானைகளுக்கு பயிற்சி அளித்த இவர்களை சேர வேந்தர்கள் களப்பிர்களை அடக்க கொங்கில் சாந்தப்பாடி எனும் ஊர் அமைத்து பாடிகாவல் செய்ய வைத்தனர். கண்டி என்றால் முட்காடுகள் என்று அர்த்தம். காடுறை தெய்வமான கொற்றவையை கண்டியம்மன் என்று அழைத்து குலதெய்வமாக இவர்கள் வழிபாடு செய்கின்றார்கள்.

## மாந்தப்படை வேட்டுவர்மாந்தரன் சேர மன்னர்கள்

மாந்தபுரி எனும் ஊர் அமைத்து சாத்தன் மற்றும் நாட்ராயனை பிரதிஷ்டை செய்து மாந்தபுரியில் மாந்தீஸ்வரன் கோயில் அமைத்து மாந்தப்படை எனும் வேட்டுவர் படை அமைத்தனர். இப்படை வேட்டுவர்கள் சேரவேந்தர்களின் கிளை மரபினனான ராஜவேட்டுவர்கள் ஆவார்கள். (ஆதாரம் மாந்தரன் சேரல் மெய்கீர்த்தி)

## செல்லாண்டி அம்மன் கோயில், செல்லீஸ்வரன் கோயில்

சங்ககால சேர மன்னன் செல்வ கடுங்கோ வாழியாதன் கருவூர் எனும் வஞ்சிமா நகரை சேரர்களின் கோ நகராக வைத்து கொங்கை ஆண்டபொழுது அவன் நினைவாக கொங்கு நாட்டில் செல்லாண்டியம்மன் கோயில்களும் செல்லீஸ்வரன் கோயில்களும் உதயமாகின.

## மூர்கன் குறிச்சி, மூர்க்கன் பாளையம்

கொங்கை ஆண்ட சேர மன்னர்கள் கோக்கலி மூர்க்கன் எனும் பட்டப் பெயர்களை வைத்துக்கொண்டு ஆட்சி செய்ததின் நினைவாக கொங்கில் மூர்கன் குறிச்சி எனும் ஊர்களும் மூர்க்கன் பாளையம் எனும் பாளையங்களும் உருப்பெற்று நிலைத்து நின்றன.

## கஜல் கட்டி கணுவாய்

பவானிசாகர் அணைக்கு மேலே மாயாற்றங் கரையில் உள்ளது கஜல் கட்டி (யானை கட்டி) கோட்டை ஆகும். 20 ஏக்கர் பரப்பு கொண்ட இக்கோட்டையில் திப்பு சுல்தான் கட்டிய மசூதி ஒன்று உள்ளது, அதை இன்றும் முகமதியர்கள் வழிபாடு செய்கின்றனர். இக்கோட்டை இன்று புலிகள் சரணாலயமாக உள்ளது இக்கஜல் கட்டி கணுவாய் வழியாகத்தான் தமிழ்நாட்டின் மீது போரிட மௌரியர்கள் வந்தனர், ஆனால் இவர்கள்

வேட்டுவ வேளிர்களின் ஒற்றுமையால் முறியடிக்கப்பட்டனர். எனவே வேட்டுவ முருகனுக்கு மயில் வாகனம் ஆனது, மௌரி என்றால் மயில் என்று அர்த்தம்.

### திருவள்ளீஸ்வரர் கோயில் குன்னமலை

**ஸ்வதஸ்ரீ வேங்க புநல் வேட்டுவரில் கொலி சொக்கன் (ர்)**

**பிரதோஷ பூசை பூசாரி மூலவேட்டுவர்,**

பிடாரி காளியம்மன் முப்பாட்டு கோயில் எருமை கிடாவெட்டு உண்டு நிர்வாகம் புல்லை வேட்டுவர் முதல் திருநீரு.



**அப்பச்சிமார் கோயில் :** சித்ரா பௌர்ணமி பூசை, கோயில் பூசாரி புல்லை வேட்டுவர்.

மலை அடிவாரம் தன்னாசியப்ப ன் கருப்பணண் பூசாரி புல்லை வேட்டுவர். 'குன்னமலை அருகில் காட்டுக்குள' கொலைக் காட்டு கருப்பணண், முத்துசாமி, கொல்லிமலை மாசி பெரியசாமி முப்பூசைவிழா புல்லை வேட்டுவர் 33 குடும்பங்கள். ஊருக்கு தெற்கு: உருமாயி, உருமையண்ணன் கோயில் புல்லை வேட்டுவர்.

## குன்னமலை அப்பச்சிமார் கோயில்

இக்கோயிலில் பூஜை செய்பவர்கள் புல்லை வேட்டுவர். அப்பச்சிமார் கோயிலுக்கும் புல்லை வேட்டுவருக்கும் சம்பந்தம் எது என்பதை ஆராய்வோம்.

கொங்கு 24 நாடுகளில் வளம் மிக்கது வாழவந்தி நாடு. இருபது தொன்மையான ஊர்களையுடைய வாழ்வந்திநாட்டை நல்லாட்சி செய்து நடத்திய பெரிய மாரய்யனுக்கு நான்கு தம்பிமார்கள்.

உயரகுல வேட்டுவர் பெரிய மாரய்யன் உள்ளிட்ட ஐந்து சகோதரர்கட்கும். மொத்தம் 70 ஆண்மக்கள் பிறந்தனர்.

எழுபது ஆண் மக்களுக்கும் பெண் கொடுத்த ஓடப்பள்ளி வேட்டுவர் சமுதாயத்தினர் ஏழுபேர்: 1.வேந்த வேட்டுவர், 2. அரிச்சந்திர வேட்டுவர்,3.காட்டுவேட்டுவர், 4. புன்னாடி வேட்டுவர், 5. மணிய வேட்டுவர், 6.பொன்ன வேட்டுவர், 7. புல்லை வேட்டுவர்.

தாரமங்கலம் கைலாசநாதர் அருள் பெற்ற பூவாணி நாட்டை ஆவணி வேலூரில் இருந்து பூவானி வேட்டுவ ராசன் அரசாட்சி செய்தார்.

பூவாணி வேட்டுவன் போத்திராசனுக்கும் பூந்துறை நாட்டு வேட்டுவ ராசனுக்கும் போர் மூண்டு ஆலத்தூரில் போர்நடை பெற்றது. அதில் பூந்துறை நாட்டார்க்குப் பேரழிவு ஏற்பட்டது. பூந்துறை நாட்டு வேட்டுவ ராசா. வாழவந்தி நாட்டு உயர வேட்டுவ ராசன் பெரிய மாரய்யனிடம் உதவி கேட்க பெரியமாரய்யன் பூந்துறை நாட்டு வேட்டுவ ராசாவுக்கு ஆதரவாகப் போர் புரிந்தார். போரின் முடிவில் இரண்டு தரப்பிலும் அனைவரும் இறந்தனர். இச்செய்தியை கேட்ட புது மணமகள்கள் 70 பேரும் தீப்பாய்ந்து வீரமாத்திகள் ஆனார்கள்.

அப்பச்சிமார் கோயில் வழிபாடு மேற்கூறிய போர் நிகழ்வுகளின் வெளிப்பாடாகும்.

கி.பி. 5 -ம் நூற்றாண்டில் அதாவது களப்பிரர் தமிழகத்தில் ஆளுமை பெற்றிருந்த காலத்தில் பாண்டியர்கள் பாண்டிய நாட்டையும், பல்லவர்கள் (ஆந்திர வேட்டுவ வேந்தர்கள்) அருவா வட அருவா எனும் தொண்டை நாட்டையும் களப்பிரர்

எனும் கன்னட மன்னர்களிடமிருந்து மீட்டுக்கொண்டனர். கொங்கு நாட்டை சேரரும், பாண்டியரும் மற்றும் வடகொங்கு தென்கொங்கு சிற்றரசர்களும் இணைந்து களப்பிரர் எனும் கன்னட வேட்டுவர்களின் பிடியிலிருந்து மீட்டுக்கொண்டனர்.

## செட்டி, சிவ பிராமணர்கள்

வெங்கல நாட்டு பாளையக்காரர் நிமித்தம்பட்டி நீலியப்ப கவுண்டனும், காக்கவாடி செட்டி நல்லண்ண கவுண்டனும் சகோதரர்கள் ஆவர். காணியாள வேட்டுவ குலத்தைச் சேர்ந்த செட்டி முத்துகவுண்டரின் வம்சாவழி பற்றி பெரிய களந்தை ஆதீனம் செப்பேடு கூறுகிறது.

காக்கவாடி பாளையக்காரர்களுள் முதல்வரான செட்டி நல்லெண்ண கவுண்டர் அமைத்த ஊர் செட்டிபாளையம். இந்த செட்டிபாளையத்தில் உள்ள கோயில்களும் இவர் வம்சா வழியினருக்கே முதல் மரியாதை தருகின்றன. இதே போல் பாரியூரை ஊராண்மை செய்த மணிய வேட்டுவர் அமைத்தது கோபிசெட்டிபாளையம் ஆகும். அதே போல் எலத்தூர் செட்டிபாளையம் அமைத்தது முதல் மரியாதை பெறுபவர்கள் காங்கேய நாட்டு பாளையக்காரர்களான பட்டாலி வேட்டுவர்களே ஆவர். 'செட்டி'என்னும் பட்டம் வேட்டுவ ர்களுக்குரிய பட்டப் பெயராகும். 'எட்டி' எனும் பட்டப் பெயர் வணிகருக்கு உரியதாகும்.

பாண்டிய மன்னர்களால் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட வேள்விக்குடி சேர மன்னர் செல்வக் கடுங்கோவாழியாதனால் கபிலருக்கு அந்தியூர் வடகரை நாட்டில் வழங்கப்பட்ட பிரம்மதேசம் சோழர்களால் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்ட சிவ பிராமணர்கள் என மூவேந்தர்களும் சிவபிராமணர்களை ஆதரித்தனர், எனவே கொங்கு நாட்டில் சிவ பிராமணர்கள் செல்வாக்கு பெற்றனர். எனவேதான் கொங்கு நாட்டை செட்டி எனும் பட்டப் பெயரில் வேட்டுவப் பாளையக்காரர்கள் சிவ

பிராமணர்களின் துணையுடன் ஆண்டனர் என்கிறது வரலாற்று ஆவணங்கள்.

## குறு, குறுப்பு (கோட்டை)

குறு என்றால் குறுகிய சிறிய என்பதனைக் குறிக்கும் சொல் ஆகும். குறும்பு எனும் சொல் கோட்டையை குறிக்கும்.

கொங்கு நாட்டிலும் தொண்டை நாட்டிலும் சிறு சிறு குறும்பு (கோட்டை) சிறிய கோட்டை அமைத்து வேட்டுவ இனக்குழுக்கள் ஆண்டதால் குறுநிலத்தை வேலி அமைத்து கோட்டை அமைத்து ஆண்டதால் குறும்பர் என்றும் அழைக்கப்பட்டனர். இதற்கு கொங்கு நாட்டில் காட்டுக் குறும்பர் எனும் காட்டு வேட்டுவ இனக்குழுவினர் ஆண்ட (குறும்பு) குறுப்பு நாடே உதாரணமாகும்.

தொண்டை மண்டலம் அருவ நாடு என்றும் அருவா வடதலை நாடுஎன்றும் அழைத்தனர். அருவா நாட்டில் சிறு சிறு குறும்பு அமைத்து ஆண்ட வேட்டுவர்களை அருவாளர் என்றனர்.

கொங்கில் குறும்பு அமைத்து (சிறு சிறு கோட்டைகள் அமைத்து) ஆண்ட குறு நிலத்தில் ஆட்சி செய்த வேட்டுவர்களை (வேட்டை ஆயுத்ததை போர் ஆயுதமாக ஆக்கியவர்கள் வேட்டுவர்கள் எனப்பட்டனர்) கொங்கர் என்று அழைக்கப்பட்டனர்.

## குருநாடு

குரு நாடு என்பது தட்சிணாமூர்த்தியின் பழம்பெரும் பூமியான கடல்கொண்ட லெமோரியா கண்டம் ஆகும். பாண்டிய நாட்டில் கௌரியர் (க வுரவர்கள்) குறும்பு அமைத்து குறும்பு செய்த குறுநில மன்னர்களை விரட்ட வடவேங்கடத்தை ஆண்ட புல்லி எனும் மன்னனின் துணைகொண்டு பாண்டியன் அழித்தான்.

மேலும் சேர மன்னனின் வழித் தோன்றல்களாகிய மழவர்களை பாண்டியன் புல்லியின் துணையுடன் அடக்கினான்.

குருநாடு என்பது குரு தட்சிணாமூர்த்தி ஆண்ட தமிழகத்தின் கடல் கொண்ட தென்முனை ஆகும். அது பாண்டவர்கள் ஆண்ட பூமியாகும். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும்இடையே உருவான போர் பாரத போர் ஆகும். பின்பு கௌரியர் எனும் கௌரவர்களை பாண்டிய நாட்டில் அடக்க வேங்கடத்துப் புல்லி மன்னன் துணையை நாடினான் பாண்டியன். பாரதப் போரில் சிதைந்த பாண்டவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் மறைந்து வாழ்ந்ததாக ஒரு ஐதீகம் உள்ளது. எனவே தான் பாண்டவர்களின் நினைவாக மேற்கு தொடர்ச்சி மலையில் குடியேறிய படுகர்கள் தங்கள் பெயர்களை அர்ஜுனன், பீமன் என்று இன்றும் வைத்துக் கொண்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

திருமலை நாயக்கரின் பிற்பகுதி ஆட்சிக்காலமும் அவருக்கு பின்வந்த நாயக்கர் ஆட்சி காலங்களிலும், தமிழகத்தில் அமைதி குறைந்து சாதிய கொடுமைகள் தலை தூக்கியது. கொங்கில் வேட்டுவ பாளையக்காரர்களின் பாளையங்கள் சில குறிப்பாக வீரப்பூர், ஈரோடு, சத்தியமங்கலம் போன்ற பாளையங்கள் நாயக்கர் வசம் ஒப்படைத்ததால் கொங்கின் பெரும்பாலான வேட்டுவ பாளையக்காரர்கள் நாயக்கர் ஆட்சிக்கு ஒத்துழைப்பு தர மறுத்ததால் மைசூர் காரின் கை ஓங்கியது. நாட்டில் கலவரங்கள் தலை தூக்கியது. ஈரோடு மூக்கறுப்பு போர் மைசூராருக்கும், நாயக்கர்களுக்கும் ஏற்பட்டபோது சேதுபதிகளின் படைகளை நாயக்கர்கள் வரவழைக்கும் சூழல் ஏற்பட்டது.

## கொங்கு 24. நாடுகள்

**"சொல்லவரிதான பூந்துறைசை தென்கரை நாடு தோன்று காங்கேய நாடு தோலாத பொன்கலூர் நாடு திகழாறையனி தோய்ந்த வாரக்கநாடு**

**வல்லமை செறிந்த - திருவாவினன் குடி, மணநாடு, தலையனாடு**
**வரதட்டை பூவாணி யரையனா டொடு வங்க வடகரை கிழங்குநாடு**
**நல்லுறுக் கன்னாடு வாழ்வந்தியு மண்டநாடு வெங்கால நாடு**
**நாவலர்கள் சொல் காவடிக்க நாடானை மலை ராசிபுரநாடு நிதமும்**
**இல்லறம் வளர்த்துதவி மல்கு காஞ்சிக் கோயிலியில் செறி குறுப்பு நாடு**
**மினிய புகழ் சேர் கொங்கு மண்டலந்தனிலான இருபத்து நான்கு நாடே"**

இந்தப் பாடல் ஆசிரியர் திருச்செங்கோடு தி. அ. முத்துச்சாமி கோனார் ஆவார். இந்தப்பாடலில் கொங்கு 24 நாடுகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

கொங்குமண்டலத்தின் 24 நாட்டுப் பிரிவுகளில் வெங்கக்கல் துண்டுகள நிறைந்த நாடுதான் வெங்கல நாடாகும். முற்காலத்தில் கருவூர் என்று அழைக்கப்பட்ட ஊர்தான் இன்றைய கரூர் ஆகும். கருவுர் முற்காலத்தில் சேர நாட்டின் தலைநகரான வஞ்சி என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்து ஆகும். இந்தக் கருவூர் சேர வேந்தனின் தலை நகர் என்பதால் வெங்கல நாடு குறிப்பிடப்படவில்லை நாட்டின் ஊர் பெயர்களை குறிப்பிடவில்லை போலும்.

புன்னம், பவுத்திரம், நாகம்பள்ளி, காளிக்குறிச்சி, குப்பம்,தும்பிவாடி, நெடுங்கூர், கோயம்பள்ளி,காசி பாளையம், கோயிலூர், வெஞ்சமாக்கூடல், ராமபுரம், பள்ளப்பாளையம், வெங்கடாபுரம், நிமித்தம்பட்டி, ஆத்தூர் என்பனவையாகும். இந்தப் பகுதிகளில் நஞ்சையை விட புஞ்சைநிலமே அதிகம். இப்பகுதியில் வேட்டுவர்களுக்குச் சிறப்பான கோவில்கள் உண்டு, காணி பூமியும் உண்டு. பட்டம், பாளையம் பெயரும் புகழும், பெரிய தனமும் உண்டு. ஆகவே வெங்கலநரட்டு வேட்டுவர்கள் பெருமை மிக்கவர் என்பது மிகையாகாது.

கருவூர் (கரூர்) ராஜமாநகர் என்பதால் வேங்கல நாட்டு ஊர்த்தொகை பாடலில் இடம்பெறவில்லை. அமராவதி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள வஞ்சியம்மன் திருக்கோயில் தொன்மை மிக்க ஒன்றாகும். வரலாற்று சிறப்புமிக்க

இத்திருக்கோயில் சேர வேந்தர்களது குலதெய்வக் கோயிலாகும். வஞ்சியம்மனின் திரு உருவம் மிகவும் பழமை மிக்கதாகும்.

ஆனிலையப்பர் திருக்கோயில் பசுபதீசுவரர் திருக்கோயில் எனவும் அழைக்கப் பெறுகிறது. புகழ்மிக்க இவ்விசுவரர் கோயிலில் மன்னர்களின் கல்வெட்டுகள் மட்டுமின்றி வேட்டுவர் பற்றியு கல்வெட்டும் வேட்டுவத் தலைவன் கோயிலுக்கு அளித்த கொடை பற்றியும் குறிப்பிடுகிறது.

கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் ஆதித்ய சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்த பொழுது கொங்குநாடு முழுவதும் 'வேட்டுவராசாக்கள் ஆண்டார்கள்' என்று கொங்குதேச இராசாக்கள் எனும் நூல் கூறுகிறது. இப்படையெடுப்பினால் கொங்கில் சோழர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 25 -ஆம் ஆட்சியாண்டில் கரூர் பசுபதீஸ்வர் கோயிலில் கண்டுள்ள கல்வெட்டு என்ன கூறுகிறது என்பதை காண்போம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஈழமும் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கருவூரும் கொண்டருளின ஸ்ரீ குலோதுங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தைஞ்சாவது சோழ கேரள மண்டலத்து வெங்கா
2. ல நாட்டு கருவூரான முடிவழங்கு சோழபுரத்து உடையார் திருவாநிலை ஆளுடையார்க்கு இம் மண்டலத்து இந்நாட்டுப் புன்னத்துப் பூவாணிய வேட்டுவரில் வேளான் கரியானான மருதங்க வேளான் இந்நாயனார் ஸ்ரீபண்-
3. டாரத்துக்கு ஒடுக்கின பொன் காசு கல்லால் துளைநிறை செம்பொன் முக்கழஞ்சு இப்பொன் முக்கழஞ்சும் இம் மண்டலத்து தட்டையூர் நாட்டு தேவணப்பள்ளி ஊரோம் ஊர் வினியோகத்துக்குக் கொண்ட பொஞ்முற்க
4. ழஞ்சும் மூல பிருந்தரான ஸ்ரீ சண்டேசுவர தேவர் ஸ்ரீஹஸ்த் தால் இப்பொன் முக்கழஞ்சும் கைக்கொண்டு

தேவதானம் திருநாமத்துக் காணியாக விற்றுக்குடுத்த நிலம் மேல்ப் புலத்து ஆலோடு பொயிலால் நீர்பா-

5. யும் நிலம் பாடி காப்பானஞ்செய் என்னும் பேருடை நிலம் பெரும்படி அரைமாவும் இதுக்கெல்லை கீழ் பாற்க்கெல்லை நோம்பலூர் நத்தத்துக்கு மேற்க்கும் வடபாற்க்கெல்லை விருத்திக்கு தெக்கும் மேல்பா

6. ற்க்கெல்லை தெக்கு நோக்கி நீர்பாய்கிற வருக்குத் கிழக்கும் தென்ம்பாற்க கெல்லை அணுக்க நம்பி செய்க்கு வடக்கும் இப்பெரு நான்ங்கெல்லைக்குட்பட்ட இவ்வரை மாநிலமும் இறையிலிமு

7. ற்றாட்டாக இந்நாயனார் தேவதான மாவிதாகவும் இந்நிலத்தால் வந்த இறைவரி சிற்றாயம் எறச் சோறு. கூற்றரிசி எப்பெறப்பட்டனவும் ரோமெ ஏறிட்டு கொண்டு இந்நிலம் அரை மாவும் இறையி

8. லி இத்திருக் கோயிலில் தேவதானமாகக்குடுத்து செந்நீர் வெட்டி செய்யக் கடவதல்லையாகவும் புந்நீர் விட்டு பாச்சிக் கொள்விதாகவும் இப்படி சம்மதித்து இறையிலி தேவதான மாகக் கல்வெட்டிக் குடுத்தோம் தேவணப்பன்னி ஊ

9. ரோம் இந்நாயனார். புன்னத்தில் பூவாணி வேட்டுவர் அரிச்சந்திர வேட்டுவர் எனும் இரு கோத்திரத்தார் முதன்மை உடையவர்கள்.

சேரர்களின் கோநகரமாகத் திகழ்ந்த கரூர் ஆன்பொருநை ஆற்றங்கரையில் அமைந்திருந்தன்மையை அகநானூறு

**"கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை**
**திருமாவியல் நகர் கருவூர் முன்றுறை" விளக்குகிறது.**

பெருங்கடுங்கோ ஆன்பொருநை ஆற்றங்கரையின் இருந்த வஞ்சிமாநகரைத் தனது தலைநகராகக் கொண் டிருந்தான்.

**"தன் பொருநைப் னை புனல் பாயும்**

**விண்பொரு புகழ் விறல் வஞ்சி"** - **என்கிறது புறநானூறு 11**

வஞ்சியை ஆண்டுவந்த சேரவேந்தனை இளங்கோவடிகள்

**"தன்பொருநை சூழ்தரும் வஞ்சியர் கோமான்"**

**என்கிறார். (சிலம்பு-காதை-29)**

வெங்கல நாடு இரு பிரிவுகளைக் கொண்டது ஆகும். இவை தென்கரை நாடு, வடகரைநாடு என்பன ஆகும். இதில் முதல் பகுதியான தென்கரை ஆறு பங்கு கொண்டது. இன்றும் தென்கரை பகுதியில் உள்ள கோவில்களில் பரிவட்டம், பிரசாதம் வழங்குவதிலும் சுப காரியங்களில் தாம்பூலம் வழங்குவதிலும் இந்த தனி முறை நடைபெற்று வருகிறது.

தென்கரை ஆறுபங்கு என்பது குங்குமக்காளியம்மன் கோவில் குடிபாட்டுக்காரர்கள் ஆறு முதன்மைக் கவுண்டர்களும், வடகரை ஏழுபங்கு என்பது பவுத்திரம் ஏழு முதன்மைக் கவுண்டர்களும் என்று வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

தென்கரைப் பகுதியைச் சேர்ந்த அப்பி பாளையம் பில்லை வேட்டுவ கோத்திரத்தாருக்கும் காணியாக இருந்து வந்திருக்கிறது. கருர் வஞ்சியம்மன் கோவில் போன்று மருதகாளியம்மன் கோவிலும் மிகவும் பழமை மிக்கதாகும். சேரவேந்தர்கள் சங்க காலத்தில் இருந்தே கரூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கை ஆண்டபொழுது இம்மருதகாளியம்மனையும், வஞ்சியம்மனையும், ஆனிலையப்பர் எனும் பசுபதீஸ்வரரையும் போற்றிப் பாதுகாத்து வந்தனர் என்பது வரலாறு.

காளிக்குறிச்சி காணியாளரான சாந்தப்படை வேட்டுவ குலத்தைச் சேர்ந்த தலைவர் நல்லாயிக் கவுண்டர், தென்கரை நாட்டு பில்லை வேட்டுவர் குடும்பத்தில் பெண் எடுத்ததால் கொடையூர் என்னும் ஊரில் குங்கும காளியம்மன் கோவில் உரிமையும், அதிகாரமும் கிடைத்தது என்கின்றனர்.

பாண்டிய மன்னர் ஆட்சிக் காலத்தில் அவனிடம் அடக்க முடியாத ஒரு குதிரையை நல்லாயிகவுண்டரின் வாரிசான இளவல் நல்லாயிகவுண்டர் குதிரைகளின் லட்சணமும் அஸ்வசாஸ்திரமும் அறிந்தவன் ஆனபடியால் குதிரையை அடக்கி சவாரிசெய்து காட்டினான். அதற்கு பாண்டிய மன்னன் மனம் மகிழ்ந்து தென்கரை நாட்டுப் பட்டக்காரர் தேசிபுரவி நல்லாயிக்கவுண்டர் எனப் பெயர் வைத்துப் பட்டம் பதவி கொடுத்து விருதுகளும் வழங்கினாராம். தேசிபுரவி என்பது குதிரையின் பெயர். இதுவே அடைமொழியாகச் சேர்ந்து கொண்டது. இதுமுதல் இந்த வம்சத்தார்களுக்கு தேசிகன், தேசியணன் எனப்பெயர் வைத்துக்கொள்ளும் பழக்கமும் ஏற்பட்டது.

## கருவூர் சௌந்தரநாயகி அம்மன்

பங்குனி உத்தரம் ஏழாம் நாள் காலை சுமார் 10 மணியளவில் அம்மனை பல்லக்கில் வைத்துக் கரூரிலிருந்து அப்பிபாளையம் கொண்டு வருவார்கள். அப்பிபாளையத்தில் அம்மனுக்குத் தனியாகக் கோயில் ஒன்று உண்டு அங்கு அம்மனை வைத்து பூஜை செய்வார்கள். பூஜை முடிந்ததும் வேட்டுவ சமுகத்தைச் சேர்ந்த பெரிய தனக்காரர்களுக்கு முதலில் விபூதி பிரசாதம் கொடுப்பர். 12 மணிக்குப் பூஜை நடைபெறும் பிறகு இரவில் 11 மணிக்கு பூஜை நடைபெறும், இதிலும் வேட்டுவ சமூகப் பெரியதனக்காரருக்குத்தான் முதல் மரியாதை தருவார்கள். பின்னர் சௌந்தரநாயகி அம்மன் கருவூர் ஈஸ்வரன் கோவிலுக்கு கொண்டு செல்வார்கள். இச்சௌந்தர நாயகி ஒரு வேட்டுவப் பெண் ஆவாள். இவள் கரூர் ஈஸ்வரன் மேல் பக்திகொண்டு தவம் இருந்து ஈஸ்வரனிடம் ஐக்கியம் ஆனவள் என்பது வரலாறு. கரூர் ஆனிலையப்பர் எனும் பசுபதீஸ்வரர் இவ்வுலகின் இறைவன் என்றால், சௌந்தர நாயகி இறைவி என்பதும் ஆன்மீக வரலாற்றின் அசைக்கமுடியாத ஆனிவேராகும்.

இதைத்தான் பாட்டுக்கோர் புலவன் பாரதி "சில வேந்தரிடத்திலே சில வீரரிடத்திலே சில வேட்டுவர் சார்பினிலே இறைனைக் காண்போம்" என்கிறார் தனது பாடலில். (பாரதியார் கவிதைகள்).

பருத்தியூர் டாக்டர். மு.சந்தானராமன்
வேடர்குலத்தோன்றல்கள் (பக்கம்: 66 ஶி 69)

**வேட்டுவர் குல தெய்வ மகளீர் ஐவர்**

1. சபரி
2. வள்ளி
3. ஆகுதி (நள - தமயந்தி)
4. பொன்னாச்சி
5. ஸாவண்யவதி

**சிவனடியார் நால்வர்**

1. குருத்ருகன்
2. ஆகுகன் (நள - தமயந்தி)
3. புஷ்பவாகனன்
4. கண்ணப்பர்

**திருமாலடியார் ஐவர்**

1.வால்மீகி
2. குகன்
3. சபரி
4. உறங்காவில்லி தாசர்
5. நரசிங்கத்தைப் பிணித்தவன்

**முருகனடியர் இருவர்**

1. வள்ளி, 2. கதிர்காம வேடன்

**ஆசான் அடியார் ஒருவர்**

ஏகலைவன்

**இராமாயணத்தில் இடம் பெற்றவர் மூவர்**

1. வால்மீகி
2. சபரி
3. குகன்

**மகாபாரதத்தில் இடம் பெற்ற ஒருவர்**

1. ஏகலைவன்

**சிவமகாபுராணத்தில் இடம்பெற்றவர் மூவர்**

1. குருத்ருகன்
2. ஆகுகன்
3. புஷ்பவாகணன்

**பெரிய புராணத்தில் இடம்பெற்ற ஒருவர்**

கண்ணப்பர்

**திருப்புகழில் இடம் பெற்றவர் ஒருவர்**

கதிர்காம வேடன்

**கந்த புராணத்தில் இடம் பெற்றவர் ஒருவர்**

வள்ளி

**சங்கர விஜயத்தில் இடம் பெற்றவர் ஒருவர்**

1. நரசிங்கத்தைப் பிணித்தவர்

**இராமானுஜவிஜயத்தில் இடம் பெற்றவர் ஒருவா**

உறங்கா வில்லி தா சர்

**வேட்டுவரைக் குறிக்கும் வேறுசொற்கள்**

1. கிராதகர்
2. சபரர்
3. புளினர்
4. வனசரர்
5. எயினர்

**இந்த வேட்டுவர்கள் எதனால் சிறந்தவர் என்ற விவரம்**

1. கவிதையால் - வால்மீகி
2. காதலால் - வள்ளி
3. நட்பால் - குகன்
4. யோகத்தால் - சபரி
5. தியாகத்தால் - ஆகுகன், கண்ணப்பர், ஏகலைவன்.
6. தொண்டால் - உறங்கா வில்லிதாசர்
7. வாய்மையால் - கதிர் காமவேடன்
8. உறுதிப்பாட்டால் - நரசிங்கத்தைப் பிணித்தவன்
9. சிவ புண்ணியத்தால் - குருத்ருகன், புஷ்பவாகனன்

**வேட்டுவ உருக்கொண்ட கடவுளர் மூவர்**

1. சிவபெருமான் (கிராத மூர்த்தி)
2. அம்பிகை (சபரி துர்க்கை)
3. முருகன்

முருகன் வேட்டுவத் தலைவன் ஆவான், எனவே அவன் வேட்டுவ முருகன் என்று அழைக்கப்பட்டான்.

## வெங்கல நாடு

ஆங்கிலேயர்களின் கும்பனி (East Indian Company) ஆட்சி தமிழ் நாட்டில் வேரூன்றிய பின்பு இந்நிலப்பரப்பில் வாழ்ந்தவர்களுடைய நில உடமை, காணியாட்சி உரிமை, பாடிகாவல் ஆகிய உரிமைகளை அதிகமாக மாற்றியமைக்காமல் அவரவருக்கு இருந்த உரிமைகளை அப்படியே ஒப்புக்கொண்டு நிர்வாகம் தொடர்ந்து அமைதியாக இருக்கும்படிக் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். விஜயநகராட்சியின்தொடர்பான நாய்க்க மன்னர்கள் ஆட்சி, நவாபுகள் ஆட்சி, மைசூர் ஆட்சி என்று மாறி மாறி இருந்தபடியால் தெலுங்கு, கன்னடம்ஃ, உருது, போன்ற

மொழிகளில் நிர்வாகத்திற்கு பயன்பட்ட சொற்கள் தொடர்ந்து பழக்கத்தில் இருந்து வந்தன. இப்படிப்பட்ட சொற்களில் சில வேட்டுவ பட்டக்காரார்கள் வழங்கிய கைபீதுகளில் காணப்படுகின்றன.

இப்படிப்பட்ட கைபீதுகள் வழங்கிய பட்டக்காரர்கள் வேட்டுவ சமூகத்துப் பட்டகாரர்கள் ஆவர். இந்தத் தலைய நாட்டுப் பகுதிகளில் ஒருமுக்கிய ஊரான அரவக்குறிச்சி இன்றைய நிலையில் ஒரு வட்டமாக உள்ளது, இந்த ஊர் கரூரிலிருந்து தெற்கு திசையில் சுமார் 15 மைல் தொலைவில் உள்ளது. இந்த ஊரில் கும்பினியார் (ஆங்கிலேயர்) காலத்தில் ஒரு கும்பினிப் படை இருந்த இடம் என்று கூறப்படுகிறது.

கைபீது (D: 3074) இந்த அரவக்குறிச்சி தாலூக்காவின் எல்லைக்குட்பட்ட நிமித்தப்பட்டி என்னும் ஊரின் பட்டக்காரர் வேங்கல நாட்டின் தென்கரைப் பகுதிக்குப் பட்டக்காரர் ஆவர். தற்போது உள்ள நிலைமையில் இந்தப் பட்டக்காரர் பற்றிய குறிப்பு தலைய நாட்டுப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிமித்தப்பட்டி பட்டக்காரர்திரு. நீலியப்பக் கவுண்டர் சாலிவாகன சகாப்தம் 1698 - ஹேவிளம்பி வருஷம் ஆனி மாதம் 4- ம் தேதி புதன்கிழமை சுப தினத்தில் பட்டம் நாட்டோரனை வரும் கூடி கட்டி வைத்தார்கள் என்று கைபீது கூறியுள்ளார். இந்த 2024 - ம் ஆண்டின் சாலிவாகன சகாப்தம் 1926 ஆகும். அப்படியானால் சரியாகச் சுமார் 227 ஆண்டுகளுக்கு முன்பு இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும். இவர்கள் சாலிவாகன சகாப்தம் 1301 முதல் நாளும் வரைக்கும் பட்டம் ஆண்டு வந்தவர்கள் தலைமுறை 20 க்கு அவாளவாள்களுடை நடத்தைகள் முதலானதுகளும் பட்டமாண்ட வருடங்களும் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் | பட்டமாண்ட வருடம் |
|---|---|---|
| 1. | நீலியப்ப கவுண்டர் | 67 |
| 2. | யிவர் குமாரன் | 40 |
| 3. | யிவர் குமாரன் | 6 |
| 4. | யிவர் குமாரன் | 12 |
| 5. | யிவர் குமாரன் | 8 |
| 6. | யிவர் குமாரன் | 19 |
| 7. | யிவர் குமாரன் | 24 |
| 8. | யிவர்குமாரன் | 11 |
| 9. | யிவர்குமாரன் | 9 |
| 10. | யிவர் குமாரன் | 16 |
| 11. | யிவர் குமாரன் | 30 |
| 12. | யிவர் குமாரன் | 7 |
| 13. | யிவர் குமாரன் | 21 |
| 14. | யிவர் குமாரன் | 14 |
| 15. | யிவர் குமாரன் | 23 |
| 16. | யிவர் குமாரன் | 17 |
| 17. | யிவர் குமாரன் | 26 |
| 18. | யிவர் குமாரன் | 15 |
| 19. | யிவர் குமாரன் | 41 |
| 20. | யிவர் குமாரன் | 25 |

நீலியப்ப கவுண்டர்கள்: இவர்கள் வழியில் 431 ஆண்டு காலமாக 20 பாளையக்காரர்கள் ஆண்டனர் எனவும் இவர்கள்

ஒவ்வொருவரும் நீலியப்ப கவுண்டர் என்ற பட்டம் சூட்டிக் கொண்டதாகவும் இவர்கள் வழிவந்த 14 வது பட்டகாரரே மைசூர் அரசருக்கு எதிராகப் போர் முரசு கொட்டிய சமய நாயக்கரை (சமயபபுரம் இவர்பெயரால் ஏற்பட்ட ஊரேயாகும்) வென்று அடக்கினார் என்று மெக்கன்சி குறிப்பு கூறுகிறது. (சமயபுரம் போரைப் பற்றி கக்குவாடி பட்டக்காரர் வரலாற்றிலும் மெக்கன்சி குறிப்பிட்டுள்ளதால் ஒரு காலகட்டத்தில் வேட்டுவர்கள் மைசூர் அரசர்களுக்கும், ஹைதர் அலி திப்பு சுல்தான் ஆகியோருக்கும் ஆதரவாளர்களாக விளங்கினார்கள் என்பது தெரியவரும்.

21 ஆம் தலைமுறை பட்டக்காரர் நீலியப்பக் கவுண்டர் மைசூர் அரசர் ஹைதர் அலிக்கு வெங்கல நாட்டிற்கு உட்பட்ட நிலங்களுக்கு கால் தீர்வை வரி செலுத்தி ஆண்டு வந்தார். (கைபீது: D. 3037)

## செட்டி நல்லண்ண கவுண்டர் கக்குவாடிப் பாளையக்காரர்

இவர் பாண்டிய மன்னர்களால் 70 வகை விருதுகளை பெற்றிருந்ததாக மைக்கண்சி (ஆளுளு.ஞ.27) குறிப்பிடுகிறார். இவர் தமது குலத்தவரை எதிர்த்த பகைவர்களை வென்று பாண்டிய மன்னரால் கௌரவிக்கிப் பட்டாராம். தேசிகவுண்டர் அவரது உடன் பிறந்தவரான காளஹஸ்தி கவுண்டர் என்ற இருவரும் கொங்கு நாடுகளுள் ஒன்றான வெங்கல நாட்டிலிருந்து அமராவதி நதியின் தென்கரைப் பகுதிகளில் சில கிராமங்களை பரிசாகப் பெற்று அவைகளை ஆளும் குறுநில மன்னர்களாயினராம் இவ்வழியில் கி. பி. 1461 முதல் 326 ஆண்டு காலம் வரை 12 பாளையக்காரர்கள் ஆட்சி செய்தனர் என்று மெக்கன்சி குறிப்பு கூறுகிறது.

| வ. எண் | பெயர் | ஆட்சிக்காலம் |
|---|---|---|
| 1. | செட்டி நல்லண்ண கவுண்டர் | 32 ஆண்டுகள் |
| 2. | நல்லண்ண கவுண்டர் | 28 ஆண்டுகள் |
| 3. | நல்லண்ண கவுண்டர் | 26 ஆண்டுகள் |
| 4. | செட்டி நல்லண்ண கவுண்டர் | 23 ஆண்டுகள் |
| 5. | பசுபதி நல்லண்ண கவுண்டர் | 21 ஆண்டுகள் |
| 6. | வெங்கடாசல நல்லண்ண கவுண்டர் | 34 ஆண்டுகள் |
| 7. | பெரிய நல்லண்ண கவுண்டர் | 23 ஆண்டுகள் |
| 8. | பசுபதி நல்லண்ண கவுண்டர் | 29 ஆண்டுகள் |
| 9. | பெரிய நல்லண்ண கவுண்டர் | 28 ஆண்டுகள் |
| 10. | செட்டி நல்லண்ண கவுண்டர் | ................ |
| 11. | பசுபதி நல்லண்ண கவுண்டர் | 17 ஆண்டுகள் |
| 12. | பசுபதி நல்லண்ண கவுண்டர் | 33 ஆண்டுகள் |
| 13. | வெங்கடாசல நல்லண்ண கவுண்டர் | ................ |

இவர்களுள் முதல்வரான செட்டி நல்லண்ண கவுண்டர் என்பவர் தம் சகோதரரைப் பிரிந்து வந்து கக்குவாடிப் பாளையப்பட்டை தனியாச்சி செய்ய துவங்கினார். 12 வது பாளையக்காரரான பசுபதி நல்லண்ண கவுண்டர் என்பவர் ஹைதர் அலியுடன் சேர்ந்து கொண்டு நஞ்சராஜய்யா என்ற மைசூர் அரசரின் தளபதிக்கு உதவியாக விளங்கினாராம். திருச்சி அடுத்த சமயபுரத்தில் பகைவர்களை வென்றதாக குறிப்பு

கூறுகிறது. இந்த நல்லண்ணக் கவுண்டர் கிபி 1788 - ல் இறந்ததாக மெக்கன்சி குறிப்பு கூறுகிறது. இவருடைய மகனே மெக்கன்சிக்கு கைபீது கொடுத்தவர்.

கி. பி. 1778 - ல் பசுபதி நல்லண்ணக் கவுண்டர் மறைந்த பின்பு திப்புசுல்தான் ஆட்சி காலத்தில் வெங்கடாசல நல்லண்ணக் கவுண்டர் பட்டக்காரராகப் பட்டம் கட்டிக் கொண்டார்.

திப்பு சுல்தான் ஆட்சி காலத்தில் பட்டக்காரருக்குச் சொந்தமான வெங்கல நாட்டு கிராமங்களில் புன்செய் தோட்டம் உள்பட பெரியலூரில் உள்ள நன்செய் காணி முப்பதும் திப்பு சுல்தானால் பறித்துக் கொள்ளப்பட்டது.

காக்கவாடி முதல் பாளையப் பட்டக்காரர் செட்டி நல்லண்ண கவுண்டர் இவர்களுக்கு அமராவதி தென்கரையில் உள்ள கொடையூர் அருள்மிகு குங்கும காளியம்மன் கோவில் குலதெய்வம், செட்டி நல்லண்ண கவுண்டர் தன் சகோதரன் தேசிகரன் கவுண்டருக்கு குங்கும காளியம்மன் கோவிலை நிர்வாகம் செய்ய விட்டு விட்டு காக்கவாடி சென்று தட்டைய நாட்டை ஆட்சி செய்து வந்தார். ஆங்கிலேயர் காலத்தில் பிச்சம்பட்டியில் கிராம கஸ்பா முனிசிப் பழைய மணியக்காரர் நிர்வாகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர், இன்று வரைக்கும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தற்போது உள்ளவர்கள் மனோகரன் கவுண்டர் பாளையப்பட்டக்காரர் தட்டையநாடு காக்கவாடி, பிச்சம்பட்டி பாளையப் பட்டக்காரர் வம்சாவளி இன்று மு. மனோகரன் கவுண்டர் சாந்தப்படை வேட்டவர் ஆவார். காக்கவாடியை தலைமை இடமாகக் கொண்டு கி. பி. 13 - ஆம் நூற்றாண்டு சோழ நாட்டு கிழக்கு எல்லை மாயனூர் மதுக்கரை வரைக்கும் கி. பி. 18 - ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் காளகஸ்தி கவுண்டர் வம்சாவளி செட்டியண்ண கவுண்டர் தன் நாட்டு எல்லை தெய்வம் மாயனூர் மதுக்கரை செல்லாண்டி அம்மன்

கோவிலில் இருந்து வழிபாடு செய்து வந்தனர். பிற்காலத்தில் இவர் வம்சாவளியினர் காக்கவாடியில் உள்ள செல்லாண்டி அம்மன் கோயிலில் வழிபாடு செய்து வந்தனர்.

மண நாடு தென்னிலை அய்யன் கோயில் என்கிற அருள்மிகு நாட்டுராயன் நாச்சிமுத்து சன்னதியில் அருள்மிகு செட்டியண்ண சுவாமி இந்த வம்சாவளியினர் அமராவதி தென்கரையில் உள்ள தாளம்பட்டி கிராம திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில் உள்ள வேட்டுவர்கள் தென்னிலை நாட்டுராயன் நாச்சிமுத்து சுவாமி கோயிலில் வழிபாடு செய்து வருகின்றனர்.

**"காருற்ற புன்னம் புவுத்திர நாகம்பள்ளி காளிக்குறிச்சி குப்பம்**
**கமழ்தும்பிவாடி யு நெடுங்கூர் கோயம்பள்ளி காசிபாளையம் கோயிலூர்**
**சீருற்ற விகுருத நாயக்கர் வெஞ்சமாக் கூடல் சீராமபுரம் தோடு**
**சேர் பள்ளபாளையம் வெங்கடாபுரமுடன் றிகழ் நிமித்தம்பட்டியும்**
**பேருற்ற வாற்றூரு முதல் பதினாறூர்கள் பெருமை பெறவே பொருந்தி**
**பிணிமுகப் பீலியுங்கய மருப்பாரமும் பிரசமுழுதாது மலரும்**
**ஏருற்ற மறியலைச் செங்கை பாலிருகரை யெறிந்து வரு சிற்றாருடன்**
**இணையிலான் பொருனைந்தி சூழ வானிலை யோங்கு பின்ப**
**வெங்கல நாடே"**

கரூர் இராஜ மாநகர் ஆன படியினாலே இதனுடைய பெயர் மேற்கண்ட பாடலில் சேர்க்கப்படவில்லை. இந்த வெங்கல நாட்டிற்கு இணை நாடு இடைப் பிச்சனாடு ஆகும்.

**"பொன்னாரியூர் நெடுங்கூர் போற்று பரமுத்தியுடன்**
**முன்னூருஞ்சேர் நான்குமூதூர்கள் கன்னிச்**
**சடைப்பிச்ச நாடுந்தல மேவு கொங்கில்**
**இடைப்பிச்ச னாடென் றியம்பு"**

கரூரில் சௌந்தரநாயகி சகிதம் பசுபதீஸ்வரன் காட்சி தருகிறார். சேரவேந்தன் அந்தியூர் வடகரை நாட்டில் உள்ள பட்லூரில் இடைப்பிச்ச நாட்டில் இருந்த வேட்டுவர்களை அழைத்து வந்து வாகீஸ்வரன் சௌந்தரநாயகி கோயில் கட்டி

குளம் வெட்டி குடியமர்த்தினார். பின்பு இவர்கள் ஒரு பிரிவினர் காஞ்சிக்கோயில் நாட்டில் அயலூரில் இப்பீச்ச வேட்டுவர்கள் சௌந்தரநாயகியை, பச்சைநாயகி என்று பெயரிட்டு தன் குல தெய்வமாக வணங்கி வருகிறார்கள்.

மணநாடு தென்னிலை அய்யன் கோவில் அருள்மிகு நாட்டுராயன், நாச்சிமுத்து சுவாமி, செட்டியண்ணன், குட்டியண்ணன் ராய பூசாரி, மகாமுனி, கருப்பண்ண சுவாமி கோவில் திருப்பணி குழு அமைப்பு 5 .11. 2024 கோவில் பரம்பரை தர்மகர்த்தா ரா. கண்ணன் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது.

தென்னிலை அய்யன் கோயிலில் முன்னை வேட்டுவர் ராயபூசாரி கவுண்டன் சிலை உள்ளது. இடைபீச்ச நாடு முன்னை வேட்டுவர் அல்லாளி கவுண்டர் என்று தென்னிலை நீலி அம்மன் கோவில் செப்பேட்டில் குறிப்பிட்டுள்ளது. இடைபிச்ச நாடு நெடுங்கூர் கிராமம் முதன்மை கவுண்டர் முன்னை பிச்ச வேட்டுவர் ஆவார்கள், நெடுங்கூர் கிராமம் அருள்மிகு மலையாள சுவாமி கோயில் பூசாரி வம்சம் முன்னை பிச்ச வேட்டுவர் இன்று உள்ளவர் தங்கவேலு கவுண்டர்.

### சாந்தப்பாடி கோவிலூர்

இந்த ஊர் கரூரிலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. கோவிலூர் - கொங்கு சோழ மன்னர்களால் கட்டப் பட்டது பழைய கோவில் தற்பொழுது புதுப்பிக்கப்பட்டுள்ளது. கருவூர் மாவட்டத்தில் அழகிய வேலைப்பாடுகள் உள்ள கவின்மிகு சிற்பங்கள் நிறைந்தது. பாண்டியர் காலத்து கல்வெட்டுகள் உட்பட பல கல்வெட்டுகள் 13 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் தொல்லியல் பதிவில் உள்ளது. மெய்ப்பொருள் நாதசாமி - சௌந்தரநாயகி அம்மன் கோயில் உள்ளது. இவ்வூர் முதலில் தலையூர் என்றும் சௌந்தராபுரம் என்றும் அழைக்கப்பட்டது. அருகில் சாந்தப்பாடி எனும் ஊர்

உள்ளது. இக்கோயில் தூண்கள் கவின்மிகு சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும். தட்சிணாமூர்த்தி, சூரியன், சந்திரன் சகிதம் இருந்து வேட்டுவ வேந்தர்களை நினைவு படுத்துகிறது.

## தென் கொங்கு நாட்டு 18 வேடர்குலம் மணநாடு தென்னிலை அய்யன் கோயில்

1. மோகாளி வேட்டுவர், 2. சிறுதலை வேட்டுவர், 3. வெங்கச்சி வேட்டுவர், 4. மாந்தப்படை வேட்டுவர், 5. உரிமை படை வேட்டுவர், 6. சாந்தப்படை வேட்டுவர், 7. பூவானி வேட்டுவர், 8. அரிச்சந்திர வேட்டுவர், 9. சதுப்ப வேட்டுவர், 10. பரிபடை வேட்டுவர், 11. முன்ன வேட்டுவர், 12. கரும்புள்ள வேட்டுவர், 13. கரடி வேட்டுவர், 14. வேந்த வேட்டுவர், 15. புன்னாடி வேட்டுவர், 16. வரக வேட்டுவர், 17. சோழ வேட்டுவர், 18. பீச்ச வேட்டுவர். இவர்கள் அனைவரும் அய்யன் கோவில் வழிபாடு செய்து பின்னர் இவர்கள் அனைவரும் குலதெய்வம் அம்மன் கோவிலை வழிபாடு செய்வார்கள்.

பாண்டிய மன்னனால் பட்டம் பெற்ற செட்டியண்ணன் பாளையப் பட்டக்காரருக்கு மணநாடு தென்னிலை அய்யன் கோவிலில் சிலை வைத்து வழிபாடு செய்து கொண்டு வருகிறார்கள். காக்கவாடி செட்டியண்ணன் வம்சாவளி வேட்டுவர்கள் கரூர் டவுன் பசுபதிபாளையத்தில் உள்ளவர்கள் (மட்டும்) தென்னிலை அய்யன் கோவிலை வழிபாடு செய்து வருகின்றனர்.

அப்பிபாளையம் கிராமத்துக்கும் கரூர் பசுபதி நாதனுக்கும் உள்ள உறவு முறை போல செட்டி பாளையம் குன்றின் மேல் அமர்ந்திருக்கும் ஈசனுக்கும் இக்கிரமத்தைச் சேர்ந்த குங்கும வள்ளி என்ற வேட்டுவப் பெண்ணுக்கும் திருமணம் நடந்ததாக ஐதீகம் என்று தென்கரை செட்டியண்ண கவுண்டர் வம்சா

வழியினர் கூறுகின்றனர். அமராவதி ஆற்றின் தென்கரையில் வெங்கல நாடு வெள்ளூர் ஆதி வேட்டுவ கவுண்டர் வழியில் வந்த ஆதி செட்டி நல்லண்ண கவுண்டர் முன்னோர் பாண்டிய மன்னனின் போர்படை தளபதியாக விளங்கி களப்பிரரை அடக்கியதால் அவருக்கு பாண்டிய மன்னன் வெங்கல நாட்டை கொடுத்தார்.

தன் குலதெய்வமான குங்கும வள்ளிதாயாருக்கும் குன்றீஸ்வரருக்கும் வெட்டிக்காரன் பட்டி குருக்கள் (ஐய்யர்) வைத்து மூன்று கால பூஜை செய்வித்து இக்கோவிலுக்கு பல திருப்பணிகளும் நில தானங்களும் செய்து வைத்தார். குன்றீஸ்வரர்க்கும் வேட்டுவ குங்கும வள்ளி தாயாருக்கும் ஐப்பசி மாத பௌர்ணமியில் தெய்வத் திருமணம் நடந்ததாக புராண வரலாறு கூறுகிறது. இச்செட்டியண்ணன் காலத்திற்குப் பின் இப்பகுதி வறட்சியுற்று வருவாய் இழந்து இக்கோயிலும் பராமரிப்பில்லாமல் சிதைந்து விட்டது. இந்த ஊர் இன்றும் ஆதி செட்டி நல்லண்ண கவுண்டன் என்ற பெயரில் செட்டிபாளையம் என்றும் அழைக்கப்படுகிறது.

## தென்கரை வெங்கல நாடு

**(தமிழ்நாடு செப்பேடு பகுதி-1. கைபீது: D.3037)**

செட்டி நல்லண்ண கவுண்டர் சகோதரன் தேசிகாரன் கவுண்டர் பிரிந்து காக்கவாடியில் தனிக்கோட்டை அமைத்து ஆட்சி ஆண்டனர் என்கிறது கைபீது.

கரூர் மாவட்டம் பவித்திரம் கிராமம் காளகஸ்தி கவுண்டர் சாந்தப்படை வேட்டுவர் என்று அழைக்கப்படுகிறது

வெஞ்சமன் கூடலூர் கிராம முன்சீப் பழைய மணியகாரர் திருமலைசாமி கவுண்டர் செப்பேட்டில் வெங்கல நாட்டு சல்லி காளத்தி கவுண்டர் என்று உள்ளது.

மணநாடு தென்னிலை நீலியம்மன் கோவில் செப்பேட்டில்

சல்லி காளகத்தி கவுண்டன் சாந்தப்படை வேட்டுவன் என்று அழைக்கப்படுகிறது அனைவரும் ஒன்றுதான்.

## தலையூர் நாடு

தலையூர் நாடு அல்லது தலையநாடு என்றும் கூறுவர்.) இது வேங்கல நாட்டின் எல்லைப்புற நாடு ஆகும். இந்தநாடு வேட்டுவர் வரலாற்றில் காலத்தால் அழிக்க முடியாத நிகழ்ச்சிகளைக் கொண்டது ஆகும். குறிப்பாக களப்பிரர் போர் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழகத்தில் கன்னட வேட்டுவர் எனும் களப்பிரர்கள் சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்களின் ஆட்சியாளர்களுக்கு இடையூறாக விளங்கினர். கி.பி. 5 - ஆம் நூற்றாண்டில் நடந்த களப்பிரர் போரில் பாண்டிய நாட்டில் பாண்டியர்கள் களப்பிரர்களை ஒடுக்கினர். அப்பொழுது சோழர்கள் மிகவும் வலிமை குன்றியிருந்தனர், தொண்டை நாட்டில் களப்பிரர்களின் செல்வாக்கை பல்லவ மன்னர்கள் எனும் ஆந்திர வேட்டுவர்களர் அடக்கினர். குறிப்பாக கொங்கு நாட்டில் கொங்கர் எனும் வேட்டுவச் சிற்றரசர்களின் துணைகொண்டு சேரர்களும் பாண்டியர்களும் களப்பிரர்களை வீழ்த்தினர். அதன் விளைவாக வேங்கல நாடு, தலையூர் நாடு போன்ற நாடுகளை பாண்டியர்களும் சேரர்களும் களப்பிரரை போரில் வென்ற வேட்டுவச் சிற்றரசர்களுக்கு வழங்கினர். குறிப்பாக தலையூர் நாட்டில் வேட்டுவர்களின் வீரம், தன்மானம் ஆகிய சிறப்புக் குணங்கள் விளங்கும் நிகழ்ச்சிகள் நிரம்ப நடை பெற்றுள்ளன. களப்பிரர் போரில் வீரப்பூர் முக்கிய பங்கு வகித்தது. வீரப்பூர் போரில் வெற்றி பெற்றது தமிழ் வேட்டுவர், வீழந்தது கன்னட வேட்டுவர் எனும் களப்பிரர் ஆவர். இதன் நினைவாக வீரப்பூரில் வீழ்ந்த கன்னட வேட்டுவத் தலைவர்களுக்கு நடு கற்கள் நடப்பட்டன. இந்நடுகற்கள் கோயில் வழிபாடு அண்ணமார் வழிபாடு என்று கூறப்படுகிறது. கொங்கு நாட்டில் அண்ணமார்

வழிபாட்டை தமிழ் வேட்டுவர்கள் வழிபட்டு வந்தனர். கி. பி. 5 - ஆம் நூற்றாண்டில் இருந்து கொங்குநாடு தமிழ்நாடு மட்டுமின்றி இலங்கை வரை அண்ணமார் வழிபாடு அனைத்து சமூகத்தினரும் வழிபட்டுட்டு வந்தனர். கன்னட வேட்டுவர் மற்றும் ஆந்திர வேட்டுவர் தமிழகத்தில் வடுக வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். தெய்வ வழிபாடுகள் வேட்டுவர்களின் முன்னோர்கள் வழிபாடாகும்.

"சில வேட்டுவர் சார்பினிலே இறைவனைக் காண்போம்" என்று பாட்டுக்கோர் புலவன் பாரதியார் பாடியுள்ளார். சிவன் ஒருபாண்டிய வேட்டுவன், பெருமாள் ஒரு சேர வேட்டுவன், முருகன் ஒரு தமிழ் வேட்டுவன் வடுகநாதர் (காலபைரவர் வேட்டைநாயுடன்) ஒரு வடுக வேட்டுவர் ஆவார். குரு தட்சிணா மூர்த்தி (தென்னாடுடையசிவன்) தென்னகத்து குருகுல வேட்டுவர் ஆவார்.

## சிறப்பான சில அண்ணன்மார் கோயில்கள்

| நாடு | ஊர் | பூசாரி | குலம்-காணி |
|---|---|---|---|
| சேலம் மாவட்டம் | பருத்திப்பள்ளி | வேட்டுவர்- | |
| | கருங்கல்பட்டி | வேட்டுவர்- | |
| | முரங்கம் | வேட்டுவர்- | |
| மேல்கரைப் பூந்துறை (ஈரோடு மாவட்டம்) | வெள்ளோடு | உப்பிலியர் | சாத்தந்தை |
| | எழுமாத்தூர் | வேட்டுவர்- | |
| | சத்தியமங்கலம் | வேட்டுவர்- | |

(அண்ணன்மார் சாமி கதை - ஒரு பன்முகப்பார்வை
பக்.125-126. முனைவர். கேர. நீ முத்துக்குமாரசாமி,
முதறப்பதிப்பு ஆகஸ்ட்டு 2002)
வெளியீடு: பேரூர் புலவர் பேரவை,
சாந்தலிங்கம் கலை அறிவியில தமிழ் கல்லூரி, பேரூர்,
கோவை-10

## குறிப்பு

- வெள்ளோடு அண்ணணமார் (பெரியண்ணன் - சின்னண்ணன்) கோயில் பாண்டிய வேட்டுவர் வழிபாட்டில் உள்ள கோவில் ஆகும், ஆசிரியர் தவறாக உப்பிலியர் வழிபாட்டுக் கோவில் என்று பெயர் குறிப்பிட்டுள்ளார்.
- கவுந்தப்பாடி கவுண்டன்பாளையத்தில் உள்ள அண்ணன்மார் கோயில் கொடுமுடி வேட்டுவர் குலத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள்.
- எழுமாத்தூரில் உள்ள அண்ணணமார் கோயில் மாச்சாடி வேட்டுவர் குலத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள்.
- நாமக்கல் மாவட்டம் குன்னமலை அருகிலுள்ள வசந்தபுரத்தில் உள்ள அண்ணன்மார் (பெரியண்ணன் - சின்னண்ணன்) கோயில் மூல வேட்டுவர் குலத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள்.
- அண்ணனமார் வழிபாடு என்பது ஒரு வேட்டுவர் வழிபாடாகும். இவ்வழிபாடு களப்பிரர் போரில் தமிழ் வேட்டுவர்க்கும் கன்னட வேட்டுவர்க்கும் நடந்த வெற்றி தோல்வியால் ஏற்பட்ட ஒன்றாகும். இவ்வழிபாடு பிற்காலங்களில் குறிப்பாக கொங்கில் குடியேறிய பிற சமூகத்தாராலும் பின்பற்றப்பட்டது.
- அண்ணன்மார் வழிபாடு ஒரு வேட்டுவர் வழிபாடு ஆகும். கதை அல்ல!!
- வென்றவருக்கும் தோற்றவருக்கும் வரலாறு உண்டு, ஆனால் வேடிக்கை பார்தவருக்கு ஒருபோதும் வரலாறு கிடையாது.

## தலையநாடு பற்றி கொங்கு மண்டலச் சதகம் கூறும் பாடல்

**தங்கு புங்கம் பாடியரவக் குறிச்சி**
**தகுசேந்த மங்கலமு நன் முடக்கூர்.**
**பொங்கு சாந்தப்பாடி யினுங் கணூரும்**
**புகழ் வேளாண் பூண்டியெழிற் றலையூரோங்கும்**
**மங்கை கன்னிவாடி கிழான் கொண்டல் சின்ன**
**மருதூரிடக் கலப்பாடியறிஞ ரெல்லாந்**
**புங்கமிகு குமரபாளயத் தினோடு**
**போந்த பதின் மூன்றூருந் தலைய நாடே.**

## இந்தத் தலைய நாட்டில் முக்கிய ஊர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள் பின்வருமாறு

1.புங்கம்பாடி, 2. அரவக்குறிச்சி, 3. சேந்தமங்கலம், 4. முடக்கூர், 5. சாந்தப்பாடி, 6. இணுங்கனூர், 7. வேளாண் பூண்டி, 8. தலையூர், 9. கன்னிவாடி, 10. கிழான் கொண்டல், 11. சின்ன மருதூர். 12. இடைக்காலப் பாடி 13. குமாரபாளையம் அமராவதி நதியின் கரையில் அமைந்த தலையூர் என்னும் ஊரே இந்தத் தலையூர் நாட்டின் பெயர்க் காரணமான ஊராகும்.

## மணலூர் நாடு, தலையூர் (தலைய) நாடு

சவுந்தர பாண்டிய பாளையக்காரர் (கைபீது: னு:3030) கி.பி. 5 - ஆம் நூற்றாண்டுகளில் களப்பிரரை வென்றதால் பாண்டிய வேந்தனால் முடிசூட்டப்பட்டு பரம்பறையாக மணலூறு சீமைக்கு சேர்ந்த பாளையங்கள் பிரபுத்துவத்துக்கு பட்டதிகாரி யானவர்களுக்கு சவுந்தரபாண்டிய னெனங்குறபேர். பெற சுத்தியாகி உண்டானவர்களாயி பிரபுத்துவம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

சமயல் பண்ண ரெண்டு மூனு பேரை தலையை வெட்டி அடுப்புக்கூட்டி சமயல் பண்ண சொல்லி சொன்னயிடத்தில் சமயலும் ஆயி, தலையும் வெடி. யாமல் யிறுந்தபடியனாலே,

பாண்டிய ராசா அதைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு யிவாள் இடத்தில் சாத்திர தர்மமும் ரொம்பவும் இருக்கிறது என்று தோணப்பட்டு இனிமேல் இப்படி செய்ய வேண்டாம் என்று உத்தரவு செய்து மணலூர் நாட்டார் என்று உண்டான பாளையக்காரருக்கு தலைய நாடு என்று பேர் கொடுத்தார்கள். அதுநாளகவே தலையனாடு யென்றும் தலையூர் நாட்டு பாளையகாரர் ஆதினத்துக்குப் பட்டகாரர் என்று வம்ச பரம்பரையிலே சவுந்தர பாண்டிய பாளையகாரர் என்று பிரசத்தி பட்டு இருந்தார்கள்.

அதின் பிற்காலம் தலைய நாட்டு பாளைய ஆதினத்து வம்ச பரம்பரையிலே கனக சபாபதி பாண்டியன் யெனப்பட்ட பேர் உண்டான நாளையிலே திருஞானசம்பந்தர் உடைய வள்ளலார் மடத்துக்கு சிஷியனான படியனாலே வள்ளல் என்று பேர் வரப்பட்டது.

அந்தநாள் முதல் சிவசமய சிந்தாத்த ஆசாரங்களுடன் நடந்து கொண்டு அரண்மனையார் கனகசபாபதி பாண்டிய வள்ளல் என்ற பேர் பிரசத்தி பெற்று பட்டக்காரர் களாக இருந்தார்கள்.

மேல் எழுதப்பட்ட வம்ச பரம்பரைகளுக்கு போகு காலமான படியனாலேயும் தகவலாய் இருக்கப்பட்ட ஆதரவுகள் ராஜியங்களிலே கைதப்பிப் போனபடியாலேயும் இத்தனை தலைமுறை யென்று தெரியவில்லை.

சாலிவாகன சகாயுதம் 1315 முதல் நாளது வரை பட்டங்களும் வரிசைகளும் அவாளவாளுடைய நடைதைக்ளும் யிதின கீழ் எழுதி வருகிறது.

1. அலகடம் செயித கைக்கு ஆளியிடு பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 37
2. யியவர் குமாரன் தண்டெரி முத்தையா பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 22

3. யியவர் குமாரன் சௌந்தர பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 23
4. யியவர் குமாரன் அன்னதான பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 34
5. யியவர் குமாரன் வாரணவாசி பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 45
6. யியவர் குமாரன் மெய்ப்பொருள் நாத பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 10
7. யியவர் குமாரன் சொக்கைய பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 44
8. யியவர் குமாரன் சௌந்தர பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 53
9. யியவர் குமாரன் கனகசபாபதி பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 35
10. யியவர் குமாரன் சவுந்தரபாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 50
11. யியவர் குமாரன் கனகசபாபதி பாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 15
12. யியவர் குமாரன் சவுந்தரபாண்டிய வள்ளல் பட்டம் ஆண்ட வருடங்கள் 18

சாலிவாகன சகாப்தம் 1706 வருஷம் வரைக்கும் தலைமுறைக் 12 - கும் வருடம் 391 க்கு அவாளாவாளுடைய நாளையில் நடந்த நடத் தைகள் கீழே எளுதி வருகுறது. முதல் தலைமுறை பட்டக்காரர் அலகடம் செய்த கைக்கு ஆளியிடு பாண்டிய வள்ளல் நாளையில் சிறு புள்ளையாய் இருக்குர போது சிறிது ஆபரணங்கள் அலங்கரிச்சு இருக்கிற சமயத்தில் கம்மாள சாதியில் ஒருவன் நோட்டக்காரர் உத்தியோகத்திலே இருக்கப்பட்டான். அந்த ஆபரணங்களுக்கு ஆசைப்பட்டு

அந்தக்குழந்தை பேரில் இருக்கப்பட்ட ஆபரணங்களை எல்லாம் வாங்கிக் கொண்டு அந்த குழந்தையை கிணற்றிலே தள்ளி போட்டான், அந்த சமயத்தில் குழந்தையானவன். கிணத்துக்குள்ளே இருந்து விருச்சத்தின் வேரை ஆதரவு பற்றித் கொண்டு கிணத்து வாரியிலே மேடேறி ஒளிஞ்சி கொண்டுயிருந்தான், அந்த சமயத்தில் தாயார் தோப்பனார் ஜனங்கள் யெல்லாம் குழந்தையை காணோம் என்று கிணத்துலே இருந்த குழந்தையை கண்டுபிடிக்கும் இடத்தில் அப்போ தாயாரை தோப்பானாரை தள்ளின கைக்கு பொன்னாளி மோதிரமும் போட்டு அவனுக்கு தலைய நாட்டில் சேர்ந்த முடக்காறு முதலான கிராமங்களிலே அலகடம் செய்த கையிக்கு ஆளிட்ட பாண்டிய வள்ளல் என்று பேர் பிரசத்திபட்டவராயி பட்டம் ஆண்டு கொண்டு பெரியவாள் சம்பாதிச்ச ஆதீனம் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

பதினோராம் தலைமுறை கனகசபாபதி பாண்டிய வள்ளல் நாளையில் அக்காலத்தில் ராச்சிய பிரபுத்துவம் பண்ணப்பட்ட மைசூர் சமுஸ்தானம் ஆளப்பட்ட கர்த்தாக்கள் நாளையில் கடைசியில் இந்த நாட்டுக்குச் சேர்ந்த கிராமங்களையெல்லாம் அரண்மனைக்கு சப்தி பண்ணிக் கொண்டு தலைய நாட்டு கிராமங்களிலே நஞ்சை காணியில் 12 புஞ்சையில் 500 இது தண்டிகை மானியமென்று சுத்த சருவ மானியமாய் விட்டார்கள். அது முதல் மானியம் அனுபவிச்சு கொண்டு பிரசித்தி புருஷராய் இருந்து கொண்டு இந்த நாட்டில் மகமை ஆதாயத்தில் வருடம் 1 - க்கு 100 பொன் அனுபவித்துக் கொண்டு வந்தார்கள்.

சாலிவாகன சகாப்தம் 170 (7) க்கு, விசுவாவசு வருடம் கார்த்திகை மீ23 தேதி சோமவாரம், பட்சமியிந்த சுபதினத்தில் சவுந்தர பாண்டிய வள்ளல் கவுண்டன்யெனப்பட்ட பட்டக்காரர் தெய்வகதி அடஞ்ச நாளையில் அவர் குமாரனானவருக்கு அக்காலத்தில் ராஜ்ஜியம் பிரபுத்துவம் பண்ணப்பட்ட திப்புசுல்தான் துரைதனத்தில் அரண்மனை மனுஷாளும்

பாளையப்பட்டார் அனைவரும் வந்து பட்டமும் கட்டி வச்சு கனகசபாபதி பாண்டிய வள்ளல் எனப்பட்ட பேர் விளங்க பண்ணினார்கள். அந்தனாள் முதல் தலையனாட்டுப் பட்டக்காரனென்று பேர் உண்டானவனாகி மகாராச ஸ்ரீ கும்பினியார் தயவுக்கு பாத்திரனாய் காத்துக் கொண்டு குடித்தனக்காரனாகி இருந்துகொண்டு சர்க்கார்லே கட்டுப் பண்ணினபடிக்கு மிகவும் வணக்கத்துடவே காத்திருக்குரேன். நாளது ஆசருலே இருக்கப்பட்ட வள்ளல் கவுண்டன் பூமி தலத்திலே குடியிருப்புக் காரனாயி முப்பது வயசு புருஷனாயி காத்துக் கொண்டு இருக்கிறேன்.

## கல்வெட்டுகளில் கண்ணப்பர்

தமிழகத்திலும், ஆந்திர நாட்டிலும் காணப்படும் பல கல்வெட்டுகளில் கண்ணப்பரின் பெருமை கூறப்பட்டுள்ளது. பல திருக்கோயில்களில் கண்ணப்பநாயனாரின் சிற்பங்களும், ஓவியங்களும் இடம் பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்க தாகும். சில இடங்களில் கண்ணப்ப நாயனாரின் செப்புத் திருமேனியும் காணப்படுகின்றன. இவற்றுள் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள கண்ணப்பரின் செப்புதிருமேனி பேரழகு வாய்ந்தது. இங்கு நாம் கல்வெட்டுக்களில் எவ்வாறு கண்ணப்ப நாயனாரின் பெருமை கூறப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

### காளத்திக் கல்வெட்டு ஒன்று

இராஜாதிராஜ கோழனது ஐந்தாம் ஆட்சியாண்டில் திருக்கண்ணப்ப தேவரது பெயரால் கமுகந்தோப்பு ஒன்று வைக்கப் பெற நிலதானம் அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றது.

திருப்பதிக்கு அண்மையில் உள்ள யோகிமல்லபுரத்தில் உள்ள பரசுராமீசர் திருக்கோயில் கல்வெட்டில் ’திருக்கண்ணப்ப தேவர் காவணம்’ பற்றியும் திருக் கண்ணப்ப தேவர்

ஆராதனைக்கு நிலதானம் செய்யப்பட்டமையும் கூறப்பட்டுள்ளன. முதலாம் இராஜராஜனின் 23வது ஆட்சி ஆண்டில் வழங்கப்பட்ட அறக்கட்டளை செயல்படுத்தப் படாததால், சாளுக்கிய வீர வழக்குத் தொடுக்கப்பட்டது. அதனை விசாரித்த வேந்தன் அப்பணத்தை கண்ணப்பருக்கு வழங்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

> **"சாளுக்கிய வீரசிங்க தேவரான யாதவராயற்கு திருக்கண்ணப்ப தேவர் திருக்காவனத்திலே சிமகேசுவரருக்கும் தானத்தாளர்களுக்கும் திப்பிலாத்தவரமுடையார் கோயில் தானத்தார் அறிவித்தவிடத்து... திருக்கண்ணப்ப தேவர் திருக்காவனத்திலே"**

காளத்தியில் உள்ள வடமொழிக் கல்வெட்டில் கண்ணப்பர் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழிக் கபர்த்தீசர் கோயில் கல்வெட்டில் இராஜராஜனின் 12ஆம் ஆட்சியாண்டில் நாவுக்கரசர், வாதவூரர்

திருக்கண்ணப்ப தேவர் படிமங்களுக்கு நிலதானம் அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் காணப்படும் சில கோயிற்கல்வெட்டுகளில் கண்ணப்பரின் வழிபாட்டிற்காக நிலதானங்கள் வழங்கப்பட்ட செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## சிற்பங்களில் கண்ணப்பர்

தமிழகத்தின் பல பகுதிகளில் கண்ணப்ப நாயனாரின் சிற்பங்கள் எழுந்தருளுவிக்கப்பட்டு, வணங்ககப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் கண்டெடுக்கப்பட்டு, தற்போது ஈரோடு கலைமகள் கல்வி நிறுவன தொல்லியல் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் கண்ணப்பர் சிற்பம் பேரழகு வாய்ந்தது. அடுத்து

பெரம்பலூர் மாவட்டம், வாலி கண்டபுரம் கோயில் மண்டபத தூணில் வடிக்கப்பட்டுள்ள கண்ணப்பரின் சிற்பம் அளவில் சிறியதாயினும் அழகில் விஞ்சி நிற்கின்றது. தொண்டை நாட்டின் பல பகுதிகளில் காளத்தி வேட்னின் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சை பெரிய கோயிலில் உள்ள கோபுர சிற்பங்களில் தலைசிறந்து விளங்குவது திருவேட்டுவ கண்ணப்பரின் வரலாற்று கூறும் சிற்பங்கள் ஆகும்.

## ஓவியங்களில் கண்ணப்பர்

சிவபெருமானைச் சிந்தையில் தேக்கி ஆறே நாளில் முத்திபெற்ற கண்ணப்பரின் வரலாற்று நிகழ்ச்சிகள் சில திருக்கோயில்களில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஈரோடு வட்டம் விசயமங்கலத்திற்கருகில் உள்ள ஆழ்வார் கோயிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியமும். கரூர் மாவட்டம், கரூர் வட்டம் கோடங்கிப்பட்டி மலைக் கோயிலில் தீட்டப்பட்டுள்ள கண்ணப்பர் ஓவியங்களும் புகழ்மிக்கனவாகும். இன்றும் பல திருக்கோயில்களில் கண்ணப்ப நாயனார் குருபூசை விழா மிக சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

## கண்ணப்பரின் பக்தி பெருமை

மற்ற நாயன்மார்கள் தாம் இழந்த பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் கண்ணப்பரோ தான் இழந்த கண்ணைத் திரும்பப் பெறவில்லை. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பது முதுமொழி. இவர் தனது கண்ணையே கொடுத்தார். ஒரு கண்ணைக் கொடுத்ததுடன் நில்லாது தனது இரண்டாவது கண்ணையும் தோண்டிக் கொடுக்க முன்வந்தவர்.

இதனால் இவரது பக்தித் திறமும் தனக்கென வாழாது இறைவர்க்கென வாழும் தியாக உள்ளமும் புலனாகும்.

## கண்தானத்தின் முன்னோடி

இன்று எங்கனும் கண்தானம் செய்வதும் இரத்ததானம் செய்வதும் பராட்டுக்குரிய செயலாகப் பேசப்படுகின்றன. ஆனால், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்ணப்பர் கண்தானம் செய்துள்ளார். அதுவும் இறைவனுக்கே கண்தானம் செய்துள்ளார். எனவே, கண்தானத்தின் முன்னோடியாகவே கண்ணப்பரைக் கருதலாம். இன்று கண்தானம் செய்வோர் தமது இறப்பிற்குப் பின்னரே தனது கண்களைத் தானம் செய்கின்றனர். ஆனால் கண்ணப்பரோ தான் உயிரோடு உள்ள போதே தமது கண்ணைத் தானம் செய்து, மனிதகுல வரலாற்றில் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்துள்ளார் என்பது நினைத்து இன்புறத்தக்கது. எனவே, சைவ சமய வரலாற்றில் இவர் ஓர் புரட்சிக்காரர். புரட்சிகரமான செய்களைச் செய்தவர் எனலாம்.

## அன்பின் சிறப்பு

திண்ணன் கண்ணப்பராக மாறி முக்தி பெற்றதன் காரணம் அன்புதான். அன்பு பேரன்பாகவும் பித்தாகவும் மாறியது. கண்ணப்பர் என்று நினைக்கும் போதே சைவ அன்பர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் பொது மக்களுக்கு அவர் இறைவர் மீது கொண்டிருந்த பேரன்பே, முழு அன்பே நினைவிற்கு வரும். இறைவன் மீது ஏற்பட்ட பேரன்பின் காரணமாகவே தனது கண்ணையே திண்ணனார் இறைவர்க்களித்தார். ஒருவராலும் கொடுக்க இயலாத கண்ணை விருப்பத்துடன் அளித்த காரணத்தால் தான் மணிவாசகப் பெருமாள்.

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின்"**
**- என்றும். திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார்.**

**"கண்ணப்ப னொப்பதோ ரன்பின் தனைக் - கண்ணப்பர்**
**தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்**

**றாரறியு மன்பன்றது"**
**- (திருக்களிற்றுப் பாடியார் -52)**

என்றும் பாராட்டுகின்றனர்.

இறைவனை ‘வள்ளலார்’ என்று போற்றிப் புகழும் சேக்கிழார். திண்ணனாரையும் வள்ளலார் என்றே அழைக்கின்றார். எனவே, சேக்கிழார் கண்ணப்பரை இறைவனுக்கு ஒப்பாகக் கருதுவது புலனாகும். இதனால் கண்ணப்பரின் பக்திச் சிறப்பு அறியப்படுகின்றது.

சிறுத்தொண்ட நாயனார் பிள்ளையைக் கறி சமைத்து போட கேட்டுக்கொள்ளப் பட்டார். எனவே, பிள்ளையைக் கறி சமைத்துப் போட்டார். திண்ணனார் சிவபெருமானுக்குக் கண்ணைக் காணிக்கையாகத் தர வேண்டுமென்று எவரும் கேட்கவில்லை. திண்ணனார் தானே கண்ணைத் தோண்டி இறைவருக்கு அளிக்கிறார். இதுதான் தானம். இது தான் பக்தி, பக்திக்கு எல்லையில்லை. இதுவே கண்ணப்பர் செய்த தியாகம். எனவேதான் "வள்ளலார்" என்றழைக்கப்பட்டார்.

## என்பு உருகும் அன்பு

திண்ணன், காடன், நாணன் மூவரும் வேட்டைக்குச் சென்றனர். அப்போது திருக்காளத்தி மலையைக் கண்டனர். நாணன் திண்ணனிடம் திருக்காளத்தி மலையைப் பற்றியும், அம்மலையின் மீது எழுந்தருளியுள்ள இறைவர் பற்றியும் கூறுகின்னறான். இறைவரது பெயரைக் கேட்டதும். திண்ணனார் வேட்டையாடும் எண்ணத்தையே மறந்தார். இறைவன் நினைவாகவே ஆனார். முன்பு செய்த தவத்தின் விளைவால் இறைவன் பால் ஈர்க்கப்பட்டு, இறைவரைக் காண்கின்ற ஆவலுடன் சென்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

**“மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கிக்**
**யென்பு நெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்”**

என்று குறிப்பிடுவார். எலும்பு உருகும் அன்பு இங்கே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது!

இறைவரது பெயரைக் கேட்டதுமே திண்ணனாருடைய உள்ளத்தின் பாரமும் உடல் பாரமும் குறைகின்றது. இறைவரைக் கண்டவுடன். திண்ணனாருக்கு இறைவர் மீது அளவு கடந்த அன்பு உண்டாகிறது. திண்ணனாரின் மனதில் இறைவரது நினைவு மட்டுமே இருந்தது. மற்ற நினைவுகள் அனைத்தும் மறைந்து விடுகின்றன. பெற்றோர், சுற்றத்தார் வேட்டைத் தொழில் ஆகியவற்றை மறந்தார். அன்பின் மிகுதியால் இறைவரை விட்டுப் பரிய மனமின்றி. இறைவனைக் கட்டித் தழுவிய வண்ணம் அங்கேயே இரந்தார். குடுமித் தேவருடனே ஒன்றி விட்டார். இதனைக் கண்ட நாணன்,

> **“நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்**
> **கொன்றான்”**

## தாயன்பும் தலையன்பும்

சிவபெருமானை ஞானத்தால் அடைந்தவர் ஞானசம்பந்தர். திருநாவுக்கரசர் தமது ஆள்வினைப் பணியால் இறைவரை அடைந்தார். சிவபெருமானின் தாள் நினைந்து, வணங்கி. அன்பு செய்து ஊண் அமுதிட்டு, வழிபாடு செய்து, ஆறே நாட்களில் முத்தி பெற்றவர் கண்ணப்பர். அன்பின் முதிர்ச்சியால் யாராலும் தரவியலாத கண்ணை இறைவர்க்கு அளித்துச் சிவமேயானவர் கண்ணப்பர்.

கண்ணப்பர் இறைவர் மாட்டுக் காட்டிய அன்பு தலையன்பு என்பது இங்கே நினைந்து இன்புறத்தக்கது. அன்பர் ஒருவருக்குத் துன்பம் வந்தது எனக் கேள்விப்பட்டதும் வருந்துதல் தலையன்பு. துன்பம் அடைந்தவரைக் கண்டபின்பு வருந்துதல் இடையன்பு. அன்பர் துன்பம் கண்ட பின்னரும் வருந்துதற்குக் காலம் தாழ்த்துதல் கடையன்பு என்பர். திண்ணனாரே இறைவரைப் பற்றிக் கேட்டவுடனேயே தன்னை

மறந்தார். அடுத்து அவர் இறைவரது நினைவாகவே இருந்தவர். எனவே, கண்ணப்பர் இறைவர் மாட்டு கொண்ட அன்பு, தலையன்பு என்பது உணரப் படுகின்றது. ஆகவேதான் கண்ணப்பரின் அன்புக் இறைவர் இரங்கி வந்து, காட்சி தந்து, முத்தி வழங்கினார். "பக்தியால், பல காலம் பாடித் துதித்தால் முக்தி நெறியை அடையலாம்' என்ற அருணகிரியாரின் கருத்திற்கு இலக்கணமாக. இலக்கியமாகத் திகழ்ந்தவர் கண்ணப்பர். சாதாரண பாமரனும் இறைவர் மீது அன்பு என்னும் பக்தியை அளவுக்கு மேல் செலுத்தினால் இறைவரது அன்பைப் பெறலாம் என்பது கண்ணப்பர் வரலாறு காட்டும் கோட்பாடு ஆகும். பக்தி மார்க்கம் என்பது கருமயோகம், ஞான யோகம் ஆகிய இரண்டைக் காட்டிலும் எளிதானது, சிறந்தது என்பதும் இங்கே அறியப்படுகின்றது.

**ஞானசம்பந்தர் சிவபெருமானை ஞானத்தால் அடைந்தார்.**

நாவுக்கரசர் தமது ஆள்வினைப் பணியால் இறைவனை அடைந்தார். இறைவன் மீது பேரன்பு கொண்டு அவருக்கு ஊனமுது படைத்து, ஆறே நாட்களில் முக்தி பெற்றவர் கண்ணப்பர். கண்ணப்பரின் செயலில் இறையன்பே முதன்மை வகிக்கிறது.

கச்சியப்ப சிவாச்சாரியார் தமது கந்தபுராணத்தில் திண்ணனாரின் பேரன்பைக் கீழ்காணும் வகையில் சித்தரிப்பார்.

**“பூட்டு கார் முகந் தன்னொடுந் தோன்றிய புயல்வா**
**யூட்டு தன் புனந்தியங் கிரிமிசை யுகுத்தல்**
**வேட்டுவக் குலத் திண்ணனார் மஞ்சனம் விலமலற்**
**காட்டுகின்றதோர் தனிச் செயல் போன்றுள தன்றே”**
**- (கந்தபுராணம் ஆற்றுப்படலம். பா.எ. 6)**

இறைவனிடத்தில் திருக்காளத்தி வேடனாம் கண்ணப்பன் கொண்டிருந்த உயர் மெய்யன்பின் திறத்தினைக் கண்டு மகிழ்ந்த போற்றுதலுக்குரிய சுந்தரமூர்த்தி நாயனார்,

மணிவாசகப் பெருமாள். பட்டினத்தடிகள். தாயுமானவர் மற்றும் இறையன்பர்கள் பலரும் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இதனால் நாயன்மார் போற்றும் நாயன்மாராக இவர் திகழ்ந்தமை புலனாகும். ஆகம அறிவோ, கல்வி அறிவோ சிறிதும் இல்லாத கண்ணப்பர், வேறு சிலரப் போல் நீண்டகாலம் தவமும் இறைப்பணியும் இன்றி ஆறே நாட்களில் முத்தி பெற்றமை கண்ணப்பரின் தனிப்பெருமையை உணர்த்தவல்லது.

## பிற்சேர்க்கை

**"கல்லால் எறிந்தும் கைவில்லால் அடித்தும் கனிமதுர**
**சொல்லால் துதித்தம் நற்பச்சிலைத்தூவியும் தொண்டர் இனம்**
**எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நான் இனிஏது செய்வேன்**
**கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட்குருமணியே"**

**- தாயுமானவர்.**

## திரு வேட்டுவர் கண்ணப்பர்

பன்னிரு திருமுறைகளையும் அருளிய 27 அருளாளர்களில் ஒருவரான கல்லாட தேவநாயனார் அருளிய வேட்டுவகுல தலைவன் சிவன்பாற் கொண்ட பக்தி.

**பரிவின் தன்மை ஒருவு கொண்டு அனையவன்**
**போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்**
**குருதி புலராச் சுரிகை எஃகம்**
**அரையில் கட்டிய உடைதோல் கச்சையன்**
**தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து**

**வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்**
**உழுவைக் கூனுகிர் கேழல் வெண்மருப்பு**
**மாறுபடத் தொடுத்த மாலை உத்தரியன்**
**நீலப் பீலி நெற்றி சூழ்ந்த**
**கானக் குஞ்சிக் கவடி புல்லினன்**

**முடுகு நாறு குடிலை ஆக்கையன்**
**வேங்கை வென்று வாகை சூடிய**

சங்கரன் தன் இனத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனங் காற்றில் இயங்கிக்

கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட் போனகமும்
தன் தலைச் சொருகிய தண் பள்ளித்தாமமும்
வாய் கலசத்து மஞ்சன நீரும்
கொண்டு காணப் பேருறை கண்ணுதல்
முடியில் பூசை அடியால் நீக்கி நீங்காகக் குணத்துக்
கோசரிக்கு அன்று அவன் நேசங்காட்ட
முக்கண் அப்பனுக்கு ஒருகணில் உதிரம்

தக்கிணத்திடை இழிதர அக்கணம்
அழுதுவிழுந்து தொழுது எழுந்து அரற்றிப்
புண்மருந்து ஆற்றப் போகாது என்று
தன்னை மருந்து என்று மலர்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுமி பொங்க
அற்றது என்று மற்று அக் கண்ணையும்
பகழித் தலையால் அகழி ஆண்டகை
ஒரு கையாலும் இருகை பிடித்து
ஒல்லை நம் புண் ஒழிந்தது பாராய்

நல்லை நல்லை எனப் பெறும்
திரு வேட்டுவர் தம் திருவடி கைதொழக்
கரு வேட்டு உழல் வினைக் காரியங்கெடுமே.

பாசத்தை விட்டு நின் பாதத்தின் கீழே என்
நேசத்தை வைக்க நினை கண்டாய் -பாசத்தை
நீக்குமா வல்ல கயிலாயா நீ என்னைக்
காக்குமாறு இத்தனையே காண்.

- கல்லாடனார்

# தலையூர் வரலாறு

தலையூர் ஆலயத்தின் தென்மேற்கு வயல்வெளியில் கணபதி ஆலயம் (களத்து மாடர்ன்) ரூபத்தில் உள்ளது. பெரிய குளமும். தலையூரை ஆண்ட அரசர் குரும்ப இருப்பிடமும் உள்ளது. தலையூர் காளியம்மன் கோவிலின் வடக்கும் மேற்குமாக அமைந்திருகிள்ற இரு கோவிகள், சமதூரத்தில் அளவாக மேற்கு வஞ்சியம்மனும், வடக்கில் நீலியம்மனும், செண்பகவல்லி, இசக்கி அம்மனும் ஸ்திதி செய்து உள்ளதாக உள்ளது.

இக்கோவிலின் தெற்கு பாகம் உழவு நடந்து வந்ததாகவும் அந்த விவசாய பூமியின் மத்திய பகுதியில் கணபதியும் களத்து மாடனும், விவசாயம் நடத்துவதிற்கு காவலாக வைத்து பூஜை நடத்தி வந்துள்ளனர். தெற்கு பாக அரண்மனையும் தெப்ப தேர்விழா நடத்தி தெப்பகுளம் சுற்றிவர தேரும் நின்று உள்ளது. இன்றைய காலத்தில் எல்லாம் அழிந்து மறைத்து விலை நிலமாக்கப்பட்டு உள்ளது.

மன்னரின் குலதெய்வம். கெங்காலம்மனும் 15 ஏக்கர் அப்பிச்சிமார் தென்னை தோப்பு மரங்களும் மன்னர் குடும்பம் கணபதி கோவில் மெய்ப்பொருள் நாதன் சிவன் ஆலயம், கண்ணப்பருக்கு தனி கோயில் சிலையும் உள்ளது. தற்போது அங்கு விஷ்ணு விக்ரம் வைத்து கண்ணப்பர் சிலை அகற்றப்பட்டுள்ளது.

அம்மன் கோவில் குடிகொண்டுள்ள தெய்வம் அம்மன், சாஸ்தா (ஐயப்பன்) கருப்பண்ணசாமி, நாக கன்னி, மகாமுனி, சிவன், ஐயப்பன், சிவம், பீடம் வெளியில் உள்ளது .

## சிறப்பு

குழந்தை வரம், கல்யாண தடை, ராகு, கேது தடை, மனநோய் ஆகியவற்றும் தொழிலுக்கு சிறப்பு வாய்ந்தது. ஆற்றின் கரையோரம். பன்றி மாடன் அனை உள்ளது.

# இருக்கூர் பட்டகாரர் செப்பேடு

1. ஊஞ்சலூருக்கு எல்லை நீக்கிக் குடுத்தபடிகுழாய நிலைக்கு
2. ம் ஊஞ்சலூருக்கும் கழுதைப்பாழி எல்லைக்கும் அதின் கீழ்கொண
3. ம் முசுக்கறை எல்லை அதின் கீழ்கொணம் வடகரை ஆற்றூரில்
4. ஒழுகறைக்கு மெற்கு அதின் கீழ்கொணம் ஆனாங்கூருக்கு ஆ-
5. ற்றில் மெல்படப்புக்கு மெற்கு அதின் தென்கொணம் குமரிகா-
6. யம் அதின் தென்கொணம் வெண்கம்பூற்கும் ஊஞ்சலூற-
7. கும் எல்லைசுரங்காடுதுறை அதின் மெல்கொணம் எத்தக்க
8. மறு எல்லை அதின் மெல்கொணம் கருங்கற்கறடு எல்லை அ-
9. தில் மெல்கொணம் கொந்தளத்துக்கும் ஊஞ்சலூற்கு-
10. ம் மாவணிப்பாழி எல்லை அதில் மெல்கொணம் பிண்-
11. ணாக்குக்கறடு எல்லை அதில் மெல்கொணம் பாலைப்பா
12. ழி எல்லை அதில் வடகொணம் பழமங்கலத்துக்கும்
13. ஊஞ்சலூற்கும் வட்டப்பாறை எல்லை அதில் வடகொண
14. ம் கழுதைப்பாழி எல்லை னச்சுழிவெட்டுவர் முதன்மை
15. இரண்டு கூறுங் காடைவெட்டுவர் முதன்மை ஒன்று மலை

16. யவெட்டுவர் முதமை ஒன்று துடுமவெட்டுவர் முதமை ஒ
17. ன்று அந்துவவெட்டுவர் முதமை ஒன்று முக்குழலு முப்-
18. பறையும் காதுகுத்தருசி கண்ணால் அரிசி வண்ணா-
19. ன் மாற்றுக்கடைக்கறமினொடு சுனைதென் (பழவ)
20. ரை நான்கெல்லைக்குட்பட்ட விருகமும் திருவு
21. குத்தூணிகண் (பும்) குறுங்காடைவெட்டுவன் பெறு
22. டைய இப்படிக்கு புகையூரில் (த) ட்டான் உமைய
23. ன் பெருங்கருணையாளன் எழுத்து உ எல்லை அ
24. ல்லல் சொல்லுமவன் தன் சந்ததிதன்மெற் புரளாது.
25. பொவான் உ

## வெஞ்சமன் வரலாறு

தமிழரின் பொற்காலமாகிய சங்க காலத்திலேயே வேட்டுவர் பலர் குறுநில மன்னராகத் திகழ்ந்தனர். இவர்களுள் கடிய நெடுவேட்டுவன், வல்வில் ஓரி, ஆய், ஆண்டிரண், ஆய் எயினன். அன்னி, அறுகை. தோட்டி மலையை ஆண்ட கண்டீரக் கோப்பெரு நற்கிள்ளி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவார். சங்ககாலப் புலவர்களுள் எயிற்றியனார் இளவெயினனார். எயினந்தையார், எழுஉப்பன்றி நாகன் குமாரனார் போன்றவர் களும் வெறிபாடிய காமக் கண்ணியார், கழாரர் சீரன் எயிற்றி முதலான பெண் பாற்புலவர்களும் வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர் ஆவார்.

சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னதாகவே, வேட்டுவ மக்கள் தமிழகத்தில் அதுவும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலே மறவர்களாக வாழ்ந்த போதிலும் நாகரிகம் பெற்ற மக்களாகச் சிறந்த பண்பாடு உடையவர்களாக வாழ்ந்தமை பற்றிச் சங்க இலக்கியங்களே பலபடக் கூறுகின்றன.

## கொடுமுடி

கொங்குநாட்டு ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் கொடுமுடி. வேட்டுவ மன்னனான இவன் மிகச்சிறந்த போர் வீரன். கோட்டை கட்டி ஆட்சி புரிந்தவன். இவன் கோட்டையில் மழைபோல் அம்புகளை வீசும் திறன் கொண்ட ஐயவி, அகம்பா போன்ற போர்ச்சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன. இவனது நெடிய மதில் கொண்ட கோநகரை கௌதமன் சகாதேவனார் எனும் புலவர் கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில் சேண் விளங்கு சிறப்பின் ஆமூர் (அகம் 159 ஆம் பாடல்) எனப் பாராட்டுவர். குறும் பொறைக் கோமானான இவனைச் சேர வேந்தன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் போரில தோற்கடித்தான். போரில் கொல்லப்பட்ட இம்மாவீரனுக்கு நாட்டு மக்கள் நடுகல் எடுத்த இடம் கறையூர். இக்கறையூரின் பெயர் இம்மாவீரனின் பெயரால் கொடுமுடி என்றே அழைக்கப்பெற்றதாக பேராசிரியர் இராசசேகர தங்கமணி கருதுகின்றர். மும்மூர்த்தி தலமான கொடுமுடி, இவ்வேட்டுவ மன்னரின் பெயரால்அழைக்கப்பட்ட பெருமைக்குரியது. ஆற்றல் மிகு வீரனான இக்காவலன் புலவர் பலரை ஆதரித்த புரவலன். திருப்பாண்டி கொடுமுடி கோயிலும், நகரமும் வேட்டுவ வேந்தனின் புகழைப் பறைச்சாற்றிக் கொண்டிருக்கின்றன.

## வெஞ்சமன் எனும் வேட்டுவ மன்னன்

கொடுமுடிக்குச் சற்று காலத்தால் பிற்பட்டவன் வெஞ்சமன். சங்க காலத்தை அடுத்து வந்த களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவன் இவ்வேட்டுவ மன்னன் என்று வரலாற்று வித்தகர் இராசசேகர தங்கமணி கருதுகிறார். வேட்டுவச் சிற்றரசன் கொடுமுடியின் பெயரால் திருக்கோயிலும் நகரமும் அமைந்தன போன்று, வெஞ்சமன் பெயரால் வெஞ்சமாக் கூடல் திருக்கோயிலும், நகரும் அமைந்தன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவனது தலைநகரம் திருவெஞ்சமாக் கூடல்.

கரூரிலிருந்து அரவக்குறிச்சி சாலையில் 13 கி.மீ. சென்று ஆறு ரோட்டுப் பிரிவிலிருந்து செல்லும் சாலையில் 8 கி.மீ பயணம் செய்தால் வெஞ்சமாக் கூடலூரை அடையலாம். குடகனாறும் சிற்றாறும் கூடும் புனிதமான இடததில் இக்கோநகர் உள்ளது. இப்பகுதி கல்வெட்டுகளில் வீர சோழ மண்டலத்து வெங்கால நாட்டுத் திருவெஞ்சமாக் கூடலூர் என்று குறிக்கப் பெறுகின்றது.

## வெஞ்சமன்

வேட்டுவர், காவலியர், மாவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர் என்று ஐம்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இம்மன்னன் பூவலியர் எனும் மரபைச் சார்ந்தவன். இளமைக் காலத்திலேயே வாள் வித்தை, வில் வித்தை, குதிரை ஏற்றம், போர்ப்பயிற்சி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று மிகப் பெரிய வீரனாகத் திகழ்ந்தான்.

நீச்சல் கலையில் இணையற்று விளங்கினான். உரிய வயது வந்தவுடன் இளவரசுப் பதவி பெற்றான். இளவரசனாக இருந்த காலத்திலேயே தனது தந்தையின் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்று பல வெற்றிகளைப் பெற்றான். ஆட்சித்துறையிலும் இவன் நல்ல தேர்ச்சி பெற்றான்.

இளமைக் காலத்திலிருந்தே இவன் சிவபக்திமிகுந்த வனாக வளர்க்கப்பட்டான். தனது முன்னோரும் குலத்தெய்வமுமான திருக்கண்ணப்பர் பூஜையில் ஈடுபட்டான். சைவ நெறி தழைக்க இவன் தனது தந்தையாருடன் இணைந்து குலத்தெய்வத்திற்கு ஆண்டு விழாக்கள் எடுத்து அன்னதானம் செய்து வந்தான்.

## அரண்களை வலுப்படுத்துதல்

தனது தந்தையின் இறப்பிற்குப் பின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டான். தனது நாட்டின் படை பலத்தைப் பெருக்கினான். எல்லைப் புறங்களில் வலிமை மிக்க

படைகளை நிறுத்தி வைத்தான். படைகளுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தான். காடுகளால் சூழப்பட்டிருந்த தமது தலைநகரத்தில் கோட்டை கட்டினான். மலையரண்களைச் செப்பனிட்டான். அகழிகளை ஏற்படுத்தினான். பதுங்கு குழிகளுக்குப் பதிலாக ஐந்து நிலைச் சுரங்கங்களை ஏற்படுத்தினான். கோயிலில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் மலைக் கோவிலூர் வரை சுரங்கப்பாதை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

## நாட்டுவளம்

காட்டாறுகளான குடவனாறு, சிற்றாறு ஆகியவற்றில் அடிக்கடி வெள்ளம் பெருக்கெடுத்து நாட்டில் அழிவுகளை ஏற்படுத்தின. எனவே, வெள்ளைத்தைக் கட்டுப்படுத்த அணைகளைக் கட்டினான். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க கால்வாய்களும், ஏரி, குளங்களும், கிணறுகளும் வெட்டினான். இதன் விளைவாக வேளாண்மை பெருகியது.

## கோயிற்பணி

திருவெஞ்சமாக்கூடலில் சிவன் கோயில் ஒன்றினைக் கட்டினான். அதில் அம்மனுக்கும் தனிச் சந்நிதி அமைத்தான். இறைவர் விகிர்தீசுவரர் என்றும் அம்மை பய்யோர் மொழியம்மை (மதுர சுபாஷினி) என்றும் அழைக்கப்பட்டனர். திருக்கண்ணப்பருக்கும் தனிச் சந்நிதி நிறுவினான். மன்னனுக்கு மனம் சரியில்லாத போது அல்லது முக்கிய முடிவுகள் எடுக்க விகிர்தீசுவரர் கோயில் மண்டபத்தில் வந்து அமர்ந்து விடுவானாம். ஆறுகால பூஜை ஒரு புறம் தடையின்றி நடந்து கொண்டிருக்க, புலவர்களை உரத்த குரலில் பாடச் சொல்லி அந்த இனிமையில் லயித்துப் போவானாம் வேட்டுவரின் குலத்தெய்வமான காளிக்கும் கோயில் கட்டினான். இதுவே பொன்பரப்பி அம்மன் என அழைக்கப்பட்டது. மிகவும் சக்தி வாய்ந்த பொன்பரப்பி அம்மனுக்கு மாசி மகத்தின் போது திருவிழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## வெஞ்சமனின் ஆட்சிக்காலம்

வெஞ்சமனின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் சேர, சோழ, பாண்டியரது செல்வாக்கு குறைந்தது. தமிழகத்தின் பெரும் பகுதி களப்பிரரின் ஆட்சிக்குட்பட்டது. சைவ சமயம் செல்வாக்கு இழக்கத் தொடங்கியது. சமணமும் பௌத்தமும் தலையெடுத்தன. சேர, சோழ, பாண்டியர் எனும் முடியுடை மூவேந்தரும் களப்பிர வேந்தர்காளல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

களப்பிரர் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். சமணப்படைகளைப் புறங்கண்டவன் வெஞ்சமன் என்று கூறப்படுகிறது. இவனால் வெல்லப்பட்ட சமணப்படை களப்பிரர்களின் படையாக இருத்தல் வேண்டும். திரு.வி.இராமமூர்த்தி அவர்கள் வெஞ்சமன் கொங்கனி அரசன் படையை வெள்றவன் ஆதல் வேண்டும் என ஊகிக்றார். இவ்வெஞ்சமன் சிவபெருமான் அருளால் தம் மீது போர்தொடுத்த வலிமை மிக்க சமணப் படைகளைப் புறங்காட்டி ஓடச் செய்து புகழ் பெற்றானாம். இந்தச் சமணப் படையினர் யாராக இருத்தல் கூடும்? இதற்கு இரண்டு வகையில் விடை கூறலாம். கொங்கனி வமிச அரசர்கள் சமண சமயத்தைப் பரப்பும் ஒப்பந்தத்துடன் அரசு ஏற்படுததிக் கொண்டு சமண சமயத்தவர்களாகவே விளங்கியதால் இக் கொங்கனி அரசன் ஒருவனுடைய, படையையே எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக்கூடும் அல்லது சமணச்சார்புடைய களப்பிர அரசர்களுள் ஒருவனது படையை எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக்கூடும். களப்பிரர்கள் சமண சமயத்தவர்களே என்பதைக் கல்லாடம் எனும் தமிழ் நூல் கூறும். எனவே. சமண சமயினராகிய களப்பிர அரசர்கள் படையையே வெஞ்சமன் தாக்கி வெற்றி பெற்றிருத்தல் கூடும் என்பதே பொருத்தமானது என்று இராமமூர்த்தி கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

வெஞ்சமனின் களப்பிரர் வெற்றியை நாம் வேறுவிதமாகவும் கருத இடமுண்டு. குறிப்பு நாட்டுச் செப்பேடு குருகுலத்து வேட்டுவ ராசாக்கள் களப்பிர அரசர்களை வென்று சிறைப்பட்டிருந்த மூவேந்தரையும் விடுவித்தனர் என்றும் இதனால் மகிழ்ந்த மூவேந்தர் தமக்கு உதவிய வேட்டுவ ராசாக்களுக்கு கருவூர்ப் பசுபதியீசர் திருக்கோயிலில் முடிசூட்டி அவர்களைக் கொங்கு நாட்டின் அதிபதிகளாக ஆட்சி புரியச் செய்தனர் என்றும் கூறுகிறது. இந்நிகழ்ச்சி காஞ்சிபுரம் செப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளது. களப்பிர அரசர்களை வென்ற வேட்டுவ அரசர்களுள் வெஞ்சமனும் ஒருவன் எனக் கொள்வது நலம். குறிப்பு நாட்டுச் செப்பேட்டைப் பற்றி பின்னர் விரிவாகக் காண்போம்.

## வெஞ்சமன் மறைவு

வெஞ்சமனுக்கும் சோழ மன்னருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு சோழ மன்னன் வெஞ்சமன் நாட்டின் மீது படையெடுத்து வந்தான். பல நாட்கள் போர் நடந்தும் வெஞ்சமனை வெல்ல முடியவில்லை. கோட்டையைச் சுற்றிலும் அகழிகள் இருந்ததால் கோட்டையை அடைய முடியவில்லை. வெஞ்சமனை வெல்ல உபாயம் தேடினர்.

> ஒருநாள் இடையர் குலப் பெண் ஒருத்தி அகழிக்கு முன்புள்ள மரம் ஒன்றில் தொட்டில் கட்டி குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள். இப்பெண் கோட்டையில் உள்ள அரச குடும்பத்தார்க்கு பால் கொண்டு செல்பவள். இடையர் பெண்ணைத் துன்புறுத்தி அகழியைத் தாண்டிச் செல்ல வழி கேட்டனர். தொல்லை பொறுக்க முடியாத அப்பெண் கோட்டைக்குச் செல்ல வழி காட்டினாள். ஒரு பூவை எடுத்து அகழியில் உள்ள நீரில் போட அது சுழித்துக் கொண்டு ஓரிடத்தில் சுழன்றது. அவ்விடத்தில் உள்ள நீர் விலகி கோட்டைக்குச்

செல்லும் சுரங்கப்பாதையின் கதவு திறந்தது. சோழர் படைகள் கோட்டைக்குள் புகுந்தது. வெஞ்சமனை வெட்டிக் கொன்றனர். இடையர் குலப் பெண்ணையும் கொன்றனர்.

வெஞ்சமக்கூடல் வரலாறு.
திரு. பெ. இராமலிங்கம், எம்.எஸ்.சி., எம்.பில்.

## பாயல் நாடு

இன்றைய கேரளா நாட்டில் உள்ள வயநாடு வட்டத்திற்கு பண்டைக் காலத்தில் பாயல் நாடு என்ற பெயர் இருந்தது. தற்போதைய குடகு நாடும் இந்த பாயல் நாட்டில் தான் அடங்கி இருந்தது என்று வரலாறு கூறுகிறது (Imp. Gazetted. Mysore & Voor p.278-9). குடகு நாட்டுக் கல்வெட்டுகளும் மேற்கு மலைத்தொடரின் இப்பகுதியை பாயல் மலையென்று குறிக்கின்றன எனக் குடகு நாட்டு கல்வெட்டறிஞரும் (Coorg. Ins. Int. p2) எடுத்துரைக்கிறார்.

இப்பொழுதும் மலையாளம் மாவட்டத்தைச் சேர்ந்த குறும்பர் நாடு வட்டத்தின் ஒரு பகுதி பாயல் நாடு என்றே பெயர் வழங்குகிறது. கி.பி. 1887 - இல் ஆங்கில ஆட்சியில் பாயல் நாட்டின் பகுதிகளான உம்பற்காடு (ஆனைமலை) சேரன் நாடு என்பன நீலகிரி மாவட்டத்தோடு இணைக்கப்பெற்றன (Malabar Series. Wynad. P.5) இப்பகுதியை சேர வேந்தனின் குடி வகையில் ஒரு பிரிவினர் ஆட்சி செய்து வந்தனர். இவர்களில் சேரமான் வஞ்சன் என்பவன் சிறந்து விளங்கினான் இவருடைய ஆட்சிக்காலத்தில் திருவாங்கூர் நாட்டில் உள்ள ஆனைமுடிப் பகுதியும் இவனால் ஆளப்பட்டு வந்தது. இவ்வஞ்சன் நாடு அஞ்சன் நாடு என்று பிற்காலத்தில் திரிந்து வழங்கியது. இதே போல் வயநாடு வட்டத்தில் உள்ள அஞ்சன் குன்று வஞ்சன் குன்று என்பதன் திரிபாகும்.

இந்த அஞ்சன் நாடு கோடை மலைக்கு மேற்கில் அமைந்துள்ளது, எனவே வடக்கே வயநாடு முதல் தெற்கு

கொடைக்கானல் வரையிலுள்ள மலைப்பகுதி சேரமான் வஞ்சனுடைய ஆளுமைக்கு அடங்கியிருந்தது.

வஞ்சனுடைய பரந்து விரிந்த மலைப்பகுதிக்கு மன்னனாக விளங்கிய வஞ்சனது தலைமையான ஊர் "பெரும் பெயர் மூதூர்" (புறம் - 398) என்று திருத்தாமனார் தனது புறநானூற்றுப் பாடல் 398 - ல் குறிக்கின்றார். இது வஞ்சனுடைய முன்னோர்கள் வாழ்ந்த தொன்மையும் புகழும் உடைய ஊர் என்பதை இப்பாடலால் அறியப்படுகிறது. இப்பொழுது உள்ள குடகு பாயல் நாட்டின் பகுதியாக இருந்தபோது அதன்கண் அடங்கிய இருந்த அஞ்சன் குன்று நீலகிரி என்று வட சொல்லாக மாறியது. அங்கு அஞ்சனகிரி என்ற ஒரு மாளிகையும் இருந்தது எனக் குடகு நாட்டில் கல்வெட்டு ஆராய்ச்சியும், புதைபொருள் ஆராய்ச்சியும் நிகழ்த்திக் கண்ட லூயி ரைஸ் (R.L. Rice. Coorg. Ins. Vol. No. 10) என்பவர் குறித்துள்ளார்.

கொடைக்கானல் மற்றும் நீலகிரி ஆங்கிலேயர் சென்று காண்பதற்கு முன்பே தமிழர் கண்டு வழங்கிய சிறப்புடையது என்பதை இந்த ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆங்கில மக்கள் நேர்மையோடு செய்து தந்த ஆராய்ச்சியே இவ்விரு மலைகளையும் ஆண்ட அரசர்களின் வரலாறுகளையும் அவ்விரு மலைகளின் சிறப்புகளையும் அறிய உதவுகிறது.

அஞ்சன் குன்று அஞ்சனகிரியாகி பின்னர் நீலகிரியாயிற்று. அவ்வூரின் காவலருமையும் வஞ்சனுடைய தோள் வன்மையும் தாமனாரது புலமைக்கு விருந்து செய்கின்றன. அவர் அவ்வூரைப் பெரும் பெயர் மூதூர் என்றும், வஞ்சனை "வரையுறழ் மார்பின் புறையோன்" என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

**“பசியார உணவளித்தோன் பல்லாண்டு வாழ்க!”**

**- (புற - 398).**

மதி நிலாக் கரப்ப வெள்ளி ஏர்தர
வகைமான் நல் இல்லில்.......
பொறிமயிர் வாரணம் பொழுது அறிந்து இயம்பப்
பொய்கைப் பூ முகை மலரப் பாணர்
கைவல் சிறியாழ் கடன் அறிந்து இயக்க
இரவு புறம்பெற்ற ஏம வைகறைப்
பரிசிலர் வரையா விரைசெய் பந்தர்
வரிசையின் இறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகின் அல்லது பகைவர்க்குப்
புலியினம் மடிந்த கல்லளை போலத்
துள்ளல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத்து அன்ன என் அறிகுரள் தடாரி
இரவுரை நெடுவார் அரிப்ப வட்டித்து
உள்ளி வருநர் கொள்கலம் நிறைப்போய்
தள்ளாநிலையை ஆகியர் எமக்கு என
என் வரவு அறீ இச்
சிறிதிற்குப் பெரிது உவந்து
விரும்பிய முகத்தனன் ஆகி என தரைத்
துரும்புபடு சிதா அர் நீக்கித் தன் அரைப்
புகை விரிந் தன்ன பொங்கு துகில் உ டீ இ
அழல்கான் றன்ன அரும் பெறல் மண்டை
நிழல் கான் தேறல் நிறைய வாக்கி
யாள் உன் அருளல் அன்றியும் தான் உண்
மண்டைய கண்ட மான் வறைக் கருனை
கொக்கு உகிர் நிமிரல் ஒக்கல் ஆர
வரை உறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவு மணி ஒளிவரும் அரவு உறழ் ஆரமொடு
புரையோன் மேனிப் பூத்துகில் கலிங்கம்
உரை செல அருளியோனே
பறை இசை அருவிப் பாயல் கோவே.

வெண்ணிலா மறைந்து விடி வெள்ளி முளைத்து, பல வகை சிறப்புடைய நல்ல வளமனை அது.... புள்ளிகள் பொருந்திய இறகுடைய சேவல் கோழி பொழுது விடிய போகிறதென்பதை கூறுவது போல கொக்கரித்தது, நீர் நிலைகளில் மலர்கள் இதழ் விரித்து மலர்ந்தன, பாணர்கள் தங்கள் கைகளில் இருந்த யாழை முறைப்படி இசைத்து ஒலி எழுப்பினர், இப்படிப்பட்ட இரவு மறைந்து பொழுது புலரப்போகும் விடியற்காலைப் பொழுதில் பரிசிலர்கள் எப்போதும் நிறைந்து வழியும், மணம் வீசும் பெரிய பந்தலின் கீழ் அவரவர் தகுதிக்கேற்ப பரிசில்கள் தரும் வாய்மை தவறாத சேரமான் வஞ்சனுடைய அன்புக்குரிய பாணர்களும் நட்புடைய வேந்தர்களுமேயல்லாது வேறு எவரும் நுழைய முடியாத புலி கிடந்து உறங்கும் மலைக்குகை போன்ற புகழ்பெருமை மிக்க மூதூருக்கு போய் வட்ட முழு நிலா போன்ற என் தடாரிப்பறை என் நிலையை எடுத்து சொல்வது போல இழுத்து கட்டிய நீண்ட வார்கள், அதிர முழக்கிக் கொண்டு சென்று, உன்னைத் தேடி பாடி பரிசில் பெற விரும்பி வருவோர்க்கு, அவர்கள் மகிழும் வண்ணம் மனம் நிறைந்து மகிழப் பொன்னும், பொருளும் தருபவனே! எமக்கு உன் நீங்காத அன்பு நிறைதர பரிசில் தருவாயாக என்று நான் வேண்டி நிற்க, என் வரவறிந்த அவன் என் சிற்றூரை கேட்டு மகிழ்ந்தவனாகி, முகமலர்ச்சியோடு நான் இடையில் உடுத்தியிருந்த நார் நாராக கிழிந்திருந்த கந்தளுடைய ஆடையை நீக்க செய்து, தான் உடுத்தியிருந்த புகை போன்ற மெல்லிய, புதிய ஆடையை உடுக்கச் செய்து, நெருப்பில் காய்ந்தது போல வறண்டு கிடந்த என் உண்கலத்தில், உண்பவர் நிழல் தெரியும் அளவுக்கு தெளிந்த கள்ளின் தெளிவை நான் அருந்த கொடுத்ததோடு அல்லாமல், தான் உண்ணும் கலத்தில் பரிமாறியிருந்த துண்டாகி வருத்த மான் இறைச்சியாகிய பொரிக்கறி களையும், கொக்கின் கால் நகம் போன்ற முனை முறியாத நெல்லரிசி சோற்றையும், என் சுற்றம் பசியாற உண்ண கொடுத்ததுடன், மலைபோன்ற தன் மார்பில் அணிந்த உலகம்

எல்லாம் வியக்கும் விலை மதிக்க முடியாத ஒளி வீசும் பல மணிகள் கோர்த்த பாம்புகள் போல் வளைந்த மாலையையும், அவன் அணிந்திருந்த உயர்ந்த பூ வேலை பாடமைந்த பொன்னாடைகளையும், தன் பெயர் புகழ் உலகமெல்லாம் பரவி பெருக வழங்கினான் - பறையொலி போல, ஒலி எழுப்பிப்பாயும் அருவிகள் நிறைந்த பாயல் என்னும் மலைக்குரிய (தலைவன்) மன்னன்.

> திருத்தாமனார் பாட்டு "வேந்தே, நின்னை நினைத்து வரும் இரவலர்க்கு வேண்டுவன நல்கிச் சிறப்பிக்கும் வள்ளலாகிய நீ, எம்மை புறக்கணிக்காத மிக்க அருளுடையனாதல் வேண்டும்" எனச் சேரமான் வஞ்சனை வேண்டியது. உடனே சேரமான் வஞ்சன் திருத்தாமனாரை அன்போடு வரவேற்று வரையால் வாடி மாசு படிந்திருந்த அவரது ஆடையை நீக்கி புத்தாடை தந்து அணியச் செய்து இனிய தேறல் (மது) வழங்கினான். பின்பு தனக்கென சமைக்கப்பட்டிருந்த சுவை மிக்க மான் கறியையும், சோற்றையும் தாமனார்க்கும் அவரோடு வந்த பாணர்கள் முதலியோர்க்கும் நல்கினான். தன்னுடைய மார்பில் அணிந்திருந்த மணி மாலையையும் பூத்தொழில் செய்யப்பட்ட மேலாடையையும் தாமனாருக்கு தந்து இன்புறச் செய்தான். திருத்தாமனாரும் மன்னன் வேண்டு கோளுக்கிணங்க மன்னன் மனைக்கண்ணே சில நாட்கள் தங்கியிருந்து தனக்கும் ஏனைப் பாணர் முதலிய பரிசிலார்க்கும் பெரும்பொருள் நல்கப் பெற்றுக்கொண்டு மன்னன்பால் விடைபெற்று ஊர் வந்து சேர்ந்தார்.
>
> (சேர மன்னன் வரலாறு, ஔவை. துரைசாமி பிள்ளை, பக்கம். 343 வடி 347)

இச்சேரமான் வஞ்சனுடைய குடிமரபு பற்றியும் அவன் அமைத்த அஞ்சனகிரி மாளிகை பற்றியும் அறிந்தோம். டாக்டர் சேய்சு (Dr. Sayee), ஈவிட் (Hewitt) என்பார் கூறுவது ( The Origin and Growth of religion among the Babylonians of Dr. Sayee - Hibertt Leetures for 1887) போல கிருஸ்த்து பிறப்பதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சால்டியர், கிரேக்கர், யுவனர், எகிப்தியர், சிரியர், பாபிலோனியர், கோசியர், பாரசீகர் முதலிய மேனாட்டவரும் வடபுல ஆரியரும் வந்து நாகர்கள் போன்ற மக்களிடையே கலந்து கொண்டதனால் சேர நாட்டவர்களுடைய மொழியும், நடையும், உடற்கூறும் திரிந்து தமிழ்நாட்டின் கூறு என்ற குறிப்பே தோன்றாதவாறு பெரிதும் மாறிவிட்டன. கேரளம் என்ற சேர நாட்டில் உள்ளது நீலகிரி மலையாகும். கடையேழு வள்ளல்களும் மலைகளை ஆண்ட வேட்டுவ மன்னர்கள் என்பதையும் இங்கு நினைவு கொள்வது அவசியமாகும்.

சேர நாட்டின் அரசின் கீழ் வாழ்ந்த செந்தமிழ் குடிகளின் சிறப்பு நமக்கு புலனாகாது மறையவில்லை, சேரமான் வஞ்சன் சேரவேட்டுவ குலத்தவனே ஆவான். கடையேழு வள்ளல்கள் மலை நாட்டை ஆண்ட வேட்டுவ குலத்தவர்களே ஆவர். இச்சேர வேட்டுவ வஞ்சனுடைய குடி மரபினர் பின்பு கொங்கு நாட்டில் வஞ்சமன் கூடல் பகுதியில் நிலைகொண்டு குறு நில மன்னர்களாக ஆண்டு வந்தார்கள். இவ்வஞ்சனுடைய கால்வழியினர் ஆண்ட பகுதியான வஞ்சமன் கூடலே வெஞ்சமன் கூடல் என்று மருவியது.

இவ்வஞ்சன் சேர நாட்டின் ஒரு பகுதியும், கொங்கு நாட்டின் ஒரு பகுதியும் உடைய பூழி நாட்டினன் என்பதால் பூழியர் எனும் வேட்டுவ மரபைச் சேர்ந்தவனாவான். வெஞ்சமன் (வஞ்சமன்) தனது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சிறப்பாக ஒரு சிவாலயத்தை உருவாக்கிய பெருமை அடைந்ததைப் பொறுக்க மாட்டாமல் சோழ மன்னன் அரண்மனையுடன் தொடர்புடைய ஒரு இடைச்சி மூலம் வெஞ்சமன்னின்

தலைநகருக்கு நீர் செலுத்தும் வாய்க்கால், அகழி, வடிகால் ஆகியன பற்றிய ரகசியச் செய்திகளை அறிந்தான். சற்றும் எதிர்பாராத சமயத்தில் ரகசியமாக தாக்குதல் நடத்திய சோழப் படைகளுடன் வெஞ்சமன் தீரத்துடன் போராடி வீர மரணம் எய்தினான்.

வேட்டுவ அரசனின் வீரத்தைப் பாராட்டிய சோழ மன்னன் ஊரின் வடமேற்கு பகுதியில் வெஞ்சமன் மற்றும் தனக்கு உதவி புரிந்த இடையச்சி (இடையர்குலப் பெண்)ஆகியோரின் திருவுருவங்களை நிறுவினான். வெஞ்சமன் ஆட்சி செய்த பகுதியே "வெஞ்சமாக் கூடல்" என்று அழைக்கப்படுகிறது. இவன் மறைந்தாலும் இவன் களப்பிரரை (கன்னட வேட்டுவரை) வென்ற புகழ் என்றும் மறையாது

## பார்வை வேட்டுவன்

### (முனைவர் இரா. வெங்கடேசன்)

'வேட்டுவன்' எனும் சொல் 'வேட்டை' எனும் விளையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். வினை என்பது தொழிலைக் குறித்து வருமென்பதால் 'வேட்டை' என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. இதனால் 'வேட்டுவன்' என்பது 'வேட்டையாடும் தொழிலைச் செய்பவன்' எனும் பொருளைக் குறிக்கின்றது. பண்டைக் காலத்தில் இந்த 'வேட்டுவன்' என்ற சொல் குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் பொதுப்பெயராக வழங்கியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள்வழித் தெரிந்துகொள்ள முடிகின்றது. பண்டை வழக்கில் குறிஞ்சி நிலமென்பது மலையைக் குறித்திருக்கின்றது. மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பைப் பலவாறு உரைக்கின்றன. சங்க இலக்கியங்கள் மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பை இலக்கியச் சான்றுகளைக் கடந்து பார்க்கின்றபோது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 'சமுகுமலை' யில் ஒற்றைப் பாறையில் செதுக்கப்பட்ட

வேட்டுவன் கோவில்’ வரலாற்று ஆவணமாக இன்றைக்கும் இருந்துவருகிறது.

வேட்டுவன் எனும் சொல் இலக்கியங்களிலும், ஆவணங்களிலும், கொங்கு வட்டாரப் பகுதியில், குறிப் பிட்ட ஒரு சமூகத்தினர் பெயருக்கு முன்னொட்டாகச் (வேட்டுவக் கவுண்டர்...) சமகால வழக்கிலும் நீடித்து நிற்பது அந்தச் சொல்லின் நீண்ட வரலாற்றுப் பின்புலத்தை வெளிப்படுத்து கின்றது. பழந்தமிழ் இலக்கியங்களுள் சிறப்புமிக்க சங்க இலக்கியங்களில் ‘வேட்டுவன்’ எனும் சொல் புலமைத்துவத்துடன் ஆளப்பட்டுள்ளமை நம் கவனத்தை ஈர்க்கின்றது.

மாற்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் (252) ஒன்றில் ’சொல்வலை வேட்டுவன்’ என்று குறித்திருக்கிறார். அப்பாடல்.

**சுறங்கு வெள் அருவி ஏற்றலின், நிற்ம் பெயர்ந்து**
**தில்லை அன்ன புல்லென் சடையோடு**
**அள் இலைத் தாளி கொய்யுமோனே**
**இல் வழங்கு மடமயில் பிணிக்கும்**
**சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே!**

என அமைந்துள்ளது. இந்தப் பாடல் இவ்வகைப் பொருளைத் தருகின்றது.

‘ஒலிக்கும் வெள்ளிய அருவியில் பலகாலம் நீராடு வதால் தன் கருநிறம் மரித் தில்லை இலைபோன்று நிறம் மரிய சடையோடு கூடியவனாக அடர்ந்த தாளி இலையைப் பறித்துக் கொண்டிருக்கிறானே. இவனே தான், முன்னர் மயில்போன்ற இளம் அழகிகளை வேடன் வலையை விரித்துப் பறவைகளைப் பிடிப்பது போல வார்த்தை வலை விரித்துத் தன்வசம் விழச் செய்தவன்’. வேடன் வலைவிரித்து விலங்கிளைப் பிடிப்பதுபோல சொல்லால் வலைவிரிப் பெண்களை தன்வசப் படுத்து பவன் என்பதாய் மடமயில் ’பிணிக்கும் சொல்வலை

வேட்டுவன்' எனப் புலவர் சுட்டியிருக்கிறார். 'வல்வில் வேட்டுவன்' (புறம். 150), 'யானை வேட்டுவன்' (புற. 214) போன்ற சொல்லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வேட்டுவர்களிடமிருந்த அரிய வழக்கங்கள் பற்றிய பதிவுகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிட்ட சில வழங்கங்கள் தற்கால வழக்கிலும் இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த 'கும்கி' என்ற தமிழ்த் திரைப்படத்தில் காட்டருகில் உள்ள ஊரில், பழக்கப்படுத்தப்பட்ட யானை ஒன்றை வைத்து பயிர்களைச் சேதப்படுத்த வரும் காட்டு யானைகளை விரட்டுவதுபோன்ற காட்சி அமைப்புகள் இடம்பெற்றிருந்தன. தமிழ்த் திரைப் பார்வையாளர்களுக்கு அக்காட்சிகள் புதுமையானதாக இருந்திருக்கக்கூடும். காட்டிலுள்ள விலங்குகள் வாருக்குள் வந்து உயிர் பயிர்களைச் சேதப்படுத்துவதைத் தடுத்துக் காப்பதற்கு விலங்கினைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கக்கூடிய வழக்கம் மிகப் பழமையானது. இது மிருகத்தினை வைத்தே தாக்கவரும் மிருகங்களைத் தடுத்துக் காத்துக்கொள்ளும் வகையில் மனிதச் சமூகம் ஏற்படுத்திக் கொண்ட தற்காப்பு உத்தி முறையாக நெடுநாட்களாக இருந்து வருகின்றது.

தாக்குதலிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு மட்டுமின்றி மிருகங்களைப் பிடிப்பதற்கும் மிருகத்தைப் பழக்கப்படுத்திப் பயன்படுத்திக் கொள்கின்ற வழக்கம் மனித இனத்திற்கு இருந்திருக்கிறது. இவ்வழக்கம் தற்காலத்திலும் வழக்கிலிருப்பதைக் கள ஆய்வுகளின் வழியாகக் கண்டுணர முடியும். தமிழ்ச் சமூகத்தில் நெடுங்காலமாக இவ்வழக்கம் இருந்துவருவதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது. காடை கௌதாரிகளைப் பிடிக்கக் கருதும் வேட்டைக்காரர்கள் கண்ணியை வைத்துவிட்டுச் சற்றுத் தொலைவிலிருந்து காடை கௌதாரியைப் போன்றே

சீழ்க்கை செய்து அழைத்து அவைகளைப் பிடிக்க முயற்சிப்பதுண்டு. இனப் பறவைகள் அழைப்பதாக நம்பி வந்து கண்ணியில் மாட்டிக் கொள்ளும் பறவை இனங்களைப் பிடிக்கும் வேட்டைச் சமூகம் பின்பற்றுகின்ற இந்த வழக்கம் மிருகங்களைப் பிடிக்கும் வழக்கத்திற்கு இணையானதாக கருதத்தக்கது.

பழந்தமிழகத்தில் மிருகங்களைப் பிடிப்பதற்குப் பழக்கிய விலங்கினைப் 'பார்வை மிருகம்' என்று அழைத்துள்ளனர். இதுபோன்று 'பார்வைப் புள்' (புள் பறவை) என்பது பறவை இனத்தைச் சுட்டிலிருக்கின்றது. நற்றிணையில் உள்ள குடவாயிற் கீரத்தனார் எனும் புலவர் பாடிய இந்தப் பாடலில் (212) 'பார்வைப் புள்' பற்றிய குறிப்பு வருகின்றது.

**"பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ,**
**நெடுங் கால் கணந்துள்அம் புலம்பு கொள் தெள்விளி**
**சுரம் செல் கோடியர் கதுமென இசைக்கும்**
**நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்**
**கடுங் குரற் பம்பைக் கத நாய் வடுகர்**
**நெடும் பெருங் குன்றம் தீந்தி, நம் வயின்**
**வந்தனர்: வாழி - தோழி கையதை**
**செம் பொன் கழல்தொடி நோக்கி, மா மகன்**
**கவவுக் கொள் இன் குரல் கேட்டொறும்,**
**அளவுக் கொள் மனத்தேம் ஆகிய நமக்கே"**

இந்தப் பாடல் 'தோழி நெடுங்காலம் வாழ் வாயாக! பறவைகளைப் பிடிக்கக் கருதிய வேட்டுவன் பார்வைப் பறவையை வைத்தமைத்த வலையை வீசுவான். கொடிய வலையைக் கண்ட நெடிய கால்களைக் கொண்ட கணந்துள் பறவை அச்சம் கொண்டு தன் துணையை அழைக்கக் கூவும் அதனுடைய தனிமைக் குரல் அவ்வழிச் செல்லும் கூத்தரது யாழிசையோடு ஒத்து ஒலிக்கும் காட்டின் வழியிடத்தே வடுகர் தமது பம்பையை முழங்கிக்கொண்டு சினம் கொண்ட நாயுடன் வருவர். அத்தகைய வழியிடத்தே உள்ள நெடியதும்

பெரியதுமான குன்றத்தைக் கடந்து நம்முடைய தலைவர் நம் ஊருக்கு மிக அருகில் வந்துகொண்டிருக்கிறார். பிரிவு காரணமாக உனது கையில் அணிந்துள்ள தொடி கழன்று போக, நம் மகன் 'உனது நொடி சுழன்று போவது ஏனோ அன்னாய் கூறுவாய் என்று மழலைக் குரல் எழுப்பும் போதெல்லாம் நீ மனம் தளர்ந்து துயரத்தை அடைகின்ற நம்மிடத் திற்குத் தலைவன் வெகு சீக்கிரம் வந்து சேருவர். துன்பம் நீங்கி மகிழ்வாயாக' என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

இந்தப் பாடலில் வரும் 'பார்வை' என்பது 'கைப்புள்' (வளர்க்கப்பட்ட பழக்கப்படுத்தப்பட்ட பறவை) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ''வேட்டுவன்' என்றால் 'வேட்டைக்குச் செல்பவன்'. பழக்கப்படுத்தப்பட்ட பறவையைக் கொண்டு பிற பறவைகளை வரச் செய்து, வலைக்குள் அவை வந்து அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பது தெரிகின்றது. பார்வை என்பதற்குக் 'கவனம்' என்றொரு பொருளும் கொள்ளப்படுகின்றது.

பத்துப்பாட்டுத் தொகுப்பிலுள்ள பெரும்பாணாற்றுப் படையில் 'பார்வை யாத்த பறைதாள் விளவின், நீழல் முன்றில்' (95) எனும் பாடலடிகள் வருகின்றன. இந்தப் யாடலடிக்கு '(எயிற்றியர்) குடிசை முற்றத்திலுள்ள விளாமரத்தின் நிழலில் பார்வை மான்கள் கட்டப் பட்டிருக்கும்' என்று பழையவுரை பொருள் தருகின்றது. இங்குப் 'பார்வை' என்பது பார்வை மானைக் குறித்திருக்கிறது. யானையை வைத்து யானையைப் பிடிப்பது போல தாம் வளர்த்த மானைக் காட்டி மாளைப் பிடிப்பது எயினர் வழக்காக இருந்திருக்கிறது. கட்டப்பட்டுள்ள பார்வை மானைப் பிடிக்கவரும் ஏனைய மிருகங்களைப் பிடிப்பதற்கும் இந்த வழக்கம் பயன்பட்டிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றது.

பண்டைப் புலவர்கள் ‘பார்வை மான்’, ’பார்வை மிருகம்’, ‘பார்வை வேட்டுவன்’ போன்ற சொற்களைத் தம் சமகாலத்து நிகழ்வுகளோடும் இயற்கைப் பொருள் சுளோடும் நுட்பமாக இணைத்துச் சுட்டிக்காட்டி விவரித்திருப்பது சிறப்புக்குரியதாகவும் அவர்களின் புலைத்துவ வெளிப்பாட்டின் கூறுகளுள் ஒன்றாகவும் கருதத்தக்கது.

(நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் பிப்ரவரி 2017)

## எயினன் என்றால் வேட்டுவக் குடியினன் என்பதாகும்

## சிறகின் நிழல்,

**முனைவர் இரா. வெங்கடேசன்.**

சங்க இலக்கியத்தில் நானுறு அகப் பாடல்களின் தொகுப்பான அகநானூற்றின் இரண்டு பாடல்கள் நாட்டை ஆண்ட மன்னர் ஒருவர் பறவைகளின் பாசத்திற்குரியவராக இருந்திருக்கிறார் என்ற செய்தியைத் தருகின்றன. அந்த இரண்டு பாடல்களும் சங்கக் கவி பரணர் என்பார் பாடியதாகும்

முதல் பாட்டு (181) இல்லற வாழ்க்கை இனிதாக அமைய பொருள் வேண்டும் அந்தப் பொருளைத் தேடித் தன் அன்பு மனைவியைப் பிரிந்து காடுகள் பல கடந்து சென்று கொண்டிருக்கிறான் ஒரு ஆண்மகள். இடைவழியிலே அல்னுடைய மனமானது தன் மனைவியின் நினை பெரிதும் துன்புறுகிறது. அந்தது துன்புறும் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமைந்தது.

ஆய் எயினன் என்பவர், முருகனை ஒத்த வலிமையோடு பகைவர் பாதுகாத்து நிற்கும் கோட்டைகளை வென்ற வெற்றிச் சிறப்பிணையுடைய பெரிய படைகளைக் கொண்டவனும், போரிடுயதில் வலவனுமான மிஞிலி என்பவனோடு போர்ப் இன்னும்மேல்லாம் குருதியால் குருதி நிறம் அடையுமாகு கடுமையாகப் போரிட்டு முடிவிலே தானும் தோற்று மடிந்தான்.

எயினன் பறவையின் பாதுகாவலன் என்பதாம் அப்பகுதியில் இருந்த பறவைகளும் வேற்றுப் பகுதியிலிருந்து வந்த புதிய பறவைகளும் சேர்ந்து சூரிய கதிர்களின் வெம்மையானது அவன் உடலின்மீது படாதிருக்குமாறு பெருந்திரளாகக் கூடி வட்டமிட்டு உயரே நிழலிட்டுப் பறந்தன. பின் அவை ஒருங்கே கூடிச் சென்று, மகரக்கொடியினை உச்சியிற்கொண்ட வானைத் தீண்டும் மதிலையும் சிகரம் காணமுடியாத அளவுக்கு மிகவுயர்ந்துள்ள மாடங்களைக் கொண்ட அரண்மனைகளையும் உடைய காவிரிப்பூம் பட்டினத்தை உடையது சோழநாடாகும். அந்நாட்டில்' "ஆலமுற்றம் என்னும் அழகிய இடம் புது வருவாயையுடய ஊர்களைக் கொண்டது அவ்வூர் சோழ மன்னர்களால் பாதுகாக்கப்படும் சிறப்பினை உடையது. பூக்கள் விந்து அகன்ற துறையினையுடைய காரியின் பேராவினது மிக ஆவேசத்துடன் வரும் வெள்ளமானது நுண்மணலை கொண்டுவந்து சேர்த்து மேடாக்கிய வெண்மையான மணற்குவியல்களையும் உலகம் எல்லாம் போற்றும் நல்ல புகழையுடைய நான்கு மறைகளாகிய பழைய நூலினைத் தந்தருளிய முக்கண்களையுடைய பரமன் எழுந்தருளிய சிறப்பிளையும் உடையது. அங்கு அழகு பெறுமாறு இயற்றப்பெற்ற பொய்கைகள் சூழ்துள்ள பொழிலின்கண் சிற்றிலிழைத்து விளையாடும் சிறுமியர்களது செய்யப்பெற்ற கையால் மணற்பாவைகள் விளங்கும் துறையினிடத்தே தங்கும்.

வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பான். வாயில்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் கருணை வாழ்வு வாழ்பவன். வைகறைப் பொழுகிலும் தனது அரண்மனை வாயிலில் தன்னைக் காண்பதற்காக வந்து தேன் அடைகள் நிறைந்த தன் குன்றத்தைப் புகழ்ந்து பாடும் அகவுநர்கள் ஸபாணர்களுக்கு) வேண்டினால் பட்டத்து யானையைக்கூட வழங்குவான் ஆய் எயினை. நன்னன் என்பவனுடைய நண்பனாகிய, உயர்ந்த தேனையும் யானைப் படையையும்

உடைய மிஞிலியோடு பாழிப் பறந்தலை என்னுமிடத்தில் தண்பகல் நேரத்தில் வாட்போர் செய்து இறந்தான். அதனை அறிந்த பறவைகள் தம்மிடம் அவன் மிகுந்த கருணை யுடையவன் என்பதால் அவனது உடவில் வெயில் படாதவாறு வானில் ஒன்றாய்க்கூடிப் பறந்தன. இந்தப் பாசமிகு காட்சியைப் பொறாமையாலும் கோபத்தாலும் நான் சென்று பார்க்கமாட்டேன்’ என்று போராற்றலுடைய நன்னன் அரண்மனையில் மறைந்துகொண்டான்.

எயினனின் உறவினராகிய வேளிர்குல மகளிர் போர்க்களத்திற்கு விரைந்தோடி தமது பூமாலைகளைப் பிய்த்தெறிந்துவிட்டு அவன் உடலைப் பார்த்து கதறி அழுதனர், பகைவரின் படைகளை வென்று, தனக்கும் தன் சுற்றத்தார்க்கும் உண்டாகிய பழியைப் போக்கும் குணமிக்கவனான அகுதை என்பவன் எயினளின் நண்பன். அவன் இச்செய்தியைக் கேள்வியுற்று மிஞிலியோடு போர் புரிந்து. மகளிரின் அழுகையைப் போக்கினான் அதைப் போல தான் இவ்விரவில் வந்துள்ளதை அறிந்து, உப்பினால் போடப்பட்ட அணையை எளிதில் உடைத்துக்கொண்டு பெரிய மழையால் உண்டாகிய வெள்ளம் பாய்வதைப் போல தலைவி தன் நாணத்தால் கட்டுப்படுத்த இயலாத காமம் காரணமாக வந்து என் துயரத்தைப் போக்கினாள். அவள் வாழ்க!

மிஞிலி பாரம் என்னும் மலையை ஆண்ட குறுநில மன்னன் நன்னனின் நண்பன் நன்னன் புன்னாட்டின் மீது போர் தொடுத்தபோது ஆய் எயினன் அவனை எதிர்த்துப் போரிட்டு அந்நாட்டைப் பாதுகாத்திருக்கிறான். அதனால் நன்னன் அவனுக்குப் பகையானான். பாழிப் பறந்தலையில் நன்னனுக்குத் துணையாக வந்து எதிர்த்த மிஞிலியோடு போரிட்டு ஆய் எயினன் இறந்துபோன செய்தி அகநானூற்றின் 196ஆம் பாடலில் வருகின்றது.

போர்க்களத்தில் இறந்து கிடந்த ஆய் எயின்னுக்குப் பறவைகள் சிறகுகளால் நிழலமைத்துக் கொடுத்ததாகப் பரணர் இரண்டு பாடல்களில் பதிவு செய்திருப்பது. பறவைகளைப் பாதுகாத்து நேசித்தவராக மன்னர் எயினன் இருந்திருக்கிறார் என்பதைக் காட்டுகின்றது. எயினர் குடி பற்றிய செய்தி பெரும்பாணாற்றுப்படையில் (129) வருகின்றது. எயினர் குடியை வேடர் குடி என்று சுட்டுகிறார் நச்சினார்க்கினியர். வேடர் வேட்டைத் தொழில் செய்வோயர் என்பதைப் பழந்தமிழ் நூல்களால் அறிகிறோம். எயினன் வேட்டைக் குடியினராக இருந்தும் பறவைகளை நேசித்திருக்கிறார். அதனால் அவன் இறந்த பின்னர் பறவைகள் சிறகுகளால் நிழல்தந்து நன்றி செலுத்தியுள்ளன.

தம் காலத்தில் மனித வளர்ச்சியை மட்டுமாகக் கொண்ட பயணத்தில் இயற்கை நிலைகள் அழிப்பு அதனால் மாசுபடுதல் ஆகியன மிகச் சாதாரணமாக நிகழ்கின்றன. இதனால் இயற்கையை நம்பி வாழக்கூடிய உயிரினங்கள் முதலில் பலியாகின்றன. அவற்றுள் பறவையினங்கள் முதலிலிருக்கின்றன. வேட்டைச் சமூகத்து எயினன் இறப்பினால் பெருந்துன்பம் அடைந்து வருந்தின. அன்றைய பறவைகள் தம் காலத்துப் பறவைகளுக்கு மானுட சமூகமே வேட்டைக்காரர்களாகத் தெரிகின்றன; அதனால் அவை ஒட்டுமொத்த மனித சமூகத்தைப் பார்த்து பயந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. நிழல் தந்த பறவையினங்கள் நிழலைத் தேடி அலைந்து திரிகின்ற சோகம் நம் கண்களுக்குத் தெரியவில்லை.

## வேடன் - வேந்தன்

**‘தெண் கடல் வளாகம் பொதுமை யின்றி**
**வெண் குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும் - (வேந்தன்)**
**நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும் - (வேடன்)**
**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே**
**(அதனால்) செல்வத்துப்பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே'**
**(-நக்கீரன் 189)**

**ஈகை**

வேடர்கள் ஆடிய வேட்டை விலங்குணவு வேடர் சமூகக் குழுக்களுக்குள்ளே 'கூறு' செய்து பகிர்ந்துண்ணப்பட்டது. வேடர்களின் இனக்குழுவுக்குள் இனக் கடமையாக இருந்த ஒரு வழக்கம், வேந்தரின் நிலக்கிழமை நாகரிகத்தில் பொருள் உள்ளவன் இல்லாதவனுக்கு வழங்கும் "ஈகை"யாக மாற்றம் அடைந்தது.

நக்கீரன் (189) கூறிய வேடன் - வேந்தன் சமூக ஏறுவரிசையானது வேடனில் தொடங்கி வீரன், மறவன், நெடுந்தகை, சீறூர் மன்னன், வள்ளல் எனப் படிப்படியாக நிலக்கிழமை முறையை நோக்கி வளர்ந்து இறுதியில் நானிலத்தலைமை பூண்டு 'வெண் குடை நிழற்றிய' வேந்தரின் ஒருமை அரசாட்சி முறையாக நிலை பெற்ற சமூக வரலாற்றை ஒருவாறு அனுமானிக்கலாம். இந்த வேடன்-வேந்தன் சமூக ஏறுவரிசையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ சார்ந்து வாழ்ந்தவர்களே சமூகத்தின் மற்றப் பிரிவினர் எனலாம். கைவினைப் பொருளுற்பத்தி, நிலம் சார்ந்த உணவு உற்பத்தி, கலை சார்ந்த இன்ப உற்பத்தி, புலம் சார்ந்த அறிவு உற்பத்தி ஆகியவற்றோடு பிணிப்புற்றிருந்த கொல்லர், குயவர், தச்சர், துணிவெளுக்கும் புலைத்தி, நெசவாளர், பருத்திப் பெண்டிர், பரதவர், உமணர், குறவர், ஆயர், உழவர், பாணர், பொருநர், கூத்தர், இணைவர், கோடியர், வயிரியர், துடியர், கடம்பர், பறையர் மற்றும் புலவர் முதலானவர்களின் உற்பத்தியின் மீது கட்டப்பட்ட

வீரம், போர் சார்ந்த வேடன் - வேந்தன் ஏறுவரிசையே அக்காலச் சமூகத்தின் மையமாக ஏறுவரிசையாகும்.

(பாட்டும் தொகையும், தொல்காப்பியமும், தமிழ் சமூக உருவாக்கமும், ராஜ்கௌதமன், பக் 110 to 111)

நள்ளி தனது இனக்குழுச் சமூக வாழ்வின் வழக்கப்படி வாழ்வில் வேடனாகக் காடுகளில் தொடர்ந்து மான் வேட்டையாடினான். காட்டில் எதிர்ப்பட்ட இரவலர் கூட்டத்தின் பசி போக்கியதை ஒரு புலவன் பாடியுள்ளான். தன்னோடு வேட்டையாடி வந்த இளையோர் வழி தப்பிய போது எதிர் வந்த இரவலர்களின் பசி தீர்க்க மான் கறியை விரைவாய்ச் சுட்டு தந்தான் பின்னும், "பெறுதற்கரிய வீறு சால நன் கலம் பிறிது ஒன்றில்லை; காட்டு நாட்டேம் என மார்பில் பூண்டவயங்கு காழ ஆரம்மடை செறிமுன்கைக் கடகமொடு ஈத்தனன் (150) என்று புலவன் பாடும் போது வேட்டைக் குழுத் தலைவன் ஆரமும் கடகமும் பூண்ட சிற்றூர் மன்னனாகக் காட்டு நாட்டில் உருவான சமூகப் படி நிலைய அவதானிக்கலாம். வல்வில் ஓரியும் கூடக் கொல்லிமலைக் கிழவனாக உருவெடுத்த ஒரு வேட்டைக் குழு தலைவனே. ஒரு முறை எய்த அம்பால் பல விலங்குகளை வீழ்த்தியதாக அவனுடைய வில்லாற்றலை மிகைப்பட புகழ்ந்த புலவன், ’கொலைவன் யார் கொலோ!

மற்றிவன் விலைவன் போலான்; வெறுக்கை நன்குடையன்;....... பயமலைக் கிழவன் ஓரி கொல்லோ’ என்று தெளிவடைந்தான் (152) வேடர் சமூக வழக்கப்படி விலைக்கு விற்றுப் பிழைப்பதற்காக ஓரி வேட்டையாடவில்லை; வேட்டை அவனுக்கு இப்போது ஒரு விளையாட்டு; பொழுதுபோக்கு; மலை நாட்டுக்கு உரிய அரசனாகச் செல்வம் மிக்கவனாக உருவாகிவிட்டான்.

குடநாட்டு எயினர் தந்த மான் தசையை ’பசு வெள் அமலை யொடு வருநர்க்கு வரையாது கொடுத்தவன் மல்லி

கிழான். காரியாதி வன்புலச் சிறூர் மன்னனே (177). இவனே வேடர் வழக்கப்படி ஆநிரை கவரும் கொள்ளைப் போரில் இறந்து நடுக்கல்லாகியதையும், அவன் மனைவி கலன் நீக்கி, தலைமுடி மழித்துக் கைம்மை ஏற்றதையும் புலவர் குறிப்பிட்டுள்ளார் (261) நடுக்கல்

பெரும்பாலும் வெட்சி- கரந்தைப போர்களில் வீரமரணம் எய்திய வேடர் வீரர்களுக்கே நடுகல் எடுத்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டதாகப் பாடல்கள் வழியே காணலாம். நடுகல் வழிபாடு காடு, மலை நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த வேடர் வீரர் சமூகங்களிலிருந்தே தோன்றியது. இவ்வழக்கம் வேந்தர் சமூகத்திலும் இடம் பெறலாயிற்று.

## அகப்பாடல்களில் இனக்குழுச் சமூக எச்சங்கள் வேடர் இனக்குழு

வேடர் முதல் வேந்தன் வரையிலான ஒரு சமூகத் தள வரிசைச் சங்க காலத்தில் இருந்ததிலிருந்து வேடர் குடியின் தொன்மையை அவதானிக்கலாம். அதே வேளையில், மலை விவசாயமும், வேட்டையும், தேன், கிழங்கு சேகரிப்பும் பிரதான பொருளாதாரச் செயல்பாடுகளைக் கொண்டிருந்த கானக்குறவர் குழு நாகரிகமும், ஆடு-மாடு வளர்ப்பையும் பால் உற்பத்தியையும், பால்படு பொருள்களில் பண்டமாற்றையும், கொல்லைகளில் மழை சார்ந்த வரகு தானிய விவசாயத்தையும் பிரதான பொருளாதாரச் செயற்பாடுகளாகக் கொண்டிருந்த கொல்லை உழவர், கோவலர், இடையர் குடிகளின் நாகரிகமும், கடலில் மீன் பிடி, முத்தெடுப்பு, சங்கு சிப்பி எடுப்பு, கழிகளில் பாத்தி கட்டி உப்பு எடுப்பு, பண்டமாற்று ஆகியவற்றை தலையான பொருளாதார நடவடிக்கையாகப் பூண்டிருந்த பரதவர் மற்றும் உமணர் குடி நாகரிகமும் இந்த வேடர் குடி மக்களிடமிருந்து தோன்றி பரிணாம வளர்ச்சி பெற்றன என்று உறுதியிட்டு உரைக்க முடியவில்லை.

வேடர், கள்வர், மறவர், 'வில் ஏர் உழவர்' பற்றிய எடுத்துரைப்புகள் எல்லாம் ஓர் இலக்கிய சம்பிரதாயத்தை முன்னிட்டே புனையப்பட்டன என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இவ்வித சம்பிரதாயமான புனைந்துறைப்பிலிருந்து வேடர் குடி வாழ்க்கையின் இனக்குழு மரபு எச்சங்களைச் சலித் தெடுக்க வேண்டியுள்ளது.

வேடர் குடியைக் குறிப்பாகச் சுட்டுகின்ற சொற்கள் வேட்டுவன், எயினர் ஆகியவை மட்டுமே. 'பழையர்' என்ற சொல் இக்குடியின் தொன்மையை ஒட்டி உருவான சொல். வட வேங்கட மலைக்கு அப்பால், வேற்று மொழி பேசிய தேயத்தைச் சேர்ந்த வேடர் குடியாக வடுகரும் காணப்படுகின்றனர்.

> வடுக வேடர் வாழ்ந்த பகுதி 'வடுகர்' தேயம்(அக.213) என்றும் 'எருமை நல் நாடு' (அக.253) என்றும் 'மொழிபெயர் தேயம்' என்றும் அழைக்கப்பட்டது. வேங்கட மலைப் பகுதியை 'கள்வர் கோமான்' என்றழைக்கப்பட்ட புல்லி என்பவன் ஆண்டான். வேடர் குடித் தலைவனான புல்லி, பிறரது ஆநிரைகளைக் கவர்ந்து வாழ்ந்தான். கட்டி என்ற மற்றொரு வேடுவர் தலைவனும் மொழிபெயர் தேயத்தில் மலைப் பகுதியை ஆண்டு வந்தான். இவர்களது ஆட்சிக்கு அப்பால் வடக்கே வேற்று மொழி பேசிய வடுகர் வாழ்ந்ததாகப் பாடல்கள் குறித்துள்ளன 'கடுங்குரல் பம்பைக் கதாநாய் வடுகர் நெடும் பெரும் குன்றம்' (நற்.212)
>
> (பாட்டும் தொகையும், தொல்காப்பியமும்,<br>தமிழ் சமூக உருவாக்கமும், ராஜ்கௌதமன்,<br>பக்: 113, 114, 132, 135)

# சுதந்திர போரில் வேட்டுவர்கள்

சுதந்திர போரில் ஆங்கிலேயரை ஏதிர்த த முதல் கொங்கு மன்னர் தலைய நாட்டு உரிமை படை வேட்டுவர் ( உறு படை) வேட்டுவர். உரிமை படை வேட்டுவர் (உறு படை) வேட்டுவர்தலைய நாட்டில் பட்டுத்துறைஅரண்மேனையாளர் என்றும் வெங்கல்பட்டி அரண்மனையாளர்கள் என்றும் இருவகை அரண்மனையாளர் ஆட்சி செய்துள்ளனர் பட்டுத்துறை அரண்மனையாளர்கள் பட்டுத்துறையில் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவு காட்டி மணியக்காரர்களாக அதிகாரம் செலுத்தி வந்த நாட்களில் வெங்கல் பட்டி அரண்மனையாளர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆதரவு தராமல்ஆங்கிலேயர்ஆட்சியை கடுமையாக எதிர்த்து வந்தனர் இதனால் ஆங்கிலேயர் வெங்கல் பட்டி அரண்மனையாளர்கள் அரண்மனையை பீரங்கி படைகொண்டு அழிக்க திட்டம் திட்டினார்கள் அதே வேலை வெங்கல் பட்டி அரண்மனையாளர்கள் காளியின் அருளால் ஆட்சி அதிகாரம் செய்து வந்த பொழுது அரண்மனையைகோவிலாக மதித்து மக்கள் அரண்மனையை மதிப்பும் மரியாதையுடனும் பயபக்தியுடனும் வணங்கிச்செல்வர்அரண்மனையாளர்கள் ஆங்கிலேயர்களுக்கு அடிபணிய மறுத்ததால் ஆவேசமடைந்த ஆங்கிலேயர்கள் பீரங்கி படையுடன் வந்து அரண்மனையை தாக்கி தகர்த்தனர் அதனால் ஒட்டன்சத்திரம் குடி பெயர்ந்து அங்கு அரண்மனை அமைத்தனர் உரிமை படை வேட்டுவர் (உறு படை) வேட்டுவர்அரணமனையாளர்களின்குலதெய்வம் மூலனூர்கிழாங்குண்டன்கரியகாளிஆம்மனஆகும்

**உரிமை படை வேட்டுவர் ( உறு படை) அரண்மனையாளாது. வம்சாவழியினர்**

1) காளியண்ண வள்ளல்

2) பெரியண்ண வள்ளல்

3) மலையப்ப வள்ளல்,

4) குப்பனன வள்ளல்

5) கந்தசாமிவள்ளல், தம்பி காளியப்பவள்ளல தற்பொழுது கந்தசாமிவள்ள, மகன் செல்வம் வள்ளல் அவரின் மகன் பிரதீப்வள்ளள் ஆகும்

**ஸ்ரீ ஈரோட்டு அய்யன் :** (பெரியண்ணா வள்ளல்) பட்டுத்துரை அரணமனையாளா மட்டு வெங்ககல்பட்டி அரண்மனையாளர் பெரியண்ணை வள்ளல் வழி வந்த மரபினங்கள்








**பெரியண்ண வள்ளல்** ஈ.ரோட்டுச் சண்டையில் வீரமரணம் அடைந்ததால் இவரின் உடலை அவரின் குதிரையுடன்அடக்கம் செய்து சிலை அமைத்து வழிபட்டனர்

தற்பொழுது உரிமைப்படை வேட்டுவ அரண்ரன்மனை யாளர்கள் மூலனூர் கிழாங்குண்டலில கரியகாளி அம்மனை குலதெய்வமாகாவும். ஈரோட்டு அய்யன் சிலையை முன்னோர் வழிபாடகவும் வழிபட்டு வருகின்றனர்.

முன்னோர் தலையநாட்டு வள்ளல் பரம்பரையின. அண்மைக்கால வம்சா வழியினர் வாரணவாசி வள்ளல் " பெரியசாமி வள்ளல் வழியினர் 1) கனகசபாபதிவள்ள. 1) சௌந்த பாண்டிய வள்ளல் மகள் ஆண்டமுத்துவள்ளல் முத்துராமைய வள்ளல் பேரன் சரவணக்குமாரர் வள்ளல் மெய்பொருள்நாத வள்ளல் தமிழரசு வள்ளல் பூபதி வள்ளல் கதிர்வேல் வள்ளல் ரவிக்குமார் வள்ளல் வேலுசாமிவள்ள தமிழரசு இவியரசு வள்ளல்

## துணைநின்ற நூல்கள்

1) தொல்குடி வேட்டுவர் வாழ்வும் வரலாறும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு - தொகுதி 1, தொகுதி 2

2) தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம் தமிழ்நாடு அரசு வெளியீடு.

3) வேட்டுவர் வேந்ததர் மரபினர் - - Dr.Valaiparameswaran.MD.

4) வேட்டுவர் சமூக அவணங்கள் புலவர் செ.இராசு

5) சங்ககலமறவர் - செ.மா. கணபதி

6) அய்யன் சமூகம் தோற்றமும் வளர்ச்சியும்

7) அகநானூறு.

8) புறநானூறு.

9) மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி - இதழ் 4

10) வேட்டுவர் சமூகம் ஓர் வரலாற்றுப் பார்வை - சிற்பி ராஜசேகரதங்கமணி.

11) அப்பிச்சிமார் காவியம் - புலவர் இராசு.

12) மா.ராசமாணிக்கனார் தாலி-சொற்பொருள் ஆராய்ச்சிக் கட்டுரை, (தினமலர் - வாரமலர் (11.03.2018)

13) கொங்கு நாட்டுக்கவுண்டர்கள் - வீயாரம்.

14) பண்டைத்தமிழ்ச் சமூகம் வரலாற்றுப்புரிதலை

நோக்கி -கார்த்திகேசுசிவத்தம்பி.

15) களப்பிரர் போர் தமிழ் வேட்டுவர் கன்னட வேட்டுவர் ஏ.கே. சந்திரசேகரன்.

16) பாட்டும்தொகையும்தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கம் ராஜ்கவுதமன்.

17) புராணஇதிகாசங்களில்வேட்டுவர் வரலாறு -மூர்த்தி.

18) 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நிலம் தொல்லியல் நோக்கில் சங்ககாலம் நிலவரைபடம் - சி இளங்கோ.

19) தமிழர் தளபதி - புலவர் கா கோவிந்தன்.

20) தமிழர் மானிடவியல்- பக்தவச்சல பாரதி.

21) ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும் - ராஜ்கவுதமன்.

22) தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு சங்க காலம் ராஜ்கவுதமன்.

23) தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பு வரலாற்று வித்தகர் - பேராசிரியர் இராசசேகரதங்கமணி.

24) வில்லோர் உழவர்கள் சங்க இலக்கியங்கள் புகழும் சங்க கால வேட்டுவர்வேளிர்கள் ஆசிரியை இறைவி எம்.ஏ.,பி.எட்.

25) கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில்தல வரலாறு - வரலாற்று வித்தகர் பேராசிரியர் இராசசேகரதங்க மணி.

26) அரை நாட்டு மன்னன் அல்லாளஇளையான் - வெளியீடு அல்லாள இளையான் அறக்கட்டளை.

27) வேட்டுவ மன்னன் வல்வில்ஓரி - கவிதா வாழை

பரமேஸ்வரன்

28) தொல்குடிவேட்டுவர் ஆவணம் -பா.ஆனந்தகுமார்.

29) வேட்டுவர் சமூக ஆவணம் -புலவர் இராசு.

30) குருகுல காவியம்.

31) கொங்குமண்டலச்சதகம்.

32) கொங்குதேசராஜாக்கள்.

34) வடகரை நாட்டு வரலாறு - ஆய்வு நூல்

35) தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வு களும் - க.சுபாஷினி.

## செப்பேடு

1) அல்லாளாஇளையான் செப்பேடு.

2) குறிப்பு நாட்டுப் பட்டயம்.

3) சோழர்கள் பூர்வ பட்டயம்.

4) ஊசிப்பாளையம் செப்பேடு.

5) கபிலர்மலைச் செப்பேடு



**தலையநாட்டு வரலாற்று ஆய்வு நூல்**
**வெளியிட உதவிய செம்மல்**

# கேரள சுப்பிரமணியம்

குறிப்புக்காக..